# பகுதி II

# பகுதி 11

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

பக்கம்


| | |
|---|---|
| மத்திய வங்கியின் நவீனமயப்படுத்தல் | I |
| கணக்கீடும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும் | IV |
| கொடுப்பனவுகள்முறைச் சீர்திருத்தம் | XXVI |
| நாணய வெளியீடு | XXX |
| வங்கி மேற்பார்வை | XXXI |
| வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை | XXXVI |
| அபிவிருத்தி நிதி | XXXIX |
| கிராமியக் கொடுகடன் | XLIV |
| ஆராய்ச்சி நடவடிக்கைகள் | LVIII |
| புள்ளி விபரங்கள் மற்றும் கள அளவீடுகள் | LXI |
| ஊழியர் சேமநிதியம் | LXV |
| செலாவணிக் கட்டுப்பாடு | LXVII |
| பொதுப்படுகடன் | LXXII |
| வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம் | LXXX |
| செயலகம் | LXXXII |
| சட்டம் | LXXXIII |
| பணிமனை | LXXXIII |
| பாதுகாப்புப் பணி | LXXXIII |
| தகவல் | LXXXIV |
| தகவல் தொழில் நுட்பம் | LXXXV |
| முகாமைக் கணக்காய்வு | LXXXVII |
| பயிற்சி | LXXXVIII |
| நலன்புரி | LXXXIX |
| முகாமை அபிவிருத்தி நிலையம் | LXC |
| ஆளணி | XCI |

**சிறப்புக்குறிப்பு**

## மத்திய வங்கியின் நவீனமயப்படுத்தல்

நிதியியல் சந்தைகளிலும் தொழில்நுட்பத் துறையிலும் உலகளாவிய ரீதியில் இடம்பெறும் மாற்றல்களானவை நவீன நிதியியல் முறையொன்றினால் விடப்படும் அறைகூவல்களை எதிர்கொள்ளுவதற்காக இயலளவைப் பெற்றுக் கொள்ளுவதற்கான மாற்றங்களை மேற்கொள்ளுவதற்கு உலகம் முழுவதிலும் உள்ள மத்திய வங்கிகளை நிர்ப்பந்தப்படுத்தியுள்ளன. இதன்படி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியியல் சந்தைகளில் தோற்றம்பெறும் தேவைகளையும் அறை கூவல்களையும் எதிர்கொள்ளுவதற்காக இலங்கை மத்திய வங்கியும் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமொன்றினைத் தொடங்கியுள்ளது. (2000ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையின் பகுதி II பக்கம் 11இனைப் பார்க்கவும்) வங்கியினால் தற்பொழுது பின்பற்றப்படும் கொள்கைகள், கருமங்கள், அமைப்பு முறை மற்றும் செயல்முறை என்பனவற்றில் மாற்றங்களை விளைவித்துள்ளது.

நவீனமயப்படுத்தும் இந்த செயல்முறையானது மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளான விலை உறுதிப்பாடு மற்றும் முதன்மைக் கருமங்கள் அல்லாதவற்றின் பரவலாக்கல் அமைப்பு முறை மாற்றங்கள் புதிய மனித மூலவள கொள்கைகளின் ஏற்றுக்கொள்ளல், தன்னிச்சையான இளைப்பாற்றுத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைகள் மற்றும் சட்டச் சீர்திருத்தங்கள் என்பனவற்றின் வலுப்படுத்தலுக்கு இட்டுச் செல்லும். இதன்படி, இந்தச் செயல்முறையானது பருமன் அற்ற நவீனமயப் படுத்தப்பட்ட செயல்திறன்மிக்க வங்கி ஒன்றினை உருவாக்கி மாறுபட்ட குறிக்கோளான தொழிற்பாட்டுச் செலவு, செயல்முறையின் செயல்திறன் மற்றும் கொடுகடன், திரவத்தன்மை மற்றும் முறையின் இடர்நேர்வுகள் என்பன வற்றிற்கிடையில் சமன்பாட்டை ஏற்படுத்தி தோற்றம்பெறும் பொருளாதாரமொன்றின் தேவைகளைத் திருப்திப்படுத்தக்கூடிய நிதியியல்முறை உட்கட்டமைப்பின் கருமையத்தினை தரமுயர்த்தும். எனவே இந்த நிகழ்ச்சித் திட்டமானது இறுதிக் குறிக்கோளான போட்டித் தன்மை கொண்டதும் முன்மதியுடன் முகாமைப்படுத்துவதுமான வங்கித்தொழில் முறையொன்றினை நிறுவுவதற்கான செயல்திறன் மிக்க மத்திய வங்கியொன்றினால் மேலும் நிதியியல்துறை சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்து வதற்கும் உதவும்.

நடைமுறைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்கில் தேவையான நிதியங்களை வழங்குவதற்கு சருவதேச அபிவிருத்தி முகவராண்மை என்பனவற்றின் ஊடாக உலக வங்கி இணங்கியது. மொத்தச் செயல்திட்டச் செலவு ஐ.அ.டொலர் 42 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதும் சருவதேச அபிவிருத்தி முகவராண்மையின் பங்களிப்பு ஐ.அ.டொலர் 30.3 மில்லியன் ஆகவும், சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் பங்களிப்பு ஐ.அ.டொலா 30.3 மில்லியனாகவும் அமையும். எஞ்சிய தொகையான ஐ.அ.டொலர் 10.7 மில்லியன் மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆய்விற்குரிய காலப்பகுதியில் இந்த நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பின்வருவன எய்தப் பெற்றுள்ளன.

### மனித மூலவள அபிவிருத்தி

பெருமளவு தொழிற்துறை தகைமைகளுடன் ஒரு சீராக்கப்பட்ட முகாமைத்துவ கலாச்சாரத்துக்கு நகருவதற்கு புதிய மூலவள கொள்கைகளை ஏற்றுக் கொள்ளுவதற்கு வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த நோக்கத்துக்காக ஆய்விற்குரிய ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- நவீனமயமாக்கப்பட்ட மத்திய வங்கிக்குத் தேவையான கொள்கை மாற்றங்களை ஆய்வு செய்வதற்கும் விதந்துரைப் பதற்குமான பிறைஸ் வோட்டர் கவுஸ் கூப்பாஸ் இன் ஆலோசனைப் பணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.
- கல்வி, உயர்வான புரிந்துணர்வு நுண்ணாயும் பகுப்பாய்வு மற்றும் செயல் முறைகளினதும் நடவடிக்கைகளினதும் தொடர்ச்சியான மதிப்பீடு என்பன வற்றின் ஊடாக முகாமைத்துவ செயல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்து வதற்கும் வங்கியின் புதிய கருமங்களை நிறைவேற்றுவதற்குமான முக்கிய பங்கொன்றினை ஆற்றக்கூடிய வகையில் முகாமையாளர்களை பயிற்றுவிப்பதற்கும் அவர்களுக்கு புதிய அறிவுத்திறமையை பெற்றுக் கொடுப்பதற்குமாக வேண்டி முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் ஒன்று நிறுவப்பட்டது.

- நவீன மூலவள திணைக்களம் ஒன்றை நிறுவுவதற்காகவும் வங்கியில் பொருத்தமான புதிய மனிதமூலவள கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குமாக மனிதமூலவள முகாமையாளர் ஒருவரின பணிகளை பெற்றுக் கொள்ளுவதற்கான ஆட்சேர்ப்பு செயல்முறை தொடங்கப்பட்டது.

### தன்னிச்சையான இளைப்பாற்றுத் திட்டம்

மீளமைப்புச் செயல்முறையானது, ஏனைய விடயங்களுக்கிடையில் வங்கியின் குறிக்கோள்கள் கருமங்கள் என்பனவற்றை மீள வடிவமைத்தல், வேலைச் செயல்முறைகளையும் தன்னியக்க நடவடிக்கைகளையும் ஆய்வு செய்தல், மனித முலவளச் தேவைப்பாடுகளை மீள மதிப்பீடு செய்தல் பணிகளை மீள வடிவமைத்து கருமங்களில் சிலவற்றை வெளி முகவராண்மைகளுக்குச் சாட்டுதல் என்பனவற்றையும் தவிர்க்கமுடியாத வகையில் உட்படுத்துகின்றது. இச் செயல்முறையின்போது ஊழியர்களின் சில வகையினர் தேவைக்கு அதிகமானவர்கள் எனத் தென்பட்டது. இதன்படி, ஊழியர்களின் சில வகையினருக்கு வங்கி தன்னிச்சையான இளைப்பாற்றுத் திட்டம் ஒன்றினை வழங்கியது. இந்தத் திட்டமானது போதுமான அளவு இழப்பீடு/ இளைப்பாற்றுப் பொதி என்பனவற்றை வழங்கியதோடு தன்னிச்சையான இளைப்பாற்றுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுவதற்கு பல ஊழியர்களை ஊக்குவித்தது.

ஆய்விற்குரிய காலப்பகுதியில் தன்னிச்சையான இளைப்பாற்றுத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் 2001ஆம் ஆண்டு திசெம்பர் இறுதியில் 588 ஊழியர்கள் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். மேலும் 103 ஊழியர்கள் 2002ஆம் ஆண்டு முதல் அரைப்பகுதியில் தாமதப்படுத்தப்பட்ட அடிப்படையில் வங்கிப்பணியிலிருந்து ஓய்வு பெறுவர்.

### அமைப்புமுறை மீளமைப்பு

உத்தேச மீளமைப்பில் முக்கிய மூலகம் ஒன்றாகக் காணப்படுவது யாதெனில் வங்கியின் முதன்மைக் குறிக்கோள்களின் வலுப்படுத்தலும் முதன்மையல்லா குறிக்கோள்களைப் பரவலாக்குவதுமாகும். இதன்படி முதன்மைக் குறிக்கோள்கள் மற்றும் கருமங்கள் என்பனவற்றில் கவனம் செலுத்தி புதிய ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்பு ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த உத்தேச ஒழுங்கு முறைப்படுத்தும் அமைப்பு முறையின் கீழ் முதன்மைக் குறிக்கோள்கள் அல்லது கருமங்களின் கீழ் திணைக்களங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அந்தக் கருமங்களாவன விலை உறுதிப்பாடு, நிதியியல் முறை உறுதிப்பாடு, முகவராண்மை மற்றும் வாணிப விடயங்களும் கூட்டுப்பணிகளும் என்பன வாகும். இந்தச் செயல்முறையில் பின்வரும் மாற்றல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- கிராமிய கொடுகடன் திணைக் களத்தையும் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தையும் ஒன்றிணைத்து பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நிறுவப்பட்டது.
- சருவதேச தொழிற்பாட்டு திணைக்களம், உள்நாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் மற்றும் நிதித் திணைக்களம் என வங்கித் தொழில் திணைக்களம் நான்கு திணைக் களங்களாக மீள நிறுவப்பட்டது.
- முழுமையாக அறிந்து கொள்ளும் ஆய்வும், இலங்கை மத்திய வங்கியினதும் வர்த்தக வங்கிகளினதும் கூட்டு உடைமையான வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் (பிறைவேட்) நிறுவனத்துக்கு 2002ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதத்தில் உரிமை மாற்றப் படவுள்ள இலங்கை தன்னியக்க தீர்வகத்தின் சொத்துக்களின் மதிப்பீடும் முற்றுப் பெற்றது.

### கொடுப்பனவு சீர்திருத்தங்கள்

இலங்கையின் நிதியியல் சந்தைகள், மற்றும் வங்கித் தொழில் துறையின் அபிவிருத்திக்கு ஆதரவு வழங்குவதற்குத் தேவையான உட்கட்டமைப்பினை நிறுவுதல் தோற்றம் பெறும் சிறந்த சருவதேச பிரயோகங்களுக்கு இசைவாக கொடுப்பனவுகள் முறையின் தீர்ப்பனவு மற்றும் பிணையங்களின் தீர்ப்பனவு முறையின் இடர்நேர்வுகளைக் குறைத்தல், இலங்கையின் பொதுப்படுகடனின் நம்பகத் தன்மையினையும் வர்த்தகப்படுத்தல் தன்மையினையும் அதிகரித்தல், இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் மற்றும் வாணிப தொழிற்பாடுகளின் செயல் திறனையும் தரத்தினையும் மேம்படுத்தல் புதிய தொழிற்பாட்டுப் பொறியியல் முறைக்கான சட்ட

மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தலுக்குப் பொருத்தமான வரைச் சட்டமொன்றினை நிறுவுதல் என்பனவற்றை எய்துவதற்கு உத்தேச கொடுப்பனவு சீர்திருத்தம் நோக்கம் கொண்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்காக அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையொன்றினையும் பத்திரங்கள் அற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையொன்றினையும் அறிமுகப்படுத்துவதற்கு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேநேர மொத்தக் கொடுப்பனவு முறையானது அடிப்படையில் பாரிய பெறுமதியுடைய கொடுப்பனவுகளை மாற்றல் செய்வதற்கே பெருமளவு பயன்படுத்தப்படும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையானது சருவதேச தரங்களுக்கு இலங்கையின் பிணையங்கள் தீர்ப்பனவுமுறை இசைவாக உள்ளது என்பதை உறுதி செய்வதோடு சந்தை சார்ந்த பத்திர பிணையங்களின் செயற்றிறன் இன்மையை இல்லாமற் செய்கின்ற வேளையில் இரண்டாம் நிலைச் சந்தையில் அரசாங்க பிணையங்களின் வர்த்தகத்தின் சுறுசுறுப்பான தன்மைக்கு வசதி செய்து கொடுப்பதற்கு உதவியாக இருக்கும். இதற்கு மேலதிகமாக மத்திய வங்கியின் நடைமுறை மற்றும் எதிர்கால நிதியியல் தொழிற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதற்காகவும் மேலே குறிப்பிடப்பட்டவற்றுக்கு வசதி செய்து கொடுப்பதற்கு வங்கிக்கு ஒருங்கிணைக்கப்பட்ட/ தன்னியக்க பொதுப்பேரேடு ஒன்றினை பெற்றுக் கொள்ளுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட நோக்கத்துக்காக அதேநேர மொத்தத் தீர்ப்பனவுமுறை/ பத்திரமற்ற பிணையங்களின் தீர்ப்பனவுமுறை மற்றும் தன்னியக்க பொதுப்பேரேட்டு முறை என்பனவற்றைப் பெற்றுக் கொள்ளுவதற்காக விலைக் குறிப்பீட்டாளர்களுக்கு வழங்குவதற்கான விலைக்குறிப்பீட்டு ஆவணங்கள் ஆய்விற்குரிய ஆண்டில் முற்றுப்பெறச் செய்யப்பட்டு அதற்காக விலைக் குறிப்பீட்டுச் சபையின் ஒப்புதலும் வழங்கப்பட்டது.

## சருவதேச கணக்கீட்டுத் தரங்களும் உள்ளக கணக்காய்வு பட்டயமும்

சருவதேச நற்பிரயோகங்களுக்கு இசைவாக வங்கியின் நிதியியல் அறிவிப்பு மற்றும் கணக்கீட்டுக் பிரயோகங்களை மேம்படுத்துவதும் இன்னுமொரு விடயமாக உள்ளதுடன் கம்பனி நிருவாக நற்பிரயோகங்களின் பிரயோகத்தின்போதும் உள்நாட்டு நிதியியல் நிறுவனங்களுக்கு எதிரெதிராக மத்திய வங்கியில் தரப்படுத்தல்களையும் இது மேம்படுத்தும். இதன்படி பின்வருவனவற்றிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- சருவதேச கணக்கீட்டுத் தரங்களுக்கு இசைவாக 2001ஆம் ஆண்டுக்கான கணக்குகளின் அனைத்தையும் உள்ளடக்கிய கணக்காய்வு ஒன்றினையும் சம்பந்தப்பட்ட சிறப்பு விடயங்களை முற்றுப்பெறச் செய்வதற்காக மேற்கொள்ளுவதற்காக சருவதேச கணக்காய்வு நிறுவனமொன்றின் பணிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துக்காக முன்மொழிவுகளை வழங்குமாறு ஐந்து சருவதேச முன்னணி கணக்காய்வு நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன.
- செயலாற்ற கணக்காள்வுகளையும் தகவல்முறை கணக்காய்வுகளையும் மேற்கொள்ளுவதற்காக சிறப்புப் பிரிவுகளை நிறுவுமாறு முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தை உந்துதல். இந்த நோக்கத்துக்காக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் உள்ளக கணக்காய்வு பட்டயம் ஒன்றை ஏற்றுக்கொண்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் முற்றுப் பெறச் செய்யப்படும்போது முகாமைத்துவ கணக்காய்வு முறையினையும் இடர்நேர்வு முகாமைத்துவ செயல்முறையினையும் மேலும் மேம்படுத்த இயலுமாவதோடு சருவதேச சமூகத்தில் வங்கியின் நம்பகத் தன்மையினை அதிகரிக்கச் செய்யும்.

நவீன மயப்படுத்தல் செயல்முறை தொடருவதோடு 3 ஆண்டு காலப்பகுதியொன்றில் முற்றுப் பெறச் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

# கணக்கீடும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும்

## 1. கணக்கீடு

### அ. பொது

மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் தொடர்ச்சியான மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் பாகமொன்றாக வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பின் அடிப்படையாக சருவதேச கணக்கீட்டுத் தரங்களைப் பிரயோகிப்பதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. இதன்படி முழுமையான சருவதேச கணக்கீட்டுத் தரங்களுக்கு நகருவதற்கான முதல் நடவடிக்கையாக 2001ஆம் ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்கள் கணிசமான அளவு சருவதேச தரங்களின் அடிப்படைக்கு மாற்றப்பட்டதோடு விளங்கக் கூடிய சமர்ப்பிப்புக்காக வேண்டி 2000ஆம் அண்டின் ஒப்பிடத்தக்க எண் தொகைகள் மீளக் குறிப்பிடப்பட்டுள்ளன. கணக்கீட்டுக் கொள்கை மற்றும் 2001ஆம் ஆண்டில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்கள் என்பனவற்றின் மீதான விரிவான குறிப்புக்கள் பிரிவு (ஆ)வில் தரப்பட்டுள்ளன.

### (i) 2000ஆம் ஆண்டு திசெம்பர் 31இல் உள்ளவாறு மொத்தச் சொத்துக்கள்

மீளக் குறிப்பிடப்பட்ட அடிப்படையில் மீளக்குறிப்பிடலுக்கு முன்னாக ரூ.217.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் மொத்தச் சொத்துக்கள் ரூ.246.2 பில்லியனாக விளங்கின. தேறிய அதிகரிப்பான ரூ.29.0 பில்லியன் பின்வருவன சம்பந்தப்பட்டதாகும்.

| | ரூபா பில்லியன் |
|---|---|
| சருவதேச நாணய நிதியம் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் | 40.0 |
| வெளிநாட்டு வர்த்தக பிணையங்கள் | (5.9) |
| உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள். முறிகள் மற்றும் கடன்கள் | (6.1) |
| வைத்திருக்கப்பட்ட தங்கம் | 1.1 |
| ஏனைய சொத்துக்கள் | (0.1) |
| மொத்தம் | 29.0 |

### (ii) 2000ஆம் ஆண்டு திசெம்பர் 31இல் உள்ளவாறு மொத்தப் பொறுப்புக்கள்

மீளக் குறிப்பிடப்பட்ட அடிப்படையில் மீளக் குறிப்பிடலுக்கு முன்னான ரூபா 217.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் மொத்தப் பொறுப்புக்கள் ரூ.246.2 பில்லியனாக விளங்கியது. தேறிய அதிகரிப்பான ரூபா 29.0 பில்லியன் பின்வருவன சம்பந்தப்பட்டவையாகும்.

| | ரூபா பில்லியன் |
|---|---|
| சருவதேச நாணய நிதியம் சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள் | 23.8 |
| உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள்,வைப்புக்கள் ஆகியன | 3.3 |
| மூலதனமும் ஒதுக்குகளும் | 5.0 |
| ஏனைய பொறுப்புக்கள் | (3.1) |
| மொத்தம் | 29.0 |

### (iii) 2001ஆம் ஆண்டு திசெம்பர் 31இல் உள்ளவாறு மொத்தச் சொத்துக்கள்

மீளக் குறிப்பிடப்பட்ட அடிப்படையில் மீளக் குறிப்பிடலுக்கு முன்னரான ரூபா 247.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் மொத்தச் சொத்துக்கள் ரூபா 290.6 பில்லியனாக விளங்கின. தேறிய அதிகரிப்பான ரூபா 43.1 பில்லியன் பின்வருவன சம்பந்தப்பட்டவையாகும்.

| | ரூபா பில்லியன் |
|---|---|
| சருவதேச நாணய நிதியம் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் | 47.2 |
| வெளிநாட்டு வர்த்தகப் பிணையங்கள் | (5.0) |
| திறைசேரி உண்டியல்களும் முறிகளும் | 3.3 |
| அரசுக்கான கடன்கள் | (3.5) |
| ஏனைய சொத்துக்கள் | 1.1 |
| மொத்தம் | 43.1 |

### (iv) 2001 திசெம்பர் 31இல் உள்ளவாறு மொத்தப் பொறுப்புக்கள்

மீளக் குறிப்பிடப்பட்ட அடிப்படையில் மீளக் குறிப்பிடலுக்கு முன்னாக ரூபா. 247.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் மொத்தப் பொறுப்புக்கள் ரூபா. 290.6 பில்லியனாக விளங்கின. தேறிய அதிகரிப்பான ரூபா. 43.1 பில்லியன் பின்வருவன தொடர்பானதாகும்.

| | ரூபா பில்லியன் |
|---|---|
| சருவதேச நாணய நிதியம் சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள் | 23.8 |
| உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் | 2.7 |
| மூலதனமும் ஒதுக்குகளும் | 16.6 |
| மொத்தம் | 43.1 |

## (ஆ) சொத்துக்கள்/ பொறுப்புக்கள்

2000ஆம் ஆண்டின் இறுதியின் ரூபா 246.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டின் இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள் பொறுப்புக்கள் ரூபா 290.6 பில்லியனாக விளங்கி ரூபா. 44.4 பில்லியன் அல்லது வங்கியின் மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்களின் 18.0 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள் (ரூபா. 43.2 பில்லியனினால்) பல்வகை சொத்துக்கள் (ரூபா. 5.0 பில்லியனினால்) என்பனவற்றின் அதிகரிப்பின் காரணமாக வங்கியின் சொத்துக்கள் அதிகரித்தன. எனினும் முறையே திறைசேரி உண்டியல்களினதும் முறிகளினதும் (நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பீட்டு ரீதியில்) ரூபா. 28.5 பில்லியனினால் வீழ்ச்சியடைந்தமையினதும் திறைசேரி உண்டியல்களினதும் முறிகளினதும் உடைமைகள் ரூபா. 22.4 பில்லியனினால் அதிகரித்தமையினதும் கூட்டு விளைவாக வங்கியின் உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள் ரூபா 1.9 பில்லியனால் வீழ்ச்சியடைந்தன. மேலும், அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்களும் உத்தரவாதங்களும் ரூபா. 1.9 பில்லியனினால் வீழ்ச்சியடைந்தன.

வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள் (ரூபா. 15.1 பில்லியனினால்) மூலதனமும் ஒதுக்குகளும் (ரூபா. 15.9 பில்லியனினால்) சுற்றோட்டத்தில் உள்ள காசு (ரூபா. 3.2 பில்லியனினால்) உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள் (ரூபா. 8.7 பில்லியனினால்) மற்றும் ஏனைய பொறுப்புக்கள் (ரூபா. 3.4 பில்லியனினால்) என்பனவற்றின் அதிகரிப்பின் காரணமாக வங்கியின் பொறுப்புக்கள் அதிகரித்தன. எனினும், அரசின் வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் உத்தரவாதங்கள் ரூ.1.9 மில்லியனால் வீழ்ச்சியடைந்தள.

## (i) சொத்துக்கள்

### வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்

54 சதவீதத்திற்கு வகைகூறும் வங்கியின் மொத்தச் சொத்துக்களில் பாரிய வகையான வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் 38.2 சதவீதத்தினால் அதிகரித்தன. சருவதேச நாணய நிதியத்துடனான துணைநில் கடன் வசதிகளின் முதலாவது தொகுதியின் பெறுகை (சிஎஉ 103.35 மில்லியன் அல்லது ரூபா. 11.8 பில்லியன்) வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியினால் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் தேறிய கொள்வனவு (ஐ.அ.டொலர் 127.0 மில்லியன் அல்லது ரூபா 11.8 பில்லியன்) அரசினால் திரட்டப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் பெறுகை, ஐ.அ.டொலர் 100.0 மில்லியன் அல்லது ரூபா. 9.3 பில்லியன்), இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கு எதிராக வெளிநாட்டு நாணயப் பெறுகைகள் (அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டது) ஐ.அ.டொலர் 158.0 மில்லியன் அல்லது ரூபா. 14.8 பில்லியன் மற்றும் தனியார் மயப்படுத்தல் பெறுகைகள் (எயார் லங்கா ஐ.அ.டொலர் 25.0 மில்லியன், பிரிமா ரூபா 8.4 பில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 65.0 பில்லியன்) என்பன இந்த அதிகரிப்புக்கு பகுதியளவில் காரணமாகின. ரூபா நியதிகளில் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களின் அதிகரிப்புக்கு இவ்வாண்டில் முக்கிய நாணயங்களுக்கெதிராக ரூபா பெருமளவில் தேய்வடைந்தமையானது பகுதியளவில் காரணமாகியது. வங்கியின் வர்த்தகப் பிணையங்களின் பெறுமதி (வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்) 38.9 சதவீதத்தினால் அதிகரித்தது. குறிப்பாக 2001ஆம் ஆண்டின் நாலாம் காலாண்டில் பிணையங்களினதும் வெளிநாட்டு திறைசேரி உண்டியல்களினதும் சந்தைப் பெறுமதி அதிகரித்தமையே இதற்கான காரணமாகும்.

### உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்

வங்கியின் மொத்தச் சொத்துக்களில் 36 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள் 2000ஆம் ஆண்டின் ரூபா 107.4 பில்லியனிலிருந்து 2001ஆம் ஆண்டில் ரூபா 105.5 பில்லியனுக்கு 1.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. திறைசேரி உண்டியல்களினதும், முறிகளினதும் வீழ்ச்சியே (நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டமை) இதற்கான முதன்மைக் காரணமாகும், எனினும் மத்திய வங்கியின் வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் மற்றும் அரசாங்கத்துக்கான கடன்கள் (சூழல் கடன்) என்பன 2001ஆம் ஆண்டில் முறையே ரூபா 22.4 பில்லியனினாலும் ரூபா 3 பில்லியனினாலும் அதிகரித்தன.

திறைசேரி உண்டியல்களினதும், முறிகளினதும் (நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டவை) உடைமைகள் ரூபா 28.5

## இலங்கை மத்திய வங்கியின் 2001 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஐந்தொகை

| | குறிப்புக்கள் | 2001 ரூபா | 2000 ரூபா |
|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| செலுத்தப்பட வேண்டியவை | | 54,550,633 | 109,653,232 |
| ப.நா.நிதியத்துடன் தொடர்பான பொறுப்புக்கள் | 21 | 69,275,212,836 | 54,257,930,699 |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | | 171,927,864 | 32,944,286 |
| | | **69,501,691,333** | **54,400,528,217** |
| **உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| திறைசேரி உண்டியல்களும் முறிகளும் (மீள்கொள்வனவு) | | 2,715,179,044 | 1,283,836,262 |
| வைப்புக்கள் - அரசு | | 4,301,021,684 | 3,152,081,409 |
| - அரச முகவர்கள் | | 9,346,134 | 42,422,726 |
| - வர்த்தக வங்கிகள் | | 35,951,929,117 | 31,804,532,340 |
| - ஏனைய வைப்புக்கள் | | 2,976,154,054 | 2,517,893,829 |
| செலுத்தப்பட வேண்டியவை | | 1,670,261,143 | 146,306,010 |
| | 22 | **47,623,891,176** | **38,947,072,576** |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 23 | 76,561,172,429 | 73,315,890,843 |
| ஏனைய பொறுப்புக்கள் | 24 | 18,649,970,814 | 15,214,304,429 |
| | | 95,211,143,243 | 88,530,195,272 |
| மூலதனமும் ஒதுக்குகளும் | 25 | 64,831,178,985 | 48,950,693,652 |
| அரச வெளிநாட்டுக்கடன்களும் உத்தரவாதங்களும் | | 13,459,454,955 | 15,378,137,529 |
| | | **290,627,359,692** | **246,206,627,246** |
| **சொத்துக்கள்** | | | |
| **வெளிநாட்டு நிதிச் சொத்துக்கள்** | | | |
| காசு நிலுவைகள் | 10 | 34,966,679,884 | 17,153,806,696 |
| பிணைகளின் வர்த்தகப்படுத்தல் | 11 | 66,434,843,315 | 47,848,582,936 |
| தங்கம் | 12 | 6,584,656,648 | 7,341,031,157 |
| ப.நா.நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள் | 13 | 47,253,415,109 | 40,103,198,980 |
| பெறுகைகள் | 14 | 1,029,652,891 | 670,401,854 |
| | | **156,299,247,847** | **113,117,021,623** |
| **உள்நாட்டு நிதிச் சொத்துக்கள்** | | | |
| திறைசேரி உண்டியல்களும் முறிகளும்- | 15 | 59,455,391,934 | 37,014,563,083 |
| திறைசேரி உண்டியல்களும் முறிகளும்- (நேர்மாற்று மீள் கொள்வனவு) | | 1,968,684,000 | 30,425,633,110 |
| அரசுக்கான கடன்கள் | 16 | 39,275,047,106 | 36,317,547,105 |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | 17 | 149,532,875 | 519,719,010 |
| பெறத்தக்கவை | | 3,669,422,034 | 2,503,923,844 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் முதலீடு | 18 | 973,029,680 | 576,108,601 |
| | | **105,491,107,629** | **107,357,494,753** |
| **ஏனைய சொத்துக்கள்** | | | |
| பல்வகைச் சொத்துக்கள் | 19 | 7,355,432,940 | 2,399,178,538 |
| நிலையான சொத்துக்கள் | 20 | 8,022,116,321 | 7,954,794,803 |
| | | 15,377,549,261 | 10,353,973,341 |
| அரச வெளிநாட்டுக்கடன்களும் உத்தரவாதங்களும் | | 13,459,454,955 | 15,378,137,529 |
| | | **290,627,359,692** | **246,206,627,246** |

## இலாப நட்டக் கணக்கு - 2001

| | குறிப்பு | 31 திசெம்பரில் முடிவடையும் ஆண்டு 2001 ரூபா | 2000 ரூபா |
|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 1 | 13,961,091,003 | 18,694,387,969 |
| வட்டிச் செலவுகள் | | (10,449,448,352) | (14,641,177,220) |
| **தேறிய வட்டி வருமானம்** | | **3,511,642,651** | **4,053,210,749** |
| தேறிய வர்த்தக வருமானம் | 2 | 1,393,473,628 | 5,391,107,091 |
| பெறப்படாத நியாயமான மதிப்பீடு களிலிருந்தான இலாபம் (நட்டம்) | | 1,260,365,318 | 1,706,244,790 |
| **வெளிநாட்டு நாணய தொழிற்பாட்டு இலாபம்** | | 6,165,481,597 | 11,150,562,630 |
| **உள்நாட்டு நாணய வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 3 | 12,008,693,018 | 5,674,112,082 |
| பங்கிலாப வருமானம் | 4 | 30,008,000 | 37,089,750 |
| பெறப்படாத நியாயமான மதிப்பீடு களிலிருந்தான இலாபம் (நட்டம்) | | 453,307,029 | (795,566,551,954) |
| பல்வகை வருமானம் | | 128,090,529 | 98,935,153 |
| உள்நாட்டு நாணய தொழிற்பாட்டு வருமானம் | | 12,620,098,576 | 5,014,570,797 |
| **மொத்த வருமானம்** | | **18,785,580,173** | **16,165,133,427** |
| தொழிற்பாட்டுச் செலவுகள் | | | |
| புதிய நாணய வழங்கலுக்கான செலவு | 5 | (579,005,800) | (543,803,881) |
| அறவிடமுடியா, ஐய படுகடன் செலவினங்கள் | 6 | (262,574,002) | (169,308,236) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 7 | (3,038,660,693) | (4,566,551,954) |
| **காலாண்டுக்கான தேறிய இலாபம்** | | 14,905,339,678 | 10,885,469,356 |
| ஒதுக்குகளுக்கான ஒதுக்கீடுகள் | | 3,905,339,678 | 6,885,469,356 |
| திரட்டப்பட்ட நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்ட மீதி | | 11,000,000,000 | 4,000,000,000 |

**கணக்காய்வாளர் நாயகத்தின் குறிப்பு:**

2001 திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13(1) உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் உறுப்புரை 154 (1)இற்கு அமையவும் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42(1) இற்கு ஏற்கவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42(2),ன் நியதிக்கிணங்க நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்
கொழும்பு 7
10 ஏப்பிறல் 2002

| | | |
|---|---|---|
| எஸ். சீ. மாயதுன்ன | ஏ. எஸ். ஜயவர்த்தன | கே. ஜெகநாதன் |
| கணக்காய்வாளர் நாயகம் | ஆளுநர் | பதில் முதன்மைக் கணக்காளர் |

## இலாப நட்டக் கணக்குக்குரிய குறிப்புக்கள்

| | 2001 ரூபா | 2000 ரூபா |
|---|---|---|
| **1. தேறிய வட்டி வருமானம் - வெளிநாட்டு நாணயம்** | | |
| காசு, குறுந்தவணைப் பணம் | 1,779,513,263 | 1,007,774,907 |
| வர்த்தகப் பிணைகள் | 12,153,468,120 | 17,675,939,506 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 28,109,620 | 10,673,556 |
| | 13,961,091,003 | 18,694,387,969 |
| **வட்டிச் செலவுகள்** | | |
| வெளிநாட்டுப் பிணைகள் | 9,623,360,357 | 13,927,863,728 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 621,326,944 | 366,312,677 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 204,761,051 | 347,000,815 |
| | 10,449,448,352 | 14,641,177,220 |
| **2. தேறிய வர்த்தக வருமானம் - வெளிநாட்டு நாணயம்** | | |
| வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகம் | 190,882,957 | 1,060,319,308 |
| தங்க வர்த்தக வருமானம் | 2,394,338 | 70,334,135 |
| பிணைய வர்த்தக இலாபங்கள் | 1,080,568,852 | 3,246,014,172 |
| செலாவணி இலாபங்கள் | 119,627,481 | 1,014,439,476 |
| | 1,393,473,628 | 5,391,107,091 |
| **3. தேறிய வட்டி வருமானம் - உள்நாட்டு நாணயம்** | | |
| **வட்டி வருமானம்** | | |
| வர்த்தகப் பிணைகள் -அரச திறைசேரி உண்டியல்கள் | 11,901,855,631 | 5,056,773,203 |
| கடன்களும் முற்பணங்களும் | 106,837,387 | 617,338,879 |
| | 12,008,693,018 | 5,674,112,082 |
| **4. பங்கிலாப வருமானம் - உள்நாட்டு முதலீடுகள்** | | |
| பிணையங்களின் விற்பனைக்காக கிடைத்தவை | 30,008,000 | 37,089,750 |
| | 30,008,000 | 37,089,750 |
| **5. புதிய நாணய வெளியீட்டுக்கான செலவுகள்** | | |
| தாள் வெளியீட்டுச் செலவுகள் | 331,333,962 | 269,832,081 |
| குத்தி வெளியீட்டுச் செலவுகள் | 247,671,838 | 273,971,800 |
| | 579,005,800 | 543,803,881 |

| | 2001 ரூபா | 2000 ரூபா |
|---|---|---|
| **6. அறவிடமுடியா, ஐய படுகடன் செலவுகள்** | | |
| வாடிக்கையாளருக்கான கடன்களும் முற்பணங்களும் குறித்துரைக்கப்பட்ட கொடுகடன் இடர் ஒதுக்குகள் | 240,222,952 | 162,655,386 |
| மீளளிக்கப்படாத நிலுவைகளைப் பதிவழித்தல் | 22,351,050 | 6,652,850 |
| | 262,574,002 | 169,308,236 |
| **7. தொழிற்பாட்டுச் செலவுகள்** | | |
| அலுவலர்கள் செலவுகள் (குறிப்பு 8) | 2,333,623,821 | 4,013,049,229 |
| பெறுமானத்தேய்வு (குறிப்பு 9) | 216,258,458 | 158,329,728 |
| நிர்வாகத்திற்கான செலவுகள் | 488,778,414 | 395,172,997 |
| | 3,308,660,693 | 4,566,551,954 |
| **8. அலுவலர்களுக்கான செலவுகள்** | | |
| கூலிகள், சம்பளங்கள் , ஏனையவை | 1,366,617,294 | 1,543,573,762 |
| உதவு தொகை செலுத்தப் பட்ட திட்டம் | 152,865,009 | 161,749,419 |
| நன்மை அளிக்கும் திட்டம் | 814,141,518 | 2,307,726,048 |
| | 2,333,623,821 | 4,013,049,229 |

இவ்வாண்டில் வங்கியினால் தொழிலிக்கு அமர்த்தப்பட்ட ஆட்களின் சராசரி எண்ணிக்கை 1936ஆகவும் 2000ஆம் ஆண்டில் 1998 ஆகவும் காணப்பட்டது)

| | 2001 ரூபா | 2000 ரூபா |
|---|---|---|
| **9. பெறுமானத் தேய்வுகள்** | | |
| அலுவலக தளபாடங்களும் உபகரணங்களும் | 14,207,974 | 8,755,415 |
| கணனி, கணனி உபகரணங்கள் | 25,040,014 | 12,091,925 |
| உந்து ஊர்திகள் | 6,205,764 | 7,010,043 |
| இணைப்புக்களும் பொருத்துக்களும் | 3,838,576 | 4,158,267 |
| நூலகப் புத்தகங்கள் | 1,832,846 | 1,758,748 |
| தன்னியக்க உபகரணங்கள் | 10,351,009 | 12,938,761 |
| கட்டடங்கள் | 148,499,324 | 109,670,879 |
| ஏஎஸ் 400 முதன்மை கணனி உறைகள் | 6,282,952 | 1,945,690 |
| | 216,258,458 | 158,329,728 |

# ஐந்தொகைக்கான குறிப்புக்கள்

## வெளிநாட்டு நிதிச் சொத்துக்கள்

| | 2001 ரூபா | 2000 ரூபா |
|---|---|---|
| **10. காசு நிலுவைகள்** | | |
| காசு நிலுவைகள் | 5,244,411,158 | 12,606,810,462 |
| வெளிநாட்டுத் தாள்களும் குத்திகளும் | 217,730 | 125,227 |
| தவணை வைப்புக்கள் | 29,752,050,996 | 4,546,871,007 |
| | 34,966,679,884 | 17,153,806,696 |
| **11. பிணைகளின் வர்த்தகப்படுத்தல்** | | |
| வெளிநாட்டு அரச பிணையங்கள் | 55,517,855,679 | 28,044,569,489 |
| வெளிநாட்டு அரச திறைசேரி உண்டியல்கள் | 6,365,654,186 | - |
| வெளிநாட்டுப் பிணையங்கள் - அரசல்லா | 4,551,333,450 | 19,804,013,447 |
| | 66,434,843,315 | 47,848,582,936 |
| **12. தங்கம்** | | |
| விற்பனைக்காக வைத்திருக்கப் பட்ட தங்கம் | 4,970,135,989 | 5,974,339,574 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்க தாகவுள்ள தங்கம் | 1,164,520,659 | 1,366,691,583 |
| | 6,584,656,648 | 7,341,031,157 |
| **13. ப.நா.நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள்** | | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 77,628,818 | 29,915,472 |
| பன்னாட்டு நாணய நிதிய பங்கு | 47,175,786,291 | 40,073,283,508 |
| | 47,253,415,109 | 40,103,198,980 |
| **14. பெறுகைகள்** | | |
| பல்வகைப் பெறுகைகள் | 13,226,343 | 670,401,854 |
| சுயவிருப்பு ஓய்வூதியச் செலவிற்கான உலக வங்கியின் பணவனுப்பல் | 1,016,426,548 | - |
| | 1,029,652,891 | 670,401,854 |

## உள்நாட்டு நிதிச் சொத்துக்கள்

| | 2001 ரூபா | 2000 ரூபா |
|---|---|---|
| **15. திறைசேரி உண்டியல்களும் முறிகளும் வர்த்தகத்திற்காக வைத்திருதக்கப்பட்டவை** | | |
| இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள் | 57,955,391,934 | 37,014,563,083 |
| இலங்கை அரச திறைசேரி முறிகள் | 1,500,000,000 | - |
| | 59,455,391,934 | 37,014,563,083 |
| **16. அரசுக்கான கடன்கள்** | | |
| சுழல்வும் கொடுகடனும் | 30,126,600,000 | 27,169,100,000 |
| சிறப்பு முற்பணங்கள் | 9,148,447,106 | 9,148,447,105 |
| | 39,275,047,106 | 36,317,547,105 |
| **17. ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்** | | |
| நிதிக்கம்பனிகளும் ஒப்புதலளிக்கப் பட்டநிறுவனங்களும் | 2,733,094,720 | 2,863,057,903 |
| **கூட்டுக:** பெறப்பட்ட வட்டி | 3,577,712,524 | 3,176,948,792 |
| மொத்தப் பெறுகைகள் | 6,310,807,244 | 6,040,006,695 |
| **கழிக்குக:** தொங்கற் கணக்கிலுள்ள வட்டி | (3,577,712,524) | (2,343,338,893) |
| அறவிடமுடியாக்கடனுக்கான ஒதுக்கு | (2,583,561,845) | (2,343,338,893) |
| | 149,532,875 | 519,719,010 |
| **18. நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் முதலீடு** | | |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 910,817,180 | 524,396,101 |
| இலங்கைக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 20,000,000 | 20,000,000 |
| கொடுகடன் தகவல் பிரிவு | 12,462,500 | 12,462,500 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 26,250,000 | 17,500,000 |
| வரையறுக்கப்பட்ட டைப் அன்ட் பெல்ப்ஸ் கிரடிட் ரேடிங் | 3,500,000 | 1,750,000 |
| | 973,029,680 | 576,108,601 |

| | 2001 ரூபா | 2000 ரூபா |
|---|---|---|
| **19. பல்வகைச் சொத்துக்கள்** | | |
| பிற்போடப்பட்ட அரசிறைச் செலவுகள் - நாணயவழங்கல் | 616,927,010 | 447,904,105 |
| இலங்கைச் சுங்கத்திடமிருந்தும் ஏனையவர்களிடமிருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட தங்கம் | 365,960,166 | 365,960,168 |
| முற்பணங்கள் | 180,536,251 | 162,360,513 |
| மீளப்பெறத்தக்க வங்கி முற்பணங்கள் | 1,271,185,376 | 1,205,432,533 |
| தொங்கற் கடன்பட்டோர் | 192,772,939 | 52,626,583 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 138,075,600 | - |
| ஏனையவை | 4,589,975,598 | 164,894,636 |
| | 7,355,432,940 | 2,399,178,538 |
| **20. நிலையான சொத்துக்கள்** | | |
| காணியும் கட்டடங்களும் | 7,654,328,834 | 5,501,642,755 |
| உந்து ஊர்திகள் | 55,851,873 | 63,090,387 |
| அலுவலகத் தளபாடங்களும் கருவிகளும் | 127,871,762 | 78,798,738 |
| இணைப்புக்களும் பொருத்துக்களும் | 34,547,185 | 37,424,392 |
| கணனி உபகரணங்கள் | 75,120,042 | 36,275,777 |
| ஏஎஸ் 400 முதன்மைக் கணனி உறை | 25,131,807 | 7,782,759 |
| தன்னியக்கப்படுத்தப்பட்ட கருவிகள் | 41,404,036 | 51,755,045 |
| பூச்சுக்கள் | 3,637,312 | 2,910,500 |
| நூலகம் | 3,665,693 | 3,517,496 |
| நிர்மாணத்திலுள்ள கட்டடங்கள் | 493,688 | 2,171,532,865 |
| சுவீப்ட் | 64,089 | 64,089 |
| | 8,022,116,321 | 7,954,794,803 |

## வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்

| | 2001 ரூபா | 2000 ரூபா |
|---|---|---|
| **21. ப.நா.நிதியத்துடன் தொடர்பான பொறுப்புக்கள்** | | |
| அனுமதிப்பங்கின் அதிகரிப்புக்கள் | 23,842,963,693 | 23,842,963,693 |
| சிஎஉ வுக்கான ஒதுக்கு | 8,087,212,441 | 6,869,650,352 |
| கடன்கள் | 19,462,579,468 | 11,942,497,650 |
| ஏனைய கணக்குகள் | 17,882,457,234 | 11,602,819,004 |
| | 69,275,212,836 | 54,257,930,699 |

## உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்

| | 2001 ரூபா | 2000 ரூபா |
|---|---|---|
| **22. ஏனைய வைப்புக்கள்** | | |
| ஊழியர் சேமலாப நிதியம் | 88,606,126 | 1,933,974 |
| ஓய்வூதிய நிதியம் | 1,381,624,537 | 2,085,883,323 |
| விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் | 1,083,800,758 | 3,329,193 |
| சனாதிபதி நிதியம் | 19,043,650 | 125,492,310 |
| ஏனைய நிதியங்கள் | 401,835,597 | 300,495,066 |
| கட்டாய சேமிப்பு நிதியம் | 1,243,386 | 759,963 |
| | 2,976,154,054 | 2,517,893,829 |
| **23. சுற்றோட்டத்திலுள்ள நாணயம்** | | |
| தாள்கள் | 73,465,069,612 | 70,427,916,466 |
| குத்திகள் | 3,096,102,817 | 2,887,974,377 |
| | 76,561,172,429 | 73,315,890,843 |
| **24. ஏனைய பொறுப்புக்கள்** | | |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 9,999,354,335 | 10,998,357,985 |
| தொங்கற் கடன்கொடுத்தோர் | 5,040,157,523 | 428,833,168 |
| ஏனையவை | 3,610,458,956 | 3,787,113,276 |
| | 18,649,970,814 | 15,214,304,429 |

**25. மூலதனமும் ஒதுக்குகளும்**

நாணயவிதிச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் நியதிகளின்படி வங்கியின் மூலதனம் ரூபா 15மில்லியனாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | 2001 ரூபா | 2000 ரூபா |
|---|---|---|
| பொது ஒதுக்கு | 17,775,880,561 | 17,999,684,020 |
| கட்டடத்துக்கான ஒதுக்கு | 4,562,738,859 | 4,562,738,859 |
| கொடுகடன் உத்தரவாதத்துக்கான ஒதுக்கு | 500,000,000 | 500,000,000 |
| நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் | 4,925,000,000 | 4,925,000,000 |
| இலாப நட்டக் கணக்கு | 14,905,339,678 | - |
| மிகை | 985,000,000 | 985,000,000 |
| பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | 19,723,526,260 | 18,921,498,225 |
| ஏனைய ஒதுக்குகள் | 1,438,693,627 | 1,041,772,548 |
| | 64,816,178,985 | 48,935,693,652 |

பில்லியனினால் வீழ்ச்சியடைந்தன. ஐ.அ.டொலர் 158 பில்லியன் பெறுமதியுடைய இலங்கை அபிவிருத்தி முறிகளின் கொள்வனவு, வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக உள்நாட்டுச் சந்தையில் ஐ.அ.டொலர் 127 பில்லியன் தேறிய கொள்வனவு, தனியார் மயமாக்கல் பெறுகைகள் மற்றும் அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் என்பனவற்றினால் பெறப்பட்ட டொலர்களின் கொள்வனவு போன்ற ஏனைய வழிமுறைகளின் ஊடாக சந்தையில் ரூபாத் திரவத்தன்மை உட்படுத்தப்பட்டமையே இதற்கான காரணமாகும். இலங்கை மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்களும், முறிகளும் ரூபா. 22.4 பில்லியனினால் அல்லது 61 சதவீதத்தினால் அதிகரித்தன. ஆண்டின் இறுதிக் காலாண்டில் அரசாங்கத்துக்கு திரவத்தன்மையினை வழங்குவதற்காக முதனிலைச் சந்தையில் திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்பட்டமையே இதற்கான முதன்மைக் காரணமாகும்.

## (ii) பொறுப்புக்கள்

### வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்

வங்கியின் மொத்தப் பொறுப்புக்களின் 24 சதவீதத்தை வெளிநாடடு நிதியியல் பொறுப்புக்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. 2001ஆம் ஆண்டில் சருவதேச நாணய நிதியம் சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள் ரூபா 15.0 பில்லியனினால் அல்லது 28 சதவீதத்தினால் அதிகரித்தன. துணைநில் கடன் வசதிகளின் முதலாவது தொகுதியின் பெறுகையும் வெளிநாட்டு நாணய பொறுப்புக்களின் அதிகரிப்புமே இதற்கான காரணமாகும்.

### உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்

மொத்தப் பொறுப்புக்களின் 16 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள் இவ்வாண்டில் ரூபா 8.7 பில்லியினினால் அல்லது 22 சதவீதத்தினால் அதிகரித்தன. உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்களின் அதிகரிப்புக்கு வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் ரூபா 4.1 பில்லியனினாலும் திறைசேரி உண்டியல்களும், முறிகளும் (மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள்) ரூபா. 1.4 பில்லியனினாலும், அரசாங்க வைப்புக்கள் ரூபா. 1.1 பில்லியனினாலும், ஏனைய வைப்புக்கள் ரூபா 0.5 பில்லியனினாலும், செலுத்தப்பட உள்ளவை ரூபா 1.5 பில்லியனினாலும் அதிகரித்தமையே காரணமாகும்.

### ஏனைய பொறுப்புக்கள்

வங்கியின் மொத்தப் பொறுப்புக்களில் 60 சதவீதத்திற்கு வகைகூறும் பாரிய வகையினை ஏனைய பொறுப்புக்கள் பதிவு செய்தன. பொறுப்புக்களின் முக்கிய விடயமாக சுற்றோட்டத்தில் உள்ள நாணயம் 2000ஆம் ஆண்டின் ரூபா 73.3 பில்லியனிலிருந்து 2001ஆம் ஆண்டில் ரூபா 3.2 பில்லியனினால் ரூபா 76.6 பில்லியனுக்கு அல்லது 4 சதவீதத்தினால் அதிகரித்தது. மூலதனமும் ஒதுக்குகளும் 2000ஆம் ஆண்டின் ரூபா 49.0 பில்லியனிலிருந்து 2001ஆம் ஆண்டில் ரூபா 64.8 பில்லியனுக்கு 15.9 பில்லியனால் அல்லது 32 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசாங்க வெளிநாட்டுக் கடன்களும் உத்தரவாதங்களும் 2000ஆம் ஆண்டின் ரூபா 15.4 பில்லியனிலிருந்து 2001ஆம் ஆண்டில் ரூபா 13.5 பில்லியனுக்கு அல்லது 13 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

## (இ) வருமானம்

2000ஆம் ஆண்டின் ரூபா 30.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் வங்கியின் மொத்த வருமானம் ரூபா 29.2 பில்லியனாக விளங்கியது. இந்த வருமானத்தின் முக்கிய பாகமொன்று அதாவது 43 சதவீதம் வங்கியின் உள்நாட்டு நிதியியல் தொழிற்பாடுகளிலிருந்தான வட்டி வருவாயிலிருந்தும், இலாபங்களிலிருந்தும் உருவாக்கப்பட்டன. மொத்த வருமானத்தில் வங்கியின் உள்நாட்டு நிதியியல் தொழிற்பாடுகளில் இருந்தன. வருமானம் 2000ஆம் ஆண்டின் 31.0 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 41 சதவீதத்திற்கு அதிகரித்தது. வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் 2000ஆம் ஆண்டின் ரூபா 37.0 பில்லியனிலிருந்து 2001ஆம் ஆண்டில் ரூபா 59.5 பில்லியனுக்கு அதிகரித்தமையும் 2001ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் சார்புரீதியில் உயர்ந்த வட்டி வீதங்கள் காணப்பட்டமையுமே இதற்கான முதன்மைக் காரணங்களாகும். 2001ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் குறிப்பாக மே, யூன் மாதங்களிலேயே வங்கியின் திறைசேரி உண்டியல்களின் அதிகரிப்பு இடம்பெற்றது. ஆண்டொன்றுக்கான ஆகக்கூடிய வட்டி வீதமாகிய 23 சதவீதமான அதிஉயர் வீதங்களில் ஓரிரவு அடிப்படையில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகளின் வடிவில் சந்தைக்கு பாரியஅளவில் நிதியங்கள் வழங்கப்பட்டமையனாது உள்நாட்டு வருமானம் அதிகரிப்பதற்கான இன்னுமொரு காரணமாக அமைந்தது.

சருவதேச நாணய நிதியம் (ரூபா 621.3 மில்லியன்) மற்றும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் (ரூபா. 204.8 மில்லியன்) என்பனவற்றுக்கான வட்டிச் செலவுகள் கழிக்கப்பட்ட பின்னர் இவ்வாண்டுக்கான வெளிநாட்டு வருமானம் (தேறிய) ரூபா 6.2 பில்லியனாக விளங்கி மொத்த வருமானத்தில் அதனது 2000ஆம் ஆண்டின் 69.0 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 33 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தமையைக் காட்டியது.

2001ஆம் இறுதிக் காலாண்டு தவிர்ந்த ஆண்டின் ஏனைய காலப்பகுதிகளில் வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் தாழ்ந்த மட்டங்களே இதற்கான முதன்மைக் காரணமாகும். மொத்த வெளிநாட்டு வருமானமான ரூபா 6.2 பில்லியனில் வட்டி வருவாய் ரூபா. 4.3 பில்லியனாகவும் வெளிநாட்டுப் பிணையங்களிலிருந்த வருமானம் ரூபா 2.5 பில்லியனாகவும் விளங்கியது. பிணையங்கள், வெளிநாட்டு நாணயம், தங்கம் என்பனவற்றின் வர்த்தக இலாபம் என்பன முறையே ரூபா 1.1 பில்லியனாகவும் ரூபா 191 மில்லியனாகவும் விளங்கின. செலாவணி வருவாயான ரூபா 120 மில்லியன், தங்கத்தின் வர்த்தகம் மீதான வருவாயான ரூபா 2.0 மில்லியன் என்பன ஏனைய வருவாய்களை உள்ளடக்கியிருந்தன. சருவதேச கணக்கீட்டுத் தரங்களின் அடிப்படையில் சந்தைக்கு வெளிநாட்டுப் பிணையங்களின் குறிப்பு ரூபா. 1.3 பில்லியன் கொண்ட வருவாயை உருவாக்கியது.

### (ஈ) செலவு

வங்கியின் மொத்தச் செலவு 2000ஆம் ஆண்டின் ரூபா 20.7 பில்லியனிலிருந்து 2001ஆம் ஆண்டில் ரூபா 14.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதில் 21 சதவீதம் நிருவாகச் செலவுகளாகக் காணப்பட்டவேளையில் 79 சதவீதம் வெளிநாட்டுப் பிணையங்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளையும் ஏனைய கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியிருந்தது. ஒதுக்குகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட பின்னர் எஞ்சிய தேறிய இலாபமான ரூபா 11.0 பில்லியன் நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 39(இ) யின் நிதிகளின்படி அரசாங்கத்தின் திரட்டிய நிதியத்துக்கு வரவு வைப்பதற்காக ஒதுக்கப்பட்டது.

## (உ) கணக்கீட்டுக் கொள்கைகளும் 2001.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பும்

### (i) சமர்ப்பித்தலுக்கான அடிப்படை

தொடக்கத்திலிருந்து பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இசைந்து செல்லும் வகையில் வரலாற்றுச் செலவு அடிப்படையிலும் மிக அண்மைக் காலத்திலிருந்து இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கு இசைவாகவும் மத்திய வங்கி அதனது கணக்குகளைத் தயாரித்துள்ளது.வங்கியின் நிதியியல் கூற்றுக்களை மேம்பட்ட அடிப்படையில் சமர்ப்பிப்பதற்கான தேவையினையும் அதேபோன்று ஏனைய மத்திய வங்கிகளுக்கு இணையாக காணப்பட வேண்டியதனையும் கருத்திற்கொண்டு மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கையிடலுக்காக சருவதேச கணக்கீட்டுத் தரங்களை ஏற்றுக்கொள்வதற்கு நாணயச்சபை ஒப்புதல் அளித்தது. இதன்படி, 2001ஆம் திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பின் போது சருவதேச கணக்கீட்டுத் தரங்களுக்கு வங்கி கணிசமான இசைவினைக் கொண்டுள்ளது. இவ்வாறு செய்கையில் 2001ஆம் ஆண்டுக்கான ஒப்பீட்டுக்கு விளக்கம் தருவதற்காக 2000ஆம் ஆண்டுக்கான கணக்குகள் மீளக் குறிப்பிடப்பட்டன.

வங்கியின் கருமங்களையும், நிதியியல் நிறுவனங்களில் கணிசமான முதலீடுகள் அந்த நிறுவனங்களை இலங்கை மத்திய வங்கியின் துணை அல்லது இணை நிறுவனங்களாக மாற்றாது என்ற நாணயச்சபையின் தேவைப்பாடுகளையும் கருத்திற்கொண்டு சருவதேச கணக்கீட்டுத் தரங்கள் 22,27 மற்றும் 28 ஆகிய மத்திய வங்கிக்கு பிரயோகிக்கப்பட மாட்டாது என சபை தீர்மானித்தது.

திருத்தப்பட்ட சருவதேச கணக்கீட்டுத்தரம் 19 இனை வங்கி முழுமையாக நடைமுறைப்படுத்தியுள்ளது. (ஊழியர்களின் நன்மைகள் தொடர்பான தரம்) வங்கி அதனது இளைப்பாற்று நன்மைக் கொள்கைகளையும். திட்டங்களையும் 2002ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாள் நடைமுறைக்கு வந்த தன்னிச்சையான இளைப்பாற்றுத் திட்டத்தின் காரணமாக அத்தகைய திட்டங்களின் மீதான தாக்கத்தினாலும் வங்கி மீள் மதிப்பீடு செய்து கொண்டிருக்கின்றது. எனினும் வொட்சன் வயிட் வேர்ல்ட்வைட் நிறுவனத்தின் பேராளர் நிறுவனம் ஒன்றான எக்சுவேரியல் மெனேஜ்மன்ட் கொன்சல்டன்ட் (பிரைவேட்) லிமிற்றட் இனால் 1999 திசெம்பர் 31இல் உள்ளவாறு மத்திய வங்கியின் இளைப்பாற்றுத் திட்டத்துக்கு மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் ஓய்வூதியப் பொறுப்புக்களுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த மதிப்பீடானது மதிப்பிடப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டு காலப்பகுதிக்கு பயனுறுவதாகும். 2001ஆம் ஆண்டு திசெம்பர் 31இல் உள்ளவாறு பணிக்கொடுப்பனவு பொறுப்புக்களுக்கும் ஏனைய ஊழியர் நன்மைகளுக்காகவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2002ஆம் ஆண்டில் அனைத்து ஓய்வூதியத் திட்டங்களுக்கு பெற்றுக் கொள்வதற்கு வங்கி எண்ணம் கொண்டுள்ளது. 2000ஆம் ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்கள் சருவதேச கணக்கீட்டுத் தரங்களுக்கு பெருமளவு இசைந்து செல்லும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளமைக்கு வங்கியின் நாணயச்சபையினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## (ii) கணக்கீட்டு / அறிக்கையிடல் நாணயம்

வேறுவகையாகக் குறிப்பிட்டாலன்றி அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவிலேயே குறிப்பிடப்பட வேண்டும்.

## (iii) குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் தொகுப்பு

இந்த நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பின்போது மேற்கொள்ளப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

### துணைமை மற்றும் இணை நடவடிக்கைகள்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க இலங்கை நாணய விதிச்சட்டமானது அதனது பொதுவான வாணிப நடவடிக்கைகளின் போது வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு அல்லது ஏதேனும் ஒன்றில் நேரடியான நலவுரித்துக்களைக் கொண்டிருப்பதற்கு அல்லது வேறு ஏதேனும் வங்கித்தொழில் நிறுவனத்தின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு குறிப்பாகத் தடை விதிக்கின்றது. எனினும், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறையில் மனித மூலவளங்கள் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்காக அல்லது இலங்கையில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளுக்கிடையில் தீர்ப்பனவு கொடுக்கல் வாங்கல்களின் வசதிக்காக உருவாக்கப்பட்டது என நாணயச்சபை கருதுமாயின் அவ்வாறு உருவாக்கப்பட்ட ஏதேனும் கம்பனியின் பங்குகளைக் கைக்கொண்டு உடைமையாக வைத்திருப்பதற்கு சட்டம் வங்கியினைத் தேவைப்படுத்துகின்றது.

இந்த தேவைப்பாடுகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் விற்பனை செய்வதற்காக மட்டுமே முதலீடுகள் கொள்வனவு செய்யப்பட்டு வங்கியில் வைத்திருக்கப்படுகின்றன. இதன்படி இவை துணைமை நிறுவனங்களாக ஒருங்கிணைக்கப்படுவதோ அல்லது இணை நிறுவனங்களின் முதலீடுகளாகவோ கருதப்படுவதில்லை.

### வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்

வெளிநாட்டு நாணயங்களில் உள்ள நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகை நாளில் அல்லது நாளில் காணப்பட்ட செலாவணி வீதங்களில் அல்லது ஒப்பந்த வீதங்களில் ரூபாவுக்கு மாற்றல் செய்யப்படுகின்றன.

வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற நாளில் காணப்பட்ட செலாவணி வீதங்களில் கணக்கிடப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவின் போது ஏற்பட்ட இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கணக்கில் காட்டப்படுகின்றன. ஐந்தொகை நாளில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் செலாவணி மீள் மதிப்பீட்டிலிருந்து உருவாகும் தேறாத இலாபங்கள் அல்லது நட்டங்கள் நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 41இற்கு இணங்க சருவதேச ஒதுக்கு மீள் மதிப்புக் கணக்குக்கு மாற்றல் செய்யப்படுகின்றன.

### வட்டி வருவாயும் செலவும்

வட்டி உழைக்கும் அனைத்து கருவிகளுக்காகவும் ஒன்று சேர்ந்த அடிப்படையில் வட்டி வருவாய்களும் செலவும் வருமானக் கூற்றில் காட்டப்படுகின்றன. நிலையான வருமான முதலீடுகளின் நறுக்குகள், பிணையங்களின் வர்த்தகம், திறைசேரி உண்டியல்களினதும் ஏனைய கருமங்களினதும் மீதான ஒன்று சேர்ந்த கழிவும் மிகையும் என்பனவற்றை வட்டி வருவாய் உள்ளடக்குகின்றது. 90 நாட்களுக்கு மேல் செலுத்தப்படாது உள்ளமை, கடன்பட்டவர் அல்லது பிணையங்களின் வழங்குநர் தவறுதல் போன்ற விடயங்கள் 90 நாட்களுக்கு முன்பதாக இருந்தால் கடன்களின் சேகரிப்பில் ஐயம் ஏற்பட்டால் அவை பெறப்படும்வரை அல்லது அக்கடனை மீட்பதற்கான வாய்ப்புக்கள் இனிமேலும் காணப்படாவிடத்து அவை பதிவழிக்கப்படும்வரை அத்தகைய வருமானங்கள் வட்டி வருமானங்களிலிருந்து நீக்கப்படுகின்றன.

### வர்த்தகப் பிணையங்கள்

வர்த்தகப் பிணையங்கள் என்பது குறுகிய விலைத் தளம்பல்களிலிருந்து இலாபம் ஒன்றை உருவாக்குவதற்கு கைக்கொள்ளப்பட்ட பிணையங்கள் அல்லது குறுகியகால இலாபம் காணப்படும் பட்டியல் ஒன்றில் உள்ளடக்கப்பட்ட பிணையங்களாகும். வர்த்தகப் பிணையங்கள் தொடக்கத்தில் கொள்விலையில் கணக்கிடப்படுவதோடு அதனைத் தொடர்ந்து விலைக் குறிப்பீட்டு விலையின் அடிப்படையில் சாதாரண பெறுமதியில் மீண்டும் அளவிடப்படுகின்றது. சம்பந்தப்பட்ட அனைத்து இலாபங்களும், நட்டங்களும் தேறிய வர்த்தக வருவாயில் உள்ளடக்கப்படுகின்றன. ஐந்தொகை நாளில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் செலாவணி மீள்மதிப்பீடு காரணமாக உருவாகும் தேறாத இலாபங்களினதும் நட்டங்களினதும் தேறிய தொகை நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 41இற்கு இணங்க சருவதேச ஒதுக்கு மீள் மதிப்பீட்டுக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்படும். பெறப்பட்ட பங்கிலாபங்கள் பங்கிலாப வருவாயில் உள்ளடக்கப்படுகின்றன.

### தங்கம்

வெளிநாட்டு இணக்கிணை தரப்பினருடன் வைத்திருக்கப்பட்ட தங்கம் தொடக்கத்தில் செலவில் குறிப்பிடப்படும். அதனைத் தொடர்ந்து குறிப்பிடப்பட்ட

சந்தை விலைகளின் அடிப்படையில் சாதாரண மதிப்பீட்டில் மீள் அளவிடப்படும். சம்பந்தப்பட்ட அனைத்து இலாபங்களும், நட்டங்களும் தேறிய வர்த்தக வருவாயில் உள்ளடக்கப்படுகின்றன. ஐந்தொகை நாளில் செலாவணிவீத மாறுபாட்டின் காரணமாக தேறாத இலாபங்களினதும் நட்டங்களினதும் தேறிய தொகை நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 41இற்கு இணங்க சருவதேச ஒதுக்கு மீள்மதிப்பீட்டுக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்படும்.

## சருவதேச நாணய நிதியத்துடனான கொடுக்கல் வாங்கல்களும் நிலுவைகளும்

சருவதேச நாணய நிதியத்துடனான கொடுக்கல் வாங்கல்களும் நிலுவைகளும் சருவதேச கணக்கீட்டுத் தரங்களினதும் சருவதேச நாணய நிதியத்தினால் நிறுவப்பட்ட வழிகாட்டல்களினதும் அடிப்படையில் பதிவு செய்யப்படுகின்றன. இந்த கொடுக்கல் வாங்கல்களையும் நிலுவைகளையும் பதிவு செய்வதற்காக வங்கியினால் பின்பற்றப்படும் கொள்கைகளின் தொகுப்பொன்று கீழே தரப்பட்டுள்ளது.

(i) சருவதேச நாணய நிதியத்துடனான அனுமதிப்பங்கு வங்கியினால் சொத்தொன்றாக பதிவு செய்யப்படுவதுடன் அனுமதிப்பங்கின் அதிகரிப்புக்காக (சருவதேச நாணய பிணையங்கள் கணக்கு) செலுத்தப்படவுள்ள தொகை வங்கியின் பொறுப்பொன்றாகும்.

(ii) சருவதேச நாணய நிதியத்தினால் சிறப்பு எடுப்பனவு உரிமைக்கான ஒன்று திரண்ட ஒதுக்கீடு பொறுப்பொன்றாக கருதப்படுவதன் இறுதி செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி ஐந்தொகை நாளில் மீள் மதிப்பீடு செய்யப்படும்.

(iii) சருவதேச நாணய நிதிய சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள் மதிப்பீடு காரணமாக உருவாகும் செலாவணி இலாபங்கள் அல்லது நட்டங்கள் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 41இற்கு இணங்க சருவதேச ஒதுக்கு மீள் மதிப்பீட்டு கணக்கிற்கு மாற்றல் செய்யப்படும்.

(iv) சருவதேச நாணய நிதியத்துடனான நிலுவைகள் சம்பந்தமான பின்வரும் வருமானம் அல்லது கட்டணங்கள் வருமானக் கூற்றில் சேர்க்கப்படுகின்றன.

1. அமைப்புச் சீராக்க மற்றும் அதிகரிக்கப்பட்ட அமைப்புச் சீராக்க வசதி என்பனவற்றின் கீழான கடன்பாடுகள் மீது கட்டணங்களும் வட்டியும்
2. சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் தேறிய ஒன்றுதிரண்ட ஒதுக்குகள் மீதான கட்டணங்கள்
3. சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடைமைகள் மீதான இலாபம்
4. சருவதேச நாணய நிதியத்துடனான ஊதியம் பெறும் ஒதுக்கு தொகுதி நிலைமையின் மீது சம்பாதிக்கப்பட்ட ஊதியம்

## விற்பனவு மற்றும் மீள்கொள்வனவு ஒப்பந்தங்களும் பிணையங்களின் கடன் வழங்கலும்

இணைக்கப்பட்ட மீள்கொள்வனவு ஒப்பந்தங்களுக்கு உட்பட்டு விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் நிதியியல் கூற்றுக்களில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கீழ் தடுத்து வைத்திருக்கப்படுவதுடன் இணைக்கிணைப் பொறுப்பு திறைசேரி உண்டியல்கள் எனவும் திறைசேரி முறிகள் என்றும் பதிவு செய்யப்படுகின்றன. மீள் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் திறைசேரி உண்டியல்கள் எனவும் திறைசேரி முறிகள் எனவும் பதிவு செய்யப்படுகின்றன. விற்பனை மற்றும் மீள்கொள்வனவு விலைகளுக்கிடையிலான வேறுபாடு வட்டி என கருதப்படுவதோடு மீள்கொள்வனவு ஒப்பந்தக் காலப்பகுதியில் ஒன்று சேருகின்றது.

## முதலீட்டுப் பிணையங்களும் பெறப்படவுள்ளமையும்

அய்ஏஎஸ் 39இற்கு இசைவாக மத்திய வங்கி அதனது முதலீட்டுப் பிணையங்களையும் பெறப்பட உள்ளவைகளையும் முதிர்ச்சி வரையும் வைத்திருத்தல் மற்றும் விற்பனைக்குக் கிடைக்கத்தக்க சொத்துக்கள் என இரு வகைகளாக வகைப்படுத்தியுள்ளது. முதலீட்டுப் பிணையங்களுக்கும் சபைக்கு முதிர்ச்சிவரை வைத்திருக்க வேண்டிய எண்ணமும் இயலுமையும் கொண்ட நிலையான முதிர்ச்சியினை உடைய பெறப்பட வுள்ளமையும் முதிர்ச்சிவரை வைத்திருக்கப்பட்டவை என வகைப்படுத்தப்படுகின்றன. திரவத்தன்மைத் தேவைப்பாடு, வட்டி வீதங்கள் மற்றும் செலாவணி வீதங்கள் அல்லது பங்கு விலைகளில் மற்றும் காரணமாக விற்பனை செய்யக்கூடிய ஆனால் வரையறையற்ற காலப்பகுதியொன்றுக்கு வைத்திருக்க எண்ணங் கொள்ளப்பட்ட முதலீட்டுப் பிணையங்களும் பெறப்பட உள்ளவையும் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

முதலீட்டுப் பிணையங்களும் பெறப்பட வுள்ளவையும் தொடக்கத்தில் கொள்விலையில் கணக்கிடப்படுகின்றன. கொள்விலையில் முன்கொண்டு வரப்படும் நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில்

மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் தவிர்ந்த விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாக உள்ள நிதியியல் சொத்துக்கள் பின்னர் விலைக்குறிப்பீட்டு விலையின் அடிப்படையில் சாதாரண பெறுமதியில் மீள அளவிடப்படுகின்றன. 2000ஆம் ஆண்டின் அனைத்து முதலீட்டு பிணையங்களும் சேதங்களுக்கான ஏதேனும் ஏற்பாடுகள் காணப்படின் அவற்றினைக் கழித்து கொள்விலையில் அல்லது கடன்தீர் விலையில் முன் கொண்டு செல்லப்பட்டன.

முதிர்ச்சிவரையில் வைத்திருக்கப்பட்ட முதலீடுகள் சேதங்களுக்கான ஏற்பாடுகள் ஏதேனும் காணப்படின் அவற்றினைக் கழித்து கடன்தீர் விலையில் முன்கொண்டு செல்லப்படுகின்றன. முதலீட்டுப் பிணையங்களை வைத்திருக்கும்போது பெறப்பட்ட வட்டிகள். வட்டிவருவாய் என அறிவிக்கப்படுகின்றன. பங்கிலாபம் ஒன்று அறிவிக்கப்படும்போது பெறப்படவுள்ள பங்கிலாபங்கள் பங்கிலாப வருவாயின் தனியாக உள்ளடக்கப்படுகின்றன.

## தொடக்கி வைக்கப்பட்ட கடனும் கடன் சேதங்களுக்கான ஏற்பாடுகளும்

கடன்பாட்டாளருக்கு நேரடியாக பணத்தை வழங்குவதன் மூலம் வங்கியிலிருந்து உருவாகும் கடன்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் கடன்தீர் செலவில் முன்கொண்டு செல்லப்படுகின்றன. கடன்பாட்டாளர்களுக்கு பணத்தின் மூலம் முற்பணங்கள் வழங்கப்படும்போது அனைத்துக் கடன்களும் முற்பணங்களும் அடையாளம் காணப்படுகின்றன.

பெறப்படவுள்ள தொகைகளை, சேகரிப்பதற்கு வங்கிக்கு இயலாது காணப்படும் என்பதற்காக குறிப்பான சான்றுகள் காணப்படின் கடன் சேதங்களுக்காக கொடுகடன் இடர்நேர்வு ஏற்பாடு ஒன்று நிறுவப்படும். ஏற்பாடுகளுக்கான தொகையானது முன்கொண்டு செல்லப்படும் தொகைக்கும் உத்தரவாதங்கள் மற்றும் பிணையங்கள் என்பனவற்றிலிருந்து மீட்கத்தக்க தொகையினையும் உள்ளடக்கிய மீட்கத்தக்க தொகைக்கும் இடையிலான வேறுபாடாகும். கடன் ஒன்று சேகரிக்க இயலாத நிலையை எய்தினால் அது சேதங்களுக்குத் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு எதிராக வருமானக் கூற்றில் பதிவழிக்கப்படும். அதன்பின்னர் இடம்பெறும் கடன் மீட்புக்கள் வருமானக் கூற்றில் அறவிடமுடியாத ஐயக்கடன் செலவுகளுக்கு வரவு வைக்கப்படும். பதிவழிப்பின் பின்னர் இடம்பெறும் நிகழ்வு ஒன்றின் காரணமாக அதனைத் தொடர்ந்து சேதங்களுக்கான தொகை வீழ்ச்சியடையுமாயின் ஏற்பாடுகளின் விடுவிப்பு அறவிடமுடியாத ஐயக்கடன் செலவுகளுக்கு வரவு வைக்கப்படும்.

## பொருட் பட்டியல்

ஆண்டுக் காலப்பகுதியில் எழுதுகருவிகள் மற்றும் பொறியியல் களஞ்சியத்துக்கான மொத்தச் செலவு வருமானக் கூற்றில் அறவிடப்படுகின்றதுடன் இறுதிக் கையிருப்புக்கள் தொடர்பாக எத்தகைய சீராக்கமும் மேற்கொள்ளப்படுவதில்லை.

## கொடைகள்

கொடையானது அதற்கான நிபந்தனைகளுக்கு இசைவு காணப்பட்ட பின்னரே பெறப்படும் என்ற நியாயமான உத்தரவாதம் காணப்படுமிடத்து கொடைகள் யாவும் அவற்றின் சாதாரண பெறுமதியில் அடையாளங் காணப்படுகின்றன. கொடையொன்று செலவு விடயமொன்று தொடர்பானதாக இருப்பின் ஒழுங்கான அடிப்படையில் இழப்பீட்டை நோக்கமாகக் கொண்ட செலவுகளுக்கு பொருந்தச் செய்வதற்குத் தேவையான காலப்பகுதியில் அது வருவாயாக அடையாளங் காணப்படுகின்றது. சாதாரண பெறுமதியில் நாணயமல்லா கொடைகளையும் உள்ளடக்கிய சொத்துக்கள் சம்பந்தமான கொடைகள் சொத்துக்களின் முன்கொண்டு செல்லும் பெறுமதியைப் பெற்று கழிக்கப்படுகின்றன.

## சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகள்

அனைத்துச் சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகள் ஒன்றுசேர்ந்த தேய்மானம் கழிக்கப்பட்டு வரலாற்றுச் செலவில் குறிப்பிடப்படுகின்றன.

தேய்மானம் சொத்துக்களைப் பயன்படுத்தக்கூடிய வாழ்நாள் காலம் என மதிப்பிடப்பட்ட காலப்பகுதிக்கு மேலாக அத்தகைய சொத்துக்களின் பெறுமதியினை அத்தகைய சொத்துக்களின் செலவிற்கு எழுதுவதற்கு ஆண்டிற்கு பின்வரும் வீதங்களைப் பயன்படுத்தி குறைந்து செல்லும் நிலுவை முறையில் கணிக்கப்படுகின்றது.

கொள்வனவு செய்யும் ஆண்டில் தேய்மானம் எதுவும் விதிக்கப்படாததுடன் முழு ஆண்டுக்குமான தேய்மானம் விற்பனை செய்யப்படும் ஆண்டில் விதிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| நிலமும் அருங்கலைப் பொருட்களும் | இல்லை |
| கட்டடங்கள் | 2% |
| உந்து ஊர்திகள் | 10% |
| அலுவலகத் தளபாடங்களும் கருவிகளும் | 10% |
| இணைப்புக்களும் பொருத்துக்களும் | 10% |
| கணனிக் கருவிகள் | 25% |
| நூலக நூல்கள் | 33.33% |

| | |
|---|---|
| தன்னியக்க கருவிகள் | 20% |
| ஏஎஸ் 400 புதிய கணனிச்சட்டம் | 20% |

சொத்தொன்று கொண்டிருக்கும் தொகை அதன் மதிப்பிடப்பட்ட இருக்குமிடத்து இது அதன் மீள் உள்ளடக்கத் தொகையை உடனடுத்து எழுதப்படும். சொத்துக்கள், கருவிகளின் அகற்றல் மீதான இலாப நட்டங்கள் அவை கொண்டிருக்கும் தொகையினைப் பொறுத்து தீர்மானிக்கப்படுவதுடன் இவை தொழிற்பாட்டு இலாபத்தினைக் தீர்மானிக்கையில் கணக்கிலெடுக்கப்படுகின்றன. திருத்தங்களும், புதுப்பித்தல்களும் செலவினங்கள் ஏற்படும் வேளையில் வருமானக் கூற்றக்களுக்கான கட்டணங்களாகக் காணப்படுகின்றன.

### காசும் சமமானவைகளும்

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கங்களுக்காக, கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்கும் குறைவான முதிர்ச்சியுடன் கூடிய காசு மற்றும் காசிற்கு சமமானவைகளின் உள்ளடக்க நிலுவை பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது. நடைமுறை மற்றும் வைப்புக் கணக்கிலுள்ள காசு மற்றும் வங்கி நிலுவைகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் தகைமையுள்ள மாற்றல் உண்டியல்கள், மற்றைய வங்கிகள் மற்றும் வர்த்தகப் பிணையங்களிலிருந்து வரவேண்டிய தொகைகள்

### ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக, வங்கி தற்போதைய சட்ட அல்லது அமைப்பு ரீதியிலான கடப்பாடுகளைக் கொண்டிருக்கும்போது ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

### ஊழியர் நன்மைகள்

1. இழைப்பாற்றுக் கடப்பாடுகள்

   வங்கி பின்வரும் வரைவிலக்கணப் படுத்தப்பட்ட நன்மைகளையும் வரைவில்க்கப் படுத்தப்பட்ட உதவுதொகைத் திட்டங்களையும் தொழிற்படுத்துகின்றது. இவற்றின் சொத்து பொதுவாக தனித்தனி நிதியங்களில் வைத்திருக்கப்படுகிறது.

2. வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நன்மை நிதியங்கள் ஓய்வூதிய திட்டங்களும் பணிக்கொடுப்பனவுகளும்

- சுதந்திரமான தகைமைபெற்ற கணிப்பாளர்களின் விதந்துரைப்புக்களைக் கருத்திற் கொண்டு ஓய்வூதிய நிதியம் வங்கியிலிருந்தான கொடுப்பனவுகளின் மூலம் நிதியிடப் படுகின்றது.

- 31.01.2001இல் உள்ளவாறான ஓய்வூதியச் செலவு 31.12.1999 அன்று தகைமைபெற்ற கணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்ட ஒன்றுதிரண்ட செலவினைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்டது. ஓய்வூதிய நிதியம் மூன்றாண்டுகளுக்கொருமுறை மதிப்பீடு செய்யப்படுகிறது. அனைத்துக் கணிப்பீட்டு இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

- விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் மற்றும் தாரமிழந்தோர் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் என்பன உதவுதொகையுடையான ஓய்வூதிய நிதியங்களாவதோடு தமது அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதத்தினை ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகையாக வழங்குகின்றனர். கணக்கீட்டு மதிப்பீட்டின்படி தீர்மானிக்கப்பட்ட நிதியத்தில் ஏதேனும் பற்றாக்குறை காணப்படின் அது வங்கியினால் நிதியிடப்படும். 31.12.1999இல் தகைமைபெற்ற கணக்கீட்டாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு ஒன்றின் அடிப்படையிலான கூட்டுச்செலவு முறையைப் பயன்படுத்தி 31.12.2001இல் உள்ளவாறான ஓய்வூதிய நிதியங்கள் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறையே மதிப்பீடு செய்யப்படுகின்றன. அனைத்துக் கணக்கீட்டு இலாபங்களும், நட்டங்களும் வருமானக்கூற்றில் அங்கிகரிக்கப்பட்டுள்ளன.

### 3. இளைப்பாற்றுக்குப் பின்னரான ஏனைய கடப்பாடுகள்

இளைப்பாறியவர்களுக்கு இளைப்பாறலின் பின்னரான நலக் கவனிப்பை வங்கி வழங்குகின்றது. இந்த நன்மைகளின் உரித்தானது ஊழியர்கள் இளைப்பாறும் வரை வங்கியில் பணிபுரிந்தார்கள் என்ற அடிப்படையிலும் 10 ஆண்டுகால சேவையைப் பூர்த்தி செய்துள்ளார்கள் என்ற அடிப்படையிலும் காணப்படுகின்றது. இந்த நன்மைகளின் செலவுகள் வருமானக்கூற்றில் அறிவிடப்படுவதோடு இளைப்பாறியவர்களினால் சமர்ப்பிக்க உண்மையாகும் பற்றுச்சீட்டுக்களின் அடிப்படையில் மீளச் செலுத்தப்படுகின்றன.

### 4. தன்னிச்சையான இளைப்பாற்றுத் திட்டம்

இலங்கை மத்திய வங்கியினை மறுசீரமைப்பதற்காக உலக வங்கியினால் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட கடன் ஒன்றின் கீழ் 2002 சனவரி 1ஆம் நாளில் செயற்பாட்டுக்கு வந்த

தன்னிச்சையான இளைப்பாற்றுத் திட்டமொன்றினை தகைமையுடைய அனைத்து ஊழியர்களுக்கும் வங்கி வழங்கியது. இந்தக் கடனைப் பயன்படுத்தி உண்மையான இளைப்பாற்றுச் செலவில் 70 சதவீதத்தினை மீளப்பெறுவதற்கான கொடை ஒன்றினை மத்திய வங்கி பெற்றுக்கொண்டது. இத் திட்டத்தின் கீழ் வங்கிக்கான தேறிய மதிப்பிடப்பட்ட செலவுகள் (தேறிய மீளச் செலுத்தலுக்கு எதிராக மொத்த தன்னிச்சையான இளைப்பாற்றுச் செலவு) 2001.12.31ஆம் நாளன்று வருமானக்கூற்றுக்கு அறவிடப்பட்டுள்ளது. 31.12.2001இல் உள்ளவாறான ஐந்தொகையில் செலுத்தப்படவுள்ள மொத்தச் செலவு பொறுப்பொன்றாகவும் பெறப்படவுள்ள மொத்த மீளச்செலுத்தல் பெறப்பட உள்ளனவாகவும் காட்டப்படுகின்றன.

### நாணயம்

வங்கியினால் வழங்கப்பட்ட நாணயமானது வைத்திருப்பவரின் சார்பாக வங்கியின் மீதான உரிமைகோரல் ஒன்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. சுற்றோட்டத்தில் உள்ள நாணயத்தின் பொறுப்பு ஐந்தொகையில் முகப்புப் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றது.

தாள்களினதும் குத்திகளினதும் அச்சிடும் செலவு வழங்கல் இடம்பெறும் வரை பிற்போடப்படுவதோடு வழங்கலின் போது வருமானக் கூற்றுக்கு அறவிடப்படுகின்றது.

### வரி அறவீடு

2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் பிரிவு 8(அ) xxiiஇன் கீழ் வங்கியின் வருமானத்துக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## (ஊ) இடர்நேர்வு முகாமைத்துவ குறிப்புக்கள்

### (i) பொது

நிதியியல் நடவடிக்கைகளின் போது வட்டிவீதம், கொடுகடன் வெளிநாட்டு நாணயம் திரவத்தன்மை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கு வங்கி உட்படுத்தப்படக்கூடும். இந்த இடர்நேர்வுகளை முகாமைப்படுத்தவதற்காக கொள்கைகள் குறிப்புகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. வங்கி உட்படக்கூடிய அனைத்து இடர்நேர்வுகள் தொடர்பான கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு நாணயம், வெளிநாட்டு நாணயம் ஒதுக்கு முகாமைத்துவம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி வாணிபத் தொழிற்பாடுகளின் கட்டுப்பாடுகள் சம்பந்தமாக மத்திய வங்கி எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான அனைத்தையும் உள்ளடக்கிய வழிகாட்டல்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களினால் தயாரிக்கப்படுகின்றன. ஏதேனும் இடர்நேர்வுகளை ஆகக்குறைந்ததாக்குவதற்கு இந்த வழிகாட்டலக்ள் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன.

### (ii) வட்டியின் இடர் முகாமைத்துவம்

வட்டிவீத இடர்நேர்வு எனப்படுவது வட்டி வீதங்களின் மாற்றங்களினால் ஏற்படும் இழப்பு சம்பந்தப்பட்ட இடர்நேர்வாகும். வட்டி வீதங்களின் அசைவின் காரணமாக நிதியியல் உபகரணத்தின் பெறுமதியும் அதனது விளைவு வீதங்களும் மாற்றமடையலாம். இந்த இடர்நேர்வுக்கு உட்படுதலை ஆகக்குறைந்ததாக்குவதற்கு வங்கி பொருத்தமான வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது. முதலீட்டுப் பட்டியலுக்காக பொருத்தமான காலவரையறைகளை நாணயச்சபையும் முதலீட்டுக்குழுவும் தயாரித்துள்ளன. இந்த கால வரையறைகளின் கீழ் 2,3,5 மற்றும் 10 ஆண்டுகள் போன்ற குறிப்பிடப்பட்ட முதலீடுகளுக்காக குறிப்பிட்ட சில நிறைகள் வழங்கப்பட்டுள்ளன. சருவதேச தொழிற்பாட்டு திணைக்களத்தில் உள்ள தனியான பிரிவு ஒன்று இந்த வரையறைகளின் அடிப்படையில் வெளிநாட்டு நாணய ஒதுக்கு முகாமைத்துத்தில் வங்கியின் வட்டிவீத இடர்நேர்வு தொடர்பான கண்காணிப்பில் ஈடுபடுகின்றது.

### (iii) கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம்

கொடுகடன் இடர்நேர்வு எனப்படுவது எதிர்தரப்பினர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட உள்ள நாளில் கொடுப்பனவினை முழுமையாகச் செலுத்த இயலாது காணப்படும் இடர்நேர்வாகும். பின்வரும் உபாயங்களைக் கையாளுவதன் மூலம் கொடுகடன் இடர்நேர்வு பொருத்தமாக முகாமைத்துவப்படுகின்றது.

1. சம்பந்தப்பட்ட கொடுகடன் தரமிடலின் அடிப்படையில் எதிரித்தரப்பினரை தேர்ந்தெடுத்தல்
2. குறிப்பிட்ட வழங்குநர் அல்லது வழங்கல் அளவின் முதலீட்டுச் சொத்து அடிப்படையிலான கொடுகடன் தரமிடல்
3. உட்படுத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக நாடு சம்பந்தமான வரையறைகளும், எதிர்த்தரப்பினர் சம்பந்தமான வரையறைகளும் இடப்பட்டுள்ளன.

முதலீட்டுக்காக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சொத்துக்களை தீர்மானிப்பதில் இலங்கை மத்திய வங்கி மிகப்பழமை வாய்ந்த அணுகுமுறை ஒன்றினைப் பின்பற்றுகின்றது. வெளிநாட்டு நாணய வைப்புக்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள நாணயங்களின் அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட எதிர்த்தரப்பினரின்

அதிவிஷேட தேசிய பிணையங்களில் இடப்படுகின்றன. புவியியல் உட்படுத்தல்கள் நாடு அடிப்படையிலான வரையறைகளினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. புதிய சந்தைத் தகவல்களின் அடிப்படையில் இந்த வரையறைகள் காலத்துக்குக்காலம் புதுப்பிக்கப்படுகின்றன. வங்கியின் முதலீட்டுப் பட்டியலில் கொடுகடன் இடர்நேர்வு பொருத்தமான அலுவலர்களினால் கண்காணிக்கப்படும் மீளாய்வு செய்யப்பட்டும் பகுப்பாய்வு செய்யப்பட்டும் உட்படுத்தல்கள் பொருத்தமான முறையில் கட்டுப்படுத்தப்படுகினறன.

## (iv) வெளிநாட்டு நாணய இடர்நேர்வு முகாமைத்துவம்

வெளிநாட்டு நாணய இடர்நேர்வு எனப்படுவது செலாவணி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களினால் ஏற்படும் இழப்பு சம்பந்தமான இடர்நேர்வு ஆகும். வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக அதனது வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்தின் கீழ் வங்கியினால் வைத்திருக்கப்படும் நாணயச் சொத்துக்களிலிருந்து உருவாகின்றன. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அடிக்கடி மாறுபடும் தன்மையானது செலாவணி இடர்நேர்வுக்கு வங்கியை உட்படுத்தலாம். இந்த இடர்நேர்வினைத் தவிர்ப்பதற்காக நாணய பன்முகப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டது. நாணயச்சபையும் முதலீட்டுக்குழுவும் வங்கியினது சருவதேச ஒதுக்குகளில் மாறுபட்ட நாணயங்களை வைத்திருப்பதற்கான சதவீதத்தினை குறிப்பிடுகின்றன. உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியின் தலையீடு ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நாணய ஒதுக்கீடுகளைத் தீர்மானிப்பதில் பொதுப்படுகடன் மீளச் செலுத்தலுக்கான தேவைப்பாடுகளுக்கு பெருமளவு முக்கியத்துவம் வழங்கப்படும். இதன்படி ஐக்கிய அமெரிக்க டொலர்கள், இசுட்டர்லிங் பவுண்டு, யப்பானிய யென் மற்றும் யூரோ போன்ற முக்கிய நாணயங்களை இலங்கை மத்திய வங்கி வைத்துக்கொண்டுள்ளது. செலாவணி வீத மாற்றங்களினால் உருவாகும் இழப்புக்களைத் தவிர்ப்பதற்காக வெளிநாட்டு நாணய நிலைமைகளுக்காக நிறுவப்பட்டுள்ள வரையறைகளுக்கான இசைவு நிலையாக கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

## (v) திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம்

திரவத்தன்மை இடர்நேர்வு எனப்படுவது நிதியியல் உபகரணங்கள் சம்பந்தப்பட்ட அதனது கடப்பாடுகளை எதிர்கொள்வதற்காக குறுகிய அறிவித்தல் ஒன்றில் நிதியங்களைத் திரட்டுவதில் வங்கி எதிர்கொள்ளும் பிரச்சனைகளாகும். வேறு வார்த்தைகளில் கூறின் குறிப்பிடத்தக்க விலைத்தளம்பல்கள் இன்றி நிதியியல் சொத்துக்களை விரைந்து காசாக மாற்றுவதற்கான இயலுமையாகும். சாதாரண விலைக்கு மிகவும் குறைவாக வங்கி அதனது நிதியியல் சொத்துக்களை விற்பனை செய்ய நேரிடும்போதும் திரவத்தன்மை இடர்நேர்வு உருவாகலாம்.

குறிப்பாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின்போது உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிலிருந்து உருவாகும் திரவத்தன்மை இடர்நேர்வு மட்டங்களை குறைப்பதற்காக மத்திய வங்கி அதிஉயர் திரவத்தன்மை கொண்ட சந்தைப்படுத்தக்கூடிய உபகரணங்களான திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்றவற்றை வங்கி பிணையாகப் பயன்படுத்துகின்றது. அத்தகைய பிணையங்களைப் பயன்படுத்தி வங்கித்தொழில் முற்பணங்களை வழங்குதல் மற்றும் எடுப்பனவு என்பனவற்றை உள்ளடக்கி வங்கித்தொழில் முறையின் நாளாந்த திரவத்தன்மை நிலைமைகளை அது முகாமைப்படுத்துகின்றது.

வங்கியின் வெளிநாட்டு நாணய சொத்துக்களின் உள்ளடக்கத்தினை தீர்மானிப்பதிலும் திரவத்தன்மையானது முக்கிய விடயமொன்றாகக் காணப்படுகின்றது. தலையீட்டு நோக்கங்களுக்காகவும் தேவையேற்படும்போது பொதுபடுகடன் மீளச் செலுத்தல் போன்ற ஏனைய கடப்பாடுகளுக்காகவும் வெளிநாட்டு ஒதுக்குகளை திரவப்படுத்த வேண்டிய உள்ளார்ந்த தேவையினை இது பிரதிபலிப்பதாகவுள்ளது.

இதன்படி, நிதியங்களை விரைந்து எய்துவதை நோக்கமாகக் கொண்ட வழிமுறைகள் காணப்படுகின்றன. உடைமையாக வைத்திருக்கப்படும் பிணையங்களின் திரவத்தன்மை பண்புகளின் அடிப்படையிலான திரவச் சொத்து விகிதங்களையும், ஏதேனும் ஒரு நாணயத்தில் வைத்திருக்கப்படக்கூடிய ஆகக் குறைந்த மற்றும் ஆகக்கூடிய ஒதுக்குகளின் அளவுகளுக்கான வரையறைகளையும் இந்த வழிமுறைகள் உள்ளடக்கியுள்ளன. நாளாந்த அடிப்படையில் இந்த வரையறைகள் கண்காணிக்கப்படுகின்றன. இதே வேளையில் நடுத்தர கால பிணையங்களில் முதலீடுகளைப் பொறுத்தவரையில் அனைத்து வேளைகளிலும் திரவத்தன்மை கொண்டது எனக் கூறப்படும் பிணையங்களில் முதலீடு செய்வதன் மூலம் இலங்கை மத்திய வங்கி திரவத்தன்மை இடர்நேர்விளை முகாமைப்படுத்துகின்றது. ஏனைய இடர்நேர்வுடைய முதலீடுகளுடன் ஒப்பிடுகையில் இந்த வகையிலான முதலீடுகள் குறைந்த இலாபத்தையே பெற்றுத்தருகின்ற போதிலும் இலங்கை மத்திய வங்கியானது ஏஏஏ தரமிடப்பட்ட அரசாங்க மற்றும்

அதிவிஷேட தேசியங்களின் பெருமளவு திரவத்தன்மை கொண்ட முதலீடுகளிலேயே அதிக கவனம் செலுத்துகின்றது.

## 2. வங்கித் தொழில் தொழிற்பாடுகள்

### (அ) பொது

வங்கித்தொழில் திணைக்களம், நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவம், செலாவணிவீத முகாமைத்துவம், முக்கியமாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் மற்றும் வங்கி வீதம் என்பனவற்றினூடாக நாணயக் கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் அரச மற்றும் அரச முகவர்கள், உரிமம் பெற்ற வங்கிகள், வங்கியல்லா முதனிலை வணிகர்கள் மற்றும் பன்னாட்டு அமைப்புக்களில் கணக்குகளைப் பேணுதல் மற்றும் மத்திய வங்கியின் மாதாந்த ஐந்தொகையினையும் ஆண்டுக் கணக்குகளையும் தயாரித்தல் ஆகிய துறைகளில் அதன் முக்கிய தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

### (ஆ) வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவம்

வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களின் முதலீடுகளினூடாக ஆகக் கூடிய வருவாய்களையும் பெற்றுக் கொள்ளுகின்றவேளையில் உயர்மட்டத் திரவத் தன்மையினையும் ஆகக்குறைந்த இடர்நேர்வுகளையும் பேணுகின்ற முக்கிய குறிக்கோளுடன் இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கினை முகாமைப் படுத்துகின்ற பணி தொடர்ந்தும் வங்கித் தொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன்படி, முதலீட்டில் பெரும்பங்கு நிலையான வருமானப் பிணையங்களில் செய்யப்பட்டிருந்த வேளையில் மீதி நிலையான வைப்புக்கள் போன்ற குறுங்கால முதலீடுகள் மற்றும் அழைப்பு மற்றும் நடைமுறைக்கணக்குகள் மற்றும் தங்கக் கட்டிகள் வடிவத்திலும் காணப்பட்டன. 2001ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர், இசுடேர்லிங் பவுண் மற்றும் யூரோ ஆகிய முக்கிய நாணயங்களிலேயே ஒதுக்குகள் வைத்திருக்கப்பட்டன. நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்தினூடாக உருவாக்கப்பட்ட மொத்தத் தேறிய வெளிநாட்டு வருவாயில் 2001இல் ரூ.6.1 பில்லியனாகக் காணப்பட்டது.

### (இ) வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

1977இன் பின்னர் இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள், உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டு நாணயங்களுக்கான நிரம்பல் மற்றும் கேள்வியினைப் பொறுத்து வெளிநாட்டு நாணயங்களின் செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களை (வர்த்தக வங்கிகள்) அனுமதித்ததன் மூலம் படிப்படியாகத் தாராளமயப்படுத்தப்பட்டன. கடுமையான தளம்பல்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்களின் வாணிபத்திற்கு தீங்கு பயக்குமாகையினால் அவர்களுக்கு உதவுவதற்காக நாளாந்தச் செலாவணி வீதங்களில் காணப்படும் அத்தகைய தளம்பல்களை சமப்படுத்துவதற்காக மத்திய வங்கி உள்நாட்டுச் செலாவணிச் சந்தைத் தொழிற்பாடுகளில் பங்குபற்றியது.

ஏறத்தாழ 2000ஆம் ஆண்டு யூன் நடுப்பகுதிவரை இடையீட்டு நாணயமாக இருந்த ஐ.அ.டொலருக்கான நாளாந்த வாங்கும் மற்றும் விற்கும் வீதங்களை அறிவிப்பதன் மூலமாக மத்திய வங்கி சந்தையில் தொடர்ந்தும் பங்குபற்றியது. வீதங்கள் ஐ.அ.டொலரினதும் பன்னாட்டுச் சந்தைகளிலுள்ள முக்கிய நாணயங்களினதும் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையிலும் நிர்ணயிக்கப்படுகின்றன.

2000ஆம் ஆண்டு யூனின் பின்னர் ஒவ்வொரு வாணிப நாளின் ஆரம்பத்திலும் அறிவிக்கப்படுகின்ற மத்திய வங்கியின் வாங்கும் விற்கும் வீதங்களுக்கிடையிலான வீச்சி விரிவாக்கப்பட்டமையின் மூலம் வெளிநாட்டுச் செலாவணிச்சந்தை கூடியளவிற்கு சுதந்திரமாகத் தொழிற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. எனினும், இது ரூபாவின் செலாவணிவீதம் தொடர்ச்சியாகத் தேய்வடையும் என்ற எதிர்பார்ப்பு அதிகரிப்பதற்கும், சந்தையின் அடிப்படைகளுக்கு மாறாத தன்மைகளுக்கும், செலாவணி வீதங்களை சமநிலைப்படுத்துவதற்காக காலத்திற்குச் சாலம் உள்நாட்டு வட்டி வீதங்களில் அதிகரிப்புக்களை அவசியமாக்குவதற்கும் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணிக்கு, குறிப்பாக அரசதுறைக் கூட்டுத்தாபனங்களிலிருந்து

அட்டவணை II.1
2001இல் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளுடனான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள்

ஆயிரத்தில்

| மாதம் | உடன் கொள்வனவுகள் | | உடன் விற்பனைகள் | |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொ | இ. ரூபா | ஐ.அ.டொ | இ. ரூபா |
| சனவரி | - | - | 33,498 | 2,899,892 |
| பெப்புருவரி | - | - | - | - |
| மாச்சு | 19,850 | 1,697,615 | 1,250 | 107,820 |
| ஏப்பிறல் | 1,550 | 135,656 | - | - |
| மே | - | - | 8,715 | 793,733 |
| யூன் | - | - | - | - |
| யூலை | 10,000 | 899,510 | - | - |
| ஓகத்து | 77,400 | 6,868,621 | - | - |
| செத்தெம்பர் | 36,300 | 3,272,703 | - | - |
| ஒற்றோபர் | 11,500 | 1,038,315 | 8,425 | 499,931 |
| நவெம்பர் | 3,750 | 345,790 | - | - |
| திசெம்பர் | 18,850 | 1,754,833 | 21,521 | 1,700,925 |
| மொத்தம் | 179,200 | 16,013,043 | 51,888 | 4,301,376 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை II.2
இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் உடன்விற்பனை மற்றும் கொள்வனவின் அளவு

ஐ.அ.டொலர் மில்லியன்

| ஆண்டு | கொள்வனவுகள் | விற்பனைகள் | தேறிய |
|---|---|---|---|
| 1996 | 198.0 | 96.2 | - 101.80 |
| 1997 | 154.0 | 136.7 | - 17.30 |
| 1998 | 214.8 | 61.0 | - 153.8 |
| 1999 | | | |
| 2000 | 58.2 | 0.4 | - 57.80 |
| 2001 | 303.6 | 2.0 | - 301.6 |
| | 51.8 | 179.2 | + 127.40 |

எழுந்த அதிகரித்த கேள்வியின் காரணமாக சந்தை வீதங்களில் தொடர்ந்தும் பெருமளவிற்குத் தேய்வடைந்ததுடன் சில சமயங்களில் வீதம் மத்திய வங்கியின் விற்பனை வீதத்தினைவிட மேலாக உயர்வடைந்தத. ஆகவே செலாவணி வீதப் பிரிவு, குறிப்பாக உயர்ந்த கேள்வியும், ஊகச் சூழலும் காணப்படும் நிலைமையில் நீண்ட காலத்திற்கு உறுதியாக இருக்கமுடியாது என்பது அவதானிக்கப்பட்டது.

எனவே மத்திய வங்கி, 2001.01.23ஆம் நாளிலிருந்து ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதற்கு சந்தை விசைகளுக்கு பெருமளவு சுதந்திரத்தை அனுமதித்ததன்மூலம் அதன் செலாவணிவீத அமைப்பிற்கு அடிப்படை மாற்றல்களைச் செய்தது. அந் நாளிலிருந்து ஐக்கிய அமெரிக்க டொலருக்கான வாங்கும் விற்கும் வீதங்களை முன்கூட்டியே அறிவிப்பதனை மத்திய வங்கி நிறுத்திக் கொண்டது. பதிலாக மத்திய வங்கி சந்தை வீதங்களிலோ, அதற்கு அண்மிய வீதங்களிலோ ஐ.அ.டொலர்களை வாங்குவதிலும் விற்பதிலும்

அட்டவணை II.3
வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களின் அளவு

(ஐ.அ.டொலர் மில்லியனில்)

| 2001 | தொகை உடன் | தொகை முன்னோக்கிய |
|---|---|---|
| சனவரி | 128.80 | 15.625 |
| பெப்புருவரி | 118.00 | 2.780 |
| மாச்சு | 146.00 | 21.825 |
| ஏப்பிறல் | 91.30 | 5.150 |
| மே | 93.40 | 11.465 |
| யூன் | 75.50 | 17.175 |
| யூலை | 120.10 | 34.325 |
| ஓகத்து | 137.80 | 43.200 |
| செத்தெம்பர் | 102.00 | 40.800 |
| ஒற்றோபர் | 92.00 | 40.475 |
| நவெம்பர் | 73.00 | 20.610 |
| திசெம்பர் | 73.00 | 28.650 |
| மொத்தம் | 1250.90 | 282.080 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

தீவிரமாகப் பங்கேற்றது. இடையீட்டு நாணயமாக ஐ.அ.டொலர் தொடர்ந்துமிருக்கும். இப்புதிய ஒழுங்குமுறை சந்தையில் சுதந்திரமான கொடுக்கல் வாங்கல்களை அனுமதித்ததுடன் ரூபாவின் பெறுமதியையும் உறுதிப்படுத்தியது. உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தையில் மத்திய வங்கியின் பிரசன்னம் இருப்பதன் குறிக்கோள்கள் யாதெனில் ஒன்று சேர்ந்த ஒதுக்குகளை சென்மதி நிலுவை நிலைமையின் வெளிப்பாடுகளுடன் இணங்குவிப்பது வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சுமுகமான தொழிற்பாடுகளை மேம்படுத்துவது, செலாவணி வீதத்தினை ஒழுங்கு முறையான சீராக்கம் என்பனவேயாகும். இது அந்நேரத்தில் சந்தையில் நிலவிய உயர் வட்டிவீதங்களை விடுவிப்பதற்கு உதவியதன் மூலம் நாணயக் கொள்கையையும் செலாவணிக் கொள்கையையும் இணங்குவிக்கும் என எதிர்பார்க்கப்பட்டதுடன் இது முதலீட்டினையும் நீண்டகால பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்கு பங்களிக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

செலாவணி வீதம் மிதக்கவிடப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கி செலாவணிவீத உறுதிப்பாட்டினை பேணக்கூடியதாக இருந்தவேளையில் 2001இல் ஒதுக்குகளையும் அதிகரித்தது. 2001இல் செலாவணிவீதம் 11.4 சதவீதத்தினால் தேய்வடைந்த வேளையில், 2001.01.23 இன் பின்னரான காலப்பகுதியின் செலாவணி வீதம் 10.0 சதவீத தேய்மானத்தினை மட்டுமே காட்டியது. அதே நேரம் கீழேயுள்ள அட்டவணை 1இலும் 2இலும் காட்டப்பட்டவாறு மத்திய வங்கி அதன் ஒதுக்குகளுக்கு கணிசமானளவு தொகைச் செலாவணி வீதங்களை அதிகரித்துக் கொண்டது. 2001ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கி முன்னைய ஆண்டுகளில் நிலவிய தேறிய விற்பனையாளர் என்ற நிலைமைக்கு மாறாக வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய வாங்குனர் என்ற நிலையை அடைந்தது.

வர்த்தக வங்கிகளிடையே வாங்கப்பட்ட மற்றும் விற்கப்பட்ட உடன் மற்றும் முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களின் பெறுமதி கீழேயுள்ள அட்டவணை 3இல் தரப்பட்டுள்ளது.

## (ஈ) நாணயக் கொள்கையின் நடைமுறைப்படுத்தல்

### (i) திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்


2001ஆம்ஆண்டுப் பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்ந்தும் முக்கிய கருவியாக இருந்ததுடன் இதனூடாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் அரச பிணையங்களை உடனடியாக வாங்குதல் அல்லது விற்றல், மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்

கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கான பிணையாக அரச திறைசேரி உண்டியல்கள் மட்டும் பயன்படுத்தப்பட்டன. எனினும் நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் இரண்டும் பயன்படுத்தப்பட்டன.

### (ii) இரண்டாம் நிலைச் சந்தையில் உடனடிக் கொடுக்கல் வாங்கல்கள்

மத்திய வங்கியின் இரண்டாம் நிலைச் சந்தையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் உள்ளகரீதியில் முகாமைப்படுத்தப்பட்ட நிதியம் என்பனவற்றை மட்டும் உள்ளடக்கிய பங்கேற்கும் நிறுவனங்களுக்கான திறைசேரி உண்டியல்களின் மொத்த உடனடி விற்பனைகள் (கழிவிடல்) 2001ஆம் ஆண்டில் 20.4 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டின் ரூ.15.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.4.7 பில்லியன் (30 சதவீதம்) கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மொத்த உடனடி விற்பனைக்கான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் முதனிலை வணிகர்களினதும் பங்களிப்பு ரூ.8.6 பில்லியனாக அமைந்து ரூ.2.3 பில்லியன் கொண்ட அதிகரிப்பினைப் (மொத்த அதிகரிப்பில் 48 சதவீதம்) பதிவு செய்தன. அதேபோன்று மொத்தமாக ரூ.11.7 பில்லியன் பெறுமதி கொண்ட திறைசேரி உண்டியல்கள் இலங்கை மத்திய வங்கியின் உள்ளகரீதியில் முகாமைப்படுத்தப்படும் நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்டதுடன் இது 2001ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ.2.4 பில்லியன் கொண்டதொரு அதிகரிப்பாகும். இவ்வபிவிருத்திக்கான முக்கிய உதவுக்காரணியாக, குறிப்பாக, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களைப் பொறுத்தவரையில், முதனிலைச் சந்தையில் குறிப்பாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் காணப்பட்ட திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதங்களில் காணப்பட்ட

வரைபடம் I
2000 மற்றும் 2001ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் விற்பனைகளினது அளவு





வீழ்ச்சிப் போக்கு பங்கேற்கும் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியின் இரண்டாம்நிலைச் சந்தையில் சிறந்த விளைவுகளைப் பெற்றுக்கொள்ள இயலச் செய்தன.தொடர்பான கொள்வனவாளர்களுக்கு திறைசேரி உண்டியல்களாகவே வழங்குவது என 2000ஆம் ஆண்டில் மத்திய வங்கி மேற்கொண்ட தீர்மானமானது, சந்தையில் வர்த்தகம் செய்வதற்கு அவற்றினைப் பயன்படுத்தவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கியதுடன் இலங்கை மத்திய வங்கியின் இரண்டாம் நிலைச் சந்தையில் திறைசேரி உண்டியல்களை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் மிகக் கவர்ச்சிகரமாக்கியது. 2000ஆம் ஆண்டிலும் 2001ஆம் ஆண்டிலும் இலங்கை மத்திய வங்கியின் இரண்டாம் நிலைச் சந்தையில் திறைசேரி உண்டியல்களினது உடனடி விற்பனைகளின் மாதாந்த அளவு வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளது.

திறைசேரி உண்டியல்களின் முதனிலை ஏலங்களின் விளைவு வீதங்களில் அவதானிக்கப்பட்ட அபிவிருத்திகளுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் 3 மாத, 6 மாத மற்றும் 12 மாதங்களுக்கான மத்திய வங்கியின் கழிவிடல் விளைவு வீதங்கள் 2000ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் ஆண்டிற்கு 17.86 சதவீதம், 17.88 சதவிதம் மற்றும் 17.95 சதவீதத்திலிருந்து 2001 ஏப்பிறல் 9ஆம் நாளன்று ஆண்டிற்கு முறையே 19.56 சதவீதத்திற்கும் 19.67 சதவீதத்திற்கும் 20.65 சதவீதத்திற்கும் படிப்படியாக அதிகரித்தது. 2001 ஏப்பிறல் 25ஆம் நாளிலிருந்து இவ்வீதங்கள் வீழ்ச்சியடையத் தொடங்கி ஆண்டின் இறுதியில் இவை முறையே 12.87 சதவீதமாகவும் 13.22 சதவீதமாகவும் 13.69 சதவீதமாகவும் விளங்கின.

இவ்வாண்டில் சந்தையில் திரவத் தன்மைப் பற்றாக்குறை பாரியளவில் தொடர்ச்சியாகக் காணப்பட்டபோதும் இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களின் உடனடிக் கொள்வனவுகள் (மீள் கழிவிடல்) 2000ஆம் ஆண்டின் ரூ.2.1 பில்லியனிலிருந்து 2001ஆம் ஆண்டில் ரூ.645 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து 69 சதவீத (ரூ.1.5 மில்லியன்) வீழ்ச்சியைப் பதிவு செய்தன. சில பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் நீண்டகால திரவப் பற்றாக்குறையினை ஈடுசெய்வதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு உடனடி விற்பனையினை மேற்கொள்வதிலும் பார்க்க அத் திறைசேரி உண்டியல்களை நேர்மாற்று மீள் கொள்வனவு செய்வதற்கு முன்னுரிமை யளித்தமையும் திறைசேரி உண்டியல்களின் முதனிலைச் சந்தையில் விளைவு வீதங்கள் வீழ்ச்சியடைந்தமையும் (இலங்கை மத்திய வங்கிக்கு உடனடியாக விற்கப்பட்டிருப்பின் மூலதன இழப்புக்களை உருவாக்கியிருக்கக்கூடிய) ஆய்விற்குரிய ஆண்டில் இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி

வரைபடம் II
2000 மற்றும் 2001ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் கொள்வனவுகளினது அளவு




உண்டியல்களினது உடனடி மீள் கொள்வனவுகளின் அளவு வீழ்ச்சியடையக் காரணங்களாக இருந்தன.


முதனிலைச் சந்தை வீதங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மத்திய வங்கியின் மீள் கழிவிடல் விளைவு வீதங்கள் 2001ஆம் ஆண்டுப் பகுதியில் முதனிலைச் சந்தை விளைவு வீதங்களில் காணப்பட்ட போக்குடன் ஒத்துச் செல்லும் விதத்தில் அசைவுற்றது. மேலும் 2001 திசெம்பர் 27ஆம் நாள் தொடக்கம் மீள் கழிவிடல் வீதங்களுக்கும் முதனிலைச் சந்தை விளைவு வீதங்களுக்குமிடையிலான இலாபம் 350 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 125 அடிப்படைப் புள்ளிகளுக்குக் குறைக்கப்பட்டது. இதன்படி, 91 நாள், 182 நாள், 364 நாள் திறைசேரி உண்டியல்கள் மீதான மத்திய வங்கியின் மீள் கழிவிடல் விளைவு வீதங்கள் ஆண்டின் தொடக்கத்தில் 21.27 சதவீதத்திலிருந்தும் 21.40 சதவீதத்திலிருந்தும் 21.72 சதவீதத்திலிருந்தும் ஆண்டின் இறுதிப் பகுதியில் முறையே ஆண்டிற்கு 14.17 சதவீதத்திற்கும் 14.52 சதவீதத்திற்கும் மற்றும் 14.99 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. 2000ஆம் ஆண்டிலும், 2001 ஆண்டிலும் இலங்கை மத்திய வங்கியின் இரண்டாம் நிலைச் சந்தையில் உடனடிக் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மாதாந்த அளவு வரைபடம் 2இல் காட்டப்பட்டுள்ளது.

### (iii) மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்

2001ஆம் ஆண்டிலும், திறைசேரி உண்டியல்கள் மீள் கொள்வனவு உடன்படிக்கைகளின் முதலீடுகள் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படும் பல்வேறு நிதியங்களை அடைவதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முக்கிய வழிகளாகவும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் தமது மிகையான நிதிகளை ஓரிரவிலிருந்து ஏழு நாட்கள் வரையிலான வீச்சினைக் கொண்ட குறுங்காலப் பகுதிக்கு முதலீடு செய்யக்கூடிய வழியாகவும் இருந்ததுடன் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை வீதங்களின் ஆகக்குறைந்த வீதங்களை உறுதிப்படுத்துவதற்கும் உதவின. மீள் கொள்வனவு உடன்படிக்கைகளின்கீழ் விற்பனை செய்யப்பட்ட (ஓரிரவுக்குச்சமமானவை) திறைசேரி உண்டியல்களின் மொத்த அளவு 2000ஆம் ஆண்டின் ரூ.226.4 பில்லியனிலிருந்து 2001இல் ரூ.203 பில்லியனுக்கு ரூ.23.5 பில்லியனால் (10.36 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் முதனிலை வணிகர்களினாலும் மீள் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் முறையே ரூ.50.2 பில்லியனாலும், (57 சதவீதம்) ரூ.26.6 பில்லியனாலும் (95 சதவீதம்) 2001இல் ரூ.37.2 பில்லியனுக்கும் ரூ.1.3 மில்லியனுக்கும் வீழ்ச்சியடைந்தன. ஆண்டின் முன்னரைப் பகுதியில் இவ்வீழ்ச்சி மிகக்கூடுதலாக இருந்ததெனினும், ஆண்டின் பின்னரைப் பகுதியில் ரூபாவின் திரவத் தன்மை முன்னேற்றங் கண்டதன் காரணமாக விற்பனைகள் படிப்படியாக அதிகரித்தன. எனினும் இலங்கை மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்பட்ட பல்வேறு நிதியங்களினால் மீள்கொள்வனவில் செய்யப்பட்ட முதலீடுகள் 2000ஆம் ஆண்டின் ரூ.111.2 பில்லியனிலிருந்து 2001இல் ரூ. 164.5 பில்லியனுக்கு அதிகரித்தன. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களிடமுள்ள மாதாந்த மீள்கொள்வனவு அளவுகள் வரைபடம் 3 இல் காட்டப்பட்டுள்ளன.

ஓரிரவு மீள் கொள்வனவு வீதமானது, நிதியியல் சந்தைகளின் நிலைமைகளையும் அதேபோன்று வங்கியின் நாணயக் கொள்கை நிலையினையும் பரிசீலனை செய்த பின்னர் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படுகிறது. இவ்வீதம் 2001 சனவரி 18ஆம் நாளன்று 20 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. 2001 பெப்புருவரி 26ஆம் நாள் தொடக்கம் மீள் கொள்வனவு வீதங்கள் ஆறு தடவைகள் குறைக்கப்பட்டு ஆண்டின் பின்னரைப் பகுதியில் மிகப் பெருமனவிற்குக் குறைக்கப்பட்டு 2001இறுதியில் 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

வரைபடம் III
மாதாந்த நேர்மாற்று மீள்கொள்வனவு அளவுகளும் வீதங்களும் 2000 மற்றும் 2001



## (iv) நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்


*2001ஆம் ஆண்டிலும், நேர்மாற்றுமீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் சந்தைக்கு ரூபாத் திரவத் தன்மையை வழங்குவதில் மிக முக்கிய பங்கினையாற்றிய வேளையில் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை வீதங்களின் மேலெல்லையையும் உறுதிப்படுத்தியது. முன்னைய ஆண்டுக்காலத்தில் அவதானிக்கப்பட்டவாறு ரூபாத் திரவத்தன்மைப் பற்றாக்குறை மேலும் விரிவடைந்து 2001இன் பெரும்பாலான காலப்பகுதியில் உயர்வாக விளங்கி இலங்கை மத்திய வங்கியின் நேர்மாற்று மீள் கொன்வனவு சந்தையில் ஓரிரவு நேர்மாற்று மீள் கொள்வனவின் மொத்த அளவு 2000ஆம் ஆண்டின் ரூ.3,130 பில்லியனிலிருந்து 2001இல் 7,544 பில்லியனுக்கு இரு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தது. மாதாந்த நேர்மாற்று மீள் கொள்வனவு அளவுகளும் (ஓரிரவுக்குச்சமமானது) வீதங்களும் வரைபடம் 4இல் காட்டப்பட்டுள்ளன.*

*நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடனும் முதனிலை வணிகர்களுடனும் மட்டுமே மேற்கொள்ளப் பட்டன. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவை நேர்மாற்று மீள் கொள்வனவுச் சந்தையின் நாடலை 152 சதவீதத்தினால் ரூ.7,244 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் முதனிலை வணிகர்கள் அவர்களின் நாடலை 17 சதவீதத்தினால் ரூ.298 பில்லியனுக்கு அதிகரித்துக் கொண்டன. மொத்த நேர்மாற்று மீள் கொள்வனவு அளவில், இரு அரச வங்கிகளினதும் பங்களிப்பு மிகப் பெரியதாக இருந்ததுடன் இது ரூ.4,293 பில்லியனிலிருந்து (173 சதவீதம்) 2001இல் ரூ.6,779 பில்லியனுக்கு அதிகரித்தது. 2001இல் அரச திறைசேரி முறிகளே நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கான மிகப் பிரபல்யம் மிக்க அடிப்படைப் பாதுகாப்பாக இருந்ததுடன் மொத்த நேர்மாற்று மீள் கொள்வனவின் சதவீதமாக திறைசேரி முறிகளுக்கெதிரான நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் மொத்த அளவு 2000ஆம் ஆண்டின் 51.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2001இல் 95.7 சதவீதமாகக் காணப்பட்டது.*


*இலங்கை மத்திய வங்கியின் நேர்மாற்று மீள் கொள்வனவுச் சந்தையில் நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் (வரைபடம்) நாளாந்த அளவு 2001 ஏப்பிறல்வரை குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. எனினும் சந்தையில் ரூபாத் திரவத் தன்மை 2001 ஏப்பிறலின் பின்னர் படிப்படியாக மேம்பட்டது. தனியார் மயமாக்கலூடாக அரசினால் திரட்டப்பட்ட வெளிநாட்டு நிதிகளை மத்திய வங்கி கொள்வனவு செய்தமை, இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல், மற்றும் அரசின் வெளிநாட்டு நாணய கடன்பாடு, உள்நாட்டுச் சந்தையில் மத்திய வங்கியினால் வெளிநாட்டு நாணயங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை, நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 11 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டமை, முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்தமையின் மூலம் ரூபா நிதியங்கள் உட்புகுத்தப்பட்டமை என்பனவற்றின் காரணமாக 2001 திசெம்பரளவில் திரவப்பற்றாக்குறை மறைந்து விட்டது. இதன்படி, வரைபடம்5இல் காட்டப்பட்டவாறு, நேர்மாற்று மீள் கொள்வனவின் நாளாந்த சராசரி அளவு (ஓரிரவு சமமானது) ஆண்டின் இறுதிப் பகுதியில் படிப்படியாக வீழ்ச்சியடைந்தது.*

*மீள் கொள்வனவு வீதத்தினைப் போன்றே, நேர்மாற்று மீள் கொள்வனவு வீதமும் நிதியியல் சந்தை நிலைமைகளையும் நாணயக் கொள்கை நிலையினையும் கவனத்திற்கொண்டு வங்கியினால் நிர்ணயிக்கப் படுகின்றது. நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் 2001 சனவரி 18ஆம் நாளன்று 23.00 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. 2001 பெப்புருவரி 26ஆம் நாளிலிருந்து மீள் கொள்வனவு வீதமும் ஆறுதடவைகள்*

**வரைபடம் IV**
**மாதாந்த நேர்மாற்று மீள்கொள்வனவு அளவுகளும் வீதங்களும்**
**2000 மற்றும் 2001**




**வரைபடம் V**
**நேர்மாற்று மீள்கொள்வனவின் நாளாந்தர சராசரி அளவு**
**சனவரியிலிருந்து திசெம்பர்வரை 2000 மற்றும் 2001**



குறைக்கப்பட்டு ஆணடின் பின்னரைப் பகுதியில் நிகழ்ந்த மிகக்கூடியளவு குறைப்புடன் 14 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

### (v) வங்கிவீதம்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 87இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம் (வங்கிவீதம்) 2001ஆம் ஆண்டுப்பகுதியில் இரு தடவைகள் குறைக்கப்பட்டன. 2001 யூலை 2ஆம் நாளன்று ஆண்டிற்கு 25 சதவீதத்திலிருந்து 23 சதவீதத்திற்கும் 2001 திசெம்பர் 27ஆம் நாளன்று 23 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டது.

### (vi) நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள்

இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிரான நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 2001 ஒத்தோபர் 19ஆம் நாள் தொடக்கம் 11 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

### (vii) நடுத்தர மற்றும் நீண்ட காலக் கொடுகடன்

2001ஆம் ஆண்டுப் பகுதியில் நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடன் நிதியம் ரூ.4.9 பில்லியனாக மாற்றமின்றிக் காணப்பட்டது. அறவிட முடியாக் கடன்களின் ஒதுக்கிற்கு முன்னராக, நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடன் நிதியத்திலிருந்து நிதிக் கம்பனிகளுக்கு விடுவிக்கப்பட்ட கொடுகடனின் வெளிநின்ற மொத்தத் தொகை 2001 இறுதியில் ரூ.2.6 பில்லியனாகக் காணப்பட்டது. இவ்வாண்டில் மீளச் செலுத்தப்பட்ட தொகை ரூ.130 பில்லியனாகக் காணப்பட்டது.

## (உ) அரசிற்கும் வர்த்தக வங்கிகளுக்கும் வங்கியாளராகத் தொழிற்படுகின்றமை

### (i) நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்

வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக வர்த்தக வங்கிகளுக்கும் தெரிந்தெடுக்கப்பட்ட மற்றைய வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கும் மத்திய வங்கி தொடர்ந்தும் நடைமுறைக்கணக்கு வசதிகளை வழங்கியது. மேற் குறிப்பிட்ட நிதியியல் நிறுவனங்களுக்கு பாரிய பெறுமதி கொண்ட நிதியினை மாற்றல் செய்வதற்காக அந்த நேரத்திலேயே முழுமையாகத் தீர்ப்பனவு செய்யும் முறையொன்றினை அறிமுகப்படுத்துவதற்காக உலக வங்கியின் நிதி உதவியுடன் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

### (ii) அரச கணக்குகள்

அரசிற்கான வங்கியாளர் என்ற முறையில், இலங்கை மத்திய வங்கியானது அரச திணைக்களங்கள், அரச முகவர் நிலையங்கள், மற்றும் நிறுவனங்கள், குறிப்பிட்ட நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணியதுடன் தேவையான வங்கித் தொழில் வசதிகளையும் அவற்றிற்கு வழங்கியது. வங்கியினால் பேணப்பட்ட அத்தகைய கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2001ஆம் ஆண்டின் இறுதியில் 133ஆக விளங்கியது. 2001ஆம் ஆண்டில் அரசின் சார்பில் மத்திய வங்கியினால் அது (6) புதிய கணக்குகள் திறக்கப்பட்டன.

### (iii) ஏற்றுமதியாளர்களுக்கான இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடி

ஏற்றுமதியாளர்களுக்கு அவற்றினால் செலுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடிகள் தொடர்பாக அரசாங்கத்தின் சார்பில் வங்கியானது 2000ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையான ரூ.241 மில்லியனுக்கெதிராக 2001ஆம் ஆண்டில் ரூ.249 மில்லியன் கொண்ட மொத்தத் தொகையை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மீளளித்தது.

### (iv) இந்தியாவிற்குக் குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவு தொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்

1964ஆம் ஆண்டின் இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புவதற்காக அரசின் சார்பில் செலுத்தப்பட்ட மொத்த உதவு தொகைக் கொடுப்பனவுகள் 2000ஆம் ஆண்டின் ரூ.187,259 உடன் ஒப்பிடுகையில் 2001இல் ரூ.95,103ஆகக் காணப்பட்டது. வெகுமதிக் கொடுப்பனவும் 2000ஆம் ஆண்டின் ரூ.18,975 உடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் ரூ.7,425 ஆகக் காணப்பட்டது.

## எ. ஏனைய குறித்துரைக்கப்பட்ட பணிகள்

### (i) வெளிநாட்டு நிதியம்

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சருவதேச ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கி, விவசாய அபிவிருத்திக்கான சருவதேச நிதியம், என்பனவற்றினால் நிதியிடப்படும் வெளிநாட்டு நிதியிடப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான பலதரப்பட்ட வெளிநாட்டுக் கடன்களினதும் கொடைகளினதும் பகிர்ந்தளிப்புக் களையும் மீளச் செலுத்தல்களையும் வங்கித் தொழில் திணைக்களம் தொடர்ந்து கையாண்டது. சருவதேச நிறுவனங்களினாலும் வெளிநாட்டு அரசாங்கங் களினாலும் வழங்கப்பட்ட புதிய செயற்றிட்டக் கடன்களின் கீழான நிதியங்களின் பகிர்ந்தளிப்பும்

ஆய்விற்குரிய ஆண்டில் தொடங்கப்பட்டன. வங்கித் தொழில் திணைக்களமானது அரசாங்கத்தின் சார்பில் பலதரப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழான இணைக்கிணை நிதியங்களைத் தொடர்ந்தும் சேகரித்து கொடை முகவராண்மைகளினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு அத்தகைய நிதியங்களை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்தது. இதற்கு மேலதிகமாக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பலதரப்பட்ட நிறுவனங்களுக்கு வங்கித் தொழில் திணைக்களம் தொடர்ந்து உத்தரவாதங்களை வழங்கியது.

## (ii) கட்டாய சேமிப்புக்கள் நிதியம்

1971ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க கட்டாய சேமிப்புக்கள் சட்டத்தின் கீழும் 1972ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க வருமான வரையறை மற்றும் கட்டாய சேமிப்புக்கள் சட்டத்தின் கீழும் சேகரிக்கப்பட்ட பணத்தின் பாதுகாவலனாக மத்திய வங்கி தொடர்ந்தும் காணப்பட்டதுடன் அரசாங்கத்தின் சார்பில் கட்டாய சேமிப்புக்கள் நிதியத்தினை தொடர்ந்து நிருவகித்தது. 2001ஆம் ஆண்டு திசெம்பர் 31இல் நிதியத்தில் ரூ.82.3 மில்லியன் கொண்ட நிலுவையொன்று காணப்பட்டது.

## (iii) வர்த்தக வங்கிகளில் வைப்புச் செய்யப் பட்டிருந்த குவைத் தினார் நாணயங்களுக் கெதிராக இறுதிக் கொடுப்பனவு மீளத் தொடங்குதல்

குவைத்தில் இடம் பெற்ற யுத்த நிலைமைகளின் காரணமாக 1990ஆம் ஆண்டில் குவைத் நாட்டில் இருந்து திரும்பிய ஆட்களினால் வர்த்தக வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்ட பழைய குவைத் நாணயங்களுக்கு எதிராக இறுதிக் கொடுப்பனவினை மீளத் தொடங்குவதற்காக 2001ஆம் ஆண்டுக்காலத்தில் இலங்கை மத்திய வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டது. குவைத் நாட்டில் போர் தொடங்கியதன் பின்னர் இலங்கைக்குத் திரும்பியவர்களுக்கு உடனடியான நிவாரணத்தை வழங்குவதற்காக வேண்டி அத்தகைய ஆட்களினால் கொண்டுவரப்பட்ட குவைத் தினார் நாணத்துக்கு பகுதியளவு காசாக்கல் வசதிகளை வழங்குவதன் மூலம் வர்த்தக வங்கிகளின் உதவியுடன் 1990ஆம் ஆண்டு ஒத்தோபரில் மத்திய வங்கி திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து 1990ஆம் ஆண்டு ஒகத்து 1ஆம் நாள்வரை வழங்கப்பட்டு சுற்றோட்டத்துக்கு விடப்பட்ட குவைத்தினார் நாணயத்தாள்கள் புறக்கீடு செய்யப்பட்ட நாணயத்தாள்களுக்கு எதிராக புதிய வடிவில் அமைந்த நாணயத்தாள்களை வழங்கப்போவதாகவும் குவைத் மத்திய வங்கி அறிவித்தது. அவ்வாறு வழங்கப்படும் புதிய நாணயத் தாள்களுக்காக குவைத் தினார் நாணயங்களை பலதரப்பட்ட இனங்களுக்கான பழைய தொடர் இலக்கங்களை கொண்ட சில நாணயத் தாள்கள் மாற்றல் செய்யப்படமாட்டாது எனவும் வங்கி அறிவித்தது. தனிப்பட்ட ஆட்களினாலும் வங்கிகளினாலும் வைத்திருக்கப்பட்ட செல்லுபடியாகும் பழைய குவைத் தினார் நாணயத்தாள்களை புதிய வடிவிலமைந்த நாணயத்தாள்களுக்கு மாற்றுவதற்கான இறுதிநாள் 1991ஆம் ஆண்டு செத்தெம்பர் 30ஆம் நாளாக இருந்தது.

இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு அமைச்சினதும் குவைத் நாட்டில் தொழிற்படும் சில வர்த்தக வங்கிகளினதும் உதவியுடன் வர்த்தக வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டு புதிய நாணயத் தாள்களுக்கு மாற்றல் செய்வதற்காக மத்திய வங்கியில் இடப்பட்ட பழைய குவைத் தினார் நாணயத்தாள்களை குவைத் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு இணங்க அந்த நாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதனது பேராளரின் ஊடாக இலங்கை மத்திய வங்கியினால் அனுப்பி வைக்கப்பட்ட நாணயத்தாள்களைப் பரிசீலனை செய்த பின்னர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நாணயத் தாள்களின் சில பகுதிகள் அவர்களினால் இரத்துச் செய்யப்பட்ட சில தொடர்களைக் கொண்டுள்ளன எனவும் புதிய வடிவிலமைந்த நாயணத்தாள்களுக்கு மாற்றல் செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாணயத் தாள்களுக்கான பெறுதிகளை மட்டுமே அனுப்பியுள்ளதாகவும் குவைத் மத்திய வங்கி அறிவித்தது. இதன்படி, குவைத் மத்திய வங்கியிலிருந்து பெறப்பட்ட தேறிய பெறுமதியின் அடிப்படையில் அவர்களிடம் குவைத் தினார் நாணயத் தாள்களை வைப்புச் செய்த வாடிக்கையாளர்களுக்கு (தினார் ஒன்று ரூ.53.84.) எஞ்சிய தொகையை விடுவிக்குமாறு இலங்கை மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்கியது.

அதன் பின்னர் குவைத் மத்திய வங்கியினால் மாற்றலுக்காக ஏற்றுக் கொள்ளப்படாத குவைத் தினார் நாணயத்தாள்கள் சம்பந்தமாக இலங்கை மத்திய வங்கி ஐக்கிய நாடுகள் சபை இழப்பீட்டு ஆணைக்குழுவுக்கு உரிமை கோரல் ஒன்றை அனுப்பி வைத்தது. அந்த உரிமை கோரலின் பாகமொன்றினை ஐக்கிய நாடுகள் சபை இழப்பீட்டு ஆணைக்குழு ஏற்றுக் கொண்டதுடன் பெறுதிகளும் அனுப்பி வைக்கப்பட்டன. அதன்படி ஐக்கிய நாடுகள் சபை இழப்பீட்டு ஆணைக்குழுவிலிருந்து தேறிய/ பெறப்பட்ட தொகையின் அடிப்படையில் விகிதமுறைப்படி 2001ஆம் ஆண்டு ஒத்தோபர் இறுதியளவில் அவற்றுடன் குவைத் தினார் நாணயத்தாள்களை வைப்புச் செய்த

வாடிக்கையாளர்களுக்கு பெறப்பட்ட நிதியங்களை விடுவிக்குமாறு வர்த்தக வங்கிகளுக்கு தேவையான அறிவுறுத்தல்களை இலங்கை மத்திய வங்கி வழங்கியது. அதன் பின்னர் குவைத் மத்திய வங்கியினால் மாற்றலுக்காக ஏற்றுக் கொள்ளப்படாத குவைத்தினார் நாணயத்தாள்கள் சம்பந்தமாக இலங்கை மத்திய வங்கி ஐக்கிய நாடுகள் சபை இழப்பீட்டு ஆணைக்குழுவிற்கு உரிமை கோரல் ஒன்றை அனுப்பி வைத்தது. இந்த உரிமை கோரலின் பாகமொன்றினை ஐக்கிய நாடுகள்சபை இழப்பீட்டு ஆணைக்குழு ஏற்றுக் கொண்டதுடன் பெறுதிகளும் அனுப்பி வைக்கப்பட்டன. இதன்படி ஐக்கிய நாடுகள் சபை இழப்பீட்டு ஆணைக்குழுவிலிருந்து தேறிய/பெறப்பட்ட தொகையின் அடிப்படையில் விகித முறைப்படி 2001ஆம் ஆண்டு ஒத்தோபர் இறுதியளவில் அவற்றுடன் குவைத்தினார் நாணயத் தாள்களை வைப்புச் செய்த வாடிக்கையாளர்களுக்கு பெறப்பட்ட நிதியங்களை விடுவிக்குமாறு வர்த்தக வங்கிகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை இலங்கை மத்திய வங்கி வழங்கியது.

## (iv) ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்

### 2001ஆம் ஆண்டில் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய நாடுகளுடனான வர்த்தகம்

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் ஊடாக வழிப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2000ஆம் ஆண்டின் ரூ.66.1 பில்லியனிலிருந்து 2001ஆம் ஆண்டில் ரூ.7.24 பில்லியனுக்கு அதிகரித்தது. 2001ஆம் ஆண்டில் இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளுக்கும் ஏற்றுமதிகளுக்கான பெறுகைகளும் இடையிலான வேறுபாடு ரூ.46.4 பில்லியனாக இருந்தது. 2001ஆம் ஆண்டில் வெளிநாட்டு நாணயத்தில் செலுத்தப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாப் பெறுமதி ரூ.55.1 பில்லியனாக விளங்கியது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய ஒப்பந்தத்தின் வழங்கப்பட்ட சுவெப் வசதிகளுக்கான இலங்கையின் பங்களிப்பு ரூ.573 மில்லியனாக இருந்தது.

## 2. பணிப்பாளர்கள் சபையின் கூட்டமும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களும்

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர்கள் சபையின் 30ஆவது கூட்டம் 2001ஆம் ஆண்டு மே 28ஆம் நாள் மியான்மார் தேசத்தின் யங்கோன் நகரில் இடம்பெற்றது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் 2002ஆம் ஆண்டுக்கான தலைவராக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவு செய்யப்பட்டதோடு 31ஆவது கூட்டத்தினை 2002ஆம் ஆண்டின் மே மாதத்தில் கொழும்பில் நடாத்துவதற்கு பணிப்பாளர்கள் சபை தீர்மானித்தது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கடந்த கால செயலாற்றம் பற்றி அனைத்தையும் உள்ளடக்கிய மீளாய்வு ஒன்றை மேற்கொள்ளுவதற்கும் குறிப்பாக சருவதேச கொடுப்பனவுகள் தீர்ப்பனவு முறைகளின் அண்மைக்கால நிகழ்வுகளின் சூழலில் அதனது எதிர்கால பங்கினை அடையாளம் காணுவதற்குமாக வெளியிலிருந்தான வல்லுனர் ஒருவரின் உதவியைப் பெற்றுக் கொள்ளுவதற்கு இந்தக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பணிக்காக சருவதேச தீர்ப்பனவுகளுக்கான வங்கியின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக வாய்ப்புக்களைப் பற்றி ஆராய்வதற்கு சபை தீர்மானித்தது.

## (3) வங்கித் தொழில் திணைக்களத்தை நான்கு திணைக்களங்களாக மீள அமைத்தல்

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மத்திய வங்கியின் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வங்கித் தொழில் திணைக்களத்தை நான்கு திணைக்களங்களாக மீள நிறுவுவதற்கான நடவடிக்கைகள் 2001ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்டன. தற்போதைய சருவதேச நற்பிரயோகங்களுக்கு இசைவாக அதனது தொழிற்பாடுகளை ஒழுங்குபடுத்துகின்ற வேளையில் அதனது கருமங்களை செயல்திறன் மிக்கதாக்குவதே இதனது நோக்கமாகும். 2002ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாளிலிருந்து செயற்படவிருந்த புதிய திணைக்களங்களாவன சருவதேச தொழிற்பாடு, உள்நாட்டுத் தொழிற்பாடு, கொடுப்பனவுகளும் தீர்ப்பனவுகளும், மற்றும் நிதித் திணைக்களம் என்பனவாகும்.

செலாவணிவீத உறுதிப்பாட்டைப் பேணுகின்ற வேளையில் சருவதேச அலுவல்சார் ஏதுக்களின் உபாயம் மிக்கதும் செயல்திறனுடையதுமான முகாமைத்துவத்துக்கு சருவதேச தொழிற்பாட்டுத் திணைக்களம் பொறுப்பாக உள்ளது. உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நடவடிக்கைகளின் கண்காணிப்பு மற்றும் வெளிநாட்டு மத்திய வங்கிகள் சருவதேச அமைப்புக்கள் இணைத்தரப்பினர்களுடான தொடர்புகள் என்பனவற்றையும் உள்ளடக்கி அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி சொத்துப்பட்டியல் முகாமைத்துவம் மற்றும் செலாவணி வீத கொள்கைகளின் நடைமுறைப்படுத்தல் என்பன தொடர்பான பணிகளை அது ஆற்றும்.

உள்நாட்டுப் பணச்சந்தையின் உறுதிப்பாட்டைப் பேணுகின்ற வேளையில் நாணயக் கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவது உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் பொறுப்பாகும். திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், இறுதிக்கடன் ஈவோன் வசதி நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் என்பனவற்றை நடைமுறைப்படுத்தல் உள்நாட்டுப் பணச்சந்தை

**சிறப்புக்குறிப்பு**

# கொடுப்பனவுகள் முறைச் சீர்திருத்தம்

கொடுப்பனவு முறையான கொடுப்பனவுக் கருவிகளின் தொகுதியொன்று தனிப்பட்டவர்கள், நிதியியல் நிறுவனங்களும் பணி வழங்குநர்களும் தீர்ப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகள் மற்றும் நிறுவனங்களுக்கிடையில் நிதியங்களின் உண்மையான மாற்றல்கள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. பின்வரும் காரணங்களினால் கொடுப்பனவு முறையின் பொதுவான கருமங்களில் இலங்கை மத்திய வங்கி முக்கிய பங்கொன்றினை வகிக்கின்றது.

(அ) அனைத்துத் தீர்ப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகளை உடைமையாளர் கொண்டு தொழிற்படுத்துதல்.

(ஆ) வங்கிகளை ஒழுங்குமுறைப்படுத்தி கண்காணித்தல்(முறையின் பங்கேற்பாளர்கள்)

(இ) அரசு என்ற வகையில் பொதுப் படுகடனை வழங்கி முகாமைப் படுத்துதல்.

இலங்கையில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவுக்கு வசதிகளை வழங்குவதற்கு நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 98இன் கீழ் இலங்கை மத்திய வங்கிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு இலங்கை மத்திய வங்கியுடன் வர்த்தக வங்கிகளினால் பேணப்படும் ஒதுக்கானது அத்தகைய வங்கிகளுக்கிடையில் காசோலைகளின் தீர்ப்பனவுக்கும் நிலுவைகளின் தீர்ப்பனவுக்கும் அடிப்படையாக அமையும் என பிரிவு 98 (2) ஏற்பாடு செய்துள்ளது. அதேபோன்று நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 112அ(அ) வின் நியதிகளுக்கிணங்க பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவுக்காக வர்த்தக வங்கியல்லோதோரின் முதனிலை வணிகர்களுக்கும் மத்திய வங்கியில் கணக்குகளைப் பேணுவதற்காக வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆய்வுக்குரிய ஆண்டில் இலங்கை மத்திய வங்கியினால் பின்வரும் முக்கிய கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைகள் தொழிற்படுத்தப்பட்டன.

(அ) இலங்கை மத்திய வங்கி நடைமுறைக் கணக்குகள்முறை;

(ஆ) இலங்கை தன்னியக்க தீர்வகத்தினால் தொழிற்படுத்தப்பட்ட காசோலைகள் தீர்ப்பனவுமுறை.

(இ) இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறை

காசு தவிர்ந்த சில்லறை கொடுப்பனவுக் கருவியாக காசோலைகள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. தனிப்பட்டவர்களும் கம்பனித்துறையினரும் வர்த்தக வங்கிகளின்மீது வரையப்பட்ட காசோலைகளை பெருமளவில் பயன்படுத்துகின்றனர். 1998ஆம் ஆண்டில் இலங்கை தன்னியக்க தீர்வகம் நிறுவப்பட்டதிலிருந்து காசோலைகளின் தீர்ப்பனவுச் செயல்முறைகள் மேம்படுத்தப்பட்டு விரைவுபடுத்தப்பட்டுள்ளதுடன் இலங்கைத் தன்னியக்கத் தீர்வகத்தினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் அளவு 1988ஆம் ஆண்டின் 11.7 மில்லியனில் இருந்து 2001ஆம் ஆண்டில் 35.3 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. வர்த்தக வங்கிகள் அதனைத் தாமாகவே முகாமைப்படுத்துவதற்கு அனுமதிப்பதற்காக 2002ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அதனை உரிமை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் ஆய்விற்குரிய ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. மத்திய வங்கியில் உள்ள அதனது கணக்கிலிருந்து இன்னொரு வங்கியின் சார்பாக வர்த்தக வங்கியொன்றினால் வரையப்படும் காசோலைகள் இலங்கை தன்னியக்கத் தீர்வகத்துக்குச் சமர்ப்பிக்கப்படாமலே மத்திய வங்கியில் உள்ள வரைபவரின் கணக்கிலிருந்து நேரடியாகச் செலுத்தப்படுகின்றன. ஏனைய காசல்லா முக்கிய கருவிகளான இலங்கை தன்னியக்க தீர்வகத்தினால் தொழிற்படுத்தப்படும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறை வரவு பற்று மற்றும் தன்னியக்கக் கூற்றுப்பொறி அட்டைகள் என்பனவாகும். பாரிய பெறுதியைக் கொண்ட காசோலைகளின் கொடுப்பனவுகளில் பெரும்பாலானவை இலங்கை மத்திய வங்கியின் நடைமுறைக் கணக்கு முறையில் தீர்ப்பனவு செய்யப்படுவதோடு அழைப்புப் பணச்சந்தை அரசாங்க படுகடன் பிணையங்கள் சந்தை வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை, மற்றும் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின்கீழ் மீள் கொள்வனவு/நேர்மாற்று மீள் கொள்வனவு போன்ற கொடுக்கல் வாங்கல்களின் மீது வங்கிகளுக்கிடையிலான மற்றும் முதனிலை வணிகர்களுக்கிடையிலான கொடுப்பனவுகளுக்காக தீர்ப்பனவு முறையின் அதிமுக்கிய அம்சமான நாளின் இறுதி தீர்ப்பனவு முறையாகவும் செயற்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் நடைமுறைக் கணக்குமுறையின் தீர்ப்பனவுகள் இலங்கை மத்திய

வங்கியில் உள்ள பங்கேற்பாளர்களின் நடைமுறைக் கணக்குகளின் ஊடாக நாளின் இறுதியில் பொறுப்புக்களின் தேறிய தீர்ப்பனவுகள் மற்றும் உரிமை கோரல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு கடப்பாடுகளுக்கு வசதி செய்துகொடுப்பதற்காகவும் நியதி தேவைப்பாடுகளை எதிர் கொள்ளுவதற்குமாக உரிமம் பெற்ற ஒவ்வொரு வர்த்தக வங்கியும் இலங்கை மத்திய வங்கியில் நடைமுறை/ ஒதுக்குக் கணக்கு ஒன்றைப் பேணுகின்றது. அரசாங்கப் பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்காக ஒவ்வொரு முதனிலை வணிகரும் இலங்கை மத்திய வங்கியில் கணக்கொன்றைப் பேணுவர். உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் தமது கணக்குகளில் மேலதிகப் பற்றினைப் பெறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். அவர்களது கடப்பாடுகளுக்கான திரவத் தன்மையினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு அவற்றிற்கு இரண்டு வழிகள் காணப்படுகின்றன. முதலாவதாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தமது நடைமுறைக் கணக்குகளில் பேணப்படும் மேலதிக ஒதுக்குகளைப் பயன்படுத்த முடியும். நாளாந்த அடிப்படையில் தேவைப்பாட்டின் குறைந்தபட்சம் 90 சதவீதத்தினை பேணவேண்டும் என்பதற்கு உட்பட்டு வாரமொன்றில் நாளாந்த சராசரியின் அடிப்படையில் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளைப் பேணவேண்டும் என உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாவதாக இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட வட்டிவீதமொன்றில் திறந்த சந்தை தொழிற்பாட்டின் கீழ் பிணையாக வைக்கப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை அவை பயன்படுத்தலாம்.

1998ஆம் ஆண்டில் பிரைஸ்வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வு ஒன்றின் அடிப்படையில் பயன்தரு படுகடன் முகாமைத்துவத்துக்காகவும் இலங்கை மத்திய வங்கியின் நாணயத் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்குமாக அரசாங்கப் பிணையங்கள் சந்தையினை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்தது. இதன்படி திறைசேரி உண்டியல்களினதும் முறிகளினதும் தீர்ப்பனவு செயல்முறையின் செயல்திறனை அதிகரிப்பதற்காக வேண்டி அரச பிணையங்களுக்காக பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையொன்றினை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதற்கான வலியுறுத்தல் ஒன்று காணப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை இயக்கவிசை கொண்டதாக மாற்றுவதற்கான பெருமளவு கருத்திற் கொள்ளலுடன் பிணையங்கள் தீர்ப்பனவு பொறிமுறையின் செயல்திறனை அதிகரிப்பதற்கு மத்திய வைப்பு முறையொன்றிலான பங்களிப்பு இனம் காணப்பட்டது. படுகடன் பிணையங்கள் மற்றும் ஏனைய நிதியியல் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் போன்றனவற்றுக்காக ஏற்கனவேயுள்ள தீர்ப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகள் தொடர்பான வாணிப மற்றும் கொள்கை விடயங்களை மீளாய்வு செய்யுமாறு இலண்டனில் உள்ள பொதுநலவாய செயலகத்தை இலங்கை மத்திய வங்கி கேட்டுக் கொண்டது. பொதுநலவாய செயலகத்தின் விதந்துரைப்புக்களைத் தொடர்ந்து பூர்வாங்க நடவடிக்கையாக 2000ஆம் ஆண்டில் உள்ளக கொடுப்பனவு சபையொன்று நிறுவப்பட்டது. படுகடன் பிணையங்களுக்கான பத்திரம் அற்ற வர்த்தகத்தினையும் உள்ளடக்கிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையுடன் சம்பந்தப்பட்ட விரிவான கொள்கை விடயங்கள் தொடர்பாகவும் உள்ளக கொடுப்பனவு சபை கருத்திற் கொள்ள வேண்டியிருந்தது.

ஆய்விற்குரிய ஆண்டில் உலக வங்கி, சுவீடன் சருவதேச அபிவிருத்தி முகவராண்மை மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் நிதியிடப்பட்ட நவீன மயப்படுத்தல் செயற்றிட்டத்தை மத்திய வங்கி தொடங்கியமையினால் கொடுப்பனவு சீர்திருத்தங்களுக்கான மத்திய வங்கியின் நடவடிக்கைகளை கணிசமாக மாற்றமடைந்தன. மைய நிதியியல் முறையின் உட்கட்டமைப்பினைத் தரமுயர்த்தலானது இலங்கை மத்திய வங்கியின் பொதுவான மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் உள்ளார்ந்த மூலகம் ஒன்றாக மாறியது. சீர்திருத்தங்களின் செயல்நோக்கானது பின்வருவனவற்றின் கைக்கொள்ளல் பரீட்சிப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலை உள்ளடக்கியிருந்தது.

(அ) பாரிய பெறுமதி மற்றும் நேரகால முக்கியத்துவம் வாய்ந்த நிதியங்களின் மாற்றலுக்கான இயலுமையைக் கொண்ட அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறையொன்று;

(ஆ) ஒப்படைப்புக்கு எதிராக கொடுப்பனவுக்கு வசதிசெய்து கொடுப்பதற்காக அரசாங்கப் படுகடன் பிணையங்களுக்காக பிணையங்களின் மத்திய வைப்புமுறை, பதிவகம் மற்றும் பத்திரங்கள் அற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறையும் அதே

நேர மொத்தத் தீப்பனவு முறையுடன் அதனது ஒருங்கிணைப்பும் ;

(இ) மத்திய வங்கியின் நடைமுறை மற்றும் எதிர்கால நிதியியல் தொழிற்பாடுகளுக்காக தன்னிக்க பொதுப் பேரேட்டுமுறையும்;

இந்தச் சீர்திருத்தங்கள் பின்வருவனவற்றை எதிர்பார்க்கின்றன.

- சருவதேச நற்பிரயோகங்களுக்கு இசைந்து செல்லும் வகையில் தற்போதைய நாளின் இறுதியலான தீர்ப்பனவு முறுயின் உள்ளார்ந்த கொடுப்பனவு இடர்நேர்வுகளை இல்லாதொழித்தல்;
- இலங்கையின் நிதியியல் சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பினை நிறுவுதல்;
- இலங்கையின் பொதுப்படுகடனின் நம்பகத் தன்மையினையும் வர்த்தகப் படுத்தக்கூடிய தன்மை யினையும் அதிகரித்தல்;
- இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் தொழிற்பாடுகளினதும் பிணையங்கள் தீர்ப்பனவு முறையினதும் செயல்திறனையும் தரத்தினையும் மேம்படுத்தல்;
- வாடிக்கையாளர்களுக்கு செயல்திறன் மிக்கதும் அதே நாளிலுமான தீர்ப்பனவு வசதிகளைக் கிடைக்கச் செய்தல்;
- சிறந்த திரவத்தன்மை முகாமைத்துவத்தினை ஊக்குவித்தல்
- நாணயக் கொள்கையின் நடைமுறைப் படுத்தலின் செயல்திறனையும் பயன்தரு தன்மையினையும் ஊக்குவித்தல்.

தற்போதைய அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைக்கும்/பொதுப்பேரட்டு முறைக்குமான விலைக் குறிப்பீட்டு ஆவணங்களைத தயாரிப்பதில் மத்திய வங்கிக்கு உதவுவதற்காக வெளிநாட்டு ஆலோசகர் சம்பனியொன்றுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டது. விலைக் குறிப்பீட்டு ஆவணங்களைத் தயாரிக்கும் பணிக்கு வசதிசெய்து கொடுப்பதற்காகவும் 2001ஆம் ஆண்டு ஓகத்தில் இலங்கை மத்திய வங்கி அதேநேர மொத்தத் தீர்ப்பனவுமுறை மற்றும் பத்திரங்கள் அற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறையின் நடைமுறைப்படுத்தலுக்காவும் 2001ஆம் ஆண்டு ஓகத்தில் இலங்கை மத்திய வங்கி அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறை பணிக்குழு ஒன்றினை இலங்கை மத்திய வங்கி நியமித்தது. விலைக் குறிப்பீட்டு ஆவணங்களின் தொழில்நுட்ப விளக்கக் குறிப்புக்கள் இலங்கை மத்திய வங்கியின் பயன்படுத்தும் திணைக்களங்களினாலும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைக்கான பணிக்குழுவினாலும் பெருமளவில் மீளாய்வு செய்யப்பட்டது. உத்தேசத் திட்டமானது வங்கித் தொழில் மற்றும் நிதியியல்துறையினது நடைமுறை மற்றும் எதிர்காலக் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைகளின் தேவைப்பாடுகளை போதுமானளவு கவனத்தில் கொள்ளும் என்பதை உறுதி செய்து கொள்வதே இதற்கான காரணமாக அமைந்தது. உத்தேச அதேநேர மொத்தத் தீர்ப்பனவு மற்றும் பத்திரங்கள் அற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறையின் ஊடாக இடம்பெறும் விடயங்களின் பெறுமதியினையும் அளவினையும் மதிப்பீடு செய்வதற்காக 2001ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நுண்பாக அளவீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணையிடப்பட்டவாறு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் தொழிற்பாடுகளை வெற்றிகரமாகத் தொடங்குவதற்கு நிதியியல் சமூகத்தினை முன்கூட்டியே தயார்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி கூட்டு இணக்க அணுகுமுறையொன்றினை மேற்கொண்டது. வர்த்தக வங்கிகளின் பிரதிநிதிகளுடன் 1992ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறையின் செயலணி கொடுப்பனவுகள் சீர்திருத்த செயலணியாக விரிவான பணிப்பொன்றுடன் மீளமைக்கப்பட்டது. விரிவான கொடுப்பனவு முறையொன்றினை வடிவமைப்பதற்காக வங்கிகளுக்கிடையே தொடர்பூட்டல்களையும் கலந்தாலோசனைகளையும் அதிகரிப்பதற்கும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் சம்பந்தப்பட்ட தொழிற்பாட்டு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்குமாக இவ்வாறு செய்யப்பட்டது. வர்த்தக வங்கிகள் முதனிலை வணிகர்கள் மற்றும் நிதிய முகாமையாளர்களின் தொழிற்பாட்டு மட்டங்களின் மூத்த முகாமையாளர்களுடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டு அதனைப் பற்றி அறிந்து கொள்வதற்காக முறையின் ஆக்க அமைப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டது. உத்தேச முறையின்மீது இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்படவுள்ள புரிந்துணர்வு நிகழ்ச்சித் திட்டம் தொடங்குவதற்கு

முன்பதாக கவனத்திற் கொள்ள வேண்டிய கொள்கை மற்றும் தொழிற்பாட்டு விடயங்களை அதேநேர மொத்தத் தீர்ப்பனவு செயலணி இனங்கண்டது. மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் ஆகிறவற்றின் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தேச முறையின் அனைத்தையும் உள்ளடக்கிய விபரத்தினை வழங்குவதற்காக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு செயலணியினால் புரிந்துணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் வெளிநின்ற விடயங்களை கவனத்திற் கொள்ளுவதற்காக அவர்களுடன் விபரமான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப் பட்டன.

2001ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தொழிற்நுட்ப விளக்கக் குறிப்புக்களும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை/ பத்திரங்கள் அற்ற பிணையங்களின் தீர்ப்பனவுமுறை என்பனவற்றுக்கும் இலங்கை மத்திய வங்கியின் தன்னியக்க பொதுப்பேரேட்டு முறைக்குமான முன் மொழிவுகளுக்கான வேண்டுகோள்களும் முற்றுப்பெற்றன. அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விலைக் குறிப்பீட்டுச்சபை விலைக் குறிப்பீட்டு ஆவணங்களுக்கு ஒப்புதல் வழங்கியதோடு இறுதி ஒப்புதலுக்காக 2001ஆம் திசெம்பர் மாதத்தில் இந்த ஆவணங்கள் உலக வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அதேநேரம் மொத்தத் தீர்ப்பனவு முறைகள்/ பத்திரங்கள் அற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறை மற்றும் பொதுப்பேரேட்டு முறையினை கொள்வனவு செய்வதற்கு உலக வங்கியின் கொள்வனவு நடவடிக்கை முறையும் இலங்கையின் விலைக் குறிப்பீட்டு நடவடிக்கை முறைகளும் பின்பற்றப்படும். செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் இச் செயற்றிட்டத்தின் கொள்வனவுகளுக்கும் நடைமுறைப்படுத்தலுக்கும் வெளியிலிருந்தான தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்ளுவதற்கு இலங்கை மத்திய வங்கி திட்டமிட்டுள்ளது. 2003ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையும் பத்திரங்கள் அற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறையும் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இச் சீர்திருத்தங்களின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலானது கொடுப்பனவுகளினதும் தீர்ப்பனவுகளினதும் தகவல்களின் தரவுத்தளம் ஒன்றை வேண்டி நிற்பதுடன் பங்கேற்பாளர்கள் ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் தொழிற்துறையின் அதேபோன்று நடைமுறை மற்றும் எதிர்கால கொடுப்பனவு சம்பந்தமாக அக்கறை கொண்டுள்ள ஏனையோரின் பொது விளக்கத்துக்கும், புரிந்துணர்வுக்குமாக அத்தகைய தகவல்களின் வெளியிடலையும் வேண்டிநிற்கின்றது. எனவே கொடுப்பனவுகள் சீர்திருத்த செயலணியின் வர்த்த வங்கி உறுப்பினர்களுடன் கலந்துரையாடி 2002ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் வெளியிடுவதற்காக இலங்கை மத்திய வங்கி காலாண்டுக் கொடுப்பனவுகள் விபரத் திரட்டு ஒன்றினை வடிவமைப்பதற்கு ஆய்வுக்குரிய இவ்வாண்டில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதேநேரம் மொத்த தீர்ப்பனவு முறை / பத்திரங்கள் அற்ற பிணையங்களின் தீர்ப்பனவுமுறை என்பனவற்றின் வெற்றிகரமான தொழிற்பாட்டுக்கு வலுவானதும் பொருத்தமானதுமான சட்ட வரைச்சட்டமொன்றினை நிறுவுவது மிக முக்கியமாகையினால் இவ்வாண்டில் உருவாக்கப்பட்ட அதே நேர மொத்தத் தீர்ப்பனவுமுறை மற்றும் பத்திரங்கள் அற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறை என்பனவற்றுக்கான சட்டவாக்கம் மற்றும் ஆவணப்படுத்தல் மீதான தொழில்நுட்பக்குழு ஏனைய நாடுகளில் முறைசார்ந்த முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு முறையின் மையக்கோட்பாடுகளைக் கருத்திற்கொண்டு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைக்கான விதிகளின் வரைவு ஒன்றினை ஆய்வுக்குரிய ஆண்டில் மேற்கொண்டது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினையும் பத்திரங்கள் அற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறையினையும் நிறுவி நடைமுறைப்படுத்துவதற்கும் நேரடி பங்கேற்பாளர்களினதும் அவர்களது வாடிக்கையாளர்களினதும் பத்திரங்கள் அற்ற பிணையங்களின் உடைமையை பதிவு செய்வதற்குமாக மத்திய வைப்பகம் ஒன்றை நிறுவுவதற்கும் இலங்கை மத்திய வங்கியை இயலச் செய்யும் வகையில் நாணய விதிச் சட்டத்துக்கு மேலும் திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

நிகழ்வுகளை கண்காணித்தல் உள்நாட்டுப் பணச்சந்தையின் அபிவிருத்திக்காக கொள்கையையும் வழிகாட்டல்களையும் உருவாக்குதல் ஆகியவற்றிலும் இத் திணைக்களம் ஈடுபடும்.

அதனது தொழிற்பாடுகள் ஒழுங்கான முறையில் நடைபெறுகின்றன என்பதை உறுதி செய்வதற்காக கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைகளின் பாதுகாப்பு, செயல்திறன், நம்பகத்தன்மை, மற்றும் உறுதிப்பாடு என்பனவற்றை உறுதி செய்வது கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பொறுப்பாகும். சருவதேச தொழிற்பாட்டுத் திணைக்களத்தினதும் பின் அலுவலக கருமங்களையும் சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகள் தீர்ப்பனவுகளையும் அது நிறைவேற்றுவதுடன் பங்கேற்பாளர்களிடையேயான கைமீட்புச் செய்ய இயலாத கொடுப்பனவு பொறிமுறையான அதே நேர கொடுப்பனவு முறையொன்றினை நிறுவுவதற்காக உறுப்பினர் வங்கிகளுடனும் நிறுவனங்களுடனும் அதே நேர மொத்த கொடுப்பனவு முறையொன்றினை அது தொழிற்படுத்தும். கொடுப்பனவு முறையின் செயல்திறன்மிக்க முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கும் பிணையங்களின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் செயல்முறையொன்றினை கண்காணித்துப் பேணுவதற்கும் அது பொறுப்பாக இருக்கும்.

செயல்திறன்மிக்க வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடு சருவதேச தரங்களுக்கு இசைவாக கணக்கீடு மற்றும் உள்ளக கொடுப்பனவு முறைகள் என்பனவற்றை உருவாக்குவதற்கு நிதித் திணைக்களம் பொறுப்பாக இருக்கும். அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், அத்தகைய நோக்கங்களுக்கான கணக்குகளைப் பேணுதல் இலங்கை மத்திய வங்கியின் வரவு செலவுத் திட்டத்திணைத் தயாரித்தல் சருவதேச கணக்கீட்டுத் தரங்களுக்கு இசைவாக வங்கியின் மாதாந்த ஐந்தொகையினையும் ஆண்டுக் கணக்குகளையும் தயாரித்தல், இலங்கை மத்திய வங்கியின் இளைப்பாற்று நன்மை நிதியங்களின் கணக்குகளைப் பேணுதல் அவற்றினது முதலீடுகளைப் பேணுதலும் நன்மைகளின் கொடுப்பனவும் பல்வேறுபட்ட ஊழியர் நன்மைகள் கணக்குகளைப் பேணுதல் என்பனவற்றையும் அதனது கருமங்கள் உள்ளடக்குகின்றன.

## நாணய வெளியீடு

தனியொரு நாணய வெளியீட்டு மேலாண்மையாளராக விளங்கும் இலங்கை மத்திய வங்கி 2001ஆம் ஆண்டுப் பகுதியிலும் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்துவதற்காகச் சட்டமுறையான நாணயவழங்கல் தொழிற்பாடுகளைக் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திலிருந்தும் அநுராதபுரம் மற்றும் மாத்தளை பிரதேச அலுவலகங்களிலிருந்தும் மேற்கொண்டது. 2001ஆம் ஆண்டின் இறுதியில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளின் அளவு 2000ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூ.73,316 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.76,561 மில்லியனாகக் காணப்பட்டது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்கள் சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயத்தில் 96 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தன.

2001 மார்ச்சில் கொண்டாடப்பட்ட இலங்கை வான்படையின் 50ஆவது ஆண்டு நிறைவினை குறிக்கும் விதத்தில் வங்கியானது ஒரு ரூபா இனத்திலமைந்த ஞாபகார்த்த நாணயக்குத்தியினை வெளியிட்டது. செம்பும், நிக்கலும் கலந்த இந் நாணயக்குத்தியானது துருப்பிடிக்காத தன்மையுடன் வார்க்கப்பட்டதுடன் மிகக் கவர்ச்சிகரமான அன்பளிப்புப் பெட்டியொன்றில் வைக்கப்பட்டு பொதுமக்களுக்கு ரூ.600இற்கு விற்பனை செய்யப்பட்டது. கொழும்புத் திட்டத்தின் 50ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் விதத்தில் வங்கியானது இரண்டு ரூபா இனத்திலமைந்த நாணயக் குத்தியொன்றினை 2001 யூலையில் வெளியிட்டது. மத்திய வங்கியில் விற்பனைக்குள்ள அனைத்து ஞாபகார்த்த நாணயத்தாள்களினது, குத்திகளினது விபரங்கள் அவற்றின் விற்பனை விலைகளுடன் அட்டவணை II.4 இல் தரப்பட்டுள்ளன.

1992இல் தொடங்கப்பட்ட தன்னியக்க நாணய செய்முறைப்படுத்தல் முறை 2001ஆம் ஆண்டில் தரமுயர்த்தப்பட்டது. தரமுயர்த்தப்பட்ட முறையானது திணைக்களத்தின் செய்முறைப்படுத்தல் வேலைகளை குறைந்த அலுவலர்களுடன் மேற்கொள்ளக்கூடிய வசதியினை ஏற்படுத்தியது.

போலி நாணயங்களை இனங்காண்பது தொடர்பாக திணைக்களமானது பள்ளிக்கூடப் பிள்ளைகள், அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என்போர்க்கு தொடர்ந்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. இவைகள் பொதுமக்களுக்கான விரிவுரைகளூடாகவும் செவிப்புல, கட்புல தொடர்புகளூடாகவும் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் நாணயத்தின் வரலாறும் பரிணாம வளர்ச்சியும் என்பது தொடர்பான சிறப்பு வானொலி நிகழ்ச்சித் திட்டமொன்றும் நடாத்தப்பட்டது.

வங்கியின் இருப்புக்களை அதிகரிக்கும் பொருட்டு 2000ஆம் ஆண்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சமய நிறுவனங்களிலிருந்து நாணயக் குத்திகளைச் சேகரித்துக்கொள்வதற்கான நாணயக்குத்திகளைச் சேகரிக்கின்ற நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் திணைக்களம் ரூ.25.5 மில்லியன் பெறுமதி கொண்ட நாணயக்குத்திகளைச் சேகரிக்கக்கூடியதாக

அட்டவணை II.4
விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஞாபகார்த்த நாணயக் குத்திகளும் தாள்களும்

| விடய எண். | விபரணம் | வழங்கப்பட்ட ஆண்டு | முகப்புப் பெறுமதி (ரூபா) | உலோகம் | விற்பனை விலை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1. | இலங்கை மத்திய வங்கியின் 40ஆவது ஆண்டு நிறைவு (உறை) | 1990 | 500 | வெள்ளி | 500 |
| 2. | 5ஆவது தென் ஆசியா விளையாட்டுப் போட்டி (பாதுகாப்பான பெட்டி) | 1991 | 500 | 12 கரட் தங்கம் | 600 |
| 3. | 5ஆவது தென் ஆசியா விளையாட்டுப் போட்டி (உறை) | 1991 | 500 | 12 கரட் தங்கம் | 500 |
| 4. | 5ஆவது தென் ஆசியா விளையாட்டுப் போட்டி (பாதுகாப்பான பெட்டி) | 1991 | 100 | வெள்ளி | 200 |
| 5. | சனாதிபதி ஆர். பிரேமதாசா (உறை) | 1992 | 1 | செப்பும் நிக்கலும் | 250 |
| 6. | 2300 மிருந்து ஜெயந்தி (பாதுகாப்புப் பெட்டி) | 1993 | 500 | வெள்ளி | 700 |
| 7. | 2300 மிருந்து ஜெயந்தி (உறை) | 1993 | 500 | வெள்ளி | 500 |
| 8. | ஐக்கிய நாடுகள் அமைப்பின் 50ஆவது ஆண்டு நிறைவு (உறை) | 1995 | 5 | நிக்கல் செம்பு | 200 |
| 9. | இலங்கை சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 1998 | 5,000 | 22 கரட் தங்கம் | 8,000 |
| 10. | இலங்கை சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 1998 | 1,000 | வெள்ளி | 1,200 |
| 11. | இலங்கை சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு நிறைவு (தாள் மடிப்பு) | 1998 | 200 | பொலிமர் | 400 |
| 12. | 1996 கிரிக்கெட் உலக கிண்ணம் (பாதுகாப்புப் பெட்டி) | 1999 | 1,000 | வெள்ளி | 1,200 |
| 13. | இலங்கை இராணுவத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 1999 | 1 | உருக்கு | 400 |
| 14. | இலங்கை இராணுவத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு சிறப்புவாய்ந்த சுற்றோட்டத்திற்கு விடப்படாதவை (பாதுகாப்புப் பெட்டி) | 1999 | 1 | உருக்கு | 150 |
| 15. | இலங்கை மத்திய வங்கியின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 2000 | 1,000 | வெள்ளி | 1,200 |
| 16. | இலங்கைக் கடற்படையின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 2000 | 1 | செம்பும் நிக்கலும் | 500 |
| 17. | இலங்கைக் கடற்படையின் 50ஆவது ஆண்டு நிறைவு சிறப்புவாய்ந்த சுற்றோட்டத்திற்கு விடப்படாதவை (பாதுகாப்புப் பெட்டி) | 2000 | 1 | உருக்கு | 200 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இருந்தது. இல்லாவிடில், இக்குத்திகளில் பெருமளவு சுற்றோட்டத்திற்கு வராது திரண்டிருக்கும். இது மத்திய வங்கி புதிய நாணயக்குத்திகளை வார்க்கின்ற தேவைகளைக் குறைத்தது.

சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையத்தில் தொடர்ந்தும் தொழிற்பட்டு வந்த காசு மாற்றல் பீடங்கள் 2001 யூலையில் மத்திய வங்கியின் தலைமை அலுவலகக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டன. மத்திய வங்கியின் மீளமைத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், நாணயத்திணைக்களம் அதன் தொழிற்பாடுகளில் சிலவற்றை வெளியாருக்கு வழங்குவதற்கு ஒழுங்குகளைச் செய்துள்ளது. இதன்படி காசுமாற்றல் பீடங்களின் நடவடிக்கைகள் 2001 யூலை 1ஆம் நாளிலிருந்து இலங்கை வங்கிக்கு மாற்றப்பட்டன. இலங்கை வங்கி பொதுமக்களுக்கான காசுமாற்றல் பீடங்களை கொழும்பிலுள்ள அதன் மெற்றோபொலிட்டன் கிளையிலும் புறக்கோட்டைக் கிளையிலும் தொழிற்படுத்துகின்றது. எனினும், நாணயத் திணைக்களத்தின் கரும பீடப்பிரிவு பழுதடைந்து மற்றும் சிதைந்த நாணயத்தாள்களுக்கான கொடுப்பனவுகள் உள்ளிட்ட வரையறுக்கப்பட்டளவான தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொள்கின்றது. அநுராதபுரம் மற்றும் மாத்தறை பிரதேச அலுவலகங்களின் நாணயத் தொழிற்பாட்டுப் பிரிவுகள் தொடர்பான பிரதேசங்களில் அவற்றின் நாணயவழங்கல் மற்றும் நாணயங்களை பெற்றுக்கொள்ளும் அவற்றின் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டன.

## வங்கி மேற்பார்வை

வங்கித்தொழில் முறையின் பாதுகாப்பினையும் இயலாற்றலையும் உறுதிப்படுத்தும் பொருட்டும் வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் வங்கிகளுடன் தொடர்பான மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை என்பன முக்கியமாக வங்கித்தொழில் சட்டம் மற்றும் நாணய விதிச் சட்டம் என்பனவற்றின் மூலம் நிருவகிக்கப்படுகின்றன. வங்கித்தொழில் மேற்பார்வைத் திணைக்கத்தின் ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வையின் கீழ் தற்போது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பிரதேச அபிவிருத்தி வங்கிகள் உள்ளிட்ட உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பன காணப்பட்டன. ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் வங்கியின் தலப்பரீட்சிப்புக்கள் மூலமும் தலத்திற்கு வெளியேயான பரீட்சிப்புக்கள் மூலமும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கித்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்பான முன்மதியுடைய பணிப்புரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கியிருக்கிறது. இவற்றினைவிட வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தன்னிச்சையான வைப்புக் காப்புறுதித் திட்டத்தினையும் நிருவகிப்பவராக உள்ளது.

## புதிய வங்கிகள் மற்றும் வங்கிக்கிளைகளுக்கான ஒப்புதல்கள்

வர்த்தக வங்கியொன்றாக வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கு வரையறுக்கப்பட்ட என். டி. பீ வங்கி என்ற பெயரில் உள்ளூரில் ஒருங்கிணைக்கப்பட்ட வங்கியொன்றினை நிறுவுவதற்கு வங்கித்தொழில் சட்டத்தின் 5ஆம் பிரிவின்கீழ் 2001ஆண்டு உரிமமொன்று வழங்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட என். டி. பீ வங்கி, இலங்கையில் வங்கித்தொழில் வாணிபத்தினை முடிவிற்குக் கொண்டு வந்த ஏ.பி.என்-ஆம்றோ வங்கி என்.வி.யின் இலங்கைக் கிளையினது வியாபாரத்தினைக் கையேற்றுக் கொண்டமையின் மூலம் 2001 ஒத்தோபரில் அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. இவ்வாண்டுக் காலத்தில் நோவா இசுகோசியா வங்கியின் கொழும்புக் கிளையின் வங்கித்தொழில் வாணிபத்தினை முடிவிடுவதற்கான ஒப்புதலும் வழங்கப்பட்டது. இவ் வங்கியின் சொத்துக்களும் பொறுப்புக்களும் சிட்டி வங்கியினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டதுடன் நோவா இசுகோசியா வங்கி 14.05.2001 ஆம் நாளிலிருந்து இலங்கையில் அதன் தொழிற்பாடுகளை முடிவிற்குக் கொண்டு வந்தது. 1999 செத்தெம்பரில் வாணிபத்தினை முடிக்கொண்ட சொசைட்டி ஜெனரல் வங்கியின் கொழும்புக் கிளையின் தொழிற்பாடுகளை நிறுத்திக் கொள்வதுடன் தொடர்பான வேலைகளை திணைக்களம் பூரணப்படுத்தியது. வீடமைப்பு நிதியினை வழங்குவதற்கு சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாக தொழிற்படுவதற்கு, முன்னைய ஆண்டில் கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட என். டீ. பீ வீடமைப்பு வங்கி வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76 சிஇ இன் கீழ் உரிமம் வழங்கப்பட்டது. வங்கி அதன் தொழிற்பாடுகளை 2001 மேயில் தொடங்கியது. சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றாக தொழிற்படுவதற்காக 2000ஆம் ஆண்டில் உரிமம் வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட சிலிங்கோ சேமிப்பு வங்கி ஆய்விற்குரிய ஆண்டில் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. ஆண்டின் இறுதியில் 25 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 14 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் தொழிற்பாட்டிலிருந்தன.

வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றினால் கிளைகளை திறத்தல், மூடிவிடுதல் மற்றும் வேறு இடங்களுக்கு மாற்றுதல் என்பன தொடர்பாக செய்யப்படும் கோரிக்கைகளையும் திணைக்களம் தொடர்ந்தும் கவனித்தது. இவ்வாண்டில், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் 63 புதிய கிளைகளையும் விரிவாக்க அலுவலகங்கள்/ பிரிவுகளை திறப்பதற்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியின் கிளையொன்றை மூடிவிடுவதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் 37 கிளைகளை வேறு இடத்தில் மாற்றியமைப்பதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது.

## நிதியியல் உறுதிப்பாட்டுக்குழுவினை நிறுவுதல்

வங்கியின் முக்கிய தொழிற்பாடுகளிலொன்றாக நிதியியல்துறை உறுதிப்பாட்டினை பேணுவதிலான மத்திய வங்கிக்கு உள்ள கடப்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் நாணயச்சபையானது, வங்கி மேற்பார்வைக்குப் பொறுப்பான துணை ஆளுநர், வங்கி மேற்பார்வைக்குப் பொறுப்பான ஆளுநரின் உதவியாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம், பொருளாதார ஆராய்ச்சி, பொதுப்படுகடன், வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வை, பன்னாட்டு தொழிற்பாடுகள், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் மற்றும் கொடுப்பனவுகளும் தீர்ப்பனவுகளும் ஆகிய திணைக்களங்களின் தலைவர்களை உள்ளடக்கிய நிதியியல் உறுதிப்பாட்டுக் குழுவொன்றினை அமைக்க கொள்கையளவில் ஒப்புதலளித்தது.

நிதியியல் உறுதிப்பாட்டுக் குழுவின் முக்கிய குறிக்கோள் நாட்டின் நிதியியல் முறையினை வலுப்படுத்துவதேயாகும். எனவே நிதியியல் உறுதிப்பாட்டுக்குழுவானது நிதியியல் முறையின் பலத்தினையும் பலவீனங்களையும் ஆராய்தல், நிதியியல் துறையின் அபிவிருத்திகளைக் கண்காணித்தல், நாட்டில் நிதியியல் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான கொள்கை வழிமுறைகளை விதந்துரைத்தல், நிதியியல் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்தல் மற்றும் நிதியியல் முறை தொடர்பாக பொதுமக்களுக்குள்ள விழிப்புணர்வினை உயர்த்துதல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நிதியியல் உறுதிப்பாட்டுக்குழுவின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பணி வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## வங்கிகளில் கூட்டு ஆளுகை

கம்பனிகளின் நிருவாகம் தொடர்பாக தேசிய செயலணிக்குழுவொன்று 2001 மேயில் நியமிக்கப்பட்டது. இது 16 உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்ததுடன் இதில் 5 பேர் இலங்கை மத்திய வங்கியினையும், 11 பேர் மற்றைய நிதியியல் நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தினர். இக் குழு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களில் கம்பனி நிருவாகத்துக்காக மிகச்சிறந்த நடைமுறைகளுக்குத் தேவையான

கொள்கைகளை உள்ளடக்கிய தொகுப்பினை முற்றுப் பெறச்செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. குழுவின் வேலைகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் ஒன்றிணைத்தது.

## முன்மதியுடைய ஒழுங்குவிதிகளும் பணிப்புரைகளும்

1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் (திருத்தம்) திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் காலத்திற்குக்காலம் அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதித் தேவைப்பாடுகளுடனும் முன்மதியுடைய மற்றைய தேவைப்பாடுகளுடனும் வங்கித்தொழில் நிறுவனங்கள் இணங்கி ஒழுகுகின்றமை பற்றி வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது. இத் தேவைப்பாடுகள் பின்வருனவற்றுடன் தொடர்பானவைகளாக இருந்தன.

i. ஆகக்குறைந்த மூலதன விகிதங்களைப் பேணுதல்

ii. ஆகக் குறைந்த திரவச்சொத்து விகிதங்களைப் பேணுதல்,

iii. தனிக் கடன்பாட்டாளர் வரையறைகளைப் பேணுதல்,

iv. வங்கிகளிலுள்ள பங்குடமை மீதான வரையறை

v. கம்பனிகளின் பங்குகளில் வங்கிகள் செய்யும் முதலீடுகள் மீதான வரையறை,

vi. செயற்படா முற்பணங்களை பாகுபடுத்தல், செயற்பாடா முற்பணங்கள் மீதான வட்டியை இடைநிறுத்தல் மற்றும் அறவிடமுடியாத ஐயக்கடன்களுக்கான ஒதுக்கம்

vii. வங்கிகளின் பணிப்பாளர்கள், அவர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் அவர்களின் கணிசமானளவு நலவுரித்துக் களைக் கொண்ட நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன்கள் மீது வரையறை,

viii. வங்கிகளினால் செய்யப்பட்ட அசையாச் சொத்துக்களின் கையேற்பு மற்றும் கொள்வனவு,

ix. கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை தயாரிப்பதற்கும் வெளியிடு வதற்குமான படிவங்களை தயாரித்தலும் அதனை உரிய நேரத்தில் மத்திய வங்கிக்கு சமர்ப்பித்தலும்,

x. செய்தித்தாள்களில் கணக்காய்வு செய்யப்படாத அரையாண்டுக் கணக்குகளையும் வருடாந்தக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளையும் வெளியிடுதல்,

xi. மத்திய வங்கியினால் திரட்டப்பட்ட தகைமைபெற்ற கண்காய்வாளர் களிலிருந்து வங்கிகளின் கணககாய் வாளர்களை நியமித்தல்.

## 2001ஆம் ஆண்டில் வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

ஆய்விற்குரிய ஆண்டில் நாணயச்சபையின் பின்வரும் பணிப்புரைகள், தீர்மானங்கள் மற்றும் வழிகாட்டல்கள் முன்மதியுடைய தேவைப்பாடுகள் என்பனவும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டன.

i. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றினால் பேணப்படும் ஆகக்குறைந்த மூலதனப் விகிதத்தின் மீளாய்வு தொடர்பாக 2001 திசெம்பர் 27ஆம் நாளன்று பணிப்புரை வழங்கப்பட்டது. இதன்படி 2003 சனவரி 1ஆம் நாளிலிருந்து மைய மூலதனம் 5 சதவீதத்திற்குக் குறையாமலும் ஆகக் குறைந்த நியதி மூலதன விகிதம் எதிர்பாரா இடர்நேர் நிறையேற்றப்பட்ட சொத்தில் 10 சதவீதத்திற்கு சமமான அளவில் பேணப்பட வேண்டுமென வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. இத்தேவைப்பாடுகள் தொடர்பாக 2002 சனவரி 1ஆம் நாள் தொடக்கம் வங்கிகள் இத் தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகவேண்டுமென 2000 நவெம்பர் 29இல் வெளியிடப்பட்டட அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டது.

ii. திரவச் சொத்துக்களின் வரைவிலக்கணம் தொடர்பாக 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 86(எ) இன் நியதிகளுக்கிணங்க நாணயச்சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட தரமிடல் முகவராண்மையினால் தரமிடப்பட்ட முதலீட்டுத் தரமொன்றினை கொண்ட அல்லது வழங்கலின் முழு மீட்புப் பெறுமதிக்கு ஆதரவளிக்கும்

வங்கியின் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் வழியொன்றினால் பிணைப் பொறுப்பளிக்கப்படும். ஓராண்டுக்குக் குறையாத எஞ்சிய முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட வர்த்தகப் பத்திரங்கள்/ வாக்குறுதிப் பத்திரங்களில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் 50 சதவீதமானவற்றை 31.01.2001இலிருந்து திரவச் சொத்துக்களாகக் கருதப்படுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

iii. வர்த்தக பத்திரங்கள் மற்றும் வாக்குறுதிச் சான்றிதழ்கள் என்பனவற்றின் வழங்கலுக்கான வசதிகளை வழங்குவதற்கான முன்னர் இருந்த வழிகாட்டல்களுக்குப் பதிலாக 05.01.2001 அன்று புதிய வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டன.

iv. வாடிக்கையாளரை "முழு நிறைவாக அறிந்து கொள்ளல்"- வாடிக்கையாளரைச் சரியான முறையில் தெரிந்துகொள்ளல் என்பது தொடர்பாக வழிகாட்டல்கள், நடைமுறைகள் 03.12.2001 அன்று வங்கிகளுக்கு வழங்கப்பட்டன.

v. பொதுமக்களுக்கான வெளிப்படுத்தலகளை மேம்படுத்தும் பொருட்டு பின்வரும் தேவைப்பாடுகள் அறிமுகப்படுத்தப் பட்டன.

(அ) வங்கிகளின் தொழிற்பாடுகளில் மிக வெளிப்படையான தன்மையைப் பேணுவதற்காக, பன்னாட்டுத் தரங்களுக்கு இணையாக வருடாந்த அடிப்படையிலும் (கணக்காய்வு செய்யப்பட்ட), அரையாண்டு அடிப்படையிலும் நிதியியல் கூற்றுக்களை செய்தித்தாள்களில் வெளியிட வேண்டுமென்று 15.08.2001 அன்று உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

(ஆ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அவர்களது கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் அறிக்கைகளை செய்தித்தாள்களில் வெளியிடும்போது ஏதாவது கணக்காய்வு தகைமைகளை உள்ளடக்குமாறு 10.09.2001 அன்று கேட்டுக்கொள்ளப்பட்டன.

(இ) வங்கியின் ஆண்டறிக்கை வெளியிடப்படுமாயின், மூலதனப் போதுமை தேவைப்பாடுகளின் கணிக்கும் அடிப்படையினை வெளிப்படுத்துமாறு அதாவது ஒன்று திரண்ட அடிப்படையிலான அல்லது தனிப்பட்ட அடிப்படையிலான கணிக்கப் படுகின்றது என்பதனை மூலதனப் போதுமை அறிக்கைக்கான ஒரு அடிக்குறிப்பாக வெளிப்படுத்து மாறு வங்கிகள் 20.03.2001 அன்று கேட்டுக்கொள்ளப்பட்டன.

vi. கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப் பட்ட குறிப்பிட்ட சில வங்கித் தொழிற்பாடுகள் தொடர்பில் பின்வரும் முன்மதியுடைய தேவைப்பாடுகள் வழங்கப்பட்டன.

(அ) 22.01.2001, 29.01.2001, 16.02.2001, 30.03.2001 மற்றும் 05.10.2001 ஆகிய திகதிகளில் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளப்பெறல். வங்கிகளினால் வழங்கப்பட்ட ஏற்றுமதிக் கொடுகடன்களை ஏற்றுமதி வருவாய்களிலிருந்து மாத்திரமே அறிவிடப்பட வேண்டுமெனவும், குறிப்பிட்ட ஏற்றுமதிக் கட்டளை கப்பலேற்றப்பட்ட 90 நாட்களின் பின்னர் கொடுகடன் தீர்ப்பனவு செய்யப்பட்டால் அதிகரித்த வட்டிவீதமொன்றினை அறவிடுமாறும் வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன. இதனையடுத்து கொடுகடன் தீர்ப்பனவுக் காலம் வங்கிகளின் தீர்மானம், தெரிவு என்பனவற்றுக்குட் பட்டு 120 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது.

(ஆ) 20.01.2001, 14.02.2001, 19.03.2001 மற்றும் 16.07.2001 ஆகிய திகதிகளில் வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனைகளும் கொள்வனவுகளும். வாடிக்கையாளர் களுடன் செய்து கொள்ளப்படும் வெளிநாட்டு நாணயத்தின் முன்னோக்கிய ஒப்பந்தங்கள் பொருட்கள் மற்றும் பணிகளின் வர்த்தக நோக்கத்திற்கு மட்டுமேயான தாகும். அத்தகைய ஒப்பந்தங்கள் 180 நாட்கள் காலப்பகுதிக்கானதாகவும் இருத்தல் வேண்டும். முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தம் தொடர்பில்

ஒப்பந்தத்தின் பெறுமதியில் 50 சதவீத வைப்பொன்று இலங்கை ரூபாவில் பேணப்பட வேண்டுமென வேண்டப் பட்டதுடன் இது பின்னர் 25 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

(இ) உரிய திகதிகளுக்கு முன்னரேயே இறக்குமதி உண்டியல்களை முன்கூட்டியே கொடுப்பனவு செய்வதனைக் கட்டுப்படுத்துவதற்காக 29.01.2001 நாளிடப்பட்ட இறக்குமதி உண்டியல்களின் முற்கொடுப்பனவு கொள்ளப்படுகின்றன.

## தலத்திற்கு வெளியேயான கண்காணிப்புமுறை

தலத்திற்கு வெளியேயான கணக்காணிப்பு முறையின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வர்த்தக வங்கிகளினாலும் அவர்களின் தொழிற்பாடுகள் தொடர்பான காலத்திற்குக்காலம் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவ் வங்கிகளின் நிதியியல் நிலைமைகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு வங்கிகள் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்ட முக்கிய கூற்றுக்கள் சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் திரவச் சொத்துக்களின் மாதாந்த அறிக்கைகள், மூலதனப் போதுமை தொடர்பான காலாண்டுக் கூற்றுக்கள், வருமானமும் செலவும் செயற்படா முற்பணங்கள், பணிப்பாளருக்கான கடன்வழங்கல் முதலீடுகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கணக்குகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

தனிப்பட்ட வங்கிகளினாலும் வங்கித்தொழில் முறைகளினாலும் எதிர்நோக்கப்படும் இடர்ப்பாடுகளைக் கண்டறிந்து கொள்வதற்காக திரட்டப்பட்ட தகவல்கள் முழுமையாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இது, தனிப்பட்ட வங்கிகளின் நிதியியல் தரத்தினையும் செயலாற்றத்தினையும் அதற்குச் சமமான குழுக்கள் மற்றும் பூரணமான வங்கித்தொழில் துறை நியமங்களுடனும் ஒப்பிடுவதனை இயலச் செய்கிறது. மேலும், தகவல்கள் கணிசமானதும் வழமைக்கு மாறானதுமான மாற்றங்களை இனங்காண்பதற்கு உதவுவதுடன் புலனாய்வுகளையும் பரீட்சிப்புக்களையும் வேண்டியளவிற்கும் குறிப்பிட்ட வங்கிகளை அல்லது துறைகளை குறித்துக் காட்டும் நேரகாலத்துடனான எச்சரிக்கை முறையாகவும் இது விளங்குகிறது. அத்தகைய அவதானிப்புக்களின் அடிப்படையில் வங்கிகளின் தொழிற்பாடுகளின் மீது மோசமான தாக்கமொன்று ஏற்படுவதனைத் தவிர்க்கும் பொருட்டு எந்தவொரு குறைபாடுகள் மீதும் பொருத்தமான மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

2001ஆம் ஆண்டில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தற்போதுள்ள முறைக்குப் பதிலாக, சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவரினால் அனுசரனை வழங்கப்பட்ட நிபுணர்களினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களின் அடிப்படையில் புதிய தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறையினை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கியது.

ஆளுநர் தலைமையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களினது மாதாந்த கூட்டங்களை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் ஒழுங்கு செய்தது. இக் கூட்டங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளுடன் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடுவதற்குமான வசதியொன்றை உருவாக்கியதுடன் வங்கிகளுக்கும் மத்திய வங்கிக்குமிடையே நெருங்கிய உறவுமுறையைக் கட்டியெழுப்புவதற்கும் உதவியது.

## தலப்பரீட்சிப்புக்கள்

நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி அனைத்து வங்கித்தொழில் நிறுவனங்களுக்கும் நியதி பரீட்சிப்புக்களுக்கு அதாவது தற்பொழுது இரண்டாண்டுகளுக்கொருமுறை இடம்பெறும் ஒவ்வொரு பரீட்சிப்பு காலப்பகுதியிலும் தலப்பரீட்சிப்பிற்கு உட்பட வேண்டும்.

தலப்பரீட்சிப்புக்கள் முக்கியமாக கணக்கேடுகள் மற்றும் பதிவுகளிலிருந்து திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வங்கிகளின் நிதியியல் நிலைமைகள் பற்றி ஒரு பொதுவான மதிப்பீட்டிற்கு வரும் பொருட்டு வங்கிகளினது சொத்துக்களின் தரத்தினைப் பரீட்சிப்பதிலேயே முக்கிய கவனத்தைச் செலுத்துகின்றன. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பரீட்சிப்போர் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளித்து அவசியமான தகவல்களைத் திரட்டும் விதத்தில், செயற்பரப்பு மற்றும் வாணிபத்தின் அளவு என்பவற்றினைப் பொறுத்து ஒவ்வொரு வங்கியினதும் கிளைகளைத் தெரிவுசெய்வர். வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தலப்பரீட்சிப்பிற்காக புதிய அணுகுமுறையொன்றினை-இடர்நேர்வு மூலவளப் பொருத்தப்பாட்டினை பின்பற்றியது. இதன்படி, கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு போன்ற பல்வேறுபட்ட வங்கித்தொழில் இடர்நேர்வுகளுக்கு வங்கியானது உட்படுகின்ற அளவும்

அத்தகைய இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடிய வங்கியின் இயலாற்றலும் அவ்வாறு இருப்பின் அதன் ஆகக்குறைந்த மட்டமும் வங்கியின் பொதுவான மதிப்பீட்டில் மதிப்பிடப்படுகின்றன. இடர்நேர்வினைத் தணிப்பதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முக்கிய மூலங்களாக மூலதனம், வருவாய்கள் மற்றும் முகாமைத்துவ தரம் என்பன கருதப்படுகின்றன. மேலும், நியதித் தேவைப்பாடுகள், பொருந்தத்தக்க சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள், உள்ளக கட்டுப்பாடுகள் அதேபோன்று மற்றைய முன்மதியுடைய தேவைப்பாடுகளும் பரீட்சிக்கப்பட்டன. ஆய்விற்குரிய ஆண்டில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் இதில், 10 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த வர்த்தக வங்கிகளின் தலப்பரீட்சிப்புக்களைத் தொடங்கியது.

## வங்கி மேற்பார்வையில் புதிய போக்குகள்

உள்நாட்டிலும் பன்னாட்டுத் துறைகளிலும் இடம்பெற்று வரும் மாற்றங்களுடன் இணைந்து செல்லும் விதத்தில் இலங்கையின் நிதியியல் முறைகளின் உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் பின்வரும் வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

i. தற்போதுள்ள முறையின் பலத்தையும் பலவீனத்தையும் அடையாளங்கண்டு கொள்வதற்காக வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு பாஸ்லேயின் மையத் தத்துவ நியதிகளின் அடிப்படையில் சுய மதிப்பீடு. உலகவங்கி/ ப.நா.நிதியத்தின் நிதியியல்துறை மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டமும் இது தொடர்பாக பயனுள்ள விடயங்களை வழங்கியுள்ளது.

ii. மேற்பார்வை செயற்பரப்பினை மேலும் வலுப்படுத்துவதற்காக வங்கித்தொழில் சட்டத்தினைக் திருத்துவதற்கான வரைவு

iii. வங்கித்தொழில் நடவடிக்கைகளில் ஒளிவு மறைவற்ற வெளிப்படையான தன்மையினை மேலும் பேணுவதற்காகவும் அவர்களிடையே சிறந்த நடைமுறைகளைப் புகட்டுவதற்குமாக கூட்டு ஆளுமை தொடர்பாக வழிகாட்டல்கள் வடிவமைக்கப்பட்டன.

vi. நாட்டில் நிதியியல் துறையின் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் நிதியியல் உறுதிப்பாட்டுக் குழுவொன்றினை ஏற்படுத்துதல்.

v. வங்கிகளில் இடர்நேர் மூலவள பொருத்தப்பாட்டின் மீது முக்கிய கவனத்தைச் செலுத்தும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கண் காணிப்பினை நோக்கி நகருதல்.

## வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிருவாகம்

1987இல் தொடங்கப்பட்ட வைப்புக் காப்புறுதித்திட்டத்தினை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் நிருவகித்தது. மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட எந்த ஒரு வங்கி நிறுவனமும் 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டவிதியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வங்கித்தொழில் வாணிபத்தினை மேற்கொள்கின்ற கூட்டுறவுச் சங்கங்களும் சேர்ந்துகொள்ளக்கூடிய தன்னிச்சையான வைப்புக் காப்புறுதித் திட்டமாக இது உள்ளது. தற்பொழுது இத்திட்டத்தின் கீழ் நான்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே அவற்றின் கிராமிய வங்கிகளினது வைப்புக்கள் தொடர்பான வைப்புக்களை உள்ளடக்கத்தக்க காப்புறுதியினைப் பெற்றுள்ளன. ஒவ்வொரு ரூ.100இற்கும் காலாண்டொன்றிற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் ரூ.3.75 சதமாக இருப்பதுடன் 2001ஆம் ஆண்டில் கட்டணம் மூலமாக வைப்புக் காப்புறுதி நிதியத்திற்கு சேகரிக்கப்பட்ட தொகை ரூ.1.1 மில்லியனாக விளங்கியது. 1997இல் மத்திய வங்கியினால் ஒதுக்கப்பட்ட ரூ.50 மில்லியனையும் சேர்த்து 2001 திசெம்பர் 31ஆம் நாளன்று நிதியம் ரூ.124 மில்லியனாகக் காணப்பட்டது. இந் நிதியங்கள் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

## வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை [1]

மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த முன்மதித் தேவைப்பாடுகளுக்கு நிதிக் கம்பனிகள் இசைவாக நடந்து கொள்கின்றனவா என்பதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் தொடர்பாக அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. திணைக்களம் இக் குறிக்கோள்களை அடைவதற்கு முக்கியமாக தலத்திற்கு வெளியேயான தலப் பரீட்சிப்புக்களூடாகவும் கடுமையாக முயன்று வருகின்றது.

1 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் 1993 - 2001 ஆம் ஆண்டுகளுக்கான ஒன்று திரட்டப்பட்ட ஐந்தொகை புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணை 113இல் தரப்பட்டுள்ளது.

## தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு

பதிவு செய்யப்பட்ட 25 நிதிக் கம்பனிகளினதும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினைத் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. இச் செய்கை முறையின்போது நிதிக் கம்பனிகளின் நிதியியல் நிலைமைகளைக் கண்டறிந்து கொள்ளும் நோக்குடனும் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கும் அவர்கள் இணங்கி ஒழுகுவதலனைக் கண்காணிக்கும் பொருட்டும் நிதிக் கம்பனிகளினால் காலத்திற்குக் காலம் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. நிதிக் கம்பனிகளிலிருந்து பெறப்பட்ட கூற்றுக்கள் திரவச் சொத்துக்களின் வாராந்தக் கூற்றுக்கள், வழங்கப்பட்ட பாரிய முற்பணங்களின் மாதாந்தக் கூற்றுக்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மாதாந்தக் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சல்கள் தொடர்பான மாதாந்தக் கூற்றுக்கள், செயற்படா முற்பணங்கள் தொடர்பான காலாண்டுக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகை மற்றும் இலாப நட்டக் கணக்குகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள் ஆகக் குறைந்த மூலதனம் மற்றும் திரவத் தேவைப்பாடுகளை அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடுகள், தனியொரு கடன்பாட்டாளருக்கான வரையறை, பங்கு முதலீடு மீதான வரையறை போன்றவற்றினை உள்ளடக்கியிருந்தன.

### தலப்பரீட்சிப்புக்கள்

இவ்வாண்டுக் காலத்தில் திணைக்களம் ஒன்பது தலப் பரீட்சிப்புக்களை நடத்தியது. மூலதனப் போதுமை, சொத்துக்களின் தரம், முகாமைத்துவ வினைத்திறன், வருவாய் மற்றும் திரவத்தன்மை என்பனவற்றை மதிப்பிடும் பொருட்டு நிதிக் கம்பனியினால் பேணப்படும் கணக்கேடுகள் மற்றும் ஏனைய பதிவுகளிலிருந்து திரட்டப்பட்ட தகவல்கள் திணைக்களத்தின் பரீட்சிப்பாளர்களினால் மதிப்பீடு செய்யப்பட்டன. மேலும் குறிப்பிட்ட கம்பனிகளின் அலுவலர்களுடன் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன. உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைகள் மற்றும் நியதித் தேவைப்பாடுகளுடன் கம்பனி இணங்கி ஒழுகும் தன்மை என்பனவும் பரீட்சிக்கப்பட்டன.

அதேவேளை 2002ஆம் ஆண்டிற்கான ஆண்டு உரிமங்களை வழங்குவதற்கு முன்னர் மற்றைய பதினாறு கம்பனிகளினதும் உடன் பரீட்சிப்புக்கள் மேற் கொள்ளப்பட்டன. இப்பரீட்சிப்புக்கள் தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களை மட்டுமே உள்ளடக்கியிருந்தன.

## நிதிக் குத்தகைச் சட்டத்தின் நடைமுறைப்படுத்தல்

நிதிக் குத்தகைக் கைத்தொழிலை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக 2000ஆம் ஆண்டு ஓகத்து 18ஆம் நாளன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 2000ஆம்ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டம் நிதி திட்டமிடல் அமைச்சரினால் நிர்ணயிக்கப்பட்ட நாளான 2001ஆம் அண்டு ஓகத்து 18ஆம் நாளன்று தொழிற்பாட்டிற்கு வந்தது. நிதிக் குத்தகைத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கான ஆகக் குறைந்த செலுத்தப்பட்ட மூலதனம், விண்ணப்பக் கட்டணம், ஆண்டுப் பதிவுக் கட்டணம் என்பன தொடர்பாக அமைச்சரினால் செய்யப்பட்ட ஒழுங்கு விதிகள் 2001ஆம் ஆண்டு ஓகத்து 10ஆம் நாளுக்குரிய எண் 1196/27 எண் கொண்ட அரச வர்த்தமானியில் (சிறப்பு) வெளியிடப்பட்டது.

நிதியியல் குத்தகைச் சட்டம் நிதிக் குத்தகை வியாபாரத்தினை கொண்டு நடத்துகின்ற நிறுவனங்களின் பதிவிற்கான அதிகாரத்தினை வழங்குகின்றது. இது, நிதி குத்தகையிடல் நிறுவனம் மத்திய வங்கியினால் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான அதிகாரத்தையும் வழங்குகின்றது. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திடம் நிதிக் குத்தகையிடல் நிறுவனங்களைப் பதிவு செய்து கண்காணிக்கும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, நிதி குத்தகை வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கு பதிவுச் சான்றிதழ் தேவையானதாகும். எனினும் நியமனத் திகதியிலன்று நிதி குத்தகை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு நிறுவனமும் அத்தகைய வியாபாரத்தினை நியமனத் திகதியிலிருந்து ஓராண்டின் விஞ்சாத காலப்பகுதிக்கு வியாபாரத்தினை தொடர்ந்தும் கொண்ட நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டது. ஆகையினால் நிறுவனங்கள் நிதிக் குத்தகையிடல் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அக்காலப்பகுதிக்கிடையில் அத்தகைய பதிவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள்/ ஒழுங்குவிதிகள்

இவ்வாண்டுக் காலத்தில் பின்வரும் பணிப்புரைகளும் ஒழுங்கு விதிகளும் நாணயச் சபையினால் வெளியிடப்பட்டன.

1. **2001ஆம் ஆண்டின் எண் 1 கொண்ட நிதிக் கம்பனிகள் வைப்பு (திருத்த) பணிப்புரை**

   2001 மாச்சு 7ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்த இத்திருத்தம் நிதிக் கம்பனிகள் 5ஆண்டுகள் வரையிலான வைப்புக்களை

ஏற்றுக் கொள்ளும் அதிகாரத்தினை வழங்குகிறது. திருத்தத்திற்கு முன்னர் அவைகள் ஆகக்கூடியது 4 ஆண்டுக் காலப்பகுதிக்கு மாத்திரமே வைப்புக்களை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். புதிய வழிமுறையானது நிதிக் கமபனிகள் ஒப்பீட்டு ரீதியில் நீண்ட காலப்பகுதிக்கு வழங்கப்பட்ட வைப்புக்களுக்கும் முற்பணங்களுக்கு மிடையிலான முதிர்ச்சிப் பொருத்தப் பாட்டின்மையை குறைக்க வசதி செய்தது.

2. **2001ஆம் ஆண்டின் எண் 2 கொண்ட நிதிக் கம்பனிகள் கடன் வழங்கல் (திருத்தப்) பணிப்புரை**

1991ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்புரை நிதிக் கம்பனிகளினால் அவற்றின் துணை நிறுவனங்களுக்கும் இணைக் கம்பனிகளுக்கும் கடன் வழங்குவதனைத் கட்டுப்படுத்துகின்றது. 2001 மாச்சு 7ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்த திருத்தப்பட்ட பணிப்புரைகளின் கீழ் நிதிக் கம்பனியொன்று அதன் மூலதன நிதியத்தில் 15 சதவீத வரையறைக்குட்பட்டு மற்றைய கடன்பாட்டாளருக்கு கடன் வழங்குவதற்குப் பின்பற்றப்படும் அதையொத்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அதன் துணை நிறுவனங்களுக்கும் இணை நிறுவனங்களுக்கும் கடன்களை வழங்க முடியும்.

3. **2001ஆம் ஆண்டின் எண் 3 கொண்ட நிதிக் கம்பனிகள் முதலீட்டு (திருத்தப்) பணிப்புரை**

1991ஆம் ஆண்டின் எண் 12 கொண்ட நிதிக் கம்பனிகள் முதலீட்டுப் பணிப்புரை தனியொரு கம்பனியில் செய்யப்படும் முதலீடுகள் ஐந்தொகை கணக்காய்வு செய்யப்பட்ட நாளன்று உள்ள நிதிக் கம்பனியின் மொத்த மூலதன நிதியத்தில் 5 சதவீதத்தினையும் முதலீடு செய்யப்படுகின்ற கம்பனியின் வழங்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 40 சதவீதத்தினையும் விஞ்சக் கூடாது என்ற நியதிக்குள்பட்டு முதலீடு செய்யலாம் எனக் குறிப்பிட்டதே தவிர நிதிக் கம்பனிகளினால் மேற் கொள்ளப்படும் பங்கு முதலீடுகளின் மொத்தத் தொகை மீது வரையறை எதனையும் விதிக்கவில்லை. 2001 மாச்சு 7ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்த திருத்தப்பட்ட பணிப்புரையின் நியதிகளின்படி, மற்றைய கம்பனிகளில் நிதிக் கம்பனியொன்றினால் செய்யப்படும் மொத்த பங்கு முதலீடுகள் முதலீடு செய்கின்ற நிதிக் கம்பனியின் மொத்த மூலதன நிதியத்தின் 25 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

4. **2001ஆம் ஆண்டின் எண் 4 கொண்ட நிதிக் கம்பனிகள் திரவ சொத்துக்கள் (திருத்தப்) பணிப்புரை**

1991ஆம் ஆண்டின் எண் 7 கொண்ட நிதிக் கம்பனிகள் திரவச் சொத்துக்கள் (திருத்தப்) பணிப்புரையானது நிதிக் கம்பனிகள் அவற்றின் திரவச் சொத்துக்களில் ஒரு பகுதியை திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணைகள் மற்றும் மத்திய வங்கிப் பிணைகளில் முதலீடு செய்ய வேண்டுமெனவும் அத்தகைய பிணைகள் தொடர்பான ஆவணங்களை மத்திய வங்கியின் பொறுப்பில் வைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டது. 2001 மாச்சு 7ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்த திருத்தம் உரிமை ஆவணங்கள் மத்திய வங்கியில் வைத்திருக்கப்பட வேண்டுமென்ற தேவைப்பாட்டினை நீக்கிவிட்டது. தற்பொழுது நிதிக் கம்பனிகள் இவ்வாபனத்தை எந்தவொரு வர்த்தக வங்கியிலும் வைத்திருக்கலாம்.

5. **2001ஆம் ஆண்டின் எண் 5 கொண்ட நிதிக் கம்பனிகள் (வைப்பு ஊக்குவிப்புத் திட்டம்) பணிப்புரை**

இப்பணிப்புரை 2001 மே 25ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இப் பணிப்புரையின் நியதிகளின்படி நிதிக் கம்பனிகள் வைப்புக்களுக்காக ஊக்குவிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முன்னர் ஒப்புதல்களை பெற்றுக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டது. ஊக்குவிப்புத் திட்டமானது வைப்பாளர்களுக்கு வட்டி மூலமாகவன்றி நாணய அல்லது பொருள்சார்ந்த நன்மையினை அளிக்கும் ஏற்பாடொன்றாகும்.

6. **2001ஆம் ஆண்டின் எண் 1 கொண்ட நிதிக் கம்பனிகள் (விளம்பரப்படுத்தல்) ஒழுங்கு விதி**

இவ்வொழுங்கு விதி பொது மக்களிடமிருந்து வைப்புக்களை திரட்டுவதற்கான விளம்பரங்களுக்கு நிதிக் கம்பனிகள் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரின் முன் ஒப்புதலைப் பெற வேண்டுமென்ற தேவைப்பாட்டினை 2001ஆம் ஆண்டின் மே மாதம் 25ஆம் நாளிலிருந்து நீக்கிவிட்டது.

7. **2001ஆம் ஆண்டின் எண் 6 கொண்ட நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை**

2001 ஓகத்து 30 நாளன்று நடைமுறைக்கு வந்த இப்பணிப்புரை, வைப்புக்கள் மற்றும் ஏனைய கருவிகளின் மீது நிதிக் கம்பனியினால் செலுத்தப்படவேண்டிய வட்டி வீதங்களின் மீதான வரையறை விதிக்கும் 364 நாள் திறைசேரி உண்டியல் மீதான நிறையேற்றப் பட்ட சராசரி விளைச்சலுடன் இணைக்கப்பட சூத்திரமொன்றினை விபரிக்கின்றது. .

## பணிப்புரைகளை மீறுதல்

இவ்வாண்டில் கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால், நிதிக் கம்பனியொன்று வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக தேவையானளவு திரவச் சொத்துக்களைப் பேணத் தவறியமைக்காக அக்கம்பனியின் பணிப்பாளருக்கெதிராக தொடரப்பட்ட வழக்கில் ரூ.1 மில்லியன் கொண்ட தண்டம் விதிக்கப்பட்டது. குற்றவாளியாகக் காணப்பட்டவர் இத் தண்டப் பணத்தினை செலுத்தத் தவறுமிடத்து அவர் ஓராண்டு கால கடுழியச் சிறைத் தண்டனைக்கு உற்படுத்த வேண்டுமெனவும் நீதிமன்றம் கட்டளையிட்டது.

## முறிவடைந்த நிதிக் கம்பனிகள்

1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நாணயச் சபைக்கு நிருவாகமும் முகாமைத்துவமும் முன்னர் கையளிக்கப்பட்ட முறிவடைந்த ஒன்பது நிதிக் கம்பனிகளில் நான்கு கம்பனிகள் 2001ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஒடுக்கிவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எஞ்சிய ஐந்து கம்பனிகளினதும் நிருவாகமும் முகாமைத்துவமும் தொடர்ந்தும் நாணயச்சபையிடமே கையளிக்கப் பட்டிருக்கும். அத்தகைய கம்பனி யொன்றினை ஒடுக்கிவிடுவதற்கான விண்ணப்பம் நீதி மன்றத்தில் தீர்ப்பினை எதிர்பார்த்துள்ளது.

நாணயச் சபையிடம் தொடர்ந்தும் ஒப்படைக்கப்பட்டுள்ள ஐந்து கம்பனிகளில் மூன்று கம்பனிகள் இவ்வாண்டிலும் தொடர்ந்து அவற்றின் வைப்பாளர்களுக்கு நிவாரணங்களை வழங்கின. அத்தகைய கம்பனிகளிலொன்று வெளிநின்ற மீதி மூலதனத்தில் 15 சதவீத வீதத்தினைக்கொண்ட உயர்ந்த நிவாரணக் கொடுப்பனவொன்றைச் செய்த வேளையில் மற்றுமொரு கம்பனி மூலதனக் கொடுப்பனவினை முழுமையாகச் செய்தது. மூன்றாவது கம்பனி அனைத்து வைப்பாளர்களுக்கும் குறிப்பிட்ட காலம் வரையிலான வட்டியுடன் மூலதனக் கொடுப்பனவை முழுமையாகச் செலுத்தியது. இந்நிவாரணக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டுகளில் மீள் நிதியிடல் கடன்களாக மத்திய வங்கியிலிருந்து இக்கம்பனிகளினால் பெறப்பட்ட நிதிகளையும், கம்பனிகளின் சொத்துக்கள் விற்பனை செய்தமையின் மூலமும் கடன் மீளப்பெறுகை களினூடாகவும் பெறப்பட்ட தொகைகளையும் பெறப்பட்ட பங்கிலாப வருமானங்களையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. மற்றைய இரு கம்பனிகளும் இவ்வாண்டுக் காலத்தில் வைப்பாளர்களுக்கு கொடுப்பனவுகள் எதையும் செய்யவில்லை. இதற்கு ஒரு கம்பனியின் நிதி தீர்ந்துவிட்ட வேளையில் மற்றைய கம்பனியை ஒடுக்கிவிடுவது தொடர்பான வேலைகள் தொடங்கியமை வைப்பாளர்களுக்கு மேலும் மீள் கொடுப்பனவுகளை செய்வதனைத் தடுத்துவிட்டமையே காரணமாகும். மீள்நிதியிடல் வழங்கப்பட்டிருந்த கம்பனிகளிலொன்று இவ்வாண்டுக் காலத்தில் மத்திய வங்கிக்கு ரூ.71 மில்லியனை மீளச் செலுத்தியது.

## அபிவிருத்தி நிதி

அபிவிருத்தி நிதித் திணைக்களம், வெளிநாட்டுத் தொடர்க் கொடுகடன் மூலம் கிடைத்த கடன் பெறுகைகளை சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் செயற்றிட்ட நடவடிக்கைகளுக்கு நிதியிடுவதற்காக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள் கடன் வழங்கல், அத்தகைய செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்காகப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள்மீது கொடுகடன் உத்தரவாதங்களை வழங்கல், உத்தரவாதக் கட்டணங்களைச் சேகரித்தல், கொடுகடன் உத்தரவாத நிதியினை நிருவகித்தல் மற்றும் கடன் மீளச் செலுத்தத் தவறுவதனைத் தவிர்க்கும் பொருட்டு கடன் நிதி உரிய முறையில் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்து வதற்காக கடனளிப்பிற்குப் பின்னான பரீட்சிப்புக்களை மேற் கொள்ளல் ஆகிய அதன் தொழிற்பாடுகளை மேற்கொண்டது.

2001இல் அபிவிருத்தி நிதித் திணைக்களம் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கி பெருந் தோட்டத்துறை அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு துறை அபிவிருத்தி செயற்றிட்டம் என்பனவற்றிற்கான தொடர் கடன்களை பயன்படுத்தி மீள் நிதியிடல் வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. ஐந்தாண்டுத் திட்டமாக 1996 மேயில் தொழிற்படத் தொடங்கிய பெருந்தோட்டத்துறை சீரமைப்புச் செயற்றிட்டம் 2001 ஓகத்தில் நிறைவடைந்தது. 1999 மாச்சில் தொழிற்படத் தொடங்கிய நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புத்துறைச் செயற்றிட்டம் 2001இலும் தொடர்ந்து நிதியியல் உதவிகளை வழங்கியது.

**அட்டவணை 11.5**
பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டம்:
நோக்க அடிப்படையிலான
மீள் நிதியிடல் ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புக்களும்

*ரூபா மில்லியன்*

| நோக்கம் | 2000 | | 2001 | | 1996-2001 | |
|---|---|---|---|---|---|---|
| | ஒப்புதல் | பகிர்ந்தளிப்பு | ஒப்புதல் | பகிர்ந்தளிப்பு | ஒப்புதல் | பகிர்ந்தளிப்பு |
| மரப் பயிர் அபிவிருத்தி | 908.2 | 947.0 | 47.7 | 189.8 | 3,248.9 | 2,918.4 |
| பதனிடல், அபிவிருத்தி மற்றும் மாசடைதல் கட்டுப்பாடு | 220.7 | 271.4 | 37.5 | 50.9 | 2,153.5 | 1,365.0 |
| பணி ஊர்திகள் மற்றும் கருவிகள் | 84.1 | 81.7 | 2.0 | 10.0 | 1,072.7 | 644.6 |
| மொத்தம் | 1,213.0 | 1,300.1 | 87.3 | 250.7 | 6,475.2 | 4,928.0 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி.*

சிறிய மற்றும் நடுத்தர கால உதவிச் செயற்றிட்டத்தின் கீழ் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதக் பாதுகாப்பானது 2001 சனவரியில் நிறைவடைந்தது. மற்றைய கொடுகடன் திட்டங்கள் தொடர்பாக திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் செயற்றிட்டப் பரீட்சிப்புக்களையும் கண்காணிப்பு வேலைகளையும் தொடர்ந்தும் மேற் கொண்டது. 2001ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

2001 திசெம்பர் 31ஆம் நாளிலிருந்து திணைக்களம் தொழிற்பாடுகளை நிறுத்திக் கொண்டதுடன் அத் தொழிற்பாடுகள் 2002 சனவரி 1ஆம் நாளிலிருந்து பிரதேச அபிவிருத்தி திணைக்களத்திற்கு மாற்றப்பட்டன.

## நடைமுறையிலுள்ள கொடுகடன் திட்டங்கள்

### பெருந்தோட்டத்துறை சீராக்கச் செயற்றிட்டம்

1996 நவெம்பரில் ஐந்தாண்டுச் செயற்றிட்டமொன்றாகத் தொடங்கப்பட்ட பெருந்தோட்டத்துறை சீராக்கச் செயற்றிட்டம் 2001 ஓகத்தில் முற்றுப் பெற்றது. செயற்றிட்ட காலப் பகுதியில் செயற்றிட்டத்தின் மொத்த மீள் நிதியிடல் ஒப்புதல்கள் ரூ.6,475 மில்லியனாகவும், செயற்றிட்டத்தின் மொத்தப் பகிர்ந்தளிப்பு ரூ.4,928 மில்லியன்ஆகவும் காணப்பட்டன. 2001இல் ரூ.87 மில்லியன் பெறுமதியான மீள் நிதியிடலுக்கு ஒப்பதலளிக்கப்பட்டதுடன் ரூ.251 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. செயற்றிட்டத்தில் போதுமானளவு மீள் நிதியிடல் நிதி கிடைக்காமையின் காரணமாக ரூ.1,347 மில்லியன் தொகை கொண்ட கடன்களை இரத்துச் செய்ய வேண்டியிருந்தது. எனினும் பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளின் நிதியியல் தேவைகளை ஈடுசெய்வதற்காக இலங்கை மத்திய வங்கி கடன்களின் மீளளிப்புக்களையும் வட்டிப் பெறுகைகளையும் பயன்படுத்தி 2001 யூலையில் பெருந்தோட்டத்துறை சுழலும் நிதியினை நிறுவியது. 1998இல் தனியார் மயப்படுத்தப்பட்ட ஏழு பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள் புதிதாக உருவாக்கப்பட்ட சுழல் நிதியிலிருந்தான நிதியிடலுக்கு தகைமையுடையனவாக இருந்தன.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே மொத்தக் கடனில் பெரும் பகுதியான ரூ.48 மில்லியன் கொண்டதொகை மரப்பயிர் அபிவிருத்திக்காக ஒப்பிதலளிக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டில் இவ்வகைக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியம் ரூ.190 மில்லியனாக இருந்ததுடன் இது 2000ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட மீள்நிதியில் ஒரு பகுதியினையும் உள்ளடக்கியிருந்தது. 1996 - 2001 செயற்றிட்டக் காலப்பகுதியில் இவ்வகையின் கீழான மொத்தப் பகிர்ந்தளிப்பு ரூ.2,918 மில்லியனாக (59 சதவீதம்) விளங்கியது. செய்முறைப்படுத்தல், மேம்படுத்துதல் மற்றும் மாசுக்கட்டுப்பாடு ஆகிய துணை வகையின் கீழ் ரூ.38 மில்லியன் மீள் நிதியிடலாக ஒப்புதலளிக்கப்பட்ட கடன் ரூ.51 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. செயற்றிட்ட காலப்பகுதியில் இத்துறைக்கு மொத்தமாக ரூ.1,365 மில்லியன் (28 சதவீதம்) பகிர்ந்தளிக்கப்பட்டது. இதைப்போன்றே வணிகர்களுக்கான ஊர்திகள், உபகரணங்கள், சிறுநீர்ப்பாசன செயற்றிட்டம் என்பனவற்றின் கொள்வனவுக்கான துணைவகையின் கீழ் மீள்நிதியிடலாக ரூ. 2 மில்லியன் கொண்ட தொகைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதுடன் ரூ.10 மில்லியன் கொண்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. செயற்றிட்ட காலப்பகுதியில், இத் துணைத்துறைக்கான மொத்தப் பகிர்ந்தளிப்பு ரூ.645 மில்லியனாக (13 சதவீதம்) காணப்பட்டது. மீள்நிதியிடல் ஒப்புதல்கள் மற்றும் பகிர்ந்தளிப்புக்களின் விபரங்கள் கீழேயுள்ள அட்டவணை 11.5இல் தரப்பட்டுள்ளன.

இத்திட்டத்திலுள்ள பங்கேற்கும் கொடுகடன் நிதியங்களிடையே இ.அ.நி.கூ. வங்கி 2001ஆம் ஆண்டுப்பகுதியில் பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளுக்காக மொத்தப் பகிர்ந்தளிப்பில் 46 சதவீதத்திற்கு வகைகூறியது. (ரூ.115 மில்லியன்) தேசிய அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி, இலங்கை வங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி, என்பன முறையே ரூ.89 மில்லியன் (35 சதவீதம்) ரூ.20 மில்லியன் (8 சதவீதம்) ரூ.17 மில்லியன் (7 சதவீதம்) மற்றும் 10 மில்லியன் (4 சதவீதம்) கொண்ட பகிர்ந்தளிப்புக்களுக்கு வகைகூறின. செயற்றிட்ட காலப்பகுதியில் தேசிய அபிவிருத்தி வங்கி, இ.அ.நி.கூ. வங்கி, இலங்கை வங்கி, செலான், இலங்கை வர்த்தக வங்கி, சம்பத் மற்றும் அட்டன் நசனல் வங்கி என்பன முறையே ரூ.1,834

### அட்டவணை II.6
### பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டம்:
### மீள் நிதியிடல் ஒப்புதல்கள், பகிர்வுகள் மற்றும் மத்திய வங்கியின் கொடுகடன் உத்தரவாதப் பொறுப்பு

(பெறுமதி ரூபா மில்லியனில்)

| பங்குபற்றும் நிதி நிறுவனங்கள் | 1999 | | | | 2000 | | | | 1996 - 2000 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (அ) | (ஆ) | (இ) | (ஈ) | (அ) | (ஆ) | (இ) | (ஈ) | (அ) | (ஆ) | (இ) | (ஈ) |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 207.7 | 145.6 | 90.5 | 25.6 | - | 88.7 | 55.8 | 27.0 | 2,329.4 | 1,834.2 | 1,111.2 | 81.7 |
| இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | 345.5 | 362.3 | 267.2 | 17.8 | 28.0 | 114.6 | 54.7 | 22.6 | 2,096.4 | 1,527.4 | 917.3 | 55.1 |
| இலங்கை வங்கி | 210.8 | 207.8 | 144.7 | 8.0 | - | 17.3 | 15.3 | 0.3 | 726.6 | 627.7 | 405.1 | 29.3 |
| இலங்கை வர்த்தக வங்கி | 296.7 | 368.1 | 265.2 | 0.8 | 19.7 | 19.7 | 14.5 | 5.7 | 502.1 | 387.8 | 256.5 | 6.5 |
| சம்பத் வங்கி | 36.9 | 72.9 | 67.5 | 4.9 | - | 10.4 | 4.0 | 5.6 | 492.9 | 382.3 | 244.6 | 16.2 |
| செலான் வங்கி | 65.7 | 93.7 | 32.9 | 3.0 | 39.6 | - | - | 1.8 | 277.9 | 118.8 | 68.8 | 5.0 |
| அட்டன் நசனல் வங்கி | 49.9 | 49.9 | 34.9 | - | - | - | - | 0.8 | 49.9 | 49.9 | 34.9 | 0.8 |
| மொத்தம் | 1,213.1 | 1,300.2 | 902.7 | 60.2 | 87.3 | 250.7 | 144.3 | 63.8 | 6,475.2 | 4,928.0 | 3,038.4 | 194.7 |

(அ) ஒப்புதல்கள்.
(ஆ) பகிர்வுகள்.
(இ) மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாதப் பொறுப்பு.
(ஈ) சேகரிக்கப்பட்ட கட்டணங்கள்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மில்லியன் (37 சதவீதம்) ரூ.1,527 மில்லியன் (31 சதவீதம்) ரூ.628 மில்லியன் (13 சதவீதம்) ரூ.388 மில்லியன் (8 சதவீதம்) ரூ.382 மில்லியன் (7 சதவீதம்) ரூ.118 மில்லியன் (2 சதவீதம்) மற்றும் ரூ.50 மில்லியன் (1 சதவீதம்) கொண்ட நிதிகளைப் பகிர்ந்தளித்தன. 2001 இறுதியில், பெருந்தோட்டத்துறை சீரமைப்புச் செயற்றிட்டத்தின் மொத்த மீளளிப்பு ரூ.24.0 மில்லியனாக இருந்தது. பெருந்தோட்டத்துறை சீரமைப்பு செயற்றிட்டக் கடன் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களிலும் ஒப்புதலளிக்கப்பட்டதும் பகிர்ந்தளிக்கப்பட்டதுமான கடன் நிதிகளும் கொடுகடன் உத்தரவாதப் பொறுப்புக்களும் கீழேயுள்ள அட்டவணை II.6இல் தரப்பட்டுள்ளன.

பெருந்தோட்டத்துறை சீரமைப்பு செயற்றிட்டத்தின் கீழான கடன் பகிர்ந்தளிப்புகளுக்கெதிராக வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதப் பாதுகாப்புக்களின் பேரிலான இலங்கை மத்திய வங்கியின் மொத்தப் பொறுப்பு 2001இல் ரூ.144 மில்லியனாக இருந்தது. இத்திட்டத்தின் கீழ் 1996இலிருந்து 2001வரை உத்தரவாத வழங்கலின் பேரிலான வங்கியின் மொத்தப் பொறுப்பு ரூ.3038 மில்லியனாக காணப்பட்டது. பெருந்தோட்டத்துறை சீரமைப்பு செயற்றிட்டத்தின் கீழான கொடுகடன் உத்தரவாதங்களின் மீது சேகரிக்கப்பட்ட கட்டணம் 2001இல் ரூ.73 மில்லியனாக விளங்கியவிடத்து 1996 இலிருந்து 2001வரை சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டணம் ரூ.195 மில்லியனாக விளங்கியது.

### அட்டவணை II.7
### 31.12.2001இல் உள்ளவாறு மீள் நிதியிடலின் ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புக்களும்

ரூபா

| பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் | ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | | மீள் நிதியிடப்பட்ட தொகை | | பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | 2000 | 2001 | 2000 | 2001 | 2000 | 2001 |
| இலங்கை வர்த்தக வங்கி | 63.0 | 95.0 | 5.1 | 9.9 | 4.4 | 9.4 |
| அட்டன் நசனல் வங்கி | 78.0 | 74.0 | 4.9 | 5.0 | 2.4 | 2.4 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 190.0 | 336.0 | 5.2 | 13.6 | - | 18.7 |
| கந்துரட்ட அபிவிருத்தி வங்கி | 369.0 | 1,877.0 | 16.5 | 89.6 | 6.0 | 55.9 |
| ருகுணு அபிவிருத்தி வங்கி | | 1,395.0 | | 48.0 | | 36.4 |
| தேசிய அபிவிருத்தி வீடமைப்பு வங்கி | | 11.0 | | 1.6 | | 0.6 |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 871.0 | 3,683.0 | 85.5 | 347.1 | 22.6 | 405.9 |
| **மொத்தம்** | 1,571.0 | 7,471.0 | 117.2 | 514.8 | 35.4 | 529.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**அட்டவணை II.8**
**நோக்க அடிப்படையில் கடன்கள்**
(01.01.2001 - 31.12.2001)

| நோக்கம் | கடன்களின் எண்ணிக்கை | கடன்தொகை (ரூபா மில்.) |
|---|---|---|
| நிலங்களின் கொள்வனவு | 758.0 | 94.3 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 102.0 | 3.8 |
| புதிய வீடுகளின் கட்டுமானமும் விரிவாக்கமும் | 4,430.0 | 426.6 |
| ஏற்கெனவேயுள்ள வீடுகளை மேம்படுத்துதல் | 2,174.0 | 117.7 |
| வீடுகளின் கொள்வனவு | 7.0 | 11.0 |
| மொத்தம் | 7,471.0 | 653.4 |

## நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புத்துறைச் செயற்றிட்டம்

நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புத்துறைச் செயற்றிட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கிடைத்த ஐ.அ.டொலர் 20 மில்லியன் கொண்ட கடனின் மூலம் பெறப்பட்ட நிதி உதவியுடன் 1999இன் முதலரைப் பகுதியில் தொழிற்படத் தொடங்கியது. 2001ஆம் ஆண்டுப் பகுதியில் மீள் நிதியிடல் ஒப்புதல்களும் கடன் நிதிகளின் பகிர்ந்தளிப்புக்களும் 2000ஆம் ஆண்டுப்பகுதியில் அவதானிக்கப்பட்ட குறைந்த வருமான பகிர்ந்தளிப்புக்களுடன் ஒப்பிடுகையில் விரைவாக அதிகரித்தன. இத்திட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் இச்செயற்றிட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட ஏழு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களில் இரண்டு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மட்டுமே ஆசிய அபிவிருத்தி வங்கியினால் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக உள்ளடக்கப்பட்டிருந்தமையின் காரணமாக கடன் பகிர்ந்தளிப்புக்கள் மெதுவடைந்து காணப்பட்டன. எனினும் கந்துரட்ட அபிவிருத்தி வங்கி, ரஜரட்டை அபிவிருத்தி வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், ருகுணு அபிவிருத்தி வங்கி, என். டீ. பீ. வீடமைப்பு வங்கி ஆகிய ஏனைய ஐந்து பங்கேற்கும்

**அட்டவணை 11.9**
**மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் செயலாற்றத் தொகுப்பு**
**31 திசெம்பர் 2001இல் உள்ளவாறு**

(பெறுமதி ரூபா மில்லியன்)

| விடயம் | சி.ந.கை.I (அ) | | சி.ந.கை.II (ஆ) | | சி.ந.கை.III (இ) | | சி.ந.கை.IV (ஈ) | | சி.ந.தொ.மு.உ.செ (உ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1.1 வழங்கப்பட்ட கடன்கள் | 1670 | 286.1 | 2531 | 1396.5 | 3130 | 1955.6 | 9072 | 7666.4 | 1894 | 2741.6 |
| 1.2 உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் | 1670 | 157.5 | 2531 | 713.6 | 3130 | 1312.6 | 9072 | 477.1 | 1894 | 1995.6 |
| 2.1 முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் (எ) | 1235 | 210 | 1754 | 1130.4 | 1969 | 1153.3 | 7232 | 5337.6 | 275 | 260.7 |
| 2.2 புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள் (எ) | 113 | 65 | 534 | 139 | 940 | 665.8 | 291 | 261 | 53 | |
| 3.1 பெறப்பட்ட மொத்தக் கோரல்கள் | 338 | 76 | 228 | 119 | 171 | 98 | 291 | 261 | 58 | 96.5 |
| 3.2 பெறப்பட்ட கோரல்கள் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு | — | 34 | — | 66 | — | 67 | — | 177 | — | 54.5 |
| 3.3 தீர்க்கப்பட்ட கோரல்கள் | | | | | | | | | | |
| முழுமையாகத் தீர்க்கப்பட்டவை | 232 | 19 | 126 | 32 | 92 | 24 | 96 | 39.8 | 12 | 10 |
| பகுதியளவில் தீர்க்கப்பட்டவை | 27 | 2 | 5 | 1 | — | — | — | — | — | — |
| நிராகரிக்கப்பட்ட கோரல்கள் | 32 | 7 | 46 | 13 | 44 | 16 | 57 | 24.8 | 1 | 0.3 |
| திருப்பப்பட்ட கோரல்கள் | — | — | 1 | 0.2 | — | | 11 | 7 | 4 | 2 |
| கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டபின் முழுமையாகச் செலுத்தப்பட்ட கடன்கள் | 36 | 2 | 7 | 2 | 10 | 4 | 26 | 13.9 | — | — |
| பிற்போடப்பட்ட கோரல்கள் | 8 | 2 | 21 | 8 | 6 | 5 | 11 | 7 | 2 | 1 |
| முடிவுறாக் கோரல்கள் | - | - | 10 | 3 | 12 | 8 | 83 | 65.8 | 38 | 38.1 |
| புறக்கீடு செய்யப்பட்ட கோரல்கள் | 3 | 1 | 12 | 4 | 7 | 4 | 7 | 7 | 1 | 1.4 |
| 4.1 வெளிநிற்கும் கடன்கள் (ஊ) (எ) | | | 15 | 4.4 | 50 | 38.5 | 1170 | 1666.9 | 1537 | 2340.3 |
| 4.2 வெளிநின்ற உத்தரவாதங்கள் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு | | | 15 | 2.1 | 50 | 10 | 1170 | 443.9 | 1537 | 780.1 |
| 5. கட்டணச் சேகரிப்பு | | 12.2 | | 29.9 | | 174.6 | | 37.1 | | |
| 6. கோரலுக்குப் பிந்திய மீட்புக்கள் | — | 10 | — | 19.2 | — | 18.4 | | 12.1 | — | — |

(அ) சிநகை I - 1979-81வரை தொழிற்பட்டவை.
(ஆ) சிநகை II - 1982-89வரை தொழிற்பட்டவை.
(இ) சிநகை III - 1988-91வரை தொழிற்பட்டவை.
(ஈ) சிநகை IV - 1992-97வரை தொழிற்பட்டவை.
(உ) சிநதொமுஉசெ - 1997-2001வரை தொழிற்பட்டவை.
(ஊ) தற்காலிகமானவை.
(எ) சீராக்கப்பட்ட எண்தொகைகள்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை II.10

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உதவிச் செயற்றிட்டக் கொடுகடன் உத்தரவாதத் திட்டம்
கடன்களின் கைத்தொழில் வாரியான பகுப்பாய்வு (அ)
31 திசெம்பர் 2001இல் உள்ளவாறு

பெறுமதி ரூபா மில்லியனில்

| கைத்தொழில் வகை | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | | | கடன் தொகை | | | மத்திய வங்கி உத்தரவாத பொறுப்புக்கள் 1997-2001 |
|---|---|---|---|---|---|---|---|
| | 2000 | 2001 | 1997-2001 | 2000 | 2001 | 1997-2001 | |
| 1. உணவு குடிபானம் புகையிலை | 58.0 | – | 267.0 | 130.4 | | 481.4 | 229.7 |
| 2. புடவை அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 10.0 | – | 94.0 | 34.9 | | 174.3 | 80.3 |
| 3. மர, மர உற்பத்திகள் | 7.0 | – | 59.0 | 5.9 | | 68.9 | 37.6 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் | 8.0 | – | 42.0 | 21.4 | | 113.5 | 44.6 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் | 14.0 | – | 63.0 | 67.2 | | 155.6 | 83.0 |
| 6. அடிப்படை உலோக உற்பத்திகள் | 16.0 | – | 52.0 | 9.0 | | 56.9 | 24.7 |
| 7. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | – | – | 76.0 | – | | 91.0 | 53.5 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள், போக்குவரத்து கருவிகள் | | | 28.0 | | | 21.9 | 17.2 |
| 9. வேளாண்மைக் கைத்தொழில் | 28.0 | – | 200.0 | 63.4 | | 307.1 | 178.4 |
| 10. ஏனையவை (அ) | 228.0 | 5.0 | 1,013.0 | 352.8 | 6.5 | 2,741.6 | 1,246.6 |
| மொத்தம் | 369.0 | 5.0 | 1,894.0 | 685.0 | 6.5 | 4,212.2 | 1,995.6 |

(அ) பயணிகள் மற்றும் வர்த்தக போக்குவரத்து பணிகள் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள், உணவு விடுதிகள், மின்னியல் மற்றும் ஏனைய பணிகளையும் உள்ளடக்குகின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டதைத் தொடர்ந்து கடன் பகிர்ந்தளிப்புக்கள் விரைந்து அதிகரித்தன.

நிதியியல் நிறுவனங்களின் மீள் நிதியிடல் ஒப்புதல்களினதும் கடன் மீளமைப்புக்களினதும் விபரங்கள் கீழேயுள்ள அட்டவணை II.7இல் தரப்பட்டுள்ளன. ஆய்விற்குரிய ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ.529 மில்லியனாகவும், மொத்த மீள் நிதியிடல் ஒப்புதல்கள் ரூ.515 மில்லியனாகவும் காணப்பட்டமைக்கு 2000ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒப்புதல்களுக்கெதிராக மீள் நிதியிடல் வழங்கப்பட்டமையே காரணமாகும். வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ரூ.347மில்லியன் கொண்ட மீள் நிதியிடல் ஒப்புதல்களுக்கும் ரூ.406 மில்லியன் கொண்ட மீள்நிதியிடல் பகிர்ந்தளிப்புக்கும் வகைகூறியது.

துணைக் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் ஏறத்தாழ 66 சதவீதம் புதிய வீடுகளின் நிருமானம் மற்றும் ஏற்கனவேயுள்ள வீடுகளின் விரிவாக்கம் ஆகிய நோக்கங்களுக்காக வழங்கப்பட்டன. கடன் பகிர்ந்தளிப்புக்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பாய்வொன்று கீழேயுள்ள அட்டவணை II.8இல் தரப்பட்டுள்ளது. இது பங்கேற்புக் கொடுகடன் நிறுவனங்களின் பங்களிப்புக்களையும் மீள் நிதித் தொகையையும் உள்ளடக்குகின்றது.

## சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழிற் முயற்சிகளின் கீழான கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள்

### நடுத்தர அளவு தொழில் முயற்சிகள்

சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களும் (சி.ந.கை I, II,III,IV) சிறிய நடுத்தர தொழிற் முயற்சிகள் உதவிச் செயற்றிட்டமும் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன. முடிவடைந்த கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் செயலாற்றத் தொகுப்பொன்றினை அட்டவணை II.19 தருகின்றது. சிறிய நடுத்தர கைத்தொழில் உத்தரவாதத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களை தேசிய அபிவிருத்தி வங்கியானது பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினதும் புத்தாக்கம் மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கியினாலும் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 12.6 மில்லியன் கொண்ட தொடர் கொடுகடன் பெறுகைகளிலிருந்து நிதியிட்டது. சிறிய நடுத்தர உதவிச் செயற்றிட்ட கொடுகடன் உத்தரவாத திட்டத்தின் கீழான மீள் நிதியிடல் வசதிகள் வெளிநாட்டு வங்கியிலிருந்தும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் கூட்டாகப் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 55 மில்லியன் கொண்ட கடன் தொகையை பயன்படுத்தி தேசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்டன.

சிறிய நடுத்தர உதவிச் செயற்றிட்ட கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின்கீழ் கொடுகடன் உத்தரவாதப்

பாதுகாப்பினை வழங்குவது 2001 சனவரியில் முடிவடைந்தது. 1997 இலிருந்து 2001வரை வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதப் பாதுகாப்புக்களின் எண்ணிக்கை 1,894 ஆகவும் மொத்தக் கடன்தொகை ரூ.2,742 மில்லியனாகவும் அத் தொகையின் மீதான மத்திய வங்கியின் பொறுப்புத் தொகை ரூ.1,271 ஆகவும் காணப்பட்டன. சிறிய நடுத்தர கைத்தொழில் உதவிச் செயற்றிட்டத்தின் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு அட்டவணை II.10இல் தரப்பட்டுள்ளது.

எனினும், கொடுகடன் உத்தரவாதப் பாதுகாப்புக்களைக் கொண்ட கடன்கள் மீதான கட்டணச் சேகரிப்பு 2001இலும் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்தது. இரண்டு திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் செயலாற்றமில்லாத் தன்மை தொடர்பான செயற்றிட்ட பரிசோதனை வேலைகளும் கண்காணிப்பு வேலைகளும் திணைக்களத்தினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் செயற்படாக் கடன்கள் மீது பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் சமர்பிக்கப்பட்ட கோரல்களின் தீர்ப்பனவினையும் 2001இலும் தொடர்ந்து மேற்கொண்டது.

## கொடுகடன் உத்தரவாத நிதியத்தின் முதலீடு

இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் மொத்தப் பெறுமதி ரூ.2,735 மில்லியனாக விளங்கியது. முதலீடுகளிலிருந்தான மொத்த வட்டி வருமானம் ரூ.246 மில்லியனாக விளங்கியது. இம் முதலீடுகளுக்கான நிதிகள் சிறிய நடுத்தர கைத்தொழில்கள், பேருந்து கொள்வனவுக் கடன் திட்டம், சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் உதவிச் செயற்றிட்டம், மற்றும் பெருந்தோட்டத்துறை சீரமைப்புச் செயற்றிட்டம் ஆகிய கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழ் சேகரிக்கப்பட்ட கட்டணங்களிலிருந்தும் மத்திய வங்கியினால் முற்பணமாக வழங்கப்பட்ட நிதியிலிருந்தும் பெறப்பட்டது.

## கிராமியக் கொடுகடன்

ஆய்விற்குரிய ஆண்டில், கிராமிய கொடுகடன் திணைக்களம் பல அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கொடுகடன் கூறுகளைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. இக் கொடுகடன் திட்டங்களில் பல கொடை முகவர்களினால் நிதியிடப்பட்டனவாகவோ அல்லது அரசிடமிருந்தான உதவு தொகைகளின் உதவியுடனோ தொழிற்படுத்தப்பட்டன. ஒரு சில கொடுகடன் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு ஏற்கனவே முற்றுப் பெற்ற செயற்றிட்டங்களின் சுழல் நிதியினை பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டன. செயற்றிட்டங்களின்/ கொடுகடன் திட்டங்களின் நிறைவேற்று முகவர் என்ற ரீதியில் கிராமியக் கொடுகடன் திணைக்களம் புதிய பங்கேற்பு நிதியியல் நிறுவனங்களை அனுமதித்தல், செயற்றிட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன்கள் தொடர்பில் பங்கேற்பு நிதியியல் நிறுவனங்களுக்கு மீள் நிதியினைப் பகிர்ந்தளித்தல், மற்றும் செயற்றிட்ட அலுவலகங்கள் மற்றைய தொடர்பான முகவர்களின் உதவியுடன் கடன் திட்டங்களை கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் என்பனவற்றில் தொடர்ந்தும் ஈடுபட்டது. திணைக்களம் சிறு வேளாண்மையாளர்களின் வேளாண்மை உற்பத்திகளுக்காக முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையினை மிகப்பலமான முறையில் மேம்படுத்தியது. மேலும், திணைக்களம் நிருவாகம், கடன் மீளளிப்பு கட்டணச் சேகரிப்பு மற்றும் ஏற்கனவே முற்றுப் பெற்ற செயற்றிட்டங்கள் தொடர்பான கொடுகடன் உத்தரவாதக் கொடுப்பனவு நடவடிக்கைகள் என்பனவற்றிலும் தொடர்ந்தும் ஈடுபட்டது. ஆய்விற்குரிய காலப்பகுதியில், திணைக்களம் நகர சூழல் உள்கட்டமைப்பு, அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியினை முழுமையாகப் பயன்படுத்தி அதனை வெற்றிகரமாக முழுமையாக நடைமுறைப்படுத்தியது. திணைக்களம் வங்கியின் பிரதேச அலுவலகங்களின் செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருந்தது. 31.12.2001இலிருந்து கிராமிய கொடுகடன் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டு அதன் பொறுப்புக்களை புதிதாக நிறுவப்பட்ட பிரதேச அபிவிருத்தி திணைக்களம் 01.01.2002 இலிருந்து கையேற்றுக்கொண்டது. 2001ஆம் ஆண்டில் கிராமிய கொடுகடன் திணைக்களம் பின்வரும் செயற்றிட்டங்களின் கொடுகடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

(அ) ஆ.அ.வங்கியினால்[1] நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்

1. தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம்
2. இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்
3. தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம்; அத்துடன்
4. வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

1. ஆசிய அபிவிருத்தி வங்கி

அட்டவணை II.11

2001 இல் கிராமியக் கொடுகடன் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட கொடுகடன் திட்டங்கள்

| செயற்றிட்டத்தின் பெயர் | நிதியிடல் முகவர் | பணித் திட்டங்கள் | ஆரம்ப ஒதுக்கு | கடன்படுநர் களுக்கான வட்டிவீதம் | 2001.12.31வரை கொடு கடன் பகிர்ந்தளிப்பு (ரூ.மில்.) | பொருந்தத் தக்கவிடத்து மீளப் பெறல் வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் (1999 - 2005) | ஆ.அ.வ | சிறு தேயிலை உடமையாளர்களின் வருமானத்தினை உறுதியான அடிப்படையில் உயர்த்துதல் செயற்றிட்டப் பிரதேசத்தின் இயற்கைச் சூழலை மேம்படுத்தல். | சி.எ.உ 15.4 மில். | ச.நி.வை.வீதம் +2 (மீள்நடுகைக்கு) ச.நி.வை.வீதம் +6 (ஏனையநோக்கம்) | 1,044 | 91 |
| 2. இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் (1998-2004) | ஆ.அ.வ | நிரந்தரப்பயிர்களின் உற்பத்தியையும் வர்த்தகமயப் படுத்தலையும் அதிகரித்தல் நாற்று மேடையை அபிவிருத்தி செய்தல் அறுவடைக்குப் பின்னைய கையாளல் பதனிடல் நடவடிக்கைகள் மற்றும் சந்தைப்படுத்தல் | சி.எ.உ 11.562 மில். | சராசரி நிறையேற்றப்பட்ட வைப்புவீதம்+2 | 588 | 90 |
| 3. தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம் (2000ஆம் ஆண்டில் தொடங்கியது) | ஆ.அ.வ | உயர்ந்த தகைமைபெற்ற தொழிற்படையை உருவாக்குவதற்காகவும், தேர்ச்சிப் பொருத்தப்பாடின்மை, கிராமிய மற்றும் நகர் இளைஞர்களிடையேயான வேலைவாய்ப்பின்மையினையும் கருத்திற்கொண்டு தரத்தினையும் தொடர்பான தேர்ச்சிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் மேம்படுத்துவது. | சி.எ.உ. 0.657 | சராசரி நிறையேற்றப்பட்ட வைப்புவீதம்+2 | வி.கி. | வி.கி. |
| 4. வடமத்திய மாகாணத்தின் பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (1996 - 2002)<br>வட மத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் (1997 - 2003) | ஆ.அ.வ. வே.ப.நி ச.ச.அ.க. உ.நி.நி | குறைந்த வருமானமுடைய மக்களின் வறுமை ஒழிப்பு, உணவுப்பாதுகாப்பு ஊட்டச்சத்தை மேம்படுத்தல் மற்றும் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் | ஐ.அ.டொ.0.5மில்.<br>ஐ.அ.டொ.0.25மில். | ச.நி.வை.வீதம் அல்லது10% இதில் எது குறைந்ததோ அதில் 6 % புள்ளி | 3.3 | 70 |
| 5. நகர சூழல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் (1999 - 2001) | ஐ.அ.ப.அ முகவர் | நகர மற்றும் நகரம்சார் பகுதிகளில் வாழும் மக்களின் சுற்றாடல் வசதிகள், சுகாதாரம், நலம் என்பனவற்றை மேம்படுத்தல் | ஐ.அ.டொ 4 மில். | 16 | 269 | 90 |
| 6. உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டுக் கொடுகடன் திட்டம் (1997இல் தொடக்கப்பட்டது) | யப்பானிய அரசு | நாட்டில் உணவு உற்பத்தியையும், உணவு செய்முறைப்படுத்தல் தொழில் நுட்பத்தையும் மேம்படுத்தல். | இல.ரூபா 284 மில். | 10.0 | 29 | 96 |
| 7. வறுமை ஒழிப்பு, நுண்பாக நிதிச் செயற்றிட்டம் (தொடங்கப்பட்ட ஆண்டு 2000) | ப.ஒ.அ. யப்பானிய வங்கி | செலவுச் சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாக கடன்வழங்கல் முறைமையினை நிறுவுவதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் சேமிப்புப்பழக்கத்தை மேம்படுத்தலும். | யப்பானிய யென் 1,368 மில். | சந்தை வீதங்கள் | 1.2 | சலுகைக் காலத்தில் |
| 8. மாத்தளை பிரதேச பொருளாதார முற்போக்கு நிகழ்ச்சித் திட்டம் | ஆ.அ.வங்கி | கிராமப் புறங்களிலுள்ள சிறிய தொழில் முயற்சியாளர்களினதும் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள வேளாண்மைக் குடும்பங்களினதும் வருமானத்தை நிரந்தரமாக உயர்த்தி வலுவாக்கல் | சிஎஉ 2 மில். | 14 | 33.6 | 80. |
| 9. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் | வே.அ.ப.நி | நெல் மற்றும் ஏனைய குறுங்கால உணவுப்பயிர்களுக்கான மற்றும் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையின் கீழ் அறுவடைக்கு முன்/பின் நடவடிக்கைக்கான கடன் | - | 12.0 | 638 | 64 (அ) |
| 10. சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் (1990-2000) | வே.ப.நி க.ப.அ.க இலங்கை அரசு | செலவுச் சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாகக் கடன் வழங்கல் முறைமையினைத் தாபிப்பதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் சேமிப்புப் பழக்கத்தை மேம்படுத்தலும். | சி.எ.உ 4.85 மில். | 16 (வேளாண்மை) 20 (ஏனைய நோக்கங்கள்) | 753 | 97 |
| 11. கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (சுழலும் நிதி) செயற்றிட்டம் (1997 - 2007) | இலங்கை அரசு | வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல். | இல.ரூபா 100 மில். | 10.0 | 179.5 | 94 |
| 12. சுறுசுறு நிகழ்ச்சித்திட்டம் கட்டம் II (1998 இலிருந்து) | அ.வ.உ.தொ.ப. கொ.நி | படித்த வேலையற்ற இளைஞர்களிடையே சுயதொழில் வாய்ப்பினை மேம்படுத்தவதன் மூலம் அவர்களின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தினையும் அதிகரித்தல். | இல. ரூபா 1300 மில். | 10 | 596 | 78 |
| 13. தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டக் (சுழலும் நிதி) கொடுகடன் திட்டம் (2000ஆம் ஆண்டிலிருந்து) | அ.வ.உ.தொ.ப. கொ.நி | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் | ஐ.அ.டொ 8.1 மில். | 12 | 145 | 88 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) ஏறத்தாழ மொத்த நிலைமை.

(ஆ) வே.அ.ப.நிதியம்[2], க.ப.அ. முகவர்[3], சு.ப.அ. முகவர்[4], ய.உ.உ.கொடை[5], உ.உ. நிகழ்ச்சித் திட்டம்[6], ப.அ.ஐ.அ.முகவர்[7], ப.ஒ.ய.வங்கி[8], என்பன வற்றினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்

1. வடமத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் (வே.அ.ப.நிதியம், சு.ப.அ.முகவர், உ.உ. நிகழ்ச்சித் திட்டம்)

2. நகர சூழல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் (ப.அ.ஐ.அ.நா. முகவர்)

3. உணவு, ஊட்டச்சத்து மேம்பாட்டுக் கொடுகடன் திட்டம் (யப்பானிய அரசு)

4. வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டம் (ப.ஒ.ய.வங்கி)

5. மாத்தறை பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டம் (வே.அ.ப.நிதியம்)

(இ) அரசினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள் அல்லது அரசின் வட்டி உதவிக் கொடுப்பனவுடனும் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களும் சுழல்முறை நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்களும்.

1. முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையினை உள்ளடக்கிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

2. சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்

3. கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் (சுழல்முறை நிதிய) செயற்றிட்டம்

4. சுறதுற நிகழ்ச்சித்திட்டம் - நுண்பாக தொழில்முயற்சிக் கொடுகடனினூடாக சுயவேலை வாய்ப்பினை மேம்படுத்தல்: அத்துடன்

5. தென் மாகாண கிராமிய அபிவிருத்தி (சுழல்முறை நிதிய) செயற்றிட்டம்.

## தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம், சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டத்தினைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு செயற்றிட்டமாகும். 2001ஆம் ஆண்டில் இச் செயற்றிட்டம் அதன் இரண்டாவது ஆண்டுத் தொழிற்பாட்டினை நிறைவு செய்துள்ளது. தேயிலை வளரும் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியுள்ள இச்செயற்றிட்டத்தினை 2005ஆம் ஆண்டில் நிறைவு செய்ய அட்டவணையிடப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டத்தின் பரந்த குறிக்கோளாக உறுதியான அடிப்படையில் தேயிலை சிறு உடமையாளர்களின் வருமானத்தினை அதிகரித்தல், மற்றும் செயற்றிட்ட பிரதேசத்தில் இயற்கையான ஆழுமையை மேம்படுத்தல் என்பன விளங்கின. இச் செயற்றிட்டம் நான்கு முக்கிய கூறுகளை உள்ளடக்கியுள்ளன. அவையாவன (அ) நிறுவனரீதியான சீரமைப்புக்களும் அவற்றினை உறுதிப்படுத்தலும் (ஆ) தேயிலை அபிவிருத்தி (இ) சமூக உட்கட்டமைப்பும் காடு வளர்த்தலும் அத்துடன் (ஈ) செயற்றிட்ட முகாமைத்துவமும்.

தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறு சிஎஉ 15.4 மில்லியனாக (ஏறத்தாழ ரூ.1,650 மில்லியன்) விளங்கியது. வங்கியானது, துணைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட துணைக் கடன்களுக்கு நிதியிடுவதற்கு முக்கிய பொறுப்பாக இருந்தது. செயற்றிட்டத்தின் கீழ் கடனைப் பெறத் தகுதியுடைய நடவடிக்கைகளாக தேயிலை மீள்நடுகை, தேயிலை நாற்று மேடைகளை நிறுவுதல், தேயிலைத் தொழிற்சாலைகளை புத்தாக்கம் செய்து நவீன மயப்படுத்தல், ஊர்திகளின் கொள்வனவு மற்றும் தேயிலைக் கொழுந்து சேகரிக்கும் நிலையங்களை நிருமாணித்தல் என்பன காணப்பட்டன.

செயற்றிட்டத்தின் கீழ் 2001இல் இரு புதிய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களாக வரையறுக்கப்பட்ட லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனி மற்றும் றுகுண அபிவிருத்தி வங்கி என்பனவற்றினை உள்ளடக்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டதன் மூலம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் எண்ணிக்கை ஒன்பதுக்கு அதிகரித்தது. கொடுகடன் கூறின் கீழ் 2001 இறுதியில் 1,776 தகைமைபெற்ற துணைச் செயற்றிட்டங்களின் பொருட்டு ரூ.1314.5 மில்லியன் பெறுமதி கொண்ட கடன்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டதுடன் அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினாலும் 1,611 துணைச் செயற்றிட்டங்களுக்கு ரூ.1044.5 மில்லியன் கொண்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. உலக தேயிலைச் சந்தைகளில் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக, கடன்பாட்டாளர்கள் இச் கைத்தொழிலில்

2. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம்
3. கனடியன பன்னாட்டு அபிவிருத்தி முகவர்
4. சுவீடன பன்னாட்டு அபிவிருத்தி முகவர்
5. யப்பானிய உணவு உற்பத்திக் கொடை
6. உலக உணவு நிகழ்ச்சித் திட்டம்
7. பனனாடடு அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் முகவா
8. பனனாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கி

கூடியளவிற்கு முதலீடு செய்ய ஆர்வம் காட்டியதுடன் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் இவ்வாண்டிற்காக இலக்கிடப்பட்ட தொகையிலும் பார்க்க விஞ்சிய தொகையைப் பகிர்ந்தளிக்கக் கூடியனவாக இருந்தன. இதன்படி, பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் 2001இல் ரூ.672.2 மில்லியன் கொண்ட மொத்தத் தொகையைப் பகிர்ந்தளிப்பதற்காக இலக்கிடப்பட்டதில் 230 சதவீதங்கொண்ட அளவாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டினைப் போன்றே, கடன்களில் பெரும்பகுதி தேயிலை கொள்வனவு செய்யும் தொழிற்சாலைகளின் புத்தாக்கத்திற்காக வழங்கப்பட்டன. இவ்வாண்டில் தொழிற்சாலை அபிவிருத்தி கூறின்கீழ் தேயிலையை வாங்கும் தொழிற்சாலைகளை 5 "S" நியமத்திற்கு (உற்பத்தியாக்க அளவீட்டுத்தரமொன்று) தரமுயர்த்துவதற்கான மற்றொரு சிறப்புக்கடன் திட்டத்திற்கு ஆ.அ. வங்கி ஒப்புதலளித்தது.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றம் 2001இன் மொத்தக்கடன் பகிர்ந்தளிப்பில் இ.அ.நி.கூ. வங்கி 32.1 சதவீதத்திற்கு வகைகூறியமையைக் காட்டியது. மீதித் தொகையைப் பகிர்ந்தளித்த மற்றைய முக்கிய பங்களிப்பினர்களாக இலங்கை வங்கி (21.0 சதவீதம்), தேசிய அபிவிருத்தி வங்கி (16.9 சதவீதம்), அட்டன் நசனல் வங்கி (13.3 சதவீதம்), சம்பத் வங்கி (10.3 சதவீதம்), வர்த்தக வங்கி (5.6 சதவீதம்) என்பன காணப்பட்டன. 2001 இறுதிவரை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட 897 துணைக் கடன்களுக்காக மத்திய வங்கி ரூ.691.4 மில்லியன் கொண்ட மீள் நிதியிடலை வழங்கியுள்ளது.

## இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டமானது கொடுகடன் வசதிகளையும் ஆதரவுப் பணிகளையும் வழங்குவதன் மூலமாக நிரந்தரப் பயிர்த்துறையின் அபிவிருத்திக்கும் வர்த்தகமய மாக்கலுக்கும் உதவுவதனை குறிக்கோளாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. செயற்றிட்டமானது கொடுகடன், பண்ணை மதியுரை, சந்தைப்படுத்தல் மற்றும் தொழில்நுட்பப்பணிகள்; ஆராய்ச்சி, விதை மற்றும் பயிரிடல், பொருட்கள் மற்றும் நிறுவனரீதியான வலுப்படுத்தல்கள் ஆகிய ஐந்து கூறுகளை உள்ளடக்கியிருந்தது. செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறினை வங்கி நடைமுறைப்படுத்திய வேளையில் செயற்றிட்ட முகாமைத்துவ அலுவலகம் வேளாண்மை மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் சார்பில் மற்றைய கூறுகளைக் கையாண்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிஎஉ 14.743 மில்லியன் கொண்ட ஒதுக்கில் சிஎஉ 11.562 மில்லியன் கொண்ட தொகை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களின் மீள் நிதியிடலுக்கான கொடுகடன் கூறாக ஒதுக்கப்பட்டது. இச் செயற்றிட்டம் 17 மாவட்டங்களை உள்ளடக்கியிருந்ததுடன் 2004இல் நிறைவு செய்வதற்கும் அட்டவணையிடப்பட்டுள்ளது.

இச் செயற்றிட்டத்தின் கீழ் மதியுரைப் பணிகளை தனியார்மயப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் விதந்துரைப்புக்களுக்கேற்ப 2001இல் செயற்றிட்ட முகாமைத்துவ அலுவலகத்தினால் வழங்கப்பட்ட விரிவாக்கப் பணிகள் சில மாவட்டங்களில் தனியார் மயமாக்கப்பட்டன. எஞ்சிய மாவட்டங்களில் செயற்றிட்ட விரிவாக்க அலுவலர்களினால் வழங்கப்பட்ட பணிகளுக்காக செயற்றிட்ட முகாமைத்துவ அலுவலகம் கடன்பாட்டாளர்களிடமிருந்து 2001 நவெம்பர் தொடக்கம் கட்டணமொன்றினை விதிக்கத் தொடங்கியது. இந் நடவடிக்கையின் குறிக்கோளாக (அ) இச் செயற்றிட்டம் நிறுத்தப்பட்டதன் பின்னரும்கூட வாடிக்கையாளர்களுக்கு உறுதியானதும் தொடர்ச்சியானதுமான பணிகளுக்கான ஏற்பாடுகளை உறுதி செய்யும் விதத்தில் சந்தை மதியுரைகளை வழங்கல், சந்தைப்படுத்தல், விரிவாக்கல் மற்றும் தொழில்நுட்பப் பணிகளை வழங்குவதற்கு தனியார் தொழில் முயற்சிகளை நிறுவுவதனையும் (ஆ) கட்டண அமைப்பு முறையினையும் பயன்படுத்துனர் - கொடுப்பனவு செய்யும் முறையினையும் அடிப்படையாகக் கொண்ட போட்டிச் சந்தையினை நிறுவுவதனையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இடைக்கால ஆய்வு பேராளர் குழு - 2001இன் விதந்துரைப்புக்களின்படி செயற்றிட்டத்தின்கீழ் மணி மிளகு, கறி மிளகாய் போன்ற உயர் பெறுமதி கொண்ட காய்கறிகளின் பயிர்ச்செய்கைக்காக பொலித்தீன் கூடாரங்களை நிருமாணிப்பதற்கான மூலதனச் செலவு நிதியிடலுக்காக உள்ளடக்கப்பட்டது. முன்னர் செயற்றிட்டம் பொலித்தீன் கூடாரங்களின்கீழ் நிரந்தரப் பயிர்கள் மற்றும் மலர்களை பயிர் செய்வதற்கு மட்டுமே நிதியிடக்கூடியதாக இருந்தது.

ஆய்விற்குரிய ஆண்டில் 484 தகைமைபெற்ற துணைச் செயற்றிட்டங்களின் பொருட்டு ரூ.323 மில்லியன் கொண்ட தொகை ஒப்புதலளிக்கப்பட்டதுடன் இதில் ரூ.274 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதன்படி, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இலக்கிடப்பட்ட பகிர்ந்தளிப்பில் 92 சதவீதத்தினை இவ்வாண்டில் எய்தக் கூடியனவாக இருந்தன. மத்திய வங்கி மீள்நிதியிடல் தொகையாக ரூ.212 மில்லியனை விடுவித்தது. 2001 இறுதியில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதியும் வங்கியினால் வழங்கப்பட்ட மீள் நிதியிடல் தொகையையும் முறையே ரூ.588 மில்லியனாகவும், ரூ.419மில்லியனாகவும்

காணப்பட்டன. விரிவாக்கப் பணிகள் தனியார் மயமாக்கப்பட்டதன் காரணமாக 2001இன் முதலரைப் பகுதியில் கொடுகடன் பகிர்ந்தளிப்பில் ஓரளவு மெதுவான போக்கு காணப்பட்டபோதும் ஆண்டின் இறுதிப்பகுதியில் பகிர்ந்தளிப்பு வேகம் பெறத் தொடங்கியது.

2001இல் றுகுண அபிவிருத்தி வங்கியானது பங்கேற்கும் நிதியியல் நிறுவனமாக செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமையானது செயற்றிட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கையை எட்டிற்கு அதிகரித்தது.

## தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டமானது இலங்கை அரசிற்கும் ஆ.அ. வங்கிக்குமிடையில் 15.11.1999 அன்று செய்து கொள்ளப்பட்ட செயற்றிட்டத்திற்கான கடன் உடன்படிக்கையின் நியதிகளுக்கிணங்க நடைமுறைக்கிடப்பட்டது. உடன்படிக்கையின் கீழ், செயற்றிட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி சிஎஉ 13.7 மில்லியன் கொண்ட கடனை வழங்கியதுடன் அரசின் சார்பில் தொழிற்பயிற்சி அமைச்சு 2000 மாச்சிலிருந்து 2006 ஓகத்து வரையிலான ஆறு ஆண்டு காலப்பகுதிக்கு இதனை நடைமுறைப்படுத்தும் தொழிற்பயிற்சி அமைச்சினால் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க மத்திய வங்கி 2000ஆம் ஆண்டு திசெம்பரிலிருந்து தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் பங்கேற்றுக் கொண்டது. அமைச்சினால் நடத்தப்பட்ட தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினைப் பூர்த்தி செய்த தகைமை பெற்ற கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட துணைக் கடன்களுக்கெதிராக மீள் நிதியிடலை வழங்குவதற்கு வங்கி பொறுப்பாக இருந்தது. சிறிய அளவு தொழில் முயற்சி அல்லது சுய தொழில் வாய்ப்பு நடவடிக்கைகளை நிறுவுவதற்கு ஆரம்ப நிதியியல் உதவியினை வழங்குவதற்காக மொத்த ஒதுக்கில் ஐ.அ.டொலர் 657,000கொண்ட தொகை கொடுகடன் கூறாக ஒதுக்கப்பட்டது. கடனின் அளவு ரூ.50,000 இற்கும் ரூ.250,000 இற்குமிடைப்பட்டதாக இருக்கும்.

தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கும் தனியார் துறையினருக்குமிடையில் நெருங்கிய பங்கேற்பு ரீதியில் போட்டியடிப்படையிலமைந்த பயிற்சி மற்றும் ஊக்குவிப்புக்களை அறிமுகப்படுத்துவதன் மூலமாக தொழிற்பயிற்சியினை மீளமைத்து அதனை ஒழுங்குபடுத்துவதனூடாக உயர்தர தொழிற்படையினைக் கட்டியெழுப்பும் நோக்குடன் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் தரத்தினையும் நம்பிக்கையையும் மேம்படுத்துவதே இச் செயற்றிட்டத்தின் குறிக்கோளாக விளங்கின. அரசாங்கத்துடன் நிருவாக உடன்படிக்கையில் கையெழுத்திடவும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுடன் துணைக்கடன் உடன்படிக்கைகளில் கையெழுத்திடவும் வங்கியினால் ஆரம்ப ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. செயற்றிட்டத்தின் கடன் வழங்கல் நடவடிக்கைகள் 2002ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஆ.அ. வங்கியினால் நிதியிடப்பட்ட வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட வடமத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

வே.அ. ப. நிதியத்தினால் நிதியிடப்பட்ட வடமத்திய மாகாண - பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டமும் ஆ.அ. வங்கியினால் நிதியிடப்பட்ட வடமத்திய மாகாண - பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டமும் முறையே 1996இலும், 1997 இலும் தொழிற்படத் தொடங்கின. இரண்டும் ஒருங்கிணைக்கப் பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டங்களாக இருந்ததுடன் அநுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் வறுமையைக் குறைப்பதனையும் சமச்சீரான பிரதேச அபிவிருத்தியையும் நோக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

இவ்விரு செயற்றிட்டங்களினதும் கொடுகடன் கூறுகளுக்கான உச்ச இணைப்பு முகவராக மத்திய வங்கி உள்ளது. கொடுகடன் கூறுகள், வடமத்திய மாகாணத்திலுள்ள வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் மூலமும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலமும் வறுமையை ஒழிப்பதனை இலக்காகக் கொண்டிருந்தன. பரிசோதனை முறை அடிப்படையில் மீள் நிதியிடல் உதவியில்லாமல் வர்த்தக வங்கிகள் தமது சொந்த நிதியினூடாக கொடுகடனைப் பகிர்ந்தளிக்கும் விதத்திலேயே வடமத்திய மாகாண- கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பத்தில் வடிவமைக்கப்பட்டது. மக்கள் வங்கி, இலங்கை வங்கி, அட்டன் நசனல் வங்கி, மற்றும் செலான் வங்கி என்பன பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக இருந்தன. வடமத்திய மாகாண- பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறானது தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் நிதியிடப்படும் விதத்திலேயே ஆரம்பத்திலிருந்து வடிவமைக்கப்பட்டது. எனினும் தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்திலிருந்து நிதி கிடைக்காமையின் காரணமாக இந்நிகழ்ச்சித்

திட்டத்தினை தொழிற்படுத்த முடியாமல் போயிற்று. இதனைத் தொடர்ந்து வடமத்திய மாகாண - கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தினைப்போன்று, பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் அவற்றின் சொந்த மூலவளங்களினூடாக கொடுகடன் கூறினை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகளை 1998இலிருந்து மேற்கொண்டன.

2000ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இரு செயற்றிட்டங்களின் கீழும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கொடுகடன் தொகை ரூ.3.3 மில்லியனாக மட்டுமே காணப்பட்டன. எனினும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் செயற்றிட்ட காலப்பகுதியில் அவற்றின் சொந்த நிதியங்களிலிருந்து ரூ.196 மில்லியனை கொடுகடனாக வழங்குமென ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது. இம் மோசமான செயலாற்றத்தினை பரீசீலித்த ஆ.அ. வங்கியின் இடைக்கால ஆய்வு பேராளர்குழு மற்றும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் என்பன எஞ்சியுள்ள செயற்றிட்டக் காலப்பகுதியில் வருமான உருவாக்க நடவடிக்கையினை நிறுவுவதற்கான கடன்களை வழங்குவதற்காகப் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள் நிதியிடல் உதவியினை வழங்க உடன்பட்டன. இதன்படி இரு கொடுகடன் திட்டங்களும் 2001இல் மீள வடிவமைக்கப்பட்டன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள் நிதியிடலை வழங்குவதற்காக ஆ.அ.வங்கியும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியமும் முறையே ஐ.அ.டொலர் 500,000இனையும் (ஏறத்தாழ ரூ.40 மில்லியன்) ஐ.அ.டொலர் 250,000 இனையும் (ஏறத்தாழ ரூ.20 மில்லியன்) ஒதுக்கீடு செய்தன.

பங்கேற்கும் நிறுவனங்களுக்கான கொடை மீள் நிதியிடலின் வட்டி வீதம் ஆகக் கூடியது ஆண்டொன்றுக்கு 10 சதவீதம் என்ற நியதிக்குட்பட்டு சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதங்களின் ஆண்டுச் சராசரிக்கேற்ப நிர்ணயிக்கப்பட்டன. கடன் பெறுநர்களுக்கு ஏற்புடையதான கடன்வழங்கல் வீதம் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதத்திற்கு மேலாக 6 சதவீதப் புள்ளிகளைக் கொண்டிருக்கும். மீள் நிதியிடல் துணைச் செயற்றிட்டத்தின் மொத்தச் செலவில் 70 சதவீதம் வரையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வேளையில் கடன்பாட்டாளர்களும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களும் எஞ்சிய தொகையான முறையே 10 சதவீதத்தினையும், 20 சதவீதத்தினையும் ஈடுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

தேவையான உட்கட்டமைப்பின் நிருமாணத்தில் காணப்பட்ட செயற்றிட்டத்தின் மூலம் உதவியளிக்கப்பட்ட தொழில் முயற்சி அபிவிருத்திக்கான உள்ளார்ந்த வளத்தைக் கொண்ட துறைகளாக இனங்காணப்பட்ட 12 கொத்தணிகளிலுள்ள வேளாண்மையினையும் பண்ணையல்லா வருமான உருவாக்க நடவடிக்கைகளையும் அபிவிருத்தி செய்வதற்கான முயற்சியாக செயற்றிட்டத்தினை புத்துயிர் பெறச் செய்யும் பொருட்டு வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறானது தொழில் முயற்சி அபிவிருத்திக் கூறாக திருத்தியமைக்கப்பட்டது. தொழில் முயற்சி அபிவிருத்திப் பணிகளின் பயன் மிக்கதும் வினைத்திறன் கொண்டதுமான வழங்கலை உறுதிப்படுத்தும் பொருட்டு தனியார் துறையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பணி வழங்குநர்களுக்கு உதவிப் பணிகளை வழங்கச் செய்வதற்கான ஒப்பந்தங்களைச் செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பணி வழங்குபவர்களின் செயலாற்றத்தினைக் கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக செயற்றிட்ட முகாமைத்துவ அலுவலகத்திற்குள்ளே தொழில் முயற்சி அபிவிருத்தி நிலையமொன்று 2001இல் நிறுவப்பட்டது.

வடமத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறினது செயலணிக்குழு மாற்றமின்றியிருந்தது. அதாவது செயற்றிட்டத்தின்கீழ் சமூக ஒன்று திரட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்ட சுய உதவிக் குழுக்களே செயலணிக் குழுவாக இருந்தது. 2001 மே 1ஆம் நாளிலிருந்து இரண்டு கொடுகடன் நிகழ்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்காக மத்திய வங்கி திட்டநடைமுறைப்படுத்தல் அமைச்சுடன் நிருவாக உடன்படிக்கையையும் பங்கேற்கும் நிறுவனங்களுடன் துணைக்கடன் உடன் படிக்கையையும் 2001இல் செய்து கொண்டது. இச் செயற்றிட்டங்களின் கீழ் நிதியிடப்படுவதற்கான துணைச் செயற்றிட்ட முன் மொழிவுகளின் தகைமையினை மதிப்பீடு செய்வதற்காக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கும் 2001இல் நிறுவப்பட்ட செயற்றிட்ட மதிப்பீட்டுக் குழுவிற்கும் புதிய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

வடமத்திய மாகாண - பங்கேற்பு கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின்கீழ் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் 29 கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள வேளையில் வடமத்திய கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டமானது கொடுகடன் பகிர்ந்தளிப்பிற்குத் தேவைப்பட்ட பணிகளை வழங்குவோரைத் தெரிவு செய்வதில் ஈடுபட்டிருந்தது. இரு செயற்றிட்டங்களின்கீழும் 2001காலப்பகுதியில் மீள் நிதியிடல் விடுவிக்கப்படவில்லை.

## நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம்

1999இல் தொழிற்படத் தொடங்கிய நகர சுற்றாடல் உள்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டம் 100 சதவீதமான நிதியினையும் அதாவது ரூ.269.2 மில்லியனையும் பயன்படுத்தி 31.10.2001இல் அதன் தொழிற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவு செய்தது. இத் திட்டம் அரசினால் வழங்கப்பட்ட கடன் தொகையின் மூலம் நிதியிடப்பட்டது. அரசாங்கம் செயற்றிட்டத்திற்கு நிதியினை வழங்குவதற்காக நிலையான வீத வாக்குறுதிச் சான்றிதழை வழங்கியதன் மூலம் 1998இல் செத்தெம்பரில் ஐக்கிய அமெரிக்க அரசினூடாக ஐக்கிய அமெரிக்காவிலுள்ள தனிப்பட்ட முதலீட்டாளரான வரையறுக்கப்பட்ட லசார்ட் பிறேறர்ஸ் அன்ட் கம்பனியிடமிருந்து ஐ.அ.டொலர் 4 மில்லியன் கொண்ட தொகையைக் கடனாகப் பெற்றது. நகரம் மற்றும் நகரம்சார் பிரதேசங்களில் வாழும் மக்களின் சுகாதார நிலைமைகளின் அபிவிருத்தியினையும் சுற்றாடல் நிலைமைகளின் முன்னேற்றத்தினையும் உறுதிசெய்வதற்காக சுற்றாடல் அபிவிருத்தியில் தனியார் துறையின் பங்கேற்பினை குறிப்பாக நகர நகரம்சார் பிரதேசங்களில் மேம்படுத்துவதும் குப்பை கூழங்களை அகற்றல், நீர்வழங்கல் மற்றும் சுகாதாரம், நீர் விரயத்தினைத்தடுத்தல், வடிகால் முறைகள் மற்றும் ஏனைய சுற்றாடல் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் என்பனவற்றில் ஈடுபடுவதற்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அரசுசார்பற்ற அமைப்புக்களுக்கும் ஈடுபாடுள்ள தனிப்பட்டவர்களுக்கும் கொடுகடன்களை வழங்குவதும் இச் செயற்றிட்டத்தின் குறிக்கோள்களாக இருந்தன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களான ஆறு பிரதேச அபிவிருத்தி வங்கிகள், தேசிய அபிவிருத்தி வங்கி, சனச அபிவிருத்தி வங்கி, ஆகிய கடன் வழங்குகின்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களுக்கு எதிராக மீள் நிதியிடலை வழங்குவதன் வாயிலாக கொடுகடன் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதே வங்கியின் முக்கிய தொழிற்பாடாக இருந்தது. தனியார் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதியிடுவதற்கு சந்தை வீதங்களை அடிப்படையாகக் கொண்ட தனியார்துறைக் கடன்களைப் பயன்படுத்தும் சாத்தியங்களை ஆராய்வதற்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த திட்டமாக இச்செயற்றிட்டம் காணப்பட்டது. கொடுகடன் வசதிகளில் பெரும்பாலானவை தனிப்பட்டவர்களினதும் சனசமூகங்களினதும் பயன்படுத்தப்பட்டன. கடன் நிதியத்தில் 82 சதவீதம் அதாவது ரூ.221.8 மில்லியன் குழாய் நீர், சுகாதார வசதிகள் என்பனவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்பட்ட கடன்களுக்காகவும் மீதி வடிகால் முறைகளின் கட்டுமானம், சனசமூக நிலையங்களின் நீர் வழங்கல் திட்டங்கள், நடைபாதைகளைக் கட்டல், சமயலறை அபிவிருத்தி மற்றும் குடிநீர் முறைசார், வளமாக்கி (கலவை) செயற்றிட்டங்களின் மேம்பாடு, கழிவுகளை அகற்றுவதற்காக மாநகர சபையின் இழுவைப் பெட்டிகள், இழுவைகள் என்பனவற்றின் கொள்வனவிற்கும் பயன்படுத்தப்பட்டது.

செயற்றிட்டத்தின் வெளிநாட்டு நிதியிடல் ஒழுங்குகள் 2001 ஒத்தோபர் இறுதியில் நிறுத்தப்பட்டன. முன்னர் வழங்கப்பட்ட கடன்களின் மீளப் பெறுகைகளையும், சுழல்முறை நிதியத்தினூடாக முதலீட்டிலிருந்து கிடைத்த வட்டி வருமானத்தையும் மீளப்பயன்படுத்துவதன் மூலம் செயற்றிட்டத்தினை தொடர்வதற்கு வங்கி முயற்சிகளை மேற்கொண்டது.

## உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டுக் கொடுகடன் திட்டம்

உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டுக் கொடுகடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் வேளாண்மை அமைச்சின் வேண்டுகோளிற்கிணங்க 1997இல் தொடங்கியது. கொடுகடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அரசினால் பெறப்பட்ட யப்பானிய உணவு மேம்பாட்டுக்கொடையின் இணைக்கிணை நிதியத்திலிருந்து அரசு ரூ.284 மில்லியன் கொண்ட தொகையை அரசு வழங்கியது. இக்கொடுகடன் திட்டமானது வேளாண்மையாளர் அமைப்புக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றினூடாக கொடுகடனை வழிப்படுத்தும் விதத்திலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. 2001 இறுதியில் நிதியிடப்பட்ட மொத்தத் தொகை ரூ.29 மில்லியனாகும். பெறுகின்ற கடன்களுக்கு வங்கிகளினால் ஏற்றுக் கொள்ளத்தக்க பிணைகளை வழங்குவதில் கூட்டுறவுச் சங்கங்களும் வேளாண்மையாளர் அமைப்புக்களும் எதிர்நோக்கிய இடர்பாடுகளே கொடுகடனின் குறைப் பயன்பாட்டிற்கான முக்கிய காரணமாக விளங்கியது. கொடுகடன் பகிர்ந்தளிப்பினை விரைவுபடுத்தும் நோக்குடன் இத்திட்டத்தினைத் திருத்தியமைப்பதற்கு வங்கி வேளாண்மை அமைச்சுடன் பேச்சுவார்த்தை களிலீடுபட்டு வருகின்றது.

## சிறுவேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்

1990இல் மத்திய வங்கியினால் தொடங்கப்பட்ட சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டமானது வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் ஐ.அ.டொலர் 6.7 மில்லியன் கொண்ட கடன், கனேடியன் பன்னாட்டுஅபிவிருத்தி முகவரின் ஐ.அ.டொலர் 6.6 மில்லியன் கொடை மற்றும் அரசின் பங்களிப்பான

ஐ.அ.டொலர் 4.1 மில்லியன் கொண்ட உதவுதொகையின் மூலம் கூட்டாக நிதியிடப்பட்டது. முறைசார்ந்த நிறுவனங்களிடமிருந்து கொடுகடன் வசதிகளைப் பெறமுடியாமல் இருந்த கிராமிய ஏழை மக்களின் வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்கு நிறுவனரீதியான கொடுகடன் வழிப்படுத்துவதற்கான பயன்மிக்க கொடுகடன் வழங்கல் பொறிமுறையொன்றினை ஏற்படுத்துவதே இச் செயற்றிட்டத்தின் நோக்கமாக இருந்தது. இச் செயற்றிட்டம் நன்மை பெறுநர்களின் பொருளாதார, சமூக நிலைமைகளையும் பொதுவான நலன்புரிகளையும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

"இசுறு" என அழைக்கப்பட்ட சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் செலவுச் சிக்கனமான கொடுகடன் வழங்கல் முறையாக இருந்ததுடன் காலி, மாத்தறை, கண்டி மற்றும் புத்தளம் ஆகிய நான்கு மாவட்டங்களில் தொழிற்பட்டு வருகின்றது. செயற்றிட்டமானது வங்கித் தொழில்முறையின் இணைப்பினை உள்ளடக்கியுள்ள கொடுகடன் அதிகாரிப்பு அணுகு முறையின்மீது தங்கியிருந்தது. வங்கி அரசின் சார்பில் நிறைவேற்று முகவராக தொழிற்பட்டது. தொடர்பான மாவட்டங்களிலுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கிகளிலிருந்து விடுவிக்கப்பட்ட அலுவலர்கள் செயற்றிட்டத்தின் முகாமைத்துவ மற்றும் களமட்ட தொழிற்பாடுகளிலும் தமது பங்கினை வழங்கின.

செயற்றிட்டத்திற்கான வெளிநாட்டு நிதியிடல் ஆரம்பத்தில் அட்டவணையிட்டவாறு 1997 திசெம்பரில் முடிவடைந்ததுடன், 1999இல் வங்கி, வேளாண்மை அபிவிருத்திக்காக பன்னாட்டு நிதியத்துடன் கையெழுத்தான கடன் உடன்படிக்கையில் வசதியளிக்கப்பட்டுள்ளவாறு கடன் மீளப்பெறுகைகளை மீள் சுற்றோட்டப்படுத்தி செயற்றிட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றது.

2001 இறுதியில் செயற்றிட்டமானது நான்கு மாவட்டங்களிலுமுள்ள 3,246 கிராமங்களை உள்ளடக்கியிருந்தது. உதவிகளை வழங்குவதற்காக இனங்காணப்பட்ட நன்மை பெறுநர்களைக் கொண்ட 12,127 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. இக்குழுக்களிலுள்ள நன்மை பெறுநர்களின் மொத்த எண்ணிக்கை 72,185ஆக விளங்கி செயற்றிட்ட வடிவமைப்பில் நிர்ணயிக்கப்பட்ட 32,000 கொண்ட இலக்கத்திலும் பார்க்க மிக உயர்வாக இருந்தது. செயற்றிட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்டவாறு மிகுந்த கவனத்திற்குரியதொரு பண்பாக செயற்றிட்ட நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பு மிக உயர்வாக இருந்தமை விளங்கியதுடன் இவர்களின் எண்ணிக்கை 50,988 ஆக விளங்கி நன்மை பெறுநர்களின் மொத்த எண்ணிக்கையில் 70 சதவீதத்திற்கும் வகைகூறியது. கடன் பெறுநர்கள் வருவாய் உருவாக்க சுயவேலைவாய்ப்பு நடவடிக்கைகளை மேற் கொள்வதனை இயலச் செய்யும் பொருட்டு ஆண்டின் இறுதியில் நுண்பாகக் கடனாக கடன்பாட்டாளருக்கு ரூ.753 மில்லியன் கொண்ட தொகை முற்பணமாக வழங்கப்பட்டது. கடன்களின் சராசரி அளவு ரூ.11,120 ஆகக் காணப்பட்டது. செயற்றிட்டம் 97 சதவீதத்திற்கு மேற்பட்ட உயர்ந்த மீளப்பெறல் வீதத்தினைத் தொடர்ச்சியாகப் பேணியது. மேலும் நன்மை பெறுநர்கள் கட்டாய சேமிப்புக்கள் மற்றும் சுயவிருப்பு குழு சேமிக்களினூடாக 2001 இறுதியில் ரூ.109.3 மில்லியனைச் சேமித்தன.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, 2001இலும் கடன் மீளப் பெறுகைகள் பிரதேச அபிவிருத்தி வங்கிகளுக்கு மீள் நிதியிடலை வழங்குவதற்காக மீள் சுழற்சிக்கு விடப்பட்ட வேளையில் மிகை நிதிகளை முதலீடு செய்வதன் மூலம் உழைக்கப்பட்ட வட்டி வருமானம் செயற்றிட்டத்தின் நிருவாக மற்றும் நன்மை பெறுநர்களின் பயிற்சி செலவினத்தை ஈடு செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

சுய உதவிக்குழுக்களை அவையாகவே முறைசார்ந்த கூட்டுச் சபைகளாக ஒருங்கிணைவதற்கு ஊக்குவிப்பதன் மூலமாக வங்கி 2001ஆம் ஆண்டிலும் இசுறு அபிவிருத்திச் சங்கங்களைத் தொடர்ந்தும் ஏற்படுத்தி வந்தது. முதிர்ச்சியடைந்த சுய உதவிக் குழுக்கள் அவர்களின் நிதித்தளத்தினை வலுப்படுத்தியும் பேச்சுவார்த்தை இயலளவினை மேம்படுத்தவும் இயலாற்றல் விரிவாக்கத்தினை உயர்த்தி பெருமளவு ஆற்றலை எய்துவதற்குமான வசதிகளை வழங்கும் பொருட்டு 1997 இல் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இதன்படி, கிராமத்தில் தொழிற்படுகின்ற பல சுய உதவிக் குழுக்கள் இசுறு அபிவிருத்திச் சங்கங்களாக உருவாக்கப்பட்டதுடன் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட சங்கமாக கம்பனிப் பதிவாளருடன் பதிவு செய்யப்பட்டன. 2001 இறுதியளவில், 203 அத்தகைய வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட சங்கங்கள் உருவாக்கப்பட்டதுடன் இவ்வாண்டில் 16 சங்கங்கள் அதிகரித்துக் காணப்பட்டன. தனிப்பட்ட சங்கங்களை மாவட்ட மட்டத்தில் சம்மேளனப்படுத்தும் நடவடிக்கைகள் நான்கு மாவட்டங்களில் மேற் கொள்ளப்பட்டுள்ளன. சம்மேளன உறுப்பினர்கள் சங்க உறுப்பினர்களினால் அவர்களிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாண்டில், இசுறு மாவட்ட சம்மேளனம் உறுப்பினர்களின் பொருளாதார, சமூக, கலாச்சார திறமைகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக அவர்களின் நடவடிக்கைகளை விரிவாக்கிக்

கொண்டுள்ளன. இசுறு சங்கங்களினது உறுப்பினர்களின் பிள்ளைகளில் தேவைப்படுவோருக்கு நிதியியல் உதவிகளை வழங்கும் நோக்குடன் கண்டி, மாத்தறை, மாவட்டங்களில் புலமைப் பரிசில் நிதியங்கள் நிறுவப்பட்டுள்ளன. நன்மை பெறுநர்களின் உற்பத்திப் பொருட்களை விற்பதற்கு வழிசெய்யும் வகையில் நான்கு மாவட்டங்களில் வர்த்தக காட்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை மேற்கொண்டதன் மூலமாக தனியார்துறை நிறுவனமொன்றிற்கும் மற்றும் ஆயுர்வேத மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் என்பனவற்றிற்கு மூலிகைகளை வழங்குவதற்கானதொரு நிகழ்ச்சித் திட்டத்தினை இசுறு செயற்றிட்டம் மேற்கொண்டது. மேலும், சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் நீண்ட காலத்தில் மேலதிக வருமானத்தை உழைப்பதற்குமாக முறையே புத்தளம் மற்றும் மாத்தறை மாவட்டங்களிலுள்ள நன்மை பெறுநர்களிடையே மூலிகைக் கன்றுகளையும் மற்றைய பொருளாதார ரீதியில் நன்மையளிக்கும் பயிர்களையும் விநியோகிப்பதற்கு இசுறு செயற்றிட்டம் ஒழுங்குகளை மேற்கொண்டது. "அரிசி விளைச்சலைச் செறிவாக்கும் முறை"என அழைக்கப்படும் புதிய முறையிலான நெற்செய்கைமுறையொன்று புத்தளம் மாவட்டத்திலுள்ள இசுறு செயற்றிட்டத்தினால் அதன் நன்மை பெறுநர்களுக்காக பரீட்சார்த்த முறையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையானது செலவினைக் குறைத்து விளைச்சலை அதிகரிக்கும்.

இசுறு அபிவிருத்தி சங்கங்களினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள பண்முகப்படுத்தல் நடவடிக்கைகள் இச் சங்கங்களின் மேம்பட்ட இயலளவினைப் பிரதிபலித்தன. 2001ஆம் ஆண்டு இறுதியில் இசுறு அபிவிருத்திச் சங்கங்களின் வழங்கப்பட்ட பங்கு மூலதனம், சேமிப்புக்கள் என்பன முறையே ரூ.7.9 மில்லியனாகவும், ரூ.9.5 மில்லியனாகவும் காணப்பட்டன. சங்கங்கள் அவற்றின் சொந்த நிதியத்திலிருந்து வழங்கிய கடன்கள் ரூ.79 மில்லியனாக விளங்கின.

### வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டம்

பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியினால் நிதியிடப்பட்ட வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டமானது தற்பொழுது காலி, மாத்தறை, புத்தளம், மற்றும் கண்டி மாவட்டங்களில் வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தினை பெருமளவிற்கு ஒத்ததாகவே இருக்கிறது. செயற்றிட்டமானது அதன் குறிக்கோள்களை அடைவதற்கான முக்கிய உத்தியோக குழுக்கடன் வழங்கல் கோட்பாடு மற்றும் கொடுகடன் அதிகரிப்பு அணுகுமுறை (அதாவது கொடுகடன் அதிகரிப்பு உதவிப் பணிகள்) யின் மீது கிராமிய வறிய மற்றும் நிலமற்ற குடும்பங்களுக்கு கொடுகடன் வசதிகளை வழங்கியது. இச்செயற்றிட்டம் களுத்துறை, அம்பாந்தோட்டை, பதுளை, நுவரெலியா, மாத்தளை, மற்றும் குருநாகல் ஆகிய ஆறு மாவட்டங்களில் தொழிற்படுத்தப்பட்டது. வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டமானது சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தினைப்போன்று அதே குறிக்கோள்களையும் நன்மை பெறுநர்களை இலக்கிடுவதனையும் பின்பற்றியது. செலவுச் சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாக கொடுகடன் வழங்கல் முறையொன்றினை நிறுவுதல், வருமானத்தை உழைக்கக்கூடிய பொருளாதார நடவடிக்கைகளில் கிராமியப் பெண்கள் பங்கேற்பதனை ஊக்குவித்தல், வறிய மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தினையும், சிக்கனத்தையும் புகட்டுதல், தொழிற்பயிற்சியை மேம்படுத்தல், வறிய மக்களின் தொழில் முயற்சி மற்றும் தொழிற்பாட்டு தேர்ச்சி, கிராமிய வறிய மக்களின் தன்னம்பிக்கையை கட்டியெழுப்புதல், மற்றவர்கள்மீது தங்கியிருக்கும் மனோபாவத்தை அவர்களிடமிருந்து அகற்றுதல் என்பன செயற்றிட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாக விளங்கின. வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டத்தின் இலக்கு நன்மை பெறுநர்களாக நான்கு சில்லு ஊர்தியினைக் கொண்டிராதவரும் மற்றைய நுண்பாக நிதியிடல் திட்டங்களின் கீழ் வசதிகள் எதனையும் பெற்றிராதவரும் மற்றைய எந்தவொரு நிதி மூலங்களுக்கும் பணம் செலுத்தத் தவறாத ஏறத்தாழ ரூ.3000/- இற்குக் குறைவான மாதாந்த வருமானத்தினைப் பெறும் குடியிருப்பாளர்கள் காணப்பட்டனர்.

இச் செயற்றிட்டத்தின் கீழ் தொடர்பான மாவட்டங்களிலுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கிகள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களாகத் தொழிற்பட்டன. இலக்குத் தொகுதியினரை அடையாளங்காணவும் வங்கியிலிடத்தக்க வாடிக்கையாளர்களாக அவர்களை விருத்தி செய்து கொள்ளவும் கடன்களை வழங்கவும் அவற்றை மீளப்பெறவும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளுக்கு உதவுவதற்காக செயற்றிட்டப் பிரதேசத்தில் தொழிற்படுகின்ற சில அரசுசார்ந்த அமைப்புக்கள் பங்கு முகவர்களாக அனுமதிக்கப்பட்டன. பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியின் செயற்றிட்டத்திற்கான நிதியிடல் 31.12.2006 இல் நிறுத்தப்படும். அரசிற்கும் பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கிக்குமிடையிலான உடன்படிக்கையின்படி, கடன் மீளப் பெறுகைகளிலிருந்தும் வட்டி வருமானத்திலிருந்தும் சேகரிக்கப்படுகின்ற சுழலும் நிதியினைப் பயன்படுத்தி

மேலும் 20ஆண்டுக் காலப்பகுதிக்கு வங்கியினால் இச் செயற்றிட்டத்தினை தொடர்ந்து மேற்கொள்ளமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாவட்ட மட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பங்காளர் முகவர்களிடம் இணைப்புக்களை வழங்குவதற்கு திணைக்களம் செயற்றிட்ட மாவட்ட இணைப்பாளரை நியமிப்பதன் மூலம் நிறுவன ரீதியான அமைப்பினை நிறுவியுள்ளது. 31.12.2001 அன்று உள்ளவாறு 9,127 நன்மை பெறுநர்களுடன் 1,687 குழுக்கள் உருவாக்கப்பட்டிருந்தன. குழுச் சேமிப்பு என்றவடிவில் ரூ.1.4 மில்லியன் கொண்ட தொகை சேகரிக்கப்பட்டது. செயற்றிட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையும் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகையும் 2001 இறுதியில் முறையே 130 ஆகவும் ரூ.1.2 மில்லியனாகவும் காணப்பட்டன.

### மாத்தளைப் பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டம்

1999இல் நடைமுறைக்கு வந்த வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட மாத்தளைப் பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டம் 2001ஆம் ஆண்டிலும் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தது. செயற்றிட்டத்தின் முக்கிய பண்புகளிலொன்றாக தனியார்துறையின் செயற்றிறன் வாய்ந்த பங்கேற்பு அமைகின்றது. இச் செயற்றிட்டத்தின் ஆரம்பத் திட்டப்படி எதிர்காலத்தில் செயற்றிட்ட முகாமைத்துவத்தில் அரசல்லா அமைப்புக்கள் உட்பட குடியியல் சங்கங்கள் பெருமளவு பங்களிப்பினைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்பட்டதுடன் இது அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வழமையான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்திலிருந்தும் வேறுபட்டதாகவுமிருந்தது. இச் செயற்றிட்டத்தின் நோக்கம் செயற்றிட்டப் பிரதேசத்திலுள்ள கிராமிய வறிய மக்களினதும் பண்ணைக் குடும்பங்களினதும் வருமானத்தினை நிரந்தரமாகவும் உறுதியாகவும் உயர்த்துவதேயாகும். செயற்றிட்டத்தின் கிராமிய நிதியிடல் கூறின் நிறைவேற்று முகவராக வங்கி தொழிற்பட்டது. வங்கியின் மாத்தளைப் பிரதேச அலுவலகம் பிரதேச மட்டத்தில் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கப் பொறுப்பாக இருந்தவேளையில் கொடுகடன் திட்டத்தின் கண்காணிப்பிற்கும் மேற்பார்வைக்கும் கிராமியக் கொடுகடன் திணைக்களம் பொறுப்பாக இருந்தது.

அரசிற்கு வழங்கப்பட்ட கடனில் சிஎஉ 2.0 மில்லியன் செயற்றிட்டத்தின் கீழ் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களை மீள நிதியிட ஒதுக்கப்பட்டது. கிராமிய நிதியிடல் கூறின் தொழிற்பாடுகளுக்கு உதவும் பொருட்டு திட்ட நடைமுறைப்படுத்தல் அமைச்சின் பிரதேச அபிவிருத்திப் பிரிவின் கீழ் செயற்றிட்ட முகாமைத்துவ அலுவலகமொன்று மாத்தளையில் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இவ்வலுவலகம் இச் செயற்றிட்டத்தின் கிராமிய நிதியிடல் கூறின் நடைமுறைப்படுத்தலுக்கு உதவுகின்றது.

செயற்றிட்டத்தின் கீழ் 2001இல் கந்துரட்டை அபிவிருத்தி வங்கி முதலாவது பங்கேற்கும் கொடுகடன் நிறுவனமாக உள்ளடக்கப்பட்டதுடன் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, அட்டன் நசனல் வங்கி, செலான் வங்கி, சம்பத் வங்கி மற்றும் சனச அபிவிருத்தி வங்கி ஆகிய ஆறு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக செயற்றிட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டன. செயற்றிட்டத்தின் கிராமிய நிதியிடல் கூறின் நடைமுறைப்படுத்தலுக்காக கிராமிய கொடுகடன் திணைக்களம் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறுவுறுத்தல்களை வழங்கியது. இவ்வாண்டில் கந்துரட்ட அபிவிருத்தி வங்கி கொடுகடன் திட்டத்தின் கீழான பயன்பெறுநர்களுக்கு ரூ.33.6 மில்லியனை பகிர்ந்தளித்தது.

### முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தமுறை உட்பட புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம்

நெல்லிற்கும் துணை உணவுப் பயிர்களுக்கும் குறுங்காலப் பயிர்ச் செய்கைக் கடன்களை வழங்குகின்ற விதத்தில் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் நாடு முழுவதும் தொழிற்பாட்டிலிருந்து வருகின்றது. முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையுடன் தொடர்பான நடவடிக்கைகள் ஆய்விற்குரிய ஆண்டில் தீவிரமாக செயல்படுத்தப்பட்டன. இவ்விரு திட்டங்கள் பற்றிய பிரதான கலந்துரையாடல்கள் இவ்வறிக்கையின் பகுதி 1இன் கிராமிய வங்கித்தொழில் மற்றும் கொடுகடன் பிரிவின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (சுழல் நிதிய) செயற்றிட்டம்

கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்திலிருந்தான நிதியியல் உதவியுடன் கேகாலை மாவட்டத்தில் 1986-1996 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச் செயற்றிட்டம் அட்டவணையிடப்பட்டவாறு 1996இல் நிறுத்தப்பட்டது. செயற்றிட்டத்தின் கொடுகடன்கூறு மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் அப்போதைய கேகாலை மாவட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

கொடுகடன் நிறுத்தப்பட்டதன் பின்னர் வேளாண்மை மற்றும் கேகாலை மாவட்டத்திலுள்ள

குறைந்த வருமானம் பெறும் தொகுதியினர், தொழில் முயற்சியாளர் மற்றும் இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புக் கடன்கள் என்பனவற்றிற்காக தொடர்ந்தும் மீள் நிதியிடல் வசதிகளைக் கிடைக்கச் செய்வதற்காக கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறின்கீழ் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் மீளப் பெறல்களிலிருந்து வங்கி சுழலும் நிதியினை நிறுவி அதனைப் பேணியது.

கொடுகடனை வழங்குவதற்காக கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (சுழல் நிதி) செயற்றிட்டத்தில் பயன்படுத்தப்பட்ட பொறிமுறையாக செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவின்கீழ் வியாபார அபிவிருத்தி அலுவலர்கள் தகைமை பெற்ற கடன்பாட்டாளர்களை அடையாளங்கண்டு வியாபார அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்ததுடன் இறுதியாக கடன் பெறுவதற்காக அவர்களை பங்கேற்பு கொடுகடன் நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தினர்.

மாகாணத்தில் கொடுகடனுக்குக் காணப்பட்ட உயர்ந்த கேள்வியை கவனத்திற் கொண்டு சப்பிரகமுவா மாகாணம் முழுவதையும் உள்ளடக்கும் நோக்குடன் வங்கி கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (சுழலும் நிதி) செயற்றிட்டத்தினை இரத்தினபுரி மாவட்டத்திற்கும் விரிவாக்குவதற்கு ஒப்புதலளித்தது. இரத்தினபுரி மாவட்டத்தில் மீள்நிதியிடல் வழங்குவதற்காக ஆரம்பத்தில் ரூ.25 மில்லியன் கொண்டதொரு தொகை ஒதுக்கப்பட்டது. கேகாலை மாவட்டத்தில் தொழிற்பாட்டிலுள்ள கொடுகடன் வழங்கல் பொறிமுறை இரத்தினபுரி மாவட்டத்திலும் பின்பற்றப்படும்.

2001 இறுதியில் செயற்றிட்டம் ரூ.179.5 மில்லியன் பெறுமதி கொண்ட 4,738 துணைச் செயற்றிட்டங்களுக்கு நிதியிட்டது. 2001ஆம் ஆண்டுப்பகுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்காக மக்கள் வங்கி, இலங்கை வங்கி, மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி வங்கி என்பன ரூ.55.51 மில்லியனை வழங்கின. 2001ஆம் ஆண்டின் இறுதியில் செயற்றிட்டத்தின் பொதுவான மீளப் பெறல் வீதம் 94 சதவீதமாகக் காணப்பட்டது.

### சுறதுற நிகழ்ச்சித்திட்டம்- நுண்பாக தொழில் முயற்சிக் கொடுகடன் திட்டத்தினூடாக சுயவேலை வாய்ப்பினை மேம்படுத்தல்

சுறதுற நிகழ்ச்சித் திட்டத்தின் மூன்று பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களான இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் அட்டன் நசனல் வங்கி என்பன அவற்றின் சொந்த நிதியத்திலிருந்து ஆண்டிற்கு 10 சதவீத வட்டியில் நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் கடன் வழங்கல்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு அரசாங்கம் தொடர்ந்து 10 சதவீத வட்டி உதவிதொகையினை செலுத்தியது. கட்டம் IIஇன் கீழ் தகைமை பெற்ற கடன்பாட்டாளர்கள் வருமான உருவாக்க சுயவேலை வாய்ப்பு செயற்றிட்டத்தினை மேற்கொள்வதற்கேதுவாக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் ரூ.1,300 மில்லியன் பெறுமதி கொண்ட கடன்களை வழங்க இலக்கிடப்பட்டன. இத்திட்டம் தொழிலற்றவர்களுக்கு குறிப்பாக படித்த இளைஞர்கள் புதிய செயற்றிட்டம் ஒன்றினைத் தொடங்க அல்லது ஏற்கனவேயுள்ள செயற்றிட்டங்களை விரிவாக்குவதற்கு கடன்களை வழங்கியது.

ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் 500 செயற்றிட்டங்களின் பொருட்டு ரூ.13.9 மில்லியனை வழங்கியதன் மூலம் கட்டம் IIஇன் கீழ் வழங்கப்பட்ட மொத்தத் தொகை 2001 இறுதியில் ரூ. 596.42 மில்லியனாக அதிகரித்தது. 1997இல் தொழிற்பாடுகளை நிறைவுசெய்த சுறதுற கட்டம் Iஇன் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மீளளிப்புக்களை மத்திய வங்கி தொடர்ந்தும் கண்காணித்தது. திட்டத்தின் கட்டம் Iஇன் கீழ் 5 ஆண்டுகள் சலுகைக் காலத்தினை உள்ளடக்கி 7 ஆண்டு மீள் கொடுப்பனவு காலப்பகுதியில் ஆண்டொன்றிற்கு 4 சதவீத வட்டிவீதத்தில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள் நிதியிடலை வழங்குவதற்காக அரசு ரூ.350 மில்லியன் கொண்ட தொகையை ஒதுக்கியது.

### தென்மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்ட (சுழலும் நிதிய) கொடுகடன் திட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்டு 2000ஆம் ஆண்டில் முற்றுப் பெற்ற தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கொடுகடன் நடவடிக்கைகளை தொடர்வதற்காக 2000ஆம் ஆண்டு யூலையில் தென்மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்ட (சுழலும் நிதிய) கொடுகடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சுழலும் நிதியத்திற்கான மொத்த ஒதுக்கு ரூ.194 மில்லியனாகக் காணப்பட்டது. கொடுகடன் திட்டத்தின் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினூடாக கிடைக்கச் செய்யப்பட்ட கொடுகடன் நிதியத்துடன் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மாவட்டங்களில் கிராமிய நுண்பாக மற்றும் சிறிய, நடுத்தர, அளவுக் கைத்தொழில்களின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட்டன.

தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக வருமான மட்டத்தினை உயர்த்துவதற்காக சுயவேலைவாய்ப்பு, சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகள் என்பனவற்றிற்கும்

தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்குமாக நிதியிடுவதே கொடுகடன் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.

2001இல் மொத்தக் கொடுகடன் பகிர்ந்தளிப்பு ரூ.145 மில்லியனாக விளங்கிய வேளையில் வங்கி நிதியிடல் இவ்வாண்டில் ரூ.128 மில்லியனாக விளங்கி ஆண்டின் இறுதியில் மொத்த மீள் நிதியிடல் ரூ.166 மில்லியனாகக் காணப்பட்டது.

## பிரதேச அலுவலகங்கள்

மத்திய வங்கியின் மூன்று பிரதேச அலுவலகங்களின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் பொறுப்பு 2000 செத்தெம்பரில் கிராமியக் கொடுகடன் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அன்றிலிருந்து திணைக்களம் தொடர்ந்தும் பிரதேச அலுவலகங்களின் முக்கிய தொழிற்பாட்டுத்துறைகளை அதாவது வழமையாக பிரதேச அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள காசோலைத் தீர்ப்பனவு, நாணயத் தொழிற்பாடுகள் (மாத்தறை, அநுராதபுரம் மட்டும்) தரவு சேகரிப்புக்கள் அபிவிருத்திக் கொடுகடன் மற்றும் ஏனைய கடன் வழங்கல் திட்டங்கள் மற்றும் அவற்றின் அலுவலகங்களின் பொதுநிருவாகம் என்பவற்றை கண்காணிக்கின்றன.

மேற் கூறப்பட்ட தொழிற்பாடுகளை பிரதேச அலுவலகங்கள் தொடர்ந்தும் மேற்கொண்ட வேளையில் அவற்றின் தொடர்பான பிராந்தியங்களின் சமூக பொருளாதார அபிவிருத்திகளுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளில் பெருமளவு வலியுறுத்தல்களை மேற்கொண்டது. வேளாண்மை உற்பத்திகள் நியாயமான விலையில் சந்தைப்படுத்துவதற்காக வேளாண்மை உற்பத்திகளை வாங்குபவர்களும் விற்பனை செய்பவர்களும் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களைச் செய்துகொண்ட வேளையில் வாங்குனர்கள் தேவையான பண்டங்களின் உறுதியான நிரம்பலை நியாயமான விலைகளில் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருந்தனர். இம் முயற்சியில், பிரதேச அலுவலகங்கள் இப்பிரதேசத்திலுள்ள வங்கித் தொழில் சமூகங்களின் உதவியுடன் இரு கட்சியினரையும் இணக்கப்பாட்டிற்கு கொண்டுவருவதில் பெரும் பங்காற்றினர். இரு அரச வங்கிகள், பிரதேச அபிவிருத்தி வங்கிகள் மற்றும் தனியார் வங்கி என்பன இத்திட்டத்தினை மேம்படுத்துவதில் பிரதேச அலுவலகங்களுக்கு தீவிர பங்களிப்பினை நல்கின.

மேலும் தொடர்பான செயற்றிட்டங்களின் கீழ் கடன்பாட்டாளர்களுக்கான ஒழுங்கமைத்தல், கடன்வழங்கும் வங்கிகளுக்கும் நன்மை பெறுநர் களுக்குமிடையில் அறிவினையும் தொடர்புகளையும் ஏற்படுத்துவதன் மூலமாக பிரதேச அலுவலகம் கொடையினால் நிதியிடப்படும் திட்டங்களில் சிலவற்றை நடைமுறைப்படுத்துவதில் கிராமிய கொடுகடன் திணைக்களத்திற்கு உதவியது. வடமத்திய மாகாணத்திலும் மாத்தறை மாவட்டத்திலும் தொழிற்படுகின்ற அத்தகைய மூன்று செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பு அநுராதபுரம் மற்றும் மாத்தறை மாவட்டங்களிலுள்ள பிரதேச அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## பிரதேச அலுவலகம், மாத்தறை

மாத்தறைப் பிரதேச அலுவலகம் வங்கித் தொழில் அபிவிருத்தி, தரவுச் சேகரிப்பு, நாணயத் தொழிற்பாடுகள், ஆராய்ச்சி மற்றும் புள்ளி விபரங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தியுடன் தொடர்பான நடவடிக்கைகள் என்பனவற்றுடன் தொடர்பான தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. அபிவிருத்தி வங்கித்தொழில் நடவடிக்கைகள் ருகுண அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை ஊக்குவித்தல், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டத்தினையும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயல் திட்டத்தினை நடைமுறைப்படுத்த உதவியளித்தல், கிராமியக் கொடுகடன் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப் பட்ட மற்றைய கொடையாளர்களினால் நிதியிடப்பட்ட கொடுகடன் நிகழ்ச்சித்திட்டங்களை இணைத்தல் மற்றும் இப்பகுதியிலுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் ஒத்துழைப்புடன் கிராம ஏற்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கி யிருந்தன.

தென் மாகாணத்தில் நெல், பயறு, மற்றும் பழவகை உற்பத்தி செய்யும் வேளாண்மை யாளர்களிடையே முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் பற்றி தொடர்ச்சியான விழிப்புணர்பு நிகழ்ச்சித் திட்டங்களை பிரதேச அலுவலகம் நடத்தியது. ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் பிரதேச அலுவலகம் அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள அம்பலாந் தோட்டை மற்றும் அங்குண கொல பெலஸ்ச ஆகிய இடங்களிலுள்ள நெல் வேளாண்மையாளர் களுக்கும் உள்ளூர் ஆலையாளர்கள்/வாங்குனர்களுக்கு மிடையில் ரூ.25.0 மில்லியன் பெறுமதி கொண்ட 343 முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை செய்து வைக்கக்கூடியதாக இருந்தது.

வழமையான மத்திய வங்கித் தொழில் தொழிற்பாடுகளின் கீழ் பிரதேச அலுவலகம் நாணயத் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டதுடன் சுற்றோட்டத்திலில்லாத நாணயக் குத்திகளைச்

சேகரிப்பதிலும் வங்கிக்கு உதவியது. ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் பிரதேச அலுவலகம் ரூ.4,283 மில்லியன் பெறுமதியான நாணய குத்திகளைக் கொண்ட 1973 நாணயப் பைகளைக் கொண்ட மூன்று சரக்குத் தொகுதிகளை வங்கியின் நாணயத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கக் கூடியதாக இருந்தது. மேலும் பிரதேச அலுவலகம் நடைமுறைக் கணக்குகளினூடாக வர்த்தக வங்கிகளுக்கு வைப்பு மற்றும் மீளப்பெறல் வசதிகளையும் பொதுமக்களுக்கு செலாவணி வசதிகளையும் வழங்கியது. ஆய்விற்குரிய ஆண்டில் இப் பிரதேசத்தில் தொழிற்படும் ஆறு வர்த்தக வங்கிகள் மாத்தறை பிரதேச அலுவலகத்தின் நாணயப் பிரிவில் ரூ.2,695.7 மில்லியனை வைப்புச் செய்த வேளையில் ரூ.4,402 மில்லியனை எடுப்பனவு செய்தன.

மேலும், பிரதேச அலுவலகம் மாத்தறை மாவட்டத்திலுள்ள மாத்தறை நிலையத்திலிருந்து வாராந்த அடிப்படையிலும் மற்றைய ஆறு நிலையங்களிலிருந்தும் மாதாந்த அடிப்படையிலும் முக்கிய உணவு விடயங்களின் உற்பத்தியாளர், மொத்த விற்பனை மற்றும் சில்லறை விலைகளை சேகரிப்பதன் மூலம் நாடாளவிய தரவு சேகரிப்பு முறையில் வங்கியின் புள்ளி விபரவியல் திணைக்களத்திற்கு தொடர்ந்தும் உதவிவருகின்றது. நாடளாவிய தரவுச் சேகரிப்புத் திட்டங்களின் கீழ் தென்மாகாணத்தில் நியமிக்கப்பட்ட புலனாய்வாளர்கள் இடையிடையே எழுந்தமானமான பரீட்சார்த்த பரிசோதனைகளையும் அவர்களுடன் சந்திப்புக்களை மேற் கொள்ளுவதன் மூலமும் புள்ளிவிபரத்திணைக்களத்திற்கு பிரதேச அலுவலகம் தொடர்ந்தும் உதவியது. மேலும் புள்ளி விபரத் திணைக்களத்தின் வேண்டுகோளின்படி பிரதேச அலுவலகம் 2001ஆம் ஆண்டில் மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களிலுள்ள பிரிவுச் செயலாளர் பிரிவுகளிலுள்ள சிறு அளவு தொழில் முயற்சிகளின்மீது அளவீடொன்றினை நடத்தியது.

ஆய்விற்குரிய ஆண்டில் பிரதேச அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் ஐந்து நன்மை பெறுநர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (162 பேர் பங்கேற்றனர்) உயர்தர மாணவர்களுக்கான 14 கல்வி ஆய்வரங்குகள் (425 பேர் பங்கேற்றனர்). வங்கியின் இலங்கை பாரம்பரிய செயற்றிட்டம் மற்றும் றுகுண பல்கலைக் கழகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட வியாபார முயற்சிகளை ஆரம்பித்தல் என்பனவற்றிற்கான உதவியையும் தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கைகளுக்கான உதவியையும் உள்ளடக்கியிருந்தன.

## பிரதேச அலுவலகம், அநுராதபுரம்

அநுராதபுர பிரதேச அலுவலகம் அதன் முக்கிய நடவடிக்கைகளான கடன் வழங்கல் அபிவிருத்தி மற்றும் நுண்பாக தொழில் முயற்சி அபிவிருத்தி, முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறைகளை ஊக்குவித்தல், இரு கொடையாளர் மூலம் நிதியிடப்பட்ட கொடுகடன் நிகழ்ச்சித் திட்டங்களான வடமத்திய மாகாண – கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம், மற்றும் வட மத்திய மாகாண பங்கேற்புக் கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் என்பனவற்றை நடைமுறைப்படுத்தல் என்பனவற்றைத் தொடர்ந்தும் மேற் கொண்டன. பிரதேச அலுவலகம் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கான ஆய்வரங்குகளை ஒழுங்கு செய்தல், விலைத் தகவல்களையும் தரவுகளையும் சேகரித்தல், நாணயத் தொழிற்பாடுகள் மற்றும் மத்திய வங்கியின் வெளியீடுகளின் விற்பனை என்பனவற்றில் தொடர்ந்தும் ஈடுபட்டது.

பிரதேச அலுவலகம் அநுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த திட்டத்தை மேம்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததுடன் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, செலான்வங்கி, இரஜரட்டை அபிவிருத்தி வங்கி என்பனவற்றின் உதவியுடன் நெல், சோளம், சோயா மற்றும் பெரிய வெங்காயம் என்பனவற்றிற்காக ரூ.187.4 மில்லியன் பெறுமதி கொண்ட 3,981 உடன்படிக்கைகளில் கையெழுத்திடக் கூடியதாகவும் இருந்தது.

பிரதேச அலுவலகம் அநுராதபுர நிலையத்திலிருந்து வாராந்த அடிப்படையில் முக்கிய நுகர்வுப் பொருட்களின் உற்பத்தியாளர், மொத்த விற்பனை மற்றும் சில்லறை விலைகளின் மீதான தரவுகளைச் சேகரிப்பதிலும் புள்ளி விபரத் திணைக்களத்தின் நாடளாவிய தரவுச் சேகரிப்புத் திட்டங்களின்கீழ் தரவுச் சேகரிப்பாளர்களின் நன்மைக்காக ஆய்வரங்குகளை நடத்துவதிலும் புள்ளி விபரத்திணைக்களத்திற்கு உதவியது. மேலும் புள்ளி விபரத்திணைக்களத்தின் வேண்டுகோளின்படி, அநுராதபுர மாவட்டத்தின் சிறு வியாபாரங்களின் அளவீட்டிலும் பிரதேச அலுவலகம் உதவியது.

நுண்பாக நிதியிடல் அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் பிரதேச அலுவலகம் பொருத்தமான கடன்பாட்டாளர்களை அடையாளங் காண்பதிலும் நிதியிடலுக்காக வங்கிகளுக்கு அவர்களைப் பற்றிய விடயங்களை தெரிவிப்பதற்கு முன்னர் தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்வதுபற்றி அவர்களுக்கு கல்வியூட்டுவதிலும், வடமத்திய மாகாண பங்கேற்பு கிராமிய செயற்றிட்டத்திற்கும் உதவியது. மேற் குறிப்பிட்ட இரு செயற்றிட்டங்களையும் மீள வடிவமைக்கின்றமையின் காரணமாக மீள் நிதியிடல் கூறுகள் கொடுகடன்

கூறுகளுக்குள் உள்ளடக்கப்பட்டன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட செயற்றிட்டம் தொடர்பான அறிவினை வழங்கும் பொருட்டு அவர்களுக்கு இரு ஆய்வரங்குகளை பிரதேச அலுவலகம் நடத்தியது.

பிரதேச அலுவலகம் 2001ஆம் ஆண்டில் நன்மை பெறுநர்களுக்காக பல தேர்ச்சி அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது / ஒழுங்கு செய்தது. இவை 14 தொழிலற்ற பெண்களுக்காக ஆடை தயாரிப்புப் பற்றி 10 நாட்கள் நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தையும், தெரிந்தெடுக்கப்பட்ட வேளாண்மையாளர்களுக்காக அறுவடைக்குப் பின்னைய தொழில்நுட்பம் பற்றிய 9 நிகழ்ச்சித் திட்டங்களையும், ஒருங்கிணைக்கப்பட்ட பண்ணைத் தொழில்பற்றி மகாபெறியத்தன் அரச பண்ணையில் இடம்பெற்ற மூன்று நாள் வதிவிட நிகழ்ச்சித் திட்டங்களையும் உள்ளடக்கியிருந்தன.

வழமையான மத்திய வங்கித்தொழில் நடவடிக்கைகளின் கீழ், பிரதேச அலுவலகம் நாணயத் தொழிற்பாடுகளிலும் பிரதேச காசோலைத் தீர்ப்பனவு தொழிற்பாடுகளிலும் ஈடுபட்டது. 2001இல் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நாணயத்தின் அளவு ரூ.7,263.0 மில்லியனாகவும் வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட்ட தொகை ரூ.1,555.8 மில்லியனாகவும் காணப்பட்டன. பிரதேச அலுவலகம் வங்கியின் நாணயத் திணைக்களத்திற்காக மாவட்டத்திலுள்ள பல்வேறு சமயத் தலங்களிலுமிருந்து ரூ.10.2 மில்லியன் பெறுமதி கொண்ட நாணயக் குத்திகளைச் சேகரிக்கக் கூடியதாக இருந்தது. ஆய்விற்குரிய ஆண்டில் அநுராதபுர பிரதேச தீர்வகத்தினூடாக ரூ.7,273.5 மில்லியன் பெறுமதியான 242,380 மொத்த எண்ணிக்கை கொண்ட காசோலைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

### பிரதேச அலுவலகம், மாத்தளை

மாத்தளைப் பிரதேச அலுவலகம் ஆய்விற்குரிய ஆண்டில் மாத்தளை, நுவரெலியா, மற்றும் கண்டி மாவட்டங்களில் அதன் அபிவிருத்தி தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற் கொண்டது. பிரதேச அலுவலகத்தின் முக்கிய நடவடிக்கைகள் வேளாண்மைப் பண்டங்களுக்கான முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை ஊக்குவித்தல் , அறுவடைக்குப் பின்னைய தொழில்நுட்பம் தொடர்பாக வேளாண்மையாளர்களுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கும் கல்வி/விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல், உயர் தொழில்நுட்ப வேளாண்மை, தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் விலங்கு வளர்ப்பு அபிவிருத்தி என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இதன்படி, 2001இல் பிந்துவேவ பணியிருள்ளோருக்கான பயிற்சி நிலையத்தில் உயர் தொழில்நுட்ப வேளாண்மையில் 60 வேளாண்மையாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டமை, மாத்தளை, கண்டி, மற்றும் பதுளை மாவட்டங்களில் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் பற்றி நடத்தப்பட்ட 127 கூட்டங்கள் மற்றும் அறுவடைக்குப் பின்னைய தொழில் நுட்ப நிறுவனத்தினதும் வேளாண்மை அமைச்சினதும் உதவியுடன் அறுவடைக்குப் பின்னைய தொழில் நுட்பத்தின்மீது நடத்தப்பட்ட 9 நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

மாத்தளைப் பிரதேச அலுவலகம் ஆய்விற்குரிய ஆண்டில் நெல், பெரிய வெங்காய், மிளகு, சோளம் என்பன தொடர்பாக வேளாண்மையாளர்களுக்கும் வாங்குனர்களுக்குமிடையே 1,875 முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை ஒழுங்கு செய்தது. இம் முயற்சியில் பிரதேச அலுவலகத்திற்கு கந்துரட்ட மற்றும் ஊவா அபிவிருத்தி வங்கிகள், இலங்கை வங்கியும் சர்வோதய பொருளாதார தொழில் முயற்சி அபிவிருத்தி சங்கங்கள் என்பன ஒப்பந்தங்களுக்கான ஏற்பாட்டாளர்களாகத் தொழிற்பட்டு உதவியளித்தன.

ஆய்விற்குரிய ஆண்டில், பிரதேச அலுவலகம் கிராமியக் கொடுகடன் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொடுகடன் திட்டங்களின் அதாவது, தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம், கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டம் மற்றும் கண்டி மாவட்டத்திலுள்ள சிறுவேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் என்பனவற்றின் தொடர்பான நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற் கொண்டது. மேற்குறிப்பிட்டவைக்குப் புறம்பாக, மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டத்தின் கீழ் கொடுகடன் கூறினை நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பும் கிராமியக் கொடுகடன் திணைக்களத்தின் சார்பில் மாத்தளை பிரதேச அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

பிரதேச அலுவலகம் கண்டியிலும் மாத்தளையிலுமுள்ள இரு தீர்வகங்களின் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. கண்டித் தீர்வகம் ரூ.24,969 மில்லியன் பெறுமதி கொண்ட 803,402 காசோலைகளை கையாண்ட வேளையில் மாத்தளை தீர்வகம் 2001ஆம் ஆண்டில் ரூ.1,913 மில்லியன் பெறுமதி கொண்ட 94,599 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தது.

## ஆராய்ச்சி நடவடிக்கைகள்

நாணயக் கொள்கையைக் கொண்டு நடத்துதல் மற்றும் அரசாங்கத்திற்கான பொருளாதார மதியுரையாளர் என்ற வங்கியின் தொழிற்பாட்டுச் செயலாற்றம் தொடர்பாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அதன் நியதிக் கடப்பாடுகளை நிறைவேற்றும் விதத்தில் வங்கி முகாமைத்துவத்திற்கும் நாணயச்சபைக்கும் தகவல்களையும், பகுப்பாய்வுகளையும், கொள்கை மதியுரைகளையும் வழங்கி உதவுகிறது. அவ்வாறு செய்வதற்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இலங்கையிலும், உலகின் மற்றப்பகுதிகளிலும் பொருளாதார நடவடிக்கையுடன் தொடர்பான தகவல்களைச் சரிபார்த்து, ஒன்று திரட்டி, பகுப்பாய்வு செய்வதுடன் தொடர்பான துறைகளில் ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டது. பொருளாதார விடயங்கள் பற்றி பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் முக்கிய பணியாக இருப்பதனால் உரிய நேரத்தில் தரவுகளைப் பரப்புவதனையும் துல்லியமானதும் அனைத்தையும் உள்ளடக்கியதுமான தகவல்களை வழங்குவதனையும் மேம்படுத்துவதற்காக பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. திணைக்களம் பல்வேறு விடயங்கள் தொடர்பாக வங்கியின் மற்றைய திணைக்களங்களுக்கும் நிதி அமைச்சிற்கும் கொள்கை மதியுரைகளை வழங்கியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் பல்வேறு நிறுவனங்களினாலும் மூலவள ஆளணியினராகவும் நிபுணர்களாகவும் பணியாற்றுவதற்காக அடிக்கடி அழைக்கப்பட்டமையின் காரணமாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினது அலுவலர்களின் தொழில்நுட்பத் தேர்ச்சிகள் வங்கியின் மற்றைய திணைகளத்தினாலும் வெளியிலுள்ள முகவராண்மைகள் மற்றும் நிறுவனங்கள் இரண்டினாலும் பரந்தளவில் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாண்டில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அதன் நாணயக் கொள்கை மதியுரைப்பணிகளை மேம்படுத்துவது தொடர்பாக மேலும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. சுதந்திரமான மிதக்கவிடப்படுகின்ற செலாவணிவீத அமைப்பிற்கு நகர்ந்தமையைத் தொடர்ந்து நாணய மற்றும் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளுக்கான வரைச்சட்டமொன்றினை வடிவமைப்பதற்கு வங்கிக்கு உதவும் பொருட்டு ப.நா.நிதியத்திலிருந்து தொழில்நுட்ப பேராளர் குழுவொன்று வருகை தந்தது. விதந்துரைப்புக்களின் அடிப்படையில், நாட்டில் கூடியளவு சந்தை சார்ந்த நாணய முகாமைத்துவத்தை நோக்கி நகர்வதனை மேலும் உறுதிப்படுத்தவதற்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், மத்திய வங்கியின் மற்றைய திணைக்களங்களுடனும் நிதியியல் நிறுவனங்களுடன் செயல்படுகின்றது. மத்திய வங்கி அதன் முதன்மைக் குறிக்கோளான விலை உறுதிப்பாட்டினை அடைவதனை நோக்கிய அதன் பயணத்தின் பின்னணியில், நாணயக் கொள்கைக் கட்டமைப்பினை மேம்படுத்துவதன் மீது கூடியளவு வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆறு உறுப்பினர்களை உள்ளடக்கிய நாணயக் கொள்கைக் குழுவொன்று வங்கியில் ஏற்படுத்தப்பட்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பல அலுவலர்கள் இக்குழுவில் பணியாற்றிய வேளையில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமும் நாணயக் கொள்கைக் குழுவின் கலந்துரையாடலுக்கான பத்திரங்களைத் தயாரிப்பதற்கு முக்கிய பொறுப்பாக இருந்தது.

நடுத்தர காலத்தில் பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பு வேலைகளை நோக்கி நகர்வதற்கு மத்திய வங்கி எண்ணியுள்ளமையினால், அத்தகைய கட்டமைப்பினை நோக்கி நகர்வதற்குத் தேவையானவற்றை அறிக்கையிடுவதற்கு "பணவீக்க இலக்கிடல் குழு" வொன்று நிறுவப்பட்டது. இக்குழுவிற்கான உறுப்பினர்கள் பொருளாதார ஆராய்த்தித் திணைக்களத்திலிருந்தே முக்கியமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பன்னாட்டு நாணய நிதியம், 24 நாடுகளின் அரசாங்கக்களுக்கிடையிலான குழு, தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிலையம், மத்திய வங்கி ஆளுநர்களின் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென்னாசிய நாடுகளின் நிதிக்குழு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென்னாசிய அமைப்பின் நிதிச் செயலாளர்களினதும் குழு என்பனவற்றிற்கிடையில் இலங்கையின் உறவுகளை ஒருங்கிணைத்த வேளையில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, மற்றும் ஏனைய பல்புடை மற்றும் இருபுடை உதவி வழங்குனர்கள் என்பனவற்றுடன் திட்டமிடுவதற்கும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்கும் நிதியமைச்சிற்கு உதவியது. இப்பின்னணியில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், பன்னாட்டு நிதியத்துடனான 2001இன் துணைநில் ஒழுங்குகள், நியமங்கள் மற்றும் குறியீடுகளின் அவதானிப்புக்கள் மீதான அறிக்கை மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டு மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம் ஆகிய பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களுடனான மூன்று முக்கிய நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்பான வேலைகளை ஒருங்கிணைப்பதற்கும் முக்கிய பொறுப்பாக இருந்தது.

துணைநில் ஒழுங்குகள் ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும். (விபரங்களுக்கு பகுதி I இலுள்ள சிறப்புக் குறிப்பைப் பார்க்கவும்) இதன்கீழ் ப.நா.நிதியம் நாடொன்றிற்கு கொடுகடன் வசதிகளை வழங்கும். இது நாட்டின் பொருளாதார கொள்கையின்மீது பன்னாட்டு சமூகம் வைத்திருக்கும் நம்பிக்கைக்கான அங்கீகாரத்தினை உணர்த்துவதுடன் இது மற்றைய பன்னாட்டு நிதியியல் நிறுவனங்கள் மற்றும் இருபுடை கொடை வழங்குனர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் உதவும்.

முக்கியமான கொள்கை விடயங்களில் சிறந்த நடைமுறைகளைக் கொண்ட அளவை அடையாளமொன்றினை வழங்கும் பொருட்டு, பன்னாட்டு நிதியியல் சமூகம் பன்னாட்டு நியமங்களையும் குறியீடுகளையும் அபிவிருத்தி செய்வதற்கு தேவையைக் கொண்டிருந்தன் காரணமாக, 1990களின் பிற்பகுதியில் காணப்பட்ட பன்னாட்டு நிதியியல் நெருக்கடிகளைத் தொடர்ந்து நியமங்கள் மற்றும் குறியீடுகளின் மீதான அவதானிப்புக்களின் மீதான அறிக்கை நிகழ்ச்சித் திட்டம் நிறுவப்பட்டது. இச் செயற்பாட்டின் ஒரு பகுதியாக, அதிகரித்த ஒழிவுமறைவற்ற தன்மையினை மேம்படுத்துவது மற்றும் பன்னாட்டு ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்கள் மற்றும் குறியீடுகள் நடைமுறைப்படுத்துவதனை ஊக்குவிப்பது ஆகிய நோக்கங்களுடன் 1999இலிருந்து ப.நா.நிதியம் நியமங்கள் மற்றும் குறியீடுகளின் அவதானிப்புக்கள் மீதான அறிக்கையினைத் தயாரித்தது. நாட்டின் புள்ளிவிபர முறையினை ஆழமான முறையில் ஆய்வதற்கும் அங்கீகாரங்களை செய்முறைப்படுத்துவதற்கும் பன்னாட்டு நியமங்களை ஒழிவுமறைவின்றி வெளிப்படையாக கடப்பாட்டுடன் பின்பற்றுவதற்குமான வாய்ப்புக்களை நியமங்கள் மற்றும் குறியீடுகளின் அவதானிப்புக்கள் மீதான அறிக்கைக் குழு வழங்கியமையினால் இலங்கை இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்பதற்குத் தீர்மானித்தது.

ப.நா.நிதியம் மற்றும் உலகவங்கியின் ஒத்துழைப்புடனான நிதியியல் உறுதிப்பாட்டு மதிப்பிடல் நிகழ்ச்சித் திட்டக்குழுவிலும் இலங்கை பங்கேற்றுக் கொண்டது. நிதியியல் உறுதிப்பாட்டு மதிப்பிடல் நிகழ்ச்சித் திட்டத்தின் முதன்மைக் குறிக்கோள் உறுதிப்பாட்டுடன் பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதேயாகும். குழுவின் வேலைத் திட்டமானது நாட்டின் நிதியியல் முறையிலுள்ள பலமானதன்மை, பலவீனமான தன்மை இடர்நேர்வு மற்றும் பாதிக்கப்படக்கூடிய தன்மை என்பனவற்றையும் நிதியியல் துறையில் நிறுவன ரீதியிலான அபிவிருத்திக்கான தேவையினையும் அடையாளங் கண்டு கொள்ளக்கூடிய பெறுமதிமிக்க வழிவகைத் தொகுதியினையும் வழங்கியது. அபிவிருத்தியடைந்த நாடுகளும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் நிதியியல் உறுதிப்பாட்டு மதிப்பிடல் நிகழ்ச்சித்திட்டக் குழுவில் பங்கேற்றதுடன் இலங்கை இந் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்ற நாடுகளது இரண்டாவது குழுவில் காணப்பட்டது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இலங்கையின் தென்னாசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பின் (சார்க்) நிதிப்பிரிவிற்கு தொடர்ந்தும் வசதிகளை வழங்கியது. சார்க் நிதிப்பிரிவு என்பது சார்க் நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்கள் மற்றும் நிதிச் செயலாளர்கள் என்போரை ஒரு அணியில் ஒன்று சேர்க்கும் அமைப்பான சார்க்கின் கீழான ஒரு குழுவாகும். 2001ஆம் ஆண்டு முழுவதும் சார்க்கின் தலைமைப் பொறுப்பை இலங்கை கொண்டிருந்தமையினால் சார்க் நிதிப் பிரிவுக் குழுவின் செயலகமாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பணியாற்றியுள்ளது. இது, நாடுகளுக்கிடையிலான நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பினையும் ப.நா.நி/ உலக வங்கிக் கூட்டங்களுக்கு முன்னதாக நடத்தப்படவேண்டும். சார்க் நிதிப்பிரிவு அமைப்பின் கூட்டத்தை ஏற்பாடு செய்யும் தேவையையும் ஏற்படுத்தியது.

திணைக்களத்தினது தொழிற்பாடுகளின் மிக முக்கியமானதொரு பகுதி, பொருளாதார விடயங்கள் பற்றிய தகவல்களைப் பொது மக்களுக்குப் பரப்புவதுடன் தொடர்பானதாக இருந்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அத்தகைய தகவல்களை காலத்திற்குக் காலம் நாளாந்தத்திலிருந்து வருடாந்தம்வரையான மாறிலிகளுடன் மத்திய வங்கி வெளியீடுகளூடாகவும் அதன் வெப்தளம் ஊடாகவும் ஊடகங்களுக்கான தகவல்கள் மூலமும் வழங்கியது. அத்தகைய தகவல்களின் உள்ளடக்கத்தினையும் சரியான நேரத்தில் கிடைப்பதனையும் மேம்படுத்துவது தொடர்பாக தற்போது நடைபெற்றுவரும் செயற்பாடுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நடைமுறைப்படுத்தியது. மின்னியல்களூடாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுவதில் அதிகரித்து வருகின்ற கேள்வியைக் கருத்திற் கொண்டு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் பேணப்பட்டுவரும் வங்கியின் வெப்தளம் கொண்டுள்ள தகவல்களின் கிடைப்பனவினையும் அது பொதுமக்களுக்குக் கிடைக்கும் வடிவமைப்பினையும் முன்னேற்றுவதற்கு பெருமளவு கவனம் செலுத்தப்பட்டது. வெப்தளத்தினை நாளாந்தம் பலரும் குறிப்பாக பன்னாட்டு அமைப்புக்களும் ஆராய்ச்சியாளர்களும் பயன்படுத்துவதனை அறிக்கைகள்

எடுத்துக்காட்டுகின்றன. தகவல் பரப்பலை மேம்படுத்துவதற்காக 2001இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதியதொரு விடயமாக முதனிலை வணிகர்களுக்கும் வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களுக்கும் ஆண்டின் தொடக்கத்தில் நடத்தப்பட ஆய்வரங்கு விளங்கியதுடன் இதில் வங்கி இவ்வாண்டிற்கான அதன் பொருளாதார எறிவுகளின்மீது தகவல்களை வழங்கியது. திணைக்களம் இலங்கையில் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதங்கள், வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் போன்ற முக்கியமான ஒன்று சேர்ந்த வட்டிவீதங்களை தொடர்ந்தும் திரட்டி வெளியிட்டது. இச்சுட்டெண்ணின் சந்தையை அடிப்படையாகக் கொண்ட நிதியியல் கருவிகளுக்கான அடித்தள வீதமாக இருப்பதனால் இவை அதிகரித்த முக்கியத்துவத்தினைப் பெற்று வருகின்றன.

திணைக்களம் 2000ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கு, வங்கியின் ஏனைய திணைக்களங்களுடன் இனைந்து தமது பங்கிளிப்பினை வழங்குவதற்குப் பொறுப்பாகவிருந்தது. திணைக்களம், 2001 வரவு செலவுத் திட்டத்துடன் சேர்ந்து சமர்ப்பிக்கப்படுவதற்காக "அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் - முக்கிய பண்புகள்" என்ற சிறப்பு வெளியீடு ஒன்றையும் வெளியிட்டது. மேலும் பெறுமதியான பொருளியல் தரவுகளை உள்ளடக்கிய மாதாந்தச் செய்தித்திரட்டு வெளியிடப்பட்டது. நாணய நிதிச் சட்டத்தின் பிரிவு 116இன் கீழான நியதிக்கடப்பாடுகளை நிறைவு செய்யும் விதத்தில் 2002ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தயாரிப்பிற்கு உதவும் விதத்தில் செத்தெம்பர் 15ஆம் நாள் அறிக்கை என அழைக்கப்படும் சிறப்பு அறிக்கையைத் தயாரித்து நிதியமைச்சரிடம் சமர்ப்பித்தது.

நாணயம் மற்றும் சென்மதி நிலுவைக் கொடுப்பனவுகள் மீதான அடிப்படைத் தரவுகளைத் திரட்டுவதற்கும் வெளியிடுவதற்கும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பொறுப்பாக இருந்தது. தனியார்துறைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்களின் மாதாந்த வெளியீடு தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட வேளையில் விபரமான அரையாண்டு மற்றும் ஆண்டு தனியார்துறை கைத்தொழில் உற்பத்தி அளவீடுகளும் தொடர்ந்தன. தகவல் தொழில்நுட்பக் கைத்தொழிலின் அதிகரித்துவரும் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு தகவல் தொழில்நுட்ப நடவடிக்கை தொடர்பாக தற்போது நடைபெற்றுவரும் அளவீட்டினை ஏற்படுத்துவதுபற்றி கைத்தொழில் பங்காளர்களிடையே கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. சனாதிபதியின் அறிவுறுத்தலின்படி அண்மைய ஆண்டுகளில் மூடப்பட்ட கைத்தொழில் முயற்சிகளை மதிப்பிடுவதற்காக திறைசேரியினால் ஏற்படுத்தப்பட்ட குழுவின் வேலைகளை ஒன்றிணைப்பதற்கும் திணைக்களம் பொறுப்பாக இருந்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் வங்கியின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் அவர்களது சொந்த ஆர்வம் காரணமாகவும் பல ஆராய்ச்சி ஆய்வுகளை மேற்கொண்டனர். இவர்களில் சிலர் மற்றைய நிறுவனங்களிலுள்ள ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொண்டனர். பல ஆய்வுகள் மத்திய வங்கியின் "உயர் அலுவலர் ஆய்வுகளில்" வெளியிடப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் பலர் வங்கியினுள்ளும், வங்கிக்கு வெளியேயுமான பல முக்கியமான குழுக்களில் பங்காற்றினர். அவற்றிடையே உலக வர்த்தக அமைப்பின் பாதுகாப்பு வழிமுறைகள் தொடர்பான குழு, புடவை மற்றும் ஆடைகளின் மீதான ஐரோப்பிய ஒன்றிய அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகளை அகற்றுவதற்கான குழு, இலங்கை பாக்கித்தான் வர்த்தக உடன்படிக்கை மீதான குழு, சார்க் பிராந்திய பயிற்சி நிலையத்தினை நிறுவுவது தொடர்பான செயலணிக்குழு, பட்டப்பின் படிப்பு பயிற்சித் தேவைப்பாடுகள் மீதான செயலணிக் குழு, நாணயக் கொள்கைக்குழு, சென்மதி நிலுவைக் குழு, செலாவணி வீதக்குழு, திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் விலைக்கோரல் குழு, திரவ மதிப்பீட்டுக்குழு, திறந்த சந்தை தொழிற்பாட்டுக்குழு, மற்றும் உள்நாட்டுப்படுகடன் முகாமைத்துவக் குழு என்பன முக்கியமானவை. நடைமுறை வரி அமைப்பினை ஆய்வு செய்து அரசின் நடுத்தரகால வரி உபாயங்களுக்கான முன்மொழிவினைச் செய்யும் நிதித் திட்டமிடல் அமைச்சின் வரி விதிப்புக்களை ஆராயும் மையக் குழுவில் திணைக்களத்தின் அலுவலர்கள் மத்திய வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தினர். பொருளாதார ஆராய்ச்சித்திணைக்கள அலுவலர்கள் தேசிய அபிவிருத்தி வங்கி, முதலீட்டுச்சபை, இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போன்ற பல நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளிலும் பணியாற்றினர்.

அலுவலர் தேர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அதன் அலுவலர்களுக்கு உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் வாராந்தம் நடத்தப்படும் ஆய்வரங்குத் தொடர்களை தொடாந்து பயிற்சி வழங்கப்பட்டதுடன் வங்கியின் மாதாந்த பொது ஆய்வரங்குத் தொடர்களிலும்

தீவிரமாகப் பங்கேற்றதுடன் முக்கியமான துறைகளில் பயிற்சி பெறுவதற்காக அதன் அலுவலர்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழச்சித் திட்டங்களுக்கு அனுப்பியது.

## புள்ளி விபரங்கள் மற்றும் கள அளவீடுகள்

புள்ளி விபரத் திணைக்களமானது (அ) தேசிய கணக்குகள், விலைகள், கூலிகள், தொழிற்படை, தொழில்நிலை மற்றும் ஏனைய பொருளாதாரக் குறிகாட்டிகள் ஆகியன தொடர்பான தரவுகள் (ஆ) குடும்ப அலகுகள் மற்றும் கூட்டுத்துறை தொடர்பான நுண்பாக மட்டத்திலான தரவுகளை அதன் அளவீடுகளினூடாக சேகரித்தல், தொகுத்தல், ஆய்வு செய்தல் மற்றும் வெளியிடல் என்பன தொடர்பான அதன் கடப்பாடுகள் தொடர்ந்தும் நிறைவேற்றியது.

புள்ளி விபரக் குறைபாடுகள் காணப்படும் துறைகளுடன் தொடர்பான தரவுகளின் தரத்தினையும் உரிய நேரத்தில் கிடைப்பதனையும் முன்னேற்றும் தொடர்ச்சியான செயற்பாடுகளின்கீழ் திணைக்களம் புள்ளி விபரங்களினது மதிப்பீடுகளை முன்னேற்றும் நோக்கில் தயாரிப்புத்துறையின் சிறுகைத்தொழில் துணைத்துறைக்கான தரவுத்தளமொன்றினை நிறுவுவதற்காக 2001 இல் முயற்சிகளை மேற்கொண்டது. இம்முயற்சியின் முதன்மைக் குறிக்கோள் யாதெனில் கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த மறைமுகப் மதிப்பீட்டு நடைமுறைகளை முன்னேற்றும் பொருட்டு பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்து வருகின்ற இத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதியின் காலாண்டு மற்றும் ஆண்டு மதிப்பீடுகளை நேரடியாகப் பெற்றுக்கொள்ள இயலச் செய்யும் அடிப்படை மதிப்பீடுகளை அபிவிருத்தி செய்வதேயாகும்.

மேலும், திணைக்களத்தினால் புதிய காலாண்டு அரசதுறை தொழில்நில அளவீடொன்று தொடங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. இது பொதுநிருவாகம் மற்றும் பாதுகாப்பு துறையிலுள்ள காலாண்டு தேசிய கணக்குகளின் திரட்டலை மேம்படுத்தக்கூடிய விதத்தில் சரியான நேரத்தில் அனைத்தையும் உள்ளடக்கிய தரவுகளை வழங்கும்.

திணைக்களத்தின் தொடர்ச்சியான விலைச்சேகரிப்பு முறைகளின் கீழ் நாடு முழுவதிலுமுள்ள சில்லறை மற்றும் மொத்த விற்பனை சந்தைகளின் விலை அசைவுகள் கிரமமாகவும் மிக நெருக்கமாகவும் கண்காணிக்கப்பட்டன. விலை அபிவிருத்திகளின் மீதான கிரமமான பகுப்பாய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கொள்கை தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வசதியாக முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அதேவேளை நீண்டகாலத்தில் பண்டச் சந்தைகளின் விலைத் தளம்பல்களைக் குறைக்கும் நோக்கில் சந்தைப் பங்கேற்பாளர்களிடையேயான விழிப்புணர்வினை அதிகரிக்கும் விதத்தில் அச்சு மற்றும் மின்னியல் ஊடகங்களூடாக சில்லறை மற்றும் மொத்தவிற்பனை விலைகளுடன் தொடர்பான விலைகளைப் பரப்பும் முயற்சிகள் மேலும் வலுவாக்கப்பட்டன.

நாடளாவிய தரவு சேகரிப்பு முறையிலுள்ள பள்ளிக்கூட ஆசிரிய புலனாய்வாளர்களுக்கு நாளது வரையான பூரணமான பொருளாதார தகவல்களை வழங்கி வருவதன் மூலம் தேசிய பொருளாதார விடயங்கள் தொடர்பான அறிவாற்றலை உயர்த்துவதற்கான முயற்சிகள் கிரமமாக மேற்கொள்ளப்பட்டன. புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட சந்தை மையங்களை உள்ளடக்கும் விதத்தில் விலைச் சேகரிப்புக்களை விரிவாக்குவதற்கான உள்ளார்ந்த வளமும் கள பரீட்சிப்பினூடாகக் கண்டறியப்பட்டன.

திணைக்களம், அதன் இரு கிரமமான வெளியீடுகளான இலங்கை சமூக பொருளாதார தரவு-2001 மற்றும் இலங்கையின் பொருளாதார சமூக புள்ளி விபரங்கள் என்பனவற்றை ஆண்டிற்குள் உரிய நேரத்தில் வெளியிடுவதனையும் மேம்படுத்திக் கொண்டது. அதேவேளை, இவ் வெளியீடுகளில் பொதிந்துள்ள தகவல்களை மின்னியல் வடிவமைப்பில் பரப்புவதற்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது. முன்னையது அச்சு மற்றும் மின்னியல் வடிவில் பொது மக்களுக்குக் கிடைக்கச்செய்யப்பட்டது. பின்னைய வெளியீடு 2002இல் மின்னியல் வடிவமைப்பில் கிடைக்கக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

மாதிரி அளவீடுகள் மற்றும் மனிதவள அபிவிருத்திக் குறிகாட்டிகளின் அபிவிருத்தி என்பனவற்றிற்கு முன்னுரிமையளித்து தொடர்பான விடயத்துறைகளில் நடாத்தப்பட்ட தேசிய மட்டத்திலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றதன் மூலம் புள்ளிவிபரத் திணைக்கத்தின் அலுவலர்கள் தமது தொழில்சார் இயலாற்றலை உயர்த்திக்கொள்ளக் கூடியவர்களாக இருந்தனர். மேலும், தொழிலாளர் சந்தை வறுமைக் குறைப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தொடர்பான விடயத்துறைகளில் இடம்பெற்ற ஆய்வரங்குகள் மற்றும் செயலமர்வுகளில் அலுவலர்கள் தீவிரமாகப் பங்கேற்றுத் தமது பங்களிப்பினை நல்கினர். நாடளாவிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை அபிவிருத்தி செய்வதற்காக திறைசேரி செயலாளரைத் தலைவராகக் கொண்ட தேசிய குழுவொன்று 2001 ஏப்பிறலில் நிறுவப்பட்டதுடன் இது நீண்டகாலமாக உணரப்பட்ட இத்தேவைக்கு முன்னுரிமையளித்தது. இக்குழு தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர்

நாயகம். நிதியமைச்சின் மூத்த அலுவலர்கள் மற்றும் மத்திய வங்கியின் புள்ளிவிபரப் பணிப்பாளர் ஆகியோரை உள்ளடக்கியிருந்தது.

## அளவீடுகள்

### சிறு வாணிப அளவீடு - 2001

மாதிரி அளவீடுகள் துறையில், திணைக்களம் 2001இன் பின்னரைப் பகுதியில் சிறு வாணிபங்கள் மீதான அளவீட்டினை மேற்கொண்டது. இச்சிறு வாணிப அளவீட்டினை நடாத்துவதன் முக்கிய குறிக்கோள் யாதெனில் பொருளாதாரத்திலுள்ள சிறுவாணிபத்தின் கூட்டப்பட்ட பெறுமதியின் காலாண்டு மற்றும் ஆண்டு மதிப்பீடுகளை நேரடியாகப் பெற்றுக்கொள்வதனை இயலச் செய்யும் சிறு வாணிபத்துறையின் மீது தரவு அமைப்பொன்றினை நிறுவுவதேயாகும். தற்பொழுது சிறு வாணிபத்துறையின் பொருளாதார நடவடிக்கைகள் நியம அறிக்கையிடும் முறையில் உள்ளடக்கப்படாதிருப்பதனால் தேசிய வருமானம் மற்றும் உற்பத்திகள் கணக்குகளிலுள்ள சிறு வாணிபத்துறையின் பெறுமதி கூட்டப்பட்ட மதிப்பீடுகள் மறைமுகமான மதிப்பீட்டு வழிமுறைகள் மூலமே கிடைக்கச் செய்யப்படுகின்றன. எனவே, இத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதியினை நேரடியாக மதிப்பிடுவதற்கான முறைசார்ந்த வழிமுறையினை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவம் முன்னுரிமையானதாக மாறியுள்ளது.

மத்திய வங்கியின் நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீட்டில் பின்பற்றப்பட்ட பொருளாதார நடவடிக்கையின்படி அமைந்த 5 வலய பகுப்பாய்விற்கேற்ப அளவீட்டு மாதிரி ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டது. முழு அளவீட்டினதும் களவேலைகள் 23.7.2001 இற்கும் 31.8.2001 இற்குமிடையில் மேற்கொள்ளப்பட்டன. அளவீட்டிற்கான கள புலனாய்வுகள் தொடர்பான அமைவிடங்களிலுள்ள தொழிலற்ற பட்டதாரிகளிடையேயிருந்து பெறப்பட்ட வேளையில் களமேற்பார்வை மத்திய வங்கி அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டது. அளவீடு கொழும்பு, கம்பகா, களுத்துறை, காலி, மாத்தறை, அநுராதபுரம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் தொழிற்படுகின்ற 3538 சிறுவாணிப தொழில்முயற்சிகளை மாதிரியாகக் கொண்டு கணக்கிடப்பட்டது. சேகரிக்கப்பட்ட முக்கியமான தகவல்கள் இரு தொடர்பான காலப்பகுதிகளான 2000ஆம் ஆண்டினையும் 2001ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியையும் உள்ளடக்கும் விதத்தில் மொத்தப்புரள்வு, உள்ளீடுகளின் செலவு தொழிலாளர்களின் எண்ணிக்கை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. அளவீட்டு அறிக்கையை எழுதுவதற்குத் தேவையான புள்ளிவிபர அட்டவணைகள் நவெம்பர் மாதப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டன. அளவீடு தொடர்பான இறுதி அறிக்கை 2002 பெப்புருவரியில் நாணயச்சபைக்கு சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### நாடளாவிய தரவு சேகரிப்பு முறை

1978இல் தொடங்கப்பட்ட புள்ளிவிபரத் திணைக்களத்தின் நாடளாவிய தரவு சேகரிப்புமுறை 2001இல் 23ஆவது ஆண்டுத் தொழிற்பாட்டினை நிறைவுசெய்தது. நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள் வேளாண்மைப் பண்டங்களின் உற்பத்தியாளர் விலைகள், முறைசாராத் துறையோடு தொடர்புடைய கூலிவீதங்கள் ஆகியவை தொடர்பான தகவல்கள் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒழுங்காகச் சேகரிக்கப்பட்டன. இம்முறையானது நுகர்வு விடயங்களின் நிருவகிக்கப்பட்ட விலைகளிலான மாற்றங்களின் தாக்கத்தினை அடையாளாங் காண்பதற்கும் முக்கியமான உற்பத்திப் பகுதிகளில் வேளாண்மைக்கான உள்ளீட்டுப் பொருட்களைக் கணக்காணிப்பதற்கும் பயன்படுத்தப் பட்டது. இத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள துணைத்துறைகள் நெல், தேயிலை, இறப்பர், தென்னைப்பயிர்ச் செய்கை அத்துடன் சிறிய அளவுக் கட்டுமானம் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன. பள்ளிக்கூட ஆசிரியர்கள் புள்ளிவிபரவியல் புலனாய்வாளர்களாகப் பணியாற்றும் நாடளாவிய வலயமைப்பினூடாக ஏறத்தாழ 100 நிலையங்களிலிருந்து தரவுச் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்சார் அச்சு மற்றும் மின்னியல் ஊடகங்களினூடாக கிரமமான முறையில் வெளியிடப்பட்டன. தரவுச் சேகரிப்பாளர்களுக்கு அவர்களது தரவுச் சேகரிப்பின் தரம் வினைத்திறன் சரியான நேரம் தவறாமை என்பனவற்றை மேம்படுத்தும் பொருட்டு அதேபோன்று பிரதேச நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் கணிப்பின் போது அடையாளம் காணப்பட்ட பிரதேசவாரியான விலை அபிவிருத்திகளிலுள்ள வேறுபாடுகளுக்கு காரணமான அவர்களது உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களுக்கு மேலும் பயிற்சியினை வழங்குவதற்குமாக 2001இல் மாத்தறை, கொழும்பு, அநுராதபுரம் மற்றும் கண்டி ஆகிய இடங்களில் ஆய்வரங்குகள் நடாத்தப்பட்டன.

புறக்கோட்டைச் சந்தை மற்றும் மரதகமுல்ல அரிசிச்சந்தை, தம்புள்ளை பொருளாதார நிலையம் போன்ற ஏனைய நிலையங்களிலிருந்து முக்கிய உணவு விடயங்களின் மொத்தவிற்பனை மற்றும் சில்லறை விலைகளின் நாளாந்த சேகரிப்பும் இத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இத் தகவல்கள் வேளாண்மையாளர்கள், வர்த்தகர்கள் மற்றும்

நுகர்வோருக்கு செய்தித்தாள் மற்றும் மின்னியல் ஊடகங்களினூடாக நாளாந்தம் பரப்பப்படுகின்றது. இத்தகவல்கள் அரசமுகவர் நிலையங்கள் மற்றும் தனியார்துறை நிறுவனங்களினால் ஆராய்ச்சிக்கும் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் போன்றவற்றில் வியாபாரத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் பயன்படுத்தப்பட்டன.

வடமேல் மாகாணத்திலுள்ள வேளாண்மைப் பொருளாதார நிலையத்தில் மற்றொரு விலைச்சேகரிப்பு மையமொன்றினை ஏற்படுத்துவது அவசியமானதா என்பதனைக் கண்டறியும் பொருட்டு அங்கு களவருகையொன்று மேற்கொள்ளப்பட்டது. எனினும், இது பிரதேச சந்தைப்படுத்தல் நிலையமாக மாறும் ஆரம்ப கட்டத்தில் இருப்பதனால் விலைச்சேகரிப்பு நிலையமொன்றினை நிறுவும் தீர்மானம் தற்போதைக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

## விலைச்சுட்டெண்களின் கணிப்பீடு

### நுகர்வோர் விலைச்சுட்டெண்கள்

1998இல் அறிமுகம் செய்யப்பட்ட கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்கத்தினால் கணிக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுக்கான குறைநிரப்புச் சுட்டெண்ணாக இத்திணைக்களத்தினால் கணிக்கப்பட்டது. இச்சுட்டெண்ணில் பயன்படுத்தப்பட்ட குடித்தொகை இலக்கு வருமான அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்ட மாவட்டக் குடித்தொகையில் மிகக் குறைந்த வருமானம் பெறும் ஆகக்குறைந்தது 40 சதவீதமாகும். கொழும்பு மாநகர நுகர்வோர் விலைச் சுட்டெண் விடயங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையிலும் அதேபோன்று புவியியல் ரீதியிலும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை விட பரந்த உள்ளடக்கத்தினைக் கொண்டதாகும். சுட்டெண்ணின் கணிப்பிற்காகப் பெறப்பட்ட தகவல்கள் கொழும்பு மாவட்டத்திலுள்ள 11 நிலையங்களிலிருந்து பெறப்பட்டது. இந்த 11 நிலையங்களில் புறக்கோட்டைச் சந்தை, கன்வெல, கோமாகம, மொரட்டுவ மற்றும் அவிசாவளை ஆகிய ஐந்து நிலையங்கள் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைகளின்கீழ் நிறுவப்பட்டதுடன் கொலன்னாவ, நுகேகொடை, தெகிவளை, பிலியந்தலை, மகரகம மற்றும் பாதுக்க ஆகிய மற்றைய நிலையங்கள் 1999 சனவரியில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டன. புள்ளவிபரத் திணைக்களத்தின் அலுவலர்களும் நியமிக்கப்பட்ட ஆசிரியப் புலனாய்வாளர்களும் இந்நிலையங்களிலிருந்து ஒழுங்கான முறையில் தகவல்களைச் சேகரித்தனர்.

1998 இலிருந்து அநுராதபுரம், மாத்தறை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கான மூன்று பிரதேச நுகர்வோர் விலைச்சுட்டெண்களை பரிசோதனை அடிப்படையில் இத்திணைக்களம் தொடர்ந்தும் கணிப்பீடு செய்தது. சுட்டெண்களுக்கான பண்டங்களின் நிறை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட 1996/97இன் நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீட்டிலிருந்து பெறப்பட்ட அந்தந்த மாவட்டங்களுக்குரிய செலவு மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டதாகும். சுட்டெண்களின் கணிப்பிற்கான தொடர்பான நிறைகள் வருமான அடிப்படையில் வரிசைப்படுத்தப்படும்பொழுது மாவட்டத்திலுள்ள குடும்பஅலகுகளில் மிகத்தாழ்ந்த வருமானம் பெறும் 40 சதவீதமான குடித்தொகை இலக்கின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. இச் சுட்டெண்கள் பிரதேச விலை அசைவுகளை ஆய்வு செய்வதற்கு பயனுடையனவாகும். இவை வேளாண்மைப் பண்டங்களின் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் தொடர்பான பேரப்பேச்சுகளில் சந்தைத் தொழிற்பாட்டாளர்களினாலும் பயன்படுத்தப்பட்டன.

புள்ளவிபரத் திணைக்களம் உள்ளக நோக்கங்களுக்காக மேல்மாகாணத்தினை உள்ளடக்கி நுகர்வோர் விலைச்சுட்டெண் ஒன்றினை தொடர்ந்தும் திரட்டியது. இது புவியியல் ரீதியாகவும் வருமான நியதிகளிலும் கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் விட பரந்த உள்ளடக்கத்தினைக் கொண்டுள்ளது. இச்சுட்டெண்ணிலிருந்தான முக்கிய மேம்பாடு யாதெனில் நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் உள்ளடக்கத்தினை உயர்ந்த வருமானம் பெறும் குடும்ப அலகுகளையும் பரந்தளவு புவியியல் பிரதேசங்களையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் விரிவாக்குவதேயாகும். இச்சுட்டெண்ணானது 1996/ 97இன் நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீட்டிலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த 65 சதவீத குடியிருப்பாளர்களைப் பிரதிபலிக்கிறது. நிறையானது பிரதிநிதித்துவப்படுத்தும் குடும்ப அலகுகளின் செலவின மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டது. தரவு சேகரிப்பு நிலையங்கள் கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிற்காகப் பயன்படுத்தப்பட்ட முக்கியமான வர்த்தக நிலையங்களுக்கு அப்பால் கூடிய வருமானம் பெறும் குடும்பங்களின் மாற்றமடைந்துவரும் நுகர்வு மாதிரிகளை அறிந்துகொள்ளுவதற்காக நகரிலுள்ள சிறப்பு அங்காடிகளை உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்களுக்குப் புறம்பாக, வடக்குக்கிழக்கு மாகாணங்கள் நீங்கலாக நாடு முழுவதிலும் வருமானரீதியாக வரிசைப்படுத்தப்பட்ட மிகத்தாழ்ந்த 80 சதவீத குடியிருப்பாளர்களைக் காட்டும் சுட்டெண் தொடர்பாக திணைக்களம் பரிசோதனை ஒன்றை

மேற்கொண்டது. நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறையின்கீழ் சேகரிக்கப்பட்ட விலைத்தகவல்கள் பரிசோதனை ரீதியான சுட்டெண்ணைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. இந்நடவடிக்கையானது இலங்கைக்கு நாடளாவிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை அபிவிருத்தி செய்வதற்காக நிறுவப்பட்ட தேசியக்குழுவின் வேலைக்கு உதவுவதாக இருந்தது. குடித்தொகை புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் திரட்டப்படவுள்ள இப்புதிய சுட்டெண்ணானது 2002 இல் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மொத்த விற்பனை விலைச்சுட்டெண்

முதலாந்தரச் சந்தை மட்டத்தில் விலை அசைவுகளைப் பிரதிபலிக்கும் மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணை இத் திணைக்களம் தொடர்ந்தும் கணித்தது. சில்லறைச் சந்தைகளில் எதிர்கால விலை அசைவுகளைக் காட்டும் பயன்மிக்கதொரு குறிகாட்டி இதுவாகும்.

## தேசிய கணக்குகள்

திணைக்களம் தேசிய கணக்குகளின் மதிப்பீடு தொடர்பான தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இது முதலாந்தர மற்றும் இரண்டாந்தர தரவுகளின் சேகரிப்பினையும் அவை தொடர்பான புள்ளிவிபரங்களின் தொகுப்பினையும் உள்ளடக்கியுள்ளன.

இத் திணைக்களம் 2001இல் தேசிய கணக்குகளின் மதிப்பீட்டுச் செய்முறைகளை வலுப்படுத்துவதற்கு முறைசாரா மற்றும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு பொதுவாக பரந்தளவு உள்ளடக்கத்தினை வழங்குவதற்கு முயற்சித்தது. தயாரிப்புத்துறையின் சிறு கைத்தொழில் துணைத்துறையினதும் பணிகள் துறையின் ஆளணி பணிகள் துணைத்துறையினதும் தரவுத்தளத்தினை அதிகரிக்கும் பொருட்டு திணைக்களமானது சிறுவாணிபர்கள் மீதான அளவீட்டினை மேற்கொண்டது. இவ்வளவீடு காலாண்டு அடிப்படையில் தொடர்ந்தும் நடைபெற்றதுடன் இது சிறு கைத்தொழில்கள் துணைத்துறை தொடர்பான கிரமமான தரவுத்தளத்திற்கு காணப்படும் வெற்றிடத்தையும் நிரப்பும். தேசிய கணக்குகளின் மதிப்பீட்டில் வங்கித்தொழில் மற்றும் ஏனைய நிதியியல் பணிகள், பொதுநிருவாகம், பாதுகாப்பு மற்றம் ஏனைய பணிகள் என்பனவற்றிற்கு முறையியல் சார்ந்த முன்னேற்றங்கள் சில மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை தேசிய கணக்குகளின் முறையுடன் இணைந்துசெல்லும் விதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.

அதேவேளை, தேசிய கணக்குகளின் தற்போதைய போக்குகள் தொடர்பில் மக்களுக்குள்ள அறிவினை அதிகரிக்கச் செய்வதற்காக திணைக்களம் காலாண்டு பத்திரிகை வெளியீடுகளைத் தொடர்ந்தும் வழங்கியது. அத்துடன் இத் தகவல்கள் மத்திய வங்கியின் வெப்தளம் ஊடாகவும் தொடர்ந்தும் வழங்கப்பட்டது. காலாண்டு தேசிய கணக்குகளின் தரவுகளை உரிய நேரத்தில் பரப்புவதும் இத்துறையில் பொதுமக்களின் ஈடுபாட்டினை அதிகரித்தது.

## மாகாண தேசியக் கணக்குகள்

1996இலிருந்து 1999 வரையான காலப்பகுதிக்கான ஆண்டுக்குரிய மாகாண ரீதியிலான மொத்த உள்நாட்டு உற்பத்திகளின் பரிசோதனை அடிப்படையிலானதொரு மதிப்பீடுகளை தொகுப்பதில் திணைக்களம் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தது. மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகள் நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் தொகுக்கப்படுவதுடன் நடையாண்டின் கணிப்பீட்டிற்கான காலதாமதத்தினை குறைக்கும் விதத்தில் தகவல்கள் விரைவில் பூரணப்படுத்தப் படவுள்ளது. இது மாகாண பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான அனைத்தையும் உள்ளடக்கிய தரவுத் தளத்தினையும் அதேபோன்று கொள்கை நோக்கங்களுக்குப் பயன்படக்கூடிய தேசிய பொருளாதார அபிவிருத்திக்கான மாகாணப் பங்களிப்பினையும் வழங்கும்.

## தொழில்வாய்ப்புப் புள்ளிவிபரங்கள்

அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசசபைகள் என்பனவற்றிலுள்ள தொழில் நிலையின் போக்குகளைக் கண்டறியும் நோக்குடன் 2001ஆம் ஆண்டிலும் திணைக்களம் அரசதுறைத் தொழில் வாய்ப்புக்களின் ஆண்டு அளவீட்டினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. மேலும் மொத்த அரசதுறை தொழில்வாய்ப்பில் 76 சதவீதத்தினை உள்ளடக்கியுள்ள அரச மற்றும் அரசசார் நிறுவனங்களின் தெரிந்தெடுக்கப்பட்ட மாதிரிகளுக்காக 2001ஆம் ஆண்டின் முதற் காலாண்டிலிருந்து காலாண்டு அரசதுறை தொழில்நில அளவீடொன்று தொடங்கப்பட்டு நடாத்தப்பட்டது. இது சிறப்பாக தேசிய உற்பத்திக் கணக்குகளின் பொதுநிருவாகம் மற்றும் பாதுகாப்பு துறையில் கூட்டப்பட்ட பெறுமதியினை மதிப்பிடுவதற்குத் தேவையான அரசதுறை தொழில்வாய்ப்பின் காலாண்டுப் போக்குகளைக் கண்டறிந்து கொள்வதற்காக திட்டமிடப்பட்டது.

## வலையமைப்பு மற்றும் வெப்தள அபிவிருத்தி

திணைக்களம் முக்கியமான தரவுகளையும் பத்திரிகை வெளியிடுவதனையும் பெற்றுக்கொள்வதற்கு தொடர்ந்தும் வசதி வழங்கியதுடன் அதேபோன்று

திணைக்களத்தின் வேலை தொடர்பான பொதுவான தகவல்களையும் அதன் வெப்தளமான "ஸ்ராநெட்" ஊடாக வழங்கியது. ஒருங்கிணைக்கப்பட்ட வலையமைப்பு முறையானது திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் வங்கியின் ஏனைய திணைக்களங்களுக்கிடையே தரவுத்தளத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் பங்கீட்டுக் கொள்வதற்குமான வசதிகளையும் அதேபோன்று மத்திய வங்கியின் வெப்தள பக்கத்தினையும் வழங்குகிறது.

## வெளியீடுகள்

### அநுராதபுர மாவட்டத்திலுள்ள துணை உணவுப் பயிர்கள் மற்றும் விலங்குவளர்ப்பு அளவீடு மீதான அறிக்கை - 2000 சிறுபோகம்

அநுராதபுர மாவட்டத்தில் 2000ஆம் ஆண்டு சிறுபோக காலத்தில் நடத்தப்பட்ட துணை உணவுப் பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பு மீதான அளவீடுகளில் கண்டறியப்பட்டவற்றை எடுத்துக்காட்டும் இவ்வறிக்கையானது 2001 யூனில் நிறைவு செய்யப்பட்டு நாணய சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வளவீடானது நிதி திட்டமிடல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டு 2000ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நடாத்தப்பட்ட பொருளாதார விடயங்கள் தொடர்பாக தேசிய மட்டத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வளவீட்டினை நடத்துவதன் முக்கிய குறிக்கோள்களாக (i) தேசிய வருமானம் தொடர்பாக தற்போது கிடைக்கின்ற தரவுத் தளத்தினை வலுப்படுத்தும் நோக்குடன் "ஏனைய வேளாண்மைத்" துறை மீதான தரவுகள் தளத்தினை முன்னேற்றுவதற்கான வழிமுறைகளை அடையாளம் காணல் அத்துடன்(ii) துணை உணவுப் பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பு என்பன தொடர்பாக தற்பொழுது கிடைக்கத்தக்கதாகவுள்ள புள்ளிவிபரங்களின் நம்பகத்தன்மையினை மீளாய்வு செய்வது என்பன காணப்பட்டன. இவ்வறிக்கையில் காணப்படும் அளவீட்டுத்தரவின் பகுப்பாய்வானது இத்துறையிலுள்ள வேளாண்மை உற்பத்தியின் உயர்ந்த மாறுபாட்டுத் தன்மையினை உறுதிப்படுத்தியுள்ளதுடன் இப்பின்னணியில் தற்பொழுது கிடைக்கத்தக்கதாகவுள்ள அலுவல்சார் மதிப்பீடுகள் நம்பகரமானவை என்ற முடிவிற்கும் வந்துள்ளது. இவ்வறிக்கையானது இத்துறையிலுள்ள வேளாண்மை உற்பத்திகள் தொடர்பாக மிகத் துல்லியமான மதிப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு தரவுச் சேகரிப்பின் தற்போதைய முறைகளை மேம்படுத்துவதற்கான விதந்துரைப்புக்களைச் செய்தது.

### ஏனைய வெளியீடுகள்

ஆய்விற்குரிய காலப்பகுதியில் திணைக்களம் இரு ஆண்டு வெளியீடுகள் தொடர்பான அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 2001 யூனில் திணைக்களம் "இலங்கை சமூக பொருளாதாரத்தரவு 2001 தொகுதி xxiv" இனை வெளியிட்டது. இரண்டாவது வெளியீடான "இலங்கையின் சமூக பொருளாதார புள்ளிவிபரங்கள் 2001- தொகுதி xxiii"இன் வேலைகளும் 2001 இறுதியில் இறுதியாக்கப்பட்டமையின் மூலம் வெளியீடுகளை சரியான நேரத்தில் வெளியிடும் தன்மை மேலும் மேம்பாடடைந்தது.

இவ்விரு வெளியீடுகளும் குடிப்பரம்பல் தொழிற்படை மற்றும் தொழில்வாய்ப்பு, தேசிய வருமானம் மற்றும் செலவு, வேளாண்மை, கைத்தொழில், வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் நிதி விலைகளும் கூலிகளும், பணமும் வங்கித்தொழிலும், மூலதனச் சந்தை, அரசநிதி மற்றும் சமூக பொருளாதரப் பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சமூக பொருளாதார மாறிலிகள் பற்றி அனைத்தையும் உள்ளடக்கிய நேரடித்தொடர் மற்றும் அனைத்து பிரிவுத் தரவுகளையும் கொண்டிருக்கும்.

1996/ 97இல் நடாத்தப்பட்ட நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீட்டிலிருந்தான தகவல்களை உள்ளடக்கிய சிடி றோம் ஒன்றினைத் தயாரித்தது வெளியிடுவதிலும் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டது. இச் சிடி றோம் மேற்குறிப்பிட்ட அளவீட்டிற் பகுதி I (அறிக்கை) மற்றும் பகுதி II (514 விபரமான புள்ளிவிபர அட்டவைணகள்) வெளியீடுகள் இரண்டிலும் அடங்கியுள்ள தகவல்களை ஒன்று திரட்டியதாகும்.

மேலும் கடந்த காலங்களைப் போன்றே, திணைக்களம் மத்திய வங்கியின் மற்றைய வெளியீடுகளுக்கும் பங்களிப்புச் செய்தது.

## ஊழியர் சேமநிதியம்

நாணயச் சபையானது தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமநிதியப் பிரிவுடனான நெருங்கிய ஒத்துழைப்புடன் ஊழியர் சேமநிதியத்தின் காவலனாக தொடர்ந்தும் 2001ஆம் ஆண்டில் தனது தொழிற்பாடுகளை மேற்கொண்டது. ஊழியர் சேமநிதியச் சட்டத்தின் நியதிகளின்படி, நிதியத்துடன் தொடர்புடைய வகையில் நாணயச்சபையின் தொழிற்பாடுகளான, உதவு தொகைகள், மிகைக் கட்டணங்கள் மற்றும் முதலீடுகள் என்பனவற்றிலிருந்தான வருமானத்தைப் பெறுதல், பதிவு செய்யப்பட்ட தொழில்வாய்ப்புக்கள், உறுப்பினர்கள் மற்றும் நிதியத்தின் சரியான



LIBRARY Information Department

கணக்குகளைப் பேணுதல் மேலதிகமான பணத்தைப் பொருத்தமான முதலீடுகளில் முதலீடு செய்தல் மற்றும் நிதியத்தின் உறுப்பினர்களுக்கான நன்மைகளைச் செலுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

2001ஆம் ஆண்டு நவெம்பரில் ஊழியர் சேமநிதிய உறுப்பினர்களின் வசதி கருதி புதன்கிழமை "பொதுமக்கள் தொடர்பாடல் தினமாக" அறிவிக்கப்பட்டது.

## அமைப்புமுறையிலான முன்னேற்றங்கள்

தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் ஊழியர் சேமநிதியத்தின் முழுத்தொழிற்பாடுகளையும் நவீனமயமாக்கும் செய்முறை வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்துடன் இணைந்து 2001ஆம் ஆண்டிலும் முன்னெடுத்துச் செய்யப்பட்டது. ஊழியர் சேமநிதியத்தின் பிரதான கணனி முறைமை அதிகரிக்கப்பட்ட இயலளவுடன் கூடிய சக்திவாய்ந்த ஏ.எஸ்/ 400 மாதிரி எந்திரமொன்றுக்குத் தரமுயர்த்தப்பட்டது. ஏற்கனவேயுள்ள ஏ.எஸ்/ 400 முனை கோடி வலையமைப்புடன் பிசீ வலையமைப்பொன்றை ஆரம்பிப்பதன் மூலம் அனைத்தையும் உள்ளடக்கிய கணனி வலையமைப்பொன்று உருவாக்கப்பட்டது. முன்பு கைகளால் மேற்கொள்ளப்பட்ட வங்கி இணக்கப்பாட்டு முறை, வங்கியிலிருந்து நாளாந்தக் கூற்றுக்கள் மின்னியல் அடிப்படையில் பெறப்பட்டமையின் மூலம் கணனி மயப்படுத்தப்பட்டன. ஊழியர் சேமநிதியத்துக்கான வெப்தளமொன்று நிறுவப்படுவதற்கான ஆரம்பவேலைகள் நிறைவு செய்யப்பட்டதுடன், 2002ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் இது தொடக்கி வைக்கப்படும். அமைப்பு முறைமையில் ஏற்படுத்தப்பட்ட இம் முன்னேற்றம், உறுப்பினர்களுக்கு அரையாண்டுக் கூற்றுக்களைத் தொடர்ந்தும் வழங்குதல், நாளது வரையில் கணக்குகளைச் சரிசெய்தல், ஏற்றுக்கொள்ளும் நோக்கங்களுக்காக தொழில் ஆணையாளருக்கு, தொழில் தருநரினால் செலுத்தப்படும் கொடுப்பனவுகளின் விரிவான கூற்றுக்களை வழங்குதல், சிறப்பான திறைசேரி முகாமையை மேற்கொள்ளுதல் மற்றும் உறுப்பினர்களுக்கான நன்மைகளை தாமதமின்றி மீளச்செலுத்துதல் ஆகியவற்றை ஊழியர் சேமநிதியத்துக்கு இயலச் செய்தது.

## முதலீட்டு நடவடிக்கைகள்

ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் முதலீட்டு செயற்பாடுகள் பெருமளவு சந்தைசார்ந்த பிணையங்களில் முதலீட்டுப் பட்டியல் பல்லினப்படுத்தும் கொள்கை மீதான வலியுறுததல்கள், இடர்நேர்வு - விரைவு எதிரீடு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீட்டு சந்தர்ப்பங்கள் என்பனவற்றின் வலியுறுத்தல்களுடன் மேற்கொள்ளப்பட்டவேளையில் சந்தைப போக்குகளும் மதிப்பீடு செய்யப்பட்டன.

ஊழியர் சேமநிதியத்தினது முதலீட்டு நடவடிக்கைகள் 2001ஆம் ஆண்டு திசெம்பர் 31இல் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் ரூ.246 பில்லியன் கொண்ட செலவுப் பெறுமதியைப் பதிவு செய்ததுடன் இதில் மொத்த ரூபாக்கடன் முதலீடுகள், 2000ஆம் ஆண்டின் இறுதியிலிருந்த 73 சதவீதத்துக்குக்கெதிராக 72 சதவீதமாகக் காணப்பட்டன. இச் சிறிதளவான வீழ்ச்சியை ஈடுசெய்யும் வகையில், சந்தை அடிப்படையிலான அரச முதலீட்டுக் கருவியான திறைசேரி முறிகளிலான முதலீடுகள் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் 2000ஆம் ஆண்டின் 22 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 25 சதவீதத்தைப் பதிவுசெய்து மேலும் விரிவடைந்தது.

பட்டியலிடப்பட்ட பங்குச் சந்தையிலான மொத்த முதலீடுகள், 2001ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.1,264 மில்லியனாக விளங்கி, முன்னைய ஆண்டைவிட 9 சதவீதமான புள்ளிக்குப்புள்ளி அதிகரிப்பை மட்டும் பதிவு செய்திருந்தன. மொத்தப்பங்கு முதலீடுகள் 2001ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த ஊழியர் சேமநிதிய முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் 0.5 சதவீதத்தில் அமைந்திருந்தன. பங்குச்சந்தை ஆய்வின் கீழான ஆண்டில் 2001 ஒத்தோபர் வரையிலும் மந்தமான நிலைமையினைக் கொண்டிருந்தமைக்கு, பொருளாதாரத்தில் காணப்பட்ட மெதுவானபோக்கு, உயர் வட்டி வீதங்கள் மற்றும் இனரீதியான மற்றும் அரசியல் நிலைமைகள் ஆகியனவே காரணமாகும். எனினும், ஊழியர் சேமநிதியம் தொடர்ந்தும் நெருக்கமான சந்தையைக் கண்காணித்ததுடன், முன்னைய ஆண்டின் முதலீட்டு நடவடிக்கைகளின் மட்டத்துடன் ஒப்பிடுகையில் தனது முதலீட்டு நடவடிக்கைகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கொண்டு நடத்தியது. பட்டியலிடப்பட்ட சந்தைச் சொத்துப்பட்டியலானது மூலதன இலாபங்கள், பங்கிலாப வருமானம் மற்றும் சிறப்புக் கொடுப்பனவுப் பங்குகள் ஆகியவற்றின் வடிவில் ரூ.115 மில்லியன் கொண்ட மொத்த வருவாயை உருவாக்கியிருந்தது.

பரந்தளவிலான பகுப்பாய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் மிகக் கவனமாகத்தெரிவு செய்யப்பட்ட தரமான முதலீடுகளை உள்ளடக்கிய ஊழியர் சேமநிதியத்தின் பட்டியலிடப்பட்ட சொத்துப்பட்டியலில் இது மேலும் உறுதிப்படுத்தியவேளையில் சந்தை அசைவுகளையும் மதிப்பிட்டது. ஊழியர் சேம நிதியத்தின் சந்தைப் பங்கு சொத்துப்பட்டியலில் குறிப்பிடப்பட்டதை 2001 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு பெறப்படாத மூலதன இலாபத்தினைக் காட்டுகிறது.

அட்டவணை II.12
ஊ.சே.நி: 2000 மற்றும் 2001 காலப்பகுதியில் பங்குச் சொத்துப்பட்டியலின் செயலாற்றம்

ரூபா மில்லியன்

| விடயம் | 2000 | 2001 |
|---|---|---|
| சராசரி சொத்துப் பட்டியல் | 1,007 | 1,182 |
| மொத்த பங்கிலாபங்கள் * | 61 | 91 |
| மொத்த மூலதன நன்மைகள் | 25 | 22 |
| மிகை இலாபப் பங்குகள் (கால முடிவில் பெறுமதி) | 251 | 1 |
| மொத்த பங்கிலாபங்கள், மூலதன நன்மைகள், மிகை இலாபப் பங்குகள் | 337 | 114 |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

ஊழியர் சேமநிதியம் முதலீட்டுச்சொத்துக் கூற்று ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை யொன்று எடுக்கப்பட்டுள்ளது.

## இரண்டாம் தரச்சந்தை வர்த்தக நடவடிக்கைகள்

ஊழியர் சேமநிதியம் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் தொடர்பாக இரண்டாம் தரச்சந்தையில் தொடர்ந்தும் பங்கேற்றது. ஊழியர் சேமநிதியம் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான பெற்றுக் கொள்ளக்கூடிய வருமான வீதத்தினை உயர்த்துவதனை இரண்டாம் தரச்சந்தைகள் இயலச் செய்தன. ஆய்விற்குரிய காலப்பகுதியில் ஊழியர் சேமநிதியம் இரண்டாம் தரச்சந்தை நடவடிக்கைகளின் மூலம் ரூ.289 மில்லியன் கொண்ட தொகைய இலாபமாகப் பெற்றவிடத்து, முன்னைய ஆண்டில் ரூ.130 மில்லியன் கொண்ட தொகை மட்டுமே மொத்த மூலதன இலாபமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணை II.13 ஆய்விற்குரிய ஆண்டில் ஊழியர் சேமநிதியத்தின் இரண்டாம்தரச் சந்தைத் தொழிற்பாடுகளின் விபரங்களைத் தருகின்றது.

அட்டவணை II.13
ஊ.சே.நி: 2001இல் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள்

(ரூ.மில்லியன்)

| விடயம் | கொள்வனவு அளவு** | விற்பனவு அளவு** | மூலதன நன்மைகள் |
|---|---|---|---|
| திறைசேரி முறிகள் | 5,121 | 3,211 | 263 |
| திறைசேரி உண்டியல்கள் | 68 | 524 | 4 |
| பங்குகள் | 204 | 99 | 22 |
| மொத்தம் | 5,393 | 3,834 | 289 |

** கொளவிலையில். மூலம்: ஊழியர் சேம நிதியம்

## ஊழியர் சேமநிதிய உறுப்பினர் நிலுவைகளின் மீதான வீடமைப்புக்கடன்

ஊ.சே.நிதிய உறுப்பினரொருவர் வீடமைப்பு நோக்கங்களுக்காக உறுப்பினர் நிலுவையினைப் பிணையாக வைத்து அத்தகைய நிலுவையில் ஆகக்கூடியது 75% வரையான தொகையை ஒப்புதலளிக்கப்பட்ட கடன் வழங்கல் நிறுவனமொன்றிடமிருந்து கடனாகப் பெற்றுக்கொள்ள தகுதியுடையவராவர். இவ்வசதியானது இப்பொழுது, உறுப்பினர்கள் முதலாவது கடனை தீர்ப்பனவு செய்யுமிடத்து இரண்டாவது கடனைக் பெற்றுக் கொள்ளத்தக்க விதத்தில் விரிவாக்கப்பட்டிருக்கிறது. 2001இல் ஊ.சே. நிதியம் ரூ.2,091 மில்லியன் தொகை கொண்ட மொத்த ஒப்புதல் பெற்ற கடன்களுக்காக 16,066 உறுப்பினர் நிலுவைச் சான்றுப் பத்திரங்களை வழங்கியது. கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு தவணைக் கட்டணங்களைச் செலுத்தத்தவறியமையின் விளைவாக செலுத்தத்தவறிய தொகையின்மீது கடன்வழங்கல் நிறுவனங்கள் பெருமளவு தண்ட வீதங்களை விதித்துள்ளன. எனவே இது உறுப்பினர்கள் தவணைக் கடன்களை உரிய நேரத்தில் செலுத்துவதில் ஈடுபாடு காட்டவைக்கும்.

அட்டவணை II.14
ஊ.சே.நி : அடிப்படைப் பண்புகள்

| விடயம் | 2000 | 2001(அ) |
|---|---|---|
| உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | | |
| செயற்படுபவை | 1,913,288 | 1,932,000 |
| செயற்படாதவை | 6,663,900 | 6,910,400 |
| ஆண்டு உதவு தொகைகள் (ரூ.மில்.) | 16,853 | 17,738 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.மில்.) | 10,802 | 10,882 |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 95,157 | 93,008 |
| மொத்த முதலீட்டு சொத்துப் பட்டியல் (ரூபில்.) | 215 | 246 |
| சராசரிச் சொத்துச் பட்டியலின் மீதான வருமான வீதம் | 12.95 | 12.75 |
| மொத்த உறுப்பினர் நிலுவை (ரூ.பில்) | 223 | 255 |
| மொத்த வருமானம் (ரூ.மில்.) | 26,313 | 29,472 |
| வருமான வரி (ரூ.மில்.) | 2,616 | 2,899 |
| நிருவாகச் செலவுகள் (ரூ.மில்.) | 259 | 283 |
| முதலீட்டு வருமானத்தின் % நிருவாகச் செலவுகள் (%) | 0.9 | 0.9 |
| வீடமைப்புக் கடன் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டவை | 12,938 | 16,066 |
| உறுப்பினர் நிலுவைகளின்மீது பிரகடனப் படுத்தப்பட்ட சாதாரண வட்டிவீதம் | 11.50 | 11.00 |
| உறுப்பினர் நிலுவைகளின்மீது பிரகடனப் படுத்தப்பட்ட உண்மையான கடன்வீதம் | 11.69 | 11.18 |

(அ) தற்காலிகமானவை. மூலம் : ஊழியா சேம நிதியம்

# செலாவணிக் கட்டுப்பாடு

மூலதனக் கணக்கினை மேலும் தாராளமயப் படுத்தும் நோக்கில் 2001ஆம் ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் பல முக்கிய

நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஏற்கனவே உள்ள செலாவணிக் கட்டுப்பாட்டு ஏற்பாடுகளின் நியதிகளின்படி செலாவணி துஷ்பிரயோகங்களையும் மோசடிகளையும் தவிர்த்துக் கொள்ளுவதற்கு மேலதிகமாக பயங்கரவாதம் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களைக் கண்டுபிடிக்கும் நோக்கில் திணைக்களம் அதனது கண்காணிப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தியது. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை மீறல், சரக்குக் கொண்டு செல்லுவோரை பதிவு செய்தல் பயணமுகவர்கள் மற்றும் நாணய மாற்றுநர்களுக்கான உரிமம் வழங்குதல் மற்றும் உரிமைகளைப் புதுப்பித்தல் தொடர்பான நடவடிக்கைகளும் இவ்வாண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

மூலதனக் கணக்கினை மேலும் தாராளமயப் படுத்துவதற்காக இவ்வாண்டில் மேற்கொள்ளப் பட்ட இரு முக்கிய விடயங்களாவன இலங்கையில் முதலீடு செய்வதற்காக வதிவற்ற இலங்கையர்களிட மிருந்து வெளிநாட்டு பணஅனுப்பல்களைக் கவருவதற்காக வதிவற்ற முதலீடுகளுக்கான ரூபாக்கணக்கு எனப்படும் சிறப்புக் கணக்கு ஒன்றின் அறிமுகப்படுத்தலும் வதிவற்றோரும் குறித்துரைக்கப்பட்ட முகவர்களும் (அங்கீகரிக்கப் பட்ட வணிகர்களும் முதனிலை வணிகர்களும்) முதலீடு செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட சிறீலங்கா அபிவிருத்தி முறி என்ற பெயரில் டொலரில் செலுத்தப்படும் அரசாங்க முறிகளின் வழங்கலுமாகும். வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தப்பட்ட முக்கிய விடயங்களாக செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் விதிக்கப்படும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு சரக்குத் தொகுதிக்கணக்கு அடிப்படையில் வர்த்தக வங்கிகளினால் தங்கத்தினை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டமையும் களஞ்சியப் பண்டகசாலை வர்த்தகத்தின் கீழ் மீள் ஏற்றுமதிக்காக கராம்பு இறக்குமதி மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அகற்றப் பட்டமையுமாகும். இவ்வாண்டின் ஏனைய நிகழ்வுகளாவன வட்டி உழைக்கும் கணக்குகளை வைத்திருப்பதற்கு வதிவற்றோர் அனுமதிக்கப்பட்ட மையும் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களின் சமர்ப்பித்தலுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்ட காப்புறுதியாளர்களினால் மேற் கொள்ளப்படும் விண்ணப்பங்களின் பேரின் வெளிநாட்டு காப்புறுதியாளர்களுக்குச் செலுத்தப்படவுள்ள மீள் காப்புறுதிக் கட்டணங்கள் தொடர்பான பணஅனுப்பல்களுக்கு அங்கீகார மளிக்கப்பட்ட வணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டமையுமாகும்.

## மூலதன கொடுக்கல் வாங்கல்கள்

### (அ) இலங்கையில் வதிவற்றோர் முதலீடு

### 1 ரன்சி திட்டம்

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களுக்கு விஷேட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அவர்களது சம்பாத்தியங்களை செலாவணிக் கட்டுப்பாடுகளின்றி இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிப்பதற்குமாக அத்தகைய வகையினர் தொடர்பான விஷேட முதலீட்டுத் திட்டம் ஒன்று 2001ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டது. வெளிநாட்டில் தொழில் ஒன்றை மேற்கொள்வதற்காக, அல்லது வாணிபமொன்றினை அல்லது தொழிற்துறையொன்றினை நிறுவுவதற்காக இலங்கையை விட்டுச்சென்ற இலங்கையர்களும் இலங்கைக்கு வெளியே நிரந்தர வதிவிடங்களைக் கொண்ட இலங்கையர்களும் செலாவணிக் கட்டுப்பாட்டு நோக்கங்களுக்காக வதிவற்றோர் எனக் கருதப்பட்டதோடு அரசாங்க பிணையங்கள் மற்றும் முறிகள் போன்ற சில முதலீடுகளில் முதலீடு செய்வதற்கு இதுவரை காலமும் அனுமதிக்கப்படவில்லை. இந்த விஷேட திட்டத்தின்கீழ் வட்டியீட்டும் அடிப்படையில் வைத்திருக்கப்படக்கூடிய வதிவற்றோர் முதலீட்டுக்கான ரூபாக்கணக்கு என்ற பெயரில் கணக்கொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. வதிவற்ற இலங்கையர்களினால் ரன்சி கணக்குகளின் ஊடாக பணஅனுப்பல் மேற்கொள்ளப்படும்போது செலாவணிக் கட்டுப்பாட்டுத் தடைகள் இன்றி அத்தகைய நிதியங்களை (வைப்புச் சான்றிதழ்கள் தவிர்ந்த) ஏதேனும் நிதியியல் மற்றும் உண்மைச் சொத்துக்களில் முதலீடு செய்யலாம். அத்தகைய முதலீடுகளுக்கான கொடுப்பனவுகளை ரன்சி கணக்குகளிலுள்ள நிதியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வங்கி வரைவுகளின் ஊடாக மேற்கொள்ளலாம். ரன்சி கணக்குகளின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் வட்டி, பங்கிலாபம், இலாபம் வட்டி வருவாய் போன்ற அனைத்து வருவாய்களையும் ரன்சி கணக்குகளில் மீண்டும் வரவு வைக்கலாம். ரன்சி கணக்கில் உள்ள பணத்தை கட்டுப்பாடின்றி வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கவும்.

### 2. இலங்கை அபிவிருத்தி முறிகள்

இலங்கையில் முதன்முறையாக இலங்கை அபிவிருத்தி முறிகள் என்ற பெயரில் டொலரில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்க முறிகளை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள வகையிலான வதிவற்ற ஆட்களுக்கும் அமைப்புக்களுக்கும் அத்தகைய முறிகளை சந்தைப்படுத்துவதற்கு குறித்துரைக்கப்பட்ட முகவர்களுக்கு (அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களும்

முதனிலை வணிகர்களும்) செலாவணிக் கட்டுப்பாடு அனுமதி வழங்கப்பட்டது. செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளுக்கிணங்க அத்தகைய முறிகளில் முதலீடு செய்வதற்கும் அத்தகைய ஆட்களுக்கு செலாவணிக் கட்டுப்பாட்டு அனுமதி வழங்கப்பட்டது.

(i) இலங்கையில் வதியும்அல்லது இலங்கைக்கு வெளியே வதியும் வெளிநாட்டுப் பிரசைகள்.

(ii) இலங்கைக்கு வெளியே நிரந்தர வதிவுடைய இலங்கைப் பிரசைகள்

(iii) தொழில் புரிவதற்கு அல்லது வாணிபமொன்றினை அல்லது தொழிற்துறை ஒன்றினை நிறுவுவதற்காக இலங்கையிலிருந்து சென்று வெளிநாட்டில் வதியும் இலங்கைப் பிரசைகள்.

(iv) இலங்கை தவிர்ந்த நாடொன்றின் சட்டங்களின்கீழ் நிறுவப்பட்ட கூட்டு அல்லது கூட்டல்லா ஆயங்கள்

இலங்கை அபிவிருத்தி முறிகளில் தாமாகவே முதலீடுகளை மேற்கொள்ளுவதற்கும் குறித்துரைக்கப் பட்ட முகவர்கள் அனுமதிக்கப்பட்டனர். முதலீட்டுக்கும் சந்தைப்படுத்தலுக்கும் வசதி செய்துகொடுக்கும் நோக்கில் பின்வரும் இரண்டு கணக்குகளைப் பேணுவதற்கு குறித்துரைக்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப் பட்டது.

i) அரசாங்கத்திடமிருந்து நேரடியாகவே இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்யும் தகைமைபெற்ற முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்படும் நிதியங்களை அரசாங்கத்துக்கு வரவு வைப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட வணிகர் ஒருவருடன் அரசாங்கத்தின் சார்பில் இலங்கை அபிவிருத்தி முறி முதலீட்டுக் கணக்கு என்ற பெயரில் ஐ.அ.டொலர் வட்டி உழைக்கும் கணக்கு

ii) அரசாங்கத்திடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்ய தகைமைபெற்ற முதலீட்டாளர்களுடன் அவற்றின் வாணிபத்தில் ஈடுபடுவதற்காக அங்கீகாரம் பெற்ற வணிகர் ஒருவருடன் குறித்துரைக்கப்பட்ட முகவரினால் “முறிகளின் முதலீட்டுக்கான டொலர் கணக்கு” என்ற ஐ.அ.டொலர் கணக்கு ஒன்று பேணப்படலாம். அத்தகைய குறித்துரைக்கப்பட்ட முகவர் அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு செலாவணி வணிகராக இருந்தால் இக்கணக்கு பேணல் அவசியமற்றதாகும்.

## ஆ. இலங்கையில் வதிவுடையவர்களின் வெளிநாட்டு முதலீடு

2001ஆம் ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் மூன்று கம்பனிகளின் வெளிநாட்டு முதலீடுகளுக்கு ஒப்புதல் வழங்கியது. இம் முதலீடுகள் ஏற்றுமதி ஊக்குவிப்பு, இனிப்புப்பண்டத் தயாரிப்பு மற்றும் ஆடை உற்பத்தி என்பனவற்றில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு ஒப்புதலளிக்கப்பட்ட முதலீடுகளின் மொத்தப் பெறுமதி கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 1.18 மில்லியனாகும்.

## இ. வதிவற்றவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள கம்பனிகளுக்கான ரூபாக்கடன் வழங்கல்

வங்கிகளின் கரைகடந்த கூறுகளிலும், வெளிநாடுகளிலுள்ள கடன்வழங்கும் நிறுவனங்களிலும் நிதி வசதி பெறக்கூடிய முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட கம்பனிகள் தவிர்ந்த ஏனைய வதிவற்றோர் கட்டுப்பாட்டுக் கம்பனிகளுக்கு கடன்களையும் முற்பணங்களையும் உள்ளடக்கி ரூபா வசதிகளை வழங்குவதற்கு வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட அனைத்து வங்கிகளுக்கும் 1999இல் அனுமதி வழங்கப்பட்டது. தனியார் துறைக்கு அதனது மொத்தக் கடன்வழங்கலில் சதவீதமொன்றாக ஒவ்வொரு வங்கியின் மீதும் விதிக்கப்பட்ட முன்மதியுடைய வரையறைகளுக்கு உட்பட்டு முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட வதிவற்ற கட்டுப்பாட்டின் கீழான கம்பனிகளையும் உள்ளடக்கும் விதத்தில் 2000ஆம் ஆண்டு ஏப்பிறலில் இருந்து இந்த அனுமதி நீடிக்கப்பட்டது. அத்தருணத்தில் வங்கிகளின் மீது விதிக்கப்பட்ட தொடக்க வரையறைகள் பின்வருமாறு

| | |
|---|---|
| வெளிநாட்டு வங்கிகள்- | வரையறை இல்லை |
| அரச வங்கிகள்- | தனியார்துறைக்கான மொத்தக்கடன் வழங்கலின் 2 சதவீதம் |
| உள்நாட்டு தனியார் வங்கிகள்- | தனியார் துறைக்கான மொத்தக்கடன் வழங்கலின் 3 சதவீதம் |
| உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகளான டீஎப்சீசீ வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கியும் (என்டீபீ)- | தனியார் துறைக்கான மொத்தக்கடன் வழங்கலின் 5 சதவீதம் |

2001ஆம் ஆண்டு ஏப்பிறலில் டீஎப்சீசீ வங்கி, என்டீபீ என்பனவற்றுக்குப் பிரயோகிக்கப்படக்கூடிய முன்மதியுடைய வரையறையானது தனியார்துறைக்கான அவற்றின் மொத்தக் கடன் வழங்கலின் 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டன.

## ஈ. வதிவுடையவர்களின் வெளிநாட்டு நாணய கடன்பாடுகள்

வதிவுடையவர்களின் வெளிநாட்டு நாணய கடன்பெறுகைகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் இவ்வாண்டில் மாற்றமின்றிக் காணப்பட்டன. நேரடி மற்றும் மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டு நாணய கடன்களை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் ஆகிய உரிமம்பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கும் அத்தகைய கடன்களை வழங்குவதற்காக வெளிநாட்டு நாணய தொடர்கடன்களினூடான மூலவளங்கள் காணப்படின் ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டு நாணய கடன்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. உள்நாட்டுச் சொத்துக்களை ஈடாக வைத்து பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களை செலுத்தத் தவறுமிடத்து அத்தகைய சொத்துக்களின் விற்பனைப் பெறுமதிகளை வெளிநாட்டுச் செலாவணியாக மாற்றுவதற்காக செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு விண்ணப்பிப்பதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. எனினும், இந்தக் கடனை வெளிநாட்டு நாணயத்தில் மீட்பதற்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளதாகவும் வெளிநாட்டு நாணயத்துக்காக ஈடுவைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் விற்பனை செய்யப்படவேண்டும் என செலாவணிக் கட்டுப்பாட்டாளர் திருப்தியடைந்தால் மட்டுமே அத்தகைய விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படும்.

## உ. வதிவுடைய கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன் பெறுகைகள்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்து முழுமையான விலக்களிப்புக்களைப் பெற்றுள்ள முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள கம்பனிகள் தவிர்ந்த வதிவுடைய கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்கு செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முன்ஒப்புதல் அவசியமாகும். இவ்வாண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் எத்தகைய வெளிநாட்டுக் கடனுக்கும் ஒப்புதல் வழங்கவில்லை.

## ஊ. குடிபெயர்ந்த இலங்கையர்களினதும் வெளிநாட்டு பிரசைகளினதும் தடுத்து வைக்கப்பட்ட நிதியங்கள்

குடிபெயர்ந்த இலங்கையர்களின் மூலதனச் சொத்துக்களின் விற்பனையின் மூலம் பெறப்பட்ட நிதியங்கள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்ட கணக்குகளில் வைத்திருக்கப்பட்ட வேளையில் வரிப்பொறுப்புக்களை செலுத்தியபின் அவற்றின் மீதான வட்டி வருவாயினை அனுப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. கடந்த காலங்களைப் போலவே தனிப்பட்ட ஆளொருவருக்கு ரூபா 750,000/- மற்றும் குடும்ப அலகு ஒன்றுக்கு ரூபா 1.0 மில்லியன் என்ற உச்ச வரையறைக்கு உட்பட்டு வர்த்தக வங்கிகளின் ஊடாக நிதியங்கள் அனுமதிக்கப்பட்டன. இலங்கையிலிருந்து குடிபெயர்வோரின் அத்தகைய 446 விண்ணப்பங்கள் தொடர்பாக ரூபா.215.75 மில்லியன் கொண்ட தொகையொன்று இவ்வாண்டில் அனுப்பி வைக்கப்பட்டது. இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோரின் அசையாச் சொத்துக்களின் விற்பனையின் மூலம் பெறப்பட்ட ரூபா.13.75 மில்லியன் கொண்ட தொகையொன்று இவ்வாண்டில் அனுப்பி வைக்கப்பட்டது.

## எ. வதிவற்றோர் ரூபாக் கணக்குகள்

கடந்த காலத்தில் வட்டி உழைக்கும் அடிப்படையில் ரூபாக் கணக்குகளை தொழிற்படுத்துவதற்கு வதிவற்றோரின் சில வகையினருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இலங்கையில் வைத்திருக்கப்படும் அவர்களது நிதியங்களிலிருந்து பெறப்படும் வட்டியின் நன்மைகளை வழங்குவதற்காக வதிவற்றோரின் பின்வரும் வகையினருக்கு வட்டி உழைக்கும் கணக்குகளைத் தொழிற்படுத்துவதற்கு 2001ஆம் ஆண்டு ஏப்பிறலிலிருந்து அனுமதி வழங்கப்பட்டது.

(அ) இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையரல்லாதோர்.

(ஆ) இலங்கைக்கு வெளியே பதிவு செய்யப்பட்ட கம்பனிகள்

(இ) இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கைப் பிரசைகள்

(ஈ) இலங்கையில் உள்ள இராஜதந்திர அமைப்புக்களும் ஏனைய வெளிநாட்டு அமைப்புக்களும் (உதாரணம் ஐக்கிய நாடுகள் சபையினதும் ஏனைய முகவராண்மையினதும் சிறப்பு முகவராண்மைகள்)

(உ) இலங்கையில் உள்ள இராஜதந்திர அமைப்புக்களினதும் ஏனைய வெளிநாட்டு அமைப்புக்களினதும் இலங்கையர் அல்லா அலுவலர்கள்.

## 2. வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள்

இவ்வாண்டில் தங்கத்தின் இறக்குமதியினை மேலும் தாராளமயப்படுத்துவதற்காக செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டு சரக்குத்தொகுதிக் கணக்கு அடிப்படையில் வர்த்தக வங்கிகளினால் தங்கத்தின் இறக்குமதியினை அனுமதிப்பதற்காக இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டம் திருத்தப்பட்டது. இதற்கமைய செலாவணிக் கட்டுப்பாட்டாளர் 30.05.2001 இன் இல் 1186/18 விசேட அரச வர்த்த மானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் வர்த்தக வங்கிகள் தங்கத்தை இறக்குமதி செய்வதற்காக பொதுவாக வழங்கப்பட்ட அனுமதியினை அறிவிப்புச் செய்தார். சரக்குத் தொகுதிக் கணக்கு அடிப்படையில் தங்கத்தை இறக்குமதி செய்வதற்கு ஏற்புடையதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பனவும் வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டன. பண்டகசாலை களஞ்சிய வர்த்தகத்தைப் பொறுத்தவரையில் பண்டகசாலை களஞ்சிய வர்த்தகத்துக்கான பொதுவான நியதிகளுக்கு உட்பட்டு பண்டகசாலை களஞ்சிய வர்த்தகத்தின் கீழ் மீள் ஏற்றுமதிக்காக கராம்பின் இறக்குமதி மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டன.

## 3. சரக்கு கொண்டுசெல்வோரை பதிவு செய்தலும் வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கான அனுமதிப்பத்திரங்களும்

சரக்கு கொண்டு செல்வோரை பதிவு செய்தல், பயணிகள் காசோலைகளை வழங்குவதற்கு பயண முகவர்களுக்கு அதிகாரம் வழங்குதல், நாணய மாற்றுநர்கள் ஹோட்டல்கள், தீர்வையற்ற கடைகள், பயண முகவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு பணிகளை வழங்குவோர் ஆகியோருக்கு வெளிநாட்டு நாணயங்களை ஏற்றுக்கொள்ளுவதற்காக உரிமங்களை வழங்குதல்/ புதுப்பித்தல் போன்ற விடயங்களை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ந்து மேற்கொண்டது.

### அ. சரக்கு கொண்டு செல்வோரை பதிவு செய்தல்

2001ஆம் ஆண்டில் சரக்குக் கொண்டு செல்வோராக 16 புதிய கம்பனிகள் பதிவு செய்யப்பட்டு ஆண்டின் இறுதியில் சரக்குக்கொண்டு செல்வோராக பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 109 இற்குக் கொண்டுவரப்பட்டது. தம்முடன் பதிவு செய்யப்பட்டுள்ள சரக்குக் கொண்டு செல்வோரின் நடவடிக்கைகளை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ந்து கண்காணித்து வந்தது.

### ஆ. பயண முகவர்களுக்கு பயணிகள் காசோலைகளை வழங்குவதற்கான அதிகாரம்

வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் இலங்கையர்களுக்கு பயணிகள் காசோலைகளை வழங்குவதற்கான அதிகாரம் வழங்கும் புதிய அனுமதிப்பத்திரங்கள் எதுவும் இவ்வாண்டில் வழங்கப்படவில்லை. எனவே இலங்கையில் பயணிகள் காசோலைகளை வழங்குவதற்கு அதிகாரம் பெற்ற பயணமுகவர்களின் எண்ணிக்கை 7ஆக மாற்றமின்றியிருந்தது.

### இ. நாணய மாற்றுநர்களை நியமித்தல்

இவ்வாண்டில் நாணயமாற்று வாணிபத்தில் ஈடுபடுவதற்காக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் இரண்டு புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதோடு அங்கீகரிக்கப்பட்ட நாணயமாற்றுநர்களின் எண்ணிக்கை 32இற்கு அதிகரித்தது. நாணய மாற்றுநர்களினால் வர்த்தக வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்ட தொகை 2000ஆம் ஆண்டின் ரூபா 38.8 மில்லியனிலிருந்து 2001ஆம் ஆண்டில் ரூபா 100.9 மில்லியனுக்கு அதிகரித்ததுடன் இது 160 சதவீத அதிகரிப்பொன்றாகும்.

## 4. கண்காணிப்பு

1994இல் நடைமுறைக்கணக்கு கொடுக்கல் வாங்கல்கள் தாராளமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து கோரிக்கைகளின் உண்மை நிலையை அறிந்து திருப்தி கண்ட பின்னர் தமது தீர்மானத்தையும் தன்மதிப் பிரயோகத்தினையும் பயன்படுத்தி நடைமுறைக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களுக்காக எத்தகைய கட்டுப்பாடும் இன்றி வெளிநாட்டுச் செலாவணியை விடுவிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கும் ஒப்புதளிக்கப்பட்ட பயண முகவர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

எனினும், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் கண்காணிப்பினை இயலச்செய்யும் பொருட்டு வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை மற்றும் கொள்வனவு தொடர்பாக கிரமமான முறையில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு அறிவிக்குமாறு அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களும் ஒப்புதல் வழங்கப்பட்ட பயண முகவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டனர். மின்னியல் நிதியமாற்ற அட்டைகளினூடான வெளிநாட்டுச் செலாவணியின் விடுவிப்பு மீதும் அறிக்கை சமர்ப்பிக்கும்படி 1999இலிருந்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். தற்பொழுது மாதமொன்றுக்கு ஐ.அ.டொலர் 5000த்தினை விஞ்சும் மின்னியல் நிதியமாற்ற அட்டைகளினூடாக வெளிநாட்டுச்

செலாவணி எடுப்பனவுகள் தொடர்பாக அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களும் விரிவான மாதஅறிக்கைகளை சமர்ப்பிக்கின்றனர்.

இவ்வாண்டுக் காலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவு மற்றும் விற்பனவு தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. குறிப்பாக 2001-10-16ஆம் நாள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் 2001ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் அந்த ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகுதல் சம்பந்தமாக வர்த்தக வங்கிகள், சிறப்பியல்பு வங்கிகள், நாணய மாற்றுநர்கள் பயணிகள் காசோலைகளை வழங்குவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள பயண முகவர்கள் மற்றம் வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்ளுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஏனைய ஆட்கள் ஆகியோருக்கு செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் இரகசியத்தன்மை கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பலவற்றை வழங்கியது. மேலும் இந்த ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகுவதற்காக பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களைக் கண்டுபிடிப்பதற்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதும் அத்தியாவசியமானதாகும். இந்த நோக்கத்திற்காக அத்தகைய கொடுக்கல் வாங்கல்களைக் கண்டுபிடிப்பதற்காக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் விஷேட பிரிவு ஒன்று நிறுவப்பட்டது. பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மூலதன மாற்றல்களும் இவ்வாண்டில் கண்காணிக்கப்பட்டன.

அத்தகைய முற்பணக் கொடுப்பனவுகளுக்கு எதிராக நாட்டினுள் பொருட்களும் பணிகளும் வந்தடைவதை உறுதிசெய்து கொள்ளுவதற்காக வேண்டி இறக்குமதிகளுக்கான முற்பணக் கொடுப்பனவுகளையும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ந்து கண்காணித்து கப்பல் மற்றும் விமான வழி முகவர்களினதும் அதேபோன்று வெளிநாட்டு முதன்மையாளர்கள்/முகவர்களின் சார்பில் பொருட்கொண்டு செல்வோரினாலும் பேணப்படும் ரூபாக் கணக்குகளின் வரவுகளும் பற்றுக்களும் இவ்வாண்டிலும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டன.

### 5. புலனாய்வு

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ந்தும் புலனாய்வு செய்தது. பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பின் புலனாய்வுகள் இவ்வாண்டில் இறுதியாக்கப்பட்டதோடு 9 வழங்குகள் தொடர்பாக ரூபா 1.7 மில்லியன் தொகையிலான தண்டங்களும் இவ்வாண்டில் விதிக்கப்பட்டன.

## பொதுப்படுகடன்

நாணய விதிச்சட்டத்தின் 113ஆவது பிரிவின் நியதிகளின்படி, இலங்கை அரசின் இறைமுகவரான இலங்கை மத்திய வங்கி, அரசபடுகடன் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருந்து வருகின்றது. இச்சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களம் அரசின் சார்பில் உள்நாட்டுப் படுகடன்களை, வழங்கல் தீர்ப்பனவு செய்தல் மற்றும் முகாமைத்துவப்படுத்தல் மற்றும் வெளிநாட்டுப் படுகடன்கள் தீர்ப்பனவு செய்தல் என்பனவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. இது பல்வேறு வகையான உள்நாட்டுப் படுகடன் பிணையங்களை அதாவது ரூபாக்கடன்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் என்பனவற்றை வழங்குவதற்கான உரிமையை அளித்தன. அரசபடுகடன் கருவிகளிலொன்றாக அவை கொண்டிருந்த முக்கியத்துவத்தினை பெரும்பாலும் முழுமையாகவே இழந்துள்ளபோதும் பொதுப்படுகடன் திணைக்களம் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வரி ஒதுக்குச் சான்றிதழ்களையும், திறைசேரி வைப்புச் சான்றிதழ்களையும் தொடர்ந்தும் தீர்ப்பனவு செய்கின்றது.

2001ஆம் ஆண்டின் புதிய நிகழ்வு யாதெனில் அரசின் சார்பில் பொதுப்படுகடன் திணைக்களம் வெளிநாட்டுப்படுகடன் ஒன்றின் வழங்கலை மேற்கொண்டதேயாகும். 1957ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வெளிநாட்டுப்படுகடன் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பொதுப்படுகடன் திணைக்களம் ஐ.அ.டொலர் நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளை வழங்கியது.

பொதுப்படுகடன் திணைக்களம் அரச பிணையங்களின் முதன்மை வணிகர்களை மேற்பார்வை செய்ததுடன் அரசின் பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்வதற்காக பல வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.

### அபிவிருத்தி நடவடிக்கைகள்

ஐ.அ.டொலர் நாணயத்திலமைந்த இலங்கை அபிவிருத்தி முறிகளை வழங்கிய முன்னோடி நடவடிக்கைக்குப் புறம்பாக, பொதுப்படுகடன் திணைக்களம் உள்நாட்டு அரச பிணையங்கள் சந்தையின் வினைத்திறனை அபிவிருத்தி செய்வதற்காக முயற்சிகளை மேற்கொண்டதுடன் பல சீர்திருத்தங்

களையும் நடைமுறைப்படுத்தியது. இவை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை முதனிலை வணிகர்களாக்குவதற்கு அனுமதிப்பதன் மூலம் முதனிலை வணிகர்கள் அமைப்பின் உத்தேச விரிவாக்கம், கண்காணிப்பு முறைகளை வலுப்படுத்தல், முதனிலை வணிகர்கள் தொடர்பான மேற்பார்வை வரைச்சட்டம் மற்றும் பொதுமக்களுக்கு இரண்டாந்தரச் சந்தை தகவல்களை மேம்பட்ட ரீதியில் பரப்புதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

அரசின் பிணையங்கள் சந்தையில் முதனிலை வணிகர்கள் தொடர்ந்தும் முக்கிய பங்கு வகித்தனர். பெருமளவு போட்டியினை அதிகரிக்கவும் சந்தைக்கு திரவத்தன்மையினையும், அழுத்தத்தினையும் ஏற்படுத்தவும் படுகடன் முறையின் நிதியியல் ஆற்றல் மேம்படுத்துவதற்குமாக போதுமானளவு நிதியியல் மூலவளங்களையும், நிபுணத்துவத்தையும் கொண்ட நிறுவனங்களை உள்ளடக்கும் விதத்தில் பொதுப்படுகடன் முறையினை விரிவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. விரிவாக்கப்பட்ட பொதுப்படுகடன் முறை மேலே விபரிக்கப்பட்ட காரணங்களுக்காக அரசின் கடன்பாட்டுச் செலவினைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இதன்படி 2001இல் நாணயச்சபை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை முதனிலை வணிகர்களாக நியமிப்பதற்கு அனுமதிப்பதென கொள்கையளவில் தீர்மானித்தது. புதிய உத்தேசிக்கப்பட்ட முறையின் கீழ் முதனிலை வணிகர்களில் தனிப்பட்ட முதனிலை வணிகர் கம்பனிகள் மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் என இரு வகைகள் காணப்படும். முதனிலை வணிகராக நியமிக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று, முதனிலை வணிக நடவடிக்கைகளிலிருந்து எழும் கடப்பாடுகளைத் தீர்ப்பதற்கு பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படுவதற்காக முதனிலை வணிகர் சிறப்பு ஒதுக்கு என அழைக்கப்படும் சிறப்பு ஒதுக்கொன்றினை உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படும். முதனிலை வணிகர் சிறப்பு ஒதுக்கின் ஆகக்குறைந்த தொகை ரூ.150 மில்லியனாக இருக்கும் எனத் தீர்மானிக்கப்பட்டதுடன், இது அடுக்கு மூலதனத்தின் குறைந்தது மூன்றிலிரண்டு பங்கினையும் மீதி அடுக்கு 2 மூலதனத்தின் மூன்றிலொரு பங்கு வரையான தொகையையும் உள்ளடக்கியிருக்கும். உரிமம்பெற்ற வர்த்தக வங்கியானது, மூத்த முகாமைத்துவ பதவியினை வகிக்கும் ஒருவரை முகாமையாளராகக் கொண்ட தனிப்பட்ட பிரிவொன்றில் அதன் முதனிலை வணிக வியாபாரத்தினை நடத்தவேண்டுமெனவும் முதனிலை வணிக நடவடிக்கைகள் தொடர்பாக தனியான கணக்கேடுகளை பேணவேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படும். உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் முதனிலை வணிகர்கள் தொடர்பாக முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கும் மத்திய வங்கியின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக்கும் உட்பட்டிருக்கும்.

புதிய முதனிலை வணிகர்களின் நியமனம் பதிவு செய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டம் என்பவற்றினது ஏற்பாடுகளின்கீழ் நிதியமைச்சினால் பிரகடனம் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கிணங்க மேற்கொள்ளப்படும். இவ்வொழுங்கு விதிகள் 2002ஆம் ஆண்டின் தொடக்கப் பகுதியில் நடைமுறைக்கு வரும்.

ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் போட்டி காரணமாக பன்னாட்டு கொடை முகவர்களிடமிருந்து நிதிகளைத் திரட்டுவதற்கான வாய்ப்புக்கள் குறைந்து வருவதுடன் உள்நாட்டு வட்டி வீதங்களில் மேல்நோக்கிய அழுத்தங்களை ஏற்படுத்தாமல் உள்நாட்டுச் சந்தைகளிலிருந்து மேலதிக நிதிகளை திரட்டுவதில் காணப்படும் இடர்ப்பாடுகள் இணைந்து கொண்டமையை கருத்திற்கொள்கையில் வெளிநாட்டு மூலங்களிலிருந்து நிதிகளைத் திரட்டுவதற்கான சாத்தியங்களைக் கண்டறிவது விரும்பத்தக்கதாக மாறியிருக்கிறது. அரசின் சார்பில் பொதுப்படுகடன் திணைக்களம் ஈராண்டு ஐ.அ.டொலர் 158.5 மில்லியன் ஐ.அ.டொலர் தொகை கொண்ட ஐ.அ.டொலர் நாணயத்திலமைந்த இலங்கை அபிவிருத்தி முறிகளை 2001இல் நவெம்பரிலும் திசெம்பரிலும் மூன்று பிரிவுகளாக வெளியிட்டது. இலங்கை அபிவிருத்தி முறிகள் 2001ஆம் ஆண்டிற்கான கடன்பாட்டு வரையறைக்குள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

முதலீட்டாளர்களின் பின்வரும் வகையினர் இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்ய தகைமையுடையவர்களாவர்.

(அ) 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 4இன் நியதிகளில் நியமிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள்

(ஆ) 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்கு. பிணையங்களின் கட்டளைச்சட்டம் மற்றும் 1923 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பனவற்றின்கீழ் நாணயச் சபையினால் நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்கள்

(இ) இலங்கையில் வதியும் அல்லது இலங்கைக்கு வெளியே வதியும் வெளிநாட்டுப் பிரசைகள்

(ஈ) இலங்கைக்கு வெளியே - நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகள்

(உ) தொழிலின் பொருட்டு அல்லது வியாபார நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்காக அல்லது தொழில்சார் முறையில் இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கைப் பிரசைகள்

(ஊ) இலங்கை தவிர்ந்த நாடொன்றின் சட்டங்களின்கீழ் நிறுவப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட அல்லது ஒருங்கிணைக்கப்படாத நிறுவனங்கள்.

இலங்கை அபிவிருத்தி முறிகள் புறக்குறிப்பீடு செய்வதன் மூலம் மாற்றல் செய்யக்கூடியனாகவும் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்பாளருடன் விநியோகம் மற்றும் பதிவு செய்யக்கூடியதாகவும் இருக்கும். முதல் இரு தொகுதிகளின் கீழும் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் முதலாம் ஆண்டின் இறுதியில் மாற்றத்தக்க விருப்புரிமையைக் கொண்டிருந்தன. (வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 158.5 மில்லியன் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகளில் ஐ.அ.டொலர் 108.5 மில்லியன் ஈராண்டு முதிர்ச்சிகளுடனும் ஆண்டின் இறுதியில் மாற்றத்தக்க விருப்புரிமையுடனும் வழங்கப்பட்ட வேளையில் மீதி ஐ.அ.டொலர் 50 மில்லியன் விருப்புரிமையின்றி இரண்டாண்டு முதிர்ச்சியுடன் வழங்கப்பட்டன). இலங்கை அபிவிருத்தி முறிகள் குறித்துரைக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகவர்களினூடாக அதாவது அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி முகவர்களூடாகவும் முதனிலை வணிகர்களூடாகவும் சந்தைப்படுத்தப்பட்டன. இலங்கை அபிவிருத்தி முறிகள் ஐக்கிய அமெரிக்காவிலோ அல்லது ஐ.அமெரிக்காவில் வதிபவருக்கோ விற்பனை செய்யமுடியாது.

தகவல் பரப்பும் தொழிற்பாட்டின் ஒரு பகுதியாக, பொதுப்படுகடன் திணைக்களம் முதனிலை வணிகர்களினால் வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அரச பிணையங்கள் சந்தை மீதான நாளாந்த மற்றும் வாராந்த அறிக்கைகளைத் தொடர்ந்தும் திரட்டி வெளியிட்டது. நாளாந்த அறிக்கைகள் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள், திறைசேரி உண்டியல்களுக்கான இருவழிக் கோரல்கள் மற்றும் திறைசேரி முறிகள் என்பன மீதான தகவல்களை வழங்கியவேளையில் வாராந்த அறிக்கைகளும் முதலாந்தர சந்தை அதேபோன்று இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான புள்ளி விபரங்களைத் தருகின்றது. நாளாந்த வாராந்த அறிக்கைகள் செய்தித்தாள்களில் வெளியிடப்படுவதுடன் இலங்கை மத்திய வங்கியின் மின்னியல் ஊடகமான வெப்தளத்தினூடாகவும் ரொயிட்டர் தகவல் பணியினூடாகவும் பொதுமக்களுக்குப் பரப்பப்பட்டன.

வினைத்திறன் மிக்க வெளிப்படையான தன்மை கொண்ட வலுவான பொதுப்படுகடன் முறையொன்றினை மேம்படுத்தும் பொருட்டும், அரச பிணையங்களிலுள்ள முதலீட்டாளர்களின் உரிமையினைப் பாதுகாத்துக் கொள்வதற்குமாக இவ்வாண்டுப் பகுதியில் முன்மதியுடைய தேவைப்பாடுகளையும் மேற்பார்வைக் கட்டமைப்பு வேலைகளையும் வலுப்படுத்தும் பொருட்டு முதனிலை வணிகர்களுக்கான பணிப்புரைகள் வரையப்பட்டன. இப் பணிப்புரைகள் பொதுப்படுகடன் கணக்குகளை வர்த்தகம் மற்றும் முதலீட்டு பிணையங்கள் கணக்கு என வெவ்வேறாகப் பிரித்தல் சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டு பிணையங்களை மீள்மதிப்பீடு செய்யுமாறு முதனிலை வணிகர்களைக் கேட்டுக்கொள்ளல். "நிதியியல் அறிக்கைகள்" தயாரித்து வெளியிடல் மற்றும் வாடிக்கையாளரின் சார்பில் பொதுப்படுகடனினால் வைத்திருக்கப்படும் பிணையங்கள் தொடர்பான "பாதுகாப்பு ஒழுங்குகள்" என்பன மீதானவைகளாக இருந்தன. பணிப்புரைகள் 2002 சனவரியிலிருந்து நடைமுறைக்கு வந்தன.

சிறந்த நடைமுறையினையும் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் மீது தரமான வளங்களையும் ஊக்குவிக்கும் பொருட்டும் முதனிலை வணிகர்கள் பன்னாட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்ட முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கையினை வழமையாகப் பின்பற்றுமாறு முதனிலை வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். இவ்வுடன்படிக்கை முதனிலை வணிகர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அரச பிணையங்களின் அனைத்து மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களிலும் பயன்படுத்தப்படும். வங்கிகளும் முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கையினை பின்பற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரச பிணையங்கள் சந்தையுடன் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடுவதற்காகவும், சந்தைப்பங்கேற்பாளர்களுக்கும் மத்திய வங்கி அலுவலர்களுக்குமிடையில் உறுதியான பேச்சுவார்த்தைகளில் ஈடுசெய்வதற்குமாக வாராந்த அடிப்படையில் முதனிலை வணிகர்களுடன் கிரமமான கூட்டங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. பல் "முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்" பொதுப்படுகடன் திணைக்களத்தினாலும் முதனிலை வணிகர்களினாலும் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் இவற்றில் பல பிராந்தியங்களிலேயே நடாத்தப்பட்டன.

பொதுப்படுகடன் திணைக்களம் அதன் நடவடிக்கைகளை முன் அலுவலகம், இடை அலுவலகம் மற்றும் பின் அலுவலகம் எனப் பிரித்துக் கொண்டமையின் மூலம் அதன் தொழிற்பாடுகளை

நவீன பன்னாட்டுக் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ அமைப்புக்கள் என்பனவற்றிற்கேற்ப மீள ஒழுங்குபடுத்திக் கொண்டது. முன் அலுவல நடவடிக்கைகள் ஏலங்களை நடத்துவதினையும் பொதுமக்களுக்கு பிணையங்களை வழங்குவதினையும் உள்ளடக்கியிருந்தது. இடை அலுவலகம் கடன்பாட்டு உத்திகளை வடிவமைப்பது இடர்முகாமைத்துவம் மற்றும் பொதுப்படுகடன் தரவுத் தளத்தினைப் பேணுதல் என்பனவற்றைக் கையாண்டவேளையில் பின் அலுவலகம் படுகடன் பணிக்கொடுப்பனவுகளிலும் தீர்ப்பனவுகளிலும் ஈடுபட்டிருந்தது.

## தொழிற்பாட்டு நடவடிக்கைகள்

2001ஆம் ஆண்டு இறுதியில் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பணி வழங்கப்பட்ட மொத்த வெளிநின்ற பொதுப்படுகடன் ரூ.1,340,192 மில்லியனாகக் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் இது ரூ.184,352 மில்லியன் அல்லது 16.0 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. 2001ஆம் ஆண்டு இறுதியில் வெளிநின்ற பொதுப்படுகடன் உள்ளமைப்பு ரூ. 693,0000 மில்லியன் (51.7 சதவீதம்) கொண்ட உள்நாட்டுப் படுகடனையும் ரூ.647,192 மில்லியன் (48.3 சதவீதம்) கொண்ட வெளிநாட்டுப் படுகடனையும் உள்ளடக்கியிருந்தது. பொதுப்படுகடனின் உள்நாட்டுக்கூறு ரூ.89,974 மில்லியனால் (14.9 சதவீதம்) அதிகரித்தவேளையில் வெளிநாட்டுப்படுகடன் 2000ஆம் ஆண்டினைவிட ரூ.94,378 மில்லியனால் (17.1 சதவீதம்) உயர்வடைந்தது. அட்டவணை II.15 பொதுப்படுகடன் திணைக் களத்தினால் பணி வழங்கப்பட்ட பொதுப்படுகடனின் உள்ளமைப்பினைக் காட்டுகின்றது.

## உள்நாட்டுப் படுகடன்

## முதலாந்தரச்சந்தை

### திறைசேரி உண்டியல்கள்

2001ஆம் ஆண்டு இறுதியில் வெளிநின்ற மொத்த திறைசேரிஉண்டியல்கள் 2000ஆம் ஆண்டு இறுதியின் ரூ.134,996 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.170,995 மில்லியனாகக் காணப்பட்டது. இதற்கு 2001ஆம் ஆண்டில் திறைசேரி உண்டியல்களின் தேறியவழங்கலில் ஏற்பட்ட ரூ.36,000 மில்லியன் கொண்ட அதிகரிப்பே (அதாவது ரூ.45,100 மில்லியன் கொண்ட புதிய வழங்கல்கள் மற்றும் முதிர்ச்சியடைந்தவை ரூ.9,101 மில்லியன்) காரணமாகும். திறைசேரி உண்டியல்களின் அங்கீகரிக்கப்பட்ட எல்லை ரூ.135,000 மில்லியனிலிருந்து இவ்வாண்டில் ரூ.175,000 மில்லியனுக்கு உயர்த்தப்பட்டது.

இவ்வாண்டுக் காலத்தில் ரூ.238,912 மில்லியன் கொண்ட மொத்த வழங்கல்களுக்குகெதிராகப் பெறப்பட்ட மொத்த விலைக்கோரல்கள் ரூ.325,134 மில்லியன்களாக விளங்கியமையின் மூலம் ஏலங்கள் குறிப்பிடத்தக்களவிற்கு மேலதிகமாக உதவப்பட்டன. இதில் முதனிலை வணிகர்களினால் கொள்வனவு செய்யப்பட்ட தொகை 115,149 மில்லியனாக அல்லது மொத்த வழங்கல்களில் 48.2 சதவீதமாகக் காணப்பட்டன. இலங்கை மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்பட்ட நிதிகள் ரூ.13,332 மில்லியன்களாக விளங்கி, நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களில் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களில் 5.6 சதவீதத்திற்கு வகைகூறின. இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட தொகை ரூ.110,431 மில்லியன் அல்லது

**அட்டவணை II.15**
பொதுப்படுகடன் உள்ளடக்கம்

| வகை | 2000 முடிவில் உள்ளவாறு ரூ.மில். | % | 2001 முடிவில் உள்ளவாறு ரூ.மில். | % |
|---|---|---|---|---|
| உள்நாட்டுப் படுகடன் | 603,026 | 52.2 | 693,000 | 51.7 |
| திறைசேரி உண்டியல்கள் | 134,996 | | 170,995 | |
| ரூபாப் பிணைகள் | 263,888 | | 292,813 | |
| திறைசேரி முறிகள் | 204,124 | | 229,174 | |
| திறைசேரி வைப்புச் சான்றிதழகள் | 11 | | 11 | |
| வரி ஒதுக்குச் சான்றிதழகள் | 7 | | 7 | |
| வெளிநாட்டுப் படுகடன் | 552,814 | 47.8 | 647,192 | 48.3 |
| மொத்தம | 1,155,840 | 100 | 1,340,192 | 100 |

* தற்காலிகமானவை.
மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**அட்டவணை . II.16**
முதிர்ச்சியின்படியும் மூலங்களின்படியும் திறைசேரி உண்டியல்களின் விற்பனைகள் - 2001

ரூபா மில்லியன்

| மூலம் | முதிர்ச்சிக் காலம் (நாட்கள்) 91 | 182 | 364 | ஏனைய | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|
| 1. முதன்மை வணிகர்கள் | 45,097 | 7,358 | 62,694 | - | 115,149 | 48.2 |
| 2. இலங்கை மத்திய வங்கி | - | - | - | 110,431 | 110,431 | 46.2 |
| 3. இலங்கை மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்படும் நிதி | 6,707 | 365 | 6,260 | | 13,332 | 5.6 |
| மொத்தம் | 51,804 | 7,723 | 68,954 | 110,431 | 238,912 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை II.17

திறைசேரி உண்டியல்களின் வருடாந்த நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள்

ஆண்டுக்கான சதவீதம்

| ஆண்டு | முதிர்ச்சிக் காலம் (மாதங்கள்) (அ) | | | பொதுவான சராசரி |
|---|---|---|---|---|
| | 3 | 6 | 12 | |
| 1997 | 11.03 | 11.95 | 12.29 | 11.60 |
| 1998 | 11.77 | 12.13 | 12.20 | 11.98 |
| 1999 | 11.69 | 12.03 | 12.55 | 12.06 |
| 2000 | 12.78 | 12.97 | 14.23 | 13.68 |
| 2001 | 16.11 | 17.33 | 18.41 | 17.41 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) முறையே 3, 6, 12 மாத முதிர்ச்சிகளையுடைய திறைசேரி உண்டியல்களுக்குப் பதிலாக 91 நாட்கள், 182 நாட்கள், 364 நாட்கள் முதிர்வுகளையுடைய உண்டியல்கள் 1999 ஒற்றோபரிலிருந்து வழங்கப்பட்டன.

46.2 சதவீதமாகக் காணப்பட்டது. அட்டவணை II.16 திறைசேரி உண்டியல்களினது விற்பனையின் முதிர்ச்சி அடிப்படையிலான பகிர்ந்தளிப்பினை மூல அடிப்படையில் காட்டுகின்றது.

2001ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல் சான்றிதழ்களின் எண்ணிக்கை 115,391 ஆகக் காணப்பட்டது. இது 91 நாள் 182 நாள் மற்றும் 364 நாள்களைக் கொண்ட முறையே 49,275, 14,823 மற்றும் 51,293 உண்டியல்களை உள்ளடக்கியிருந்தது.

2001ஆம் ஆண்டிற்கான முதிர்ச்சி அடிப்படையிலான நிறையேற்றப்பட்ட சராசரி விளைச்சல் வீதங்கள் அட்டவணை II.17 இல் தரப்பட்டுள்ளதுடன் இலகுவான ஒப்பீட்டிற்காக முன்னைய நான்கு ஆண்டுகளுக்குரிய தொடர்பான வீதங்களும் தரப்பட்டுள்ளன.

### ரூபாக்கடன்கள்

2001ஆம் ஆண்டில் ரூ.51,000 மில்லியன் கொண்ட மொத்தமாக 16 ரூபாக்கடன்கள் மிதக்கவிடப்பட்டன. இதில் இவ்வாண்டில் பெறப்பட்ட உதவுதொகைகள் ரூ.50,910 மில்லியனாகக் காணப்பட்டன. ஊழியர் சேமநிதியம், தேசிய சேமிப்பு வங்கி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன 2001ஆம் ஆண்டிலும் ரூபாக்கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்கான முக்கிய உதவுநர்களாக தொடர்ந்தும் விளங்கியதுடன் இம்மூன்று நிறுவனங்களும் ஒன்றுசேர்ந்து ரூ.48,198 மில்லியனை வழங்கி மொத்த உதவுதொகையால் 94.7 சதவீதத்திற்கு வகைகூறின.

2001ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபாக்கடன்களில் 6-8ஆண்டு விருப்பு முதிர்ச்சிக் காலத்தைக் கொண்டவை ஆண்டிற்கு 13.00 சதவீதத்தினையும், 2ஆண்டு முதிர்ச்சியையும் 2-5 ஆண்டு விருப்பத்திற்குரிய முதிர்ச்சியையும் கொண்டவை ஆண்டொன்றிற்கு 15.00 சதவீத வட்டியையும் கொண்டிருந்தன. இவ் ரூபாக்கடன்களில் மூன்று நிர்ணயிக்கப்பட்ட 2ஆண்டு முதிர்ச்சிகளுடனும் பதினொன்று 2-5ஆண்டு விருப்பத்திற்குரிய முதிர்ச்சிகளுடனும் மற்றைய இரண்டும் 6-8ஆண்டு விருப்பத்திற்குரிய முதிர்ச்சிகளுடனும் மிதக்கவிடப்பட்டன. 2001இல் ரூபாக்கடன்களின் மிதக்கவிடல் மற்றும்

அட்டவணை II.18

ரூபாக் கடன்களைத் திரட்டலும் தீர்ப்பனவு செய்தலும் -2001

ரூபா மில்லியன்

| ஆண்டு வட்டி வீதம் | முதிர்ச்சி (ஆண்டுகள்) | பிணைகளின் எண்ணிக்கை | திரட்டப்பட்ட தொகை |
|---|---|---|---|
| **திரட்டல்** | | | |
| 13.00 | 6/8 | 2 | 4,410 |
| 13.00 | 2/5 | 5 | 13,100 |
| 15.00 | 2 | 3 | 19,500 |
| 15.00 | 2/5 | 6 | 13,900 |
| மொத்தம் | | 16 | 50,910 |
| **மீளக்கொடுத்தல்** | | | |
| 10.00 | 10 | 1 | 1,500 |
| 11.90 | 1 | 1 | 8,000 |
| 12.00 | 2 | 3 | 7,486 |
| 12.50 | 4 | 1 | 2,000 |
| 13.00 | 4 | 1 | 3,000 |
| மொத்தம் | | 7 | 21,986 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை II.19

ரூபாக் பிணைகளின் முதிர்ச்சி அமைப்பு 2001 இறுதியில் உள்ளவாறு

| முதிர்ச்சி (ஆண்டுகளில்) | தொகை (ரூ.மில்.) | சதவீதம் |
|---|---|---|
| 2 | 19,500,000,000 | 6.66 |
| 2/5 | 27,000,000,000 | 9.22 |
| 4/5 | 5,500,000,000 | 1.88 |
| 4/6 | 10,316,677,500 | 3.52 |
| 4/8 | 3,500,000,000 | 1.20 |
| 5 | 10,000,000,000 | 3.42 |
| 5/6 | 17,000,000,000 | 5.81 |
| 5/7 | 53,715,010,400 | 18.34 |
| 6/7 | 33,800,000,000 | 11.54 |
| 6/8 | 5,410,000,000 | 1.85 |
| 7/8 | 26,400,000,000 | 9.02 |
| 8/10 | 24,210,594,000 | 8.27 |
| 9/8 | 1,000,000,000 | 0.34 |
| 1/10 | 19,392,620,000 | 6.62 |
| 9/10 | 7,500,000,000 | 2.56 |
| 10 | 4,479,862,000 | 1.53 |
| 30 | 24,088,000,000 | 8.23 |
| மொத்தம் | 292,812,763,900 | 100.00 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மீள்கொடுப்பனவுடன் தொடர்பான தகவல்கள் அட்டவணை II.18இல் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

2001ஆம் ஆண்டில் 21,986 மில்லியன் தொகைகொண்ட மொத்தமாக 7 ரூபாக்கடன்கள் மீளச் செலுத்தப்பட்டன. இதன்படி, ரூபாக் கடன்களுக்கான தேறிய உதவுதொகைகள் ரூ.28,924 மில்லியன்களாக விளங்கியது. இது, ரூபாக்கடன்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்புக்களை 2000ஆம் ஆண்டு இறுதியின் ரூ.263,888 மில்லியனிலிருந்து 2001 இறுதியில் ரூ.292,813 மில்லியனுக்கு அதிகரித்தது. வெளிநின்ற ரூபாக்கடன்களின் முதிர்ச்சித் தோற்றம் அட்டவணை II.19இல் தரப்பட்டுள்ளது.

ரூபாக் கடன்கள் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.34,250 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட ரூ.348 மில்லியன் (1.0 சதவீதம்) அதிகரிப்பொன்றினைக் காட்டியது.

## திறைசேரி முறிகள்

2001ஆம் ஆண்டில் 2 மற்றும் 3ஆண்டு முதிர்ச்சிகளைக் கொண்ட ரூ.47,100 மில்லியன் கொண்ட திறைசேரிமுறிகள் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் 40 ஏலங்கள் நடத்தப்பட்டன. இது 2ஆண்டு முதிர்ச்சிகளைக் கொண்ட 22 ஏலங்களையும், 3ஆண்டு முதிர்ச்சிகளைக் கொண்ட 17 ஏலங்களையும், 4ஆண்டு முதிர்ச்சியைக் கொண்ட ஒரு ஏலத்தினையும் உள்ளடக்கியிருந்தது. மேலும், 3ஆண்டு திறைசேரி முறிகளின் நான்கு வழங்கல்கள் தனிப்பட்டவையாக மேற்கொள்ளப்பட்டன. முதிர்ச்சியின் படியான திறைசேரிமுறிகளின் பகிர்ந்தளிப்பு அட்டவணை II.20இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II.20
திறைசேரி உண்டியல் வழங்கல் - முதிர்ச்சியின் அடிப்படையில்

| முதிர்ச்சிக் காலம் (ஆண்டுகள்) | தொகை (ரூ.மில்) | சதவீதம் |
|---|---|---|
| வழங்கல்கள் | | |
| 2 ஆண்டுகள் | 27,566 | 58.53 |
| 3 ஆண்டுகள் | 19,534 | 41.47 |
| மொத்தம் | 47,100 | 100.00 |
| முதிர்ச்சி | | |
| 2 ஆண்டுகள் | 11,100 | 50.34 |
| 3 ஆண்டுகள் | 9,450 | 42.86 |
| 4 ஆண்டுகள் | 1,500 | 6.80 |
| மொத்தம் | 22,050 | 100.00 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இலங்கை மத்திய வங்கியின் வங்கிவீதம் மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் என்பன 2001 யூலையிலிருந்து கீழ்நோக்கித் திருத்தப்பட்டதினைத் தொடர்ந்து ரூபாக்கடன்களுக்கான வட்டிவீதங்களும் திறைசேரி முறிகளுக்கான கூப்பன்வீதங்களும் கீழ் நோக்கித் திருத்தப்பட்டன. 2ஆண்டு மற்றும் 3ஆண்டு திறைசேரிமுறிகளின் நறுக்குவீதங்கள் 2001 செத்தெம்பரில் ஆண்டிற்கு 13.00 சதவீதத்திலிருந்தும் 13.25 சதவீதத்திலிருந்து முறையே ஆண்டிற்கு 12.50 சதவீதத்திற்கும் 12.25 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. 2001ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட அனைத்து ஏலங்களும் பெறப்பட்ட ரூ.161,947 மில்லியன் கொண்ட

**அட்டவணை II.21**
திறைசேரி முறிகள் மீதான தெரிந்தெடுக்கப்பட்ட தகவல்கள் - 2001

| முறித்தொடர்கள் | | முதிர்ச்சி (ஆண்டுகள்) | பெறப்பட்ட விலைக் குறிப்பீடுகள் (ரூ.மில்.) | ஏற்றுக்கொள்ளப் பட்ட விலைக் குறிப்பீடுகள் (ரூ.மில்.) | முதிர்ச்சியில் நி.ஆ.ச.வீதம் (ஆண்டிற்கு சதவீதம்) | நறுக்கு வீதம் (ஆண்டிற்கு சதவீதம்) |
|---|---|---|---|---|---|---|
| 13.00%2003 | அ | 2 | 34,121.000 | 8,000.000 | 17.49-20.28 | 13.00 |
| 13.00%2003 | ஆ | 2 | 24,396.000 | 7,000.000 | 22.20-21.72 | 13.00 |
| 13.00%2003 | இ | 2 | 35,539.000 | 7,370.000 | 22.03-18.06 | 13.00 |
| 13.00%2003 | ஈ | 2 | 8,565.000 | 2,696.000 | 17.68-17.87 | 13.00 |
| 13.25%2004 | அ | 3 | 9,610.000 | 2,538.000 | 18.60-16.75 | 13.25 |
| 13.25%2004 | ஆ | 3 | 13,475.000 | 5,500.000 | 16.75-15.75 | 13.25 |
| 13.00%2003 | இ | 2 | 3,880.000 | 1,000.000 | 15.91 | 13.00 |
| 12.25%2004 | அ | 3 | 8,986.000 | 3,900.000 | 15.63-14.53 | 12.25 |
| 12.50%2003 | அ | 2 | 3,080.000 | 500.000 | 14.97 | 12.50 |
| 12.25%2004 | ஆ | 3 | 6,264.000 | 3,000.000 | 14.68-14.65 | 12.25 |
| 12.00%2005 | அ | 4 | 2,700.000 | 0 | - | 12.00 |
| 12.25%2004 | இ | 3 | 7,656.000 | 2,846.000 | 14.65-14.50 | 12.25 |
| 12.50%2003 | ஆ | 2 | 1,925.000 | 1,000.000 | 14.94 | 12.50 |
| 12.25%2004 | ஈ | 3 | 1,750.000 | 1,750.000 | 14.50 | 12.25 |
| மொத்தம் | | | 161,947,000 | 47,100,000 | | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

விலைக்கோரலுடன் மேலதிகமாக உதவப்பட்டன. 2001ஆம் ஆண்டுப் பகுதியில் திறைசேரி முறிகளின் முதனிலை வழங்கல்களுடன் தொடர்பான தகவல்களை அட்டவணை II.21 தருகின்றது.

திறைசேரி முறிகளை வைத்திருப்போர் நறுக்குகளை முதனிலை வணிகர்களினூடாகப் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் அரையாண்டுக்கொருமுறை வட்டிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. திறைசேரிமுறிகளின் பேரிலான மொத்த வட்டிக்கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் ரூ.15,015 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் ரூ.24,202 மில்லியனாகக் காணப்பட்டன.

2001ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைந்த திறைசேரி முறிகள் ரூ.22,050 மில்லியனாகக் காணப்பட்டன. முதிர்ச்சிப் பெறுகைகளின் கொடுப்பனவிற்காகக் பெறப்பட்ட திறைசேரி முறிகள் 2734 ஆகக் காணப்பட்டன. நறுக்கு வட்டிக் கொடுப்பனவுகளுக்காகப் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பெறப்பட்ட நறுக்குகளின் மொத்த எண்ணிக்கைகளை 42,768 ஆகக் காணப்பட்டது.

2001ஆம் ஆண்டுப் பகுதியில் வழங்கப்பட்ட திறைசேரிமுறிச் சான்றிதழ்களினது எண்ணிக்கை 6360 ஆக இருந்தது. இது 2ஆண்டு திறைசேரிமுறிகள் 5652 இனையும் 3ஆண்டு திறைசேரிமுறிகள் 708இனையும் உள்ளடக்கியிருந்தது.

## ஏனைய உள்நாட்டுப் படுகடன் கருவிகள்

2001ஆம் ஆண்டில் திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படவோ அல்லது கொடுப்பனவு செய்யப்படவோ இல்லை. 2001 இறுதியில் திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் வெளிநின்ற தொகை ரூ.10.6 மில்லியனாகக் காணப்பட்டவேளையில் வரிஒதுக்குச் சான்றிதழ்களின் வெளிநின்ற தொகை ரூ.7.2 மில்லியனாகக் காணப்பட்டது.

## முதனிலை வணிகர்களின் இரண்டாம் நிலைச்சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள்

திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரிமுறிகள் மீதான கிரயக் கொள்வனவு மற்றும் விற்பனைகள் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் கணிசமானதொரு அளவு முதனிலை வணிகர்களிடையேயும் முதனிலை வணிகர்களுக்கும் அவர்களது வாடிக்கையாளர்களுக்கிடையேயும் இடம்பெற்றது. 2001ஆம் ஆண்டில் இரண்டாம் நிலைச்சந்தையில் முதனிலை வணிகர்களினால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தக் கிரய விற்பனைகளும் கொள்வனவுகளும் முறையே ரூ.164,296 மில்லியனாகவும் ரூ.38,007 மில்லியனாகவும் விளங்கியவேளையில் முதனிலை வணிகர்களின் திறைசேரி முறிகளின் கிரய விற்பனைகளும் கொள்வனவுகளும் முறையே ரூ.49,067 மில்லியனாகவும் ரூ.24,857 மில்லியனாகவும் காணப்பட்டன. திறைசேரி உண்டியல்களின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் முறையே ரூ.298,840 மில்லியனாகவும், ரூ.162,715 மில்லியனாகவும் விளங்கியவேளையில் திறைசேரிமுறிகளின் மீள்கொள்வனவு நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் முறையே ரூ.481,869 மில்லியனாகவும், ரூ.376,825 மில்லியனாகவும் காணப்பட்டன. 2001ஆம் ஆண்டில் திறைசேரிமுறிகள் மீது முதனிலை வணிகர்களினால் மேற்கொள்ளப்பட்ட கிரயக் கொள்வனவு மற்றும் விற்பனைகள், மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு என்பன வீழ்ச்சியடைந்தமைக்கு திறைசேரி முறிகளின் முதலாந்தர வழங்கல்கள் 2000ஆம் ஆண்டின் 125,322 மில்லியனிலிருந்து 2001இல் ரூ.47,100 மில்லியனுக்கு வீழ்ச்சிடைந்தமையே காரணமாகும்.

2001ஆம் ஆண்டு இறுதியில் முதனிலை வணிகர்களின் வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் இருப்பு ரூ.7,051 மில்லியனாக அல்லது மொத்த வெளிநின்ற தொகையில் 4.1 சதவீதமாகக் காணப்பட்டவேளையில் முதனிலை வணிகர்கள் வசமிருந்த திறைசேரி முறிகளின் இருப்பு ரூ.10,516 மில்லியனாக அல்லது வெளிநின்ற மொத்தத்தில் 4.6 சதவீதமாக இருந்தது.

## வெளிநாட்டுப் படுகடன்

2001ஆம் ஆண்டு இறுதியில் வெளிநின்ற மொத்த வெளிநாட்டு அரசபடுகடன் ரூ.647,192 மில்லியனாக விளங்கி 2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ.94,378 மில்லியன் (17.1 சதவீதம்) கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. 2001 இறுதியில் வெளிநின்ற மொத்தப்படுகடனில் இருபுடைக்கடனும் பல்புடைக்கடனும் முறையே ரூ.303,912 மில்லியனாகவும் (47 சதவீதம்) ரூ.289,358 மில்லியனாகவும் (45 சதவீதம்) விளங்கியவேளையில் வர்த்தகக் கடன்களும் ஏற்றுமதிக் கொடுகடனும் ரூ.53,922 மில்லியனாகக் (8 சதவீதம்) காணப்பட்டன. இருபுடைக்கடன்களின் முக்கிய கொடுகடன் வழங்குனர்களாக யப்பான், ஐக்கிய அமெரிக்கா மற்றும் சேர்மனி என்பன விளங்கின. இம் மூலங்கள் ரூ.276,796 மில்லியனுக்கு அல்லது மொத்த இருபுடைக்கடன்களில் 91 சதவீதத்திற்கு வகைகூறின. பல்புடை வகையில் முக்கிய கொடுகடன்

**அட்டவணை II.22**
வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2001 இறுதியில் உள்ளவாறு

| வகை | தொகை (ரூ.மில்.) | % |
|---|---|---|
| 1. கொடை வகைப்படி | 647,192 | 100 |
| இருபுடை | 303,912 | 47 |
| பல்புடை | 289,358 | 45 |
| வர்த்தக | 46,049 | 7 |
| ஏற்றுமதிக் கொடுகடன் | 7,873 | 1 |
| 2. நிதிகளின் பயன்பாட்டுப்படி | 647,192 | 100 |
| காசு | 39,461 | 6 |
| பண்டம் | 28,271 | 4 |
| உணவு | 36,404 | 6 |
| இராணுவம் | 563 | - |
| நிகழ்ச்சித் திட்டம | 55,532 | 9 |
| செயற்றிட்டம் | 486,775 | 75 |
| தொழில்நுட்ப உதவி | 186 | - |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வழங்குனர்களாகக் காணப்பட்ட பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் மொத்த பல்புடைக்கடனில் முறையே ரூ.146,783 மில்லியனுக்கும் (51 சதவீதம்) ரூ.136,001 மில்லியனுக்கும் (47 சதவீதம்) பொறுப்பாக இருந்தன.

நிதியங்களின் பயன்பாட்டின்படி வகைப் படுத்துகையில் செயற்றிட்ட நிகழ்ச்சித்திட்ட மற்றும் பண்டக் கடன்கள் முறையே ரூ.486,775 மில்லியனாகவும் (75 சதவீதம்) ரூ.55,532 மில்லியனாகவும் (9 சதவீதம்) ரூ.28,271 மில்லியனாகவும் (4 சதவீதம்) காணப்பட்டன. அட்டவணை II.22, 2001ஆம் ஆண்டு இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டு அரசபடுகடன் உள்ளமைப்பினை கொடை வகைகளின் படியும் நிதியின் பயன்பாட்டின் படியும் காட்டுகின்றது.

**அட்டவணை II.23**
வெளிநாட்டுக்கடன் பகிர்ந்தளிப்புக்கள்

| வகை | 2000 தொகை (ரூ.மில்.) | 2000 % | 2001 தொகை (ரூ.மில்.) | 2001 % |
|---|---|---|---|---|
| **1. கொடை வகைப்படி** | 35,376 | 100 | 76,067 | 100 |
| இருபுடை | 17,002 | 48 | 24,706 | 32 |
| பல்புடை | 9,715 | 27 | 11,989 | 16 |
| வர்த்தக | 7,754 | 22 | 37,407 | 49 |
| ஏற்றுமதிக் கொடுகடன் | 905 | 3 | 1,965 | 3 |
| **2. நிதிகளின் பயன்பாட்டுப்படி** | 35,376 | 99 | 76,067 | 100 |
| காசு | 7,754 | 22 | 37,407 | 49 |
| பண்டம் | 15 | - | 190 | - |
| உணவு | 386 | - | - | - |
| இராணுவம | - | - | 553 | 1 |
| நிகழ்சசித் திட்டம் | - | - | 2,252 | 3 |
| செயற்றிட்டம் | 27,221 | 77 | 35,665 | 47 |
| தொழில்நுட்ப உதவி | - | - | - | - |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை II.24
வெளிநாட்டுப் படுகடனின் முதிர்ச்சி, வட்டிவீதங்கள், கொடை மூலம்

| கொடை வகை | முதிர்ச்சிக் காலம் (ஆண்டுகள்): சலுகைக் காலம் | முதிர்ச்சிக் காலம் (ஆண்டுகள்): மீள்கொடுப் பனவுகாலம் | வட்டிவீதம்/ பணிக் கட்டணம் (ஆண்டிற்கு %) | கொடை மூலம் (%) |
|---|---|---|---|---|
| இருபுடை | 1 – 17 | 7 – 40 | 0.00 – 5.68 | 28 – 91 |
| பல்புடை | 3 – 11 | 9 – 40 | 0.75 – 8.25 | 5 – 94 |
| வர்த்தகம | 0 – 10 | 1 – 30 | 4.00 – 10.85 | 2 – 65 |
| ஏற்றுமதிக் கொடுகடன் | 1 – 10 | 7 – 13 | 2.60 – 9.20 | 11 – 74 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

2001ஆம் ஆண்டு இறுதியில் முதல் தொகையின் மீள்கொடுப்பனவுகள் வட்டி மீதான கொடுப்பனவுகள் அத்துடன் வெளிநாட்டு அரசபடுகடன் மீதான மற்றைய கட்டணங்கள் என்பன முறையே ரூ.32,203 மில்லியனாகவும், ரூ.11,532 மில்லியனாகவும் காணப்பட்டன. 2001ஆம் ஆண்டில் மொத்தப் பகிர்ந்தளிப்புக்கள் ரூ.76,067 மில்லியனாக விளங்கி இருபுடை மூலங்களிலிருந்தான ரூ.24,706 மில்லியனையும் (32 சதவீதம்) பல்புடை மூலங்களிலிருந்தான ரூ.11,969 மில்லியனாகவும் (16 சதவீதம்) உள்ளடக்கியிருந்தன. வர்த்தக வங்கிகள் மற்றும் ஏற்றுமதிக் கொடுகடனிலிருந்தான கடன்பாட்டுத் தொகை ரூ.39,372 மில்லியனாக (52 சதவீதம்) காணப்பட்டது. இதனை 2000ஆம் ஆண்டின் மொத்தப் பகிர்ந்தளிப்பு ரூ.35,376 மில்லியனாக விளங்கி இருபுடைக் கடன்களிலிருந்தான ரூ.17,002 மில்லியனையும் (48 சதவீதம்) பல்புடைகளிலிருந்தான ரூ.9,715 மில்லியனையும் (27 சதவீதம்) வர்த்தகம் அத்துடன் ஏற்றுமதிக்கொடு கடன்களிலிருந்தான ரூ.8,659 மில்லியனையும் (25 சதவீதம்) உள்ளடக்கியிருந்தமையுடன் ஒப்பிடலாம். வர்த்தகக்கடன் வகையில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டமைக்கு இவ்வாண்டில் இலங்கை வங்கி ஊடாகத் திரட்டப்பட்ட கடன்களும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கலுமே காரணமாகும். இவ்வாண்டின் மொத்தப் பகிர்ந்தளிப்பில் 77 சதவீதம் செயற்றிட்டக் கடன்களின் கீழ் பெறப்பட்டவேளையில் 22 சதவீதம் காசுக்கடன்கள் தொடர்பானதாக இருந்தன. அட்டவணை II.23 கொடையாளரின் வகை மற்றும் நிதிகளின் பயன்பாடு என்பனவற்றின்படி 2000 மற்றும் 2001ஆம் ஆண்டுகளுக்கான பகிர்ந்தளிப்பினைத் தருகின்றது.

ஆய்விற்குரிய ஆண்டில் 29 புதிய வெளிநாட்டுக் கடன்களுக்கு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டதுடன்

தொழிற்பாட்டிலுள்ள கடன்களின் எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 541இற்கு அதிகரித்தது. இக் கடன்கள் 0இலிருந்து 17ஆண்டுகள் வரை வேறுபடும் சலுகைக் காலத்தையும் 1 தொடக்கம் 40 ஆண்டுகள் வரையான மீள்கொடுப்பனவுக் காலத்தையும் கொண்டிருக்கின்றன. வட்டி வீதம் ஆண்டிற்கு 0 தொடக்கம் 10.85 சதவீதம் வரையில் வேறுபடுகின்றன. கடன்களின் கொடைமூலங்கள் 2 சதவீதத்திற்கும் 94 சதவீதத்திற்குமிடையில் வேறுபடுகின்றன. அட்டவணை II.24, 2001ஆம் ஆண்டு இறுதியிலிருந்தவாறு சலுகைக்காலம், முதிர்ச்சிக்கால மற்றும் வட்டிவீதம் என்பனவற்றின் வீச்சுக்களையும் கொடையாளர் வகையின்படி வெளிநாட்டு அரசபடுகடன் கொடை மூலத்தையும் காட்டுகின்றது.

## வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம்

வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையமானது, வங்கியின் ஊழியர்கள் மற்றும் நிதியியல் துறையின் ஆளணியினருக்கு தொழில்நுட்ப அடிப்படையிலான முன்னேற்றங்கள் மற்றும் நிதியியல் துறையிலான புதிய மாறுதல்கள் ஆகியவற்றிலிருந்து ஏற்படும் அறைகூவல்களை எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தேர்ச்சிகளை வழங்குவதற்காக தனது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 2001ஆம் ஆண்டில், இந்நிலையம், 2082 பயிற்சி மணித்தியாலங்கள் உள்ளடக்கி, 1247 பங்குபற்றுவோருக்காக 58 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் ஆய்வரங்குகள் நடாத்தியது. பங்குபற்றியோரில் ஏறக்குறைய 44 சதவீதத்தினர் மத்திய வங்கியிலிருந்து பங்குபற்றியவர்களாவர். எஞ்சியோர் வர்த்தக வங்கிகள், பிரதேச அபிவிருத்தி வங்கிகளை உள்ளடக்கிய சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், நிதிக் கம்பனிகள், அமைச்சுக்கள் மற்றும் ஏனைய நிதியியல் துறை நிறுவனங்களைச் சார்ந்தவர்களாவர். வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் மொத்த எண்ணிக்கையில் எட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்களாகக் காணப்பட்டன. இவற்றில் ஆறு நிகழ்ச்சித் திட்டங்கள், ஊழியர் சேமநிதியத் திணைக்கள அலுவல்களுக்காக மட்டுமே நடத்தப்பட்ட வேளையில் ஏனைய இரு நிகழ்ச்சித் திட்டங்களும் பொதுத்திறைசேரி மற்றும் மத்திய வங்கி நிறுவனத் திணைக்களத்தின் வேண்டுகோளின் பேரில் முறையே இலங்கையில் வரி மறுசீரமைப்பு மற்றும் மத்திய வங்கி அலுவலர்களுக்கான ஒழுக்காற்று விசாரணை நடைமுறைகள் ஆகிய தலைப்புக்களின் கீழ் நடத்தப்பட்டன. தகவல் தொழில்நுட்பத்திலான தேர்ச்சி அபிவிருத்தி, கணனித் தொழிற்பாடுகள், அலுவலக முகாமை, அலுவலக நடைமுறைகள் மற்றும் வணிகத் தொடர்பூட்டல் ஆகியனவே ஊழியர் சேமநிதியத் திணைக்கள அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சி நெறிகளில் முக்கிய விடயங்களாகக் காணப்பட்டன.

முன்னைய ஆண்டைப் போலவே, தகவல் தொழில் நுட்பம் மற்றும் கணனி அடிப்படையிலான பிரயோகங்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. பதினாறு பயிற்சிநெறிகள், 203 பயிற்சியாளர்களுக்காக நடத்தப்பட்டதுடன் இவற்றில் 71 சதவீதமானோர் மத்திய வங்கியைச் சார்ந்தோராகக் காணப்பட்டனர். கணனி பயிற்சிநெறிகளுள் "மென்பொருள் பிரேயாகத்துக்கான அறிமுகம்" கணனி வலையமைப்பு - கோட்பாடு மற்றும் நடைமுறை மற்றும், எம்.எஸ்.பவர் போயின்ருடனான கணனி முன்னிலைப்படுத்தல் ஆகியன பங்குபற்றியோரிடையில் குறிப்பிடத்தக்க ஆர்வத்தை ஏற்படுத்தியிருந்தன. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் முன்னேற்றமடைந்த கணனிப் பாவனையாளர்களுக்காக "விசுவல் நிகழ்ச்சித் திட்டமிடல் தொடர்பான முன்னேற்றமடைந்த பயிற்சிநெறி" என்ற தலைப்பிலான புதிய நீண்ட காலப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பித்தது. இது, வங்கி அலுவலர்கள் எதிர்காலத்தில் தொழில் திறன்சார்ந்த தகவல் தொழில்நுட்பத் தராதரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஆரம்பப் படியாக அமையும்.

வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையமானது, வங்கித்தொழில் தொழிற்பாடுகள், வங்கி மேற்பார்வை, நிதியியல்துறை அபிவிருத்தி, பொருளாதார முகாமை மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி போன்ற விடயங்களை உள்ளடக்கி முப்பத்துநான்கு குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடத்தியது. வங்கி மேற்பார்வைப் பாடநெறிகள் பங்குபற்றலில் ஆகக்கூடிய வீதத்தைப் பதிவு செய்தன. பங்குபற்றியோரின் மொத்த எண்ணிக்கை 252 ஆகும். "முற்பணங்களுக்கான ஆவணச் சான்று வழங்குவதற்குரிய சட்டரீதியான கோட்பாடுகள்" என்ற நிகழ்ச்சித்திட்டமே வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கான மிகச்சிறந்த கவர்ச்சிகரமான நிகழ்ச்சித் திட்டமாகக் காணப்பட்டது. ஏனைய பிரபலமான நிகழ்ச்சித் திட்டங்களாவன: 'தொழிற்படாத சொத்துக்களும் வங்கித்தொழில் முறைத் தோல்விகளும்', "இடர்நேர்வு முகாமையிலான முழுமையான நடைமுறைகள்" 'வங்கிகளிலான நிதியியல் மோசடிகளும் கணனிக் குற்றங்களும்', மற்றும் "சட்டரீதியற்ற முறையில் உழைத்த பணத்தைச் சட்டரீதியாக மாற்றல் வங்கிகளின் பங்கு" என்பனவாகும். முன்னைய ஆண்டைப் போலவே வங்கி மேற்பார்வை நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முக்கியமாக மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள்,

சிறப்பியல்பு வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் துறை நிறுவனங்களின் அலுவலர்களே சமூகமளித்திருந்தனர். மொத்தப் பங்குபற்றலில் இது முன்னையவற்றுடன் 86 சதவீதத்துக்கு வகை கூறியிருந்தது. வாடகைக் கொள்வனவு மற்றும் குத்தகை நிதியிடல் நிகழ்ச்சித் திட்டம் முன்னைய ஆண்டுகளைப் போல அதேயளவான பிரபல்யத்தைப் பேணக்கூடியதாயிருந்தது. 'நகை அடைவின் மீது கடன் வழங்குதல்' மற்றும் 'அபிவிருத்திக் கொடுகடன்' பற்றிய மதிப்பீடு மற்றும் நிருவாகம் ஆகியன ஏனைய பிரபலமான நிகழ்ச்சித் திட்டங்களாகும். வங்கித்தொழில் கல்வி நிலையம் 'வங்கித்தொழிலிலான சான்றுப்பத்திரப் பாடநெறி' தொடர்பில் தனது நீண்டகால கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை 2001இல் தொடர்ந்தும் நடத்தியது.

மத்திய வங்கி ஊழியர்களின் தெரிந்தெடுக்கப்பட்ட தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்காக ஏழு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இவை அந்தரங்கச் செயலாளர்கள்/ அந்தரங்க உதவியாளர்கள் மற்றும் சுருக்கெழுத்து-தட்டெழுத்தாளர்கள் ஆகியோருக்கான தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் முன்னிலைப்படுத்தல் தேர்ச்சிகள் மற்றும் கேள்வி நடைமுறைகள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கியிருந்தன. 2001ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அறிமுகஞ் செய்யப்பட்ட சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வங்கியிலிருந்து ஓய்வுபெற முன்வந்தோருக்காக சிறப்பாக வரையப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்று நடத்தப்பட்டது. ஓய்வுபெற்ற பின்பு, சிறப்பான வாழ்க்கை முறையொன்றைக் கொண்டு நடத்துவதற்கு அவர்களுக்கு உதவுவதே இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாயிருந்தது. சிறப்பான அறிக்கைகளை எழுதுதல் மற்றும் இளைய ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு நெறி ஆகியன தொடர்பிலான செயலமர்வுகள் வங்கி மற்றும் வர்த்தக வங்கித்தொழில் துறையின் ஆளணியினரிடையே பிரபல்யம் பெற்றன. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட ஆங்கில மொழித் தராதரப் பத்திரக் கல்விநெறி, மத்திய வங்கி ஊழியர்களிடையே பிரபல்யம் பெற்ற மற்றொரு நிகழ்ச்சித் திட்டமாகும்.

வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையமானது, தனது சொந்தப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஆய்வரங்குகள் நடத்துவது தவிர, மத்திய வங்கியில் புதிதாக நிறுவப்பட்ட முகாமை அபிவிருத்தி நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட உயர்மட்டப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்குத் தேவையான அனைத்தையும் வழங்கியது. முகாமை அபிவிருத்தி நிலையம், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மூலவள ஆளணியின் ஒத்துழைப்புடன் 'நிதியிடல் நிகழ்ச்சித் திட்டமிடல், 'பொருளாதார வளர்ச்சி விடயங்கள் கோட்பாடு' மற்றும் கொள்கை விளக்கங்கள், 'பொதுப்படுகடன் முகாமை' (செயலமர்வு) செயற்றிறன் வாய்ந்த வங்கித்தொழில் மேற்பார்வைக்கான பாஸ்லே மையக் கோட்பாடுகள் 'பொதுப்படுகடன் முகாமை' 'நவீன மத்திய வங்கித்தொழில்', முகாமை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் நிதியியல் பொருளாதார ரீதியிலான பிரயோகங்கள் ஆகியன தொடர்பில் 8 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது.

வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் பொருளாதார மற்றும் நிதியியல் துறை அபிவிருத்திகளுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்குமென

அட்டவணை II.25
வங்கித் தொழில் கற்கை ஆய்வு நிலையத்தினால் நடாத்தப்பட்ட
பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 2001

| | 2001 | | | | |
|---|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | மத்தியவங்கி பயிற்சியாளர் களின் எண்ணிக்கை | ஏனைய பயிற்சியாளர் களின் எண்ணிக்கை | மொத்த பயிற்சியாளர் களின் எண்ணிக்கை | பயிற்சி மணித்தியாலங்களின் எண்ணிக்கை |
| வங்கித்தொழில் தொழிற்பாடுகள் | 11 | 25 | 225 | 250 | 378 |
| வங்கி மேற்பார்வை | 8 | 35 | 217 | 252 | 120 |
| நிதியியல் துறை அபிவிருத்தியும் பொருளாதார முகாமைத்துவமும் | 5 | 31 | 95 | 126 | 54 |
| தகவல் தொழில்நுட்பம் | 16 | 144 | 59 | 203 | 864 |
| முகாமைத்துவம் | 3 | 30 | 25 | 55 | 78 |
| தேர்ச்சி அபிவிருத்தி | 7 | 160 | 25 | 185 | 228 |
| சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | 8 | 122 | 54 | 176 | 360 |
| மொத்தம் | 58 | 547 | 700 | 1,247 | 2,082 |

மூலம்: வ.தொ.க.ஆ.நிலையம், இலங்கை மத்திய வங்கி

தொழிற்துறையினர் மற்றும் கல்வியியலாளர்களை உள்ளடக்கி பொதுமக்களுக்காக அரங்கொன்றை யேற்படுத்தவும், புதிய கருத்துக்களைப் பரப்பவுமென தொடர்ந்தும் மூன்றாவது ஆண்டாக தனது மாதாந்த பொது ஆய்வரங்குகள் மற்றும் ஞாபகார்த்த உரைகளின் தொடரை நடத்தியது. 2001ஆம் ஆண்டில் நான்கு ஞாபகார்த்த உரைகள் நிகழ்த்தப் பெற்றன. அவை பொருளாதாரப் பேராசியரும், கொழும்புப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியருமான பேராசியார் டபிள்யூ.பீ. லக்ஸ்மனினால், உண்மைச் செய்முறையொன்றாக அபிவிருத்தி கடந்த ஐந்து பத்தாண்டுகளின் அனுபவங்கள் என்ற விடயம் தொடர்பில வழங்கப்பட்ட சுதந்திரத்துக்கான நினைவு உரை, பன்னாட்டுக் கட்டளைகள் மற்றும் கோவைகள் நடைமுறைப்படுத்தலிலான பிரச்சனைகள் பற்றி இந்திய றிசேவ் வங்கியின் துணை ஆளுநர் முனைவர் யாகா வீ.ரெட்டியினால் வழங்கப்பட்ட குடியரசு தின நினைவு உரை, 'அரச நிதியிலான நடைமுறைப் பிரச்சனைகள் மற்றும் இலங்கையில் இறைக் கொள்கையின் எதிர்காலப் போக்கு - செய்முறையை நிருவகித்தல்' பற்றி முன்னைநாள் நிதிதிட்டமிடல் அமைச்சின் செயலாளரும், திறைசேரிச் செயலாளருமான முனைவர் .பி.பீ. ஜயசுந்தரவினால் வழங்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் 51ஆம் ஆண்டு நிறைவு உரை மற்றும் உணவுப் பாதுகாப்பு அபிவிருத்தி மற்றும் பன்னாட்டு வர்த்தகம் தொடர்பில் பாரிசிலுள்ள வேளாண்மை அமைச்சின் முன்னைநாள் பரீட்சிப்பாளர் நாயகமும், பாரிசிலுள்ள கால்நடை மருத்துவத்துக்கான தேசியப் பாடசாலையில் வேளாண்மைப் பொருளாதாரப் பேராசிரியருமான பேராசிரியர் மைக்கல் கெவயிசினால் வழங்கப்பட்ட வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு உரை என்பனவாகும்.

பொதுமக்களிடைய நடைமுறைப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் பிரச்சனைகள் பற்றிய தெரிநிலையை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் ஏழு பொது ஆய்வரங்குகள் 2001ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன.ஆய்வரங்குக்கான விடயங்களினதும் பேச்சாளர்களினதும் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

(i) 1978 இலிருந்து ரூபாவினை மிதக்கவிடல், இலங்கை மத்திய வங்கி பொருளாதர ஆராய்ச்சித் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர் முனைவர். எச்.என். தேனுவரவினால் வழங்கப்பட்டது.

(ii) குறைந்த அரச தலையீடு அல்லது அபிவிருத்தியடையும் நாடு . இந்திய றிசேவ் வங்கியைச் சேர்ந்தவரும் கல்கத்தாவிலுள்ள சமூக விஞ்ஞான கல்வி ஆய்வு நிலையத்தின் பொருளியல் பேராசியாருமான, பேராசியரியர் அமியாகுமார் பக்சியினால் வழங்கப்பட்டது.

(iii) இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கையிலும் 2000ஆம் ஆண்டுக்கான பன்னாட்டு நாணய நிதிய அறிக்கையிலும் பிரதிபலிக்கப்பட்டவாறு பொருளாதாரத்தின் நிலை இலங்கை மத்திய வங்கி பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப்பணிப்பாளர் முனைவர் ஏ.ஜி.கருணாசேனவினாலும், இலங்கையில் பன்னாட்டு நாணய நிதியத்தின் மூத்த வதிவிடப் பிரதிநிதியான முனைவர் நதும் உல்கக் கினாலும் வழங்கப்பட்டது.

(iv) உலகலாவிய அறிவியல் மற்றும் மூன்றாம் உலகமடைமை, இலங்கை தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் தலைவரான முனைவர் ஆர்.ஒ.பீ.விஜயசேகரவினால் வழங்கப்பட்டது.

(v) பங்குச் சந்தையை மீள இயங்கச் செய்வதற்கான வழிமுறைகள். இலங்கை கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பணிப்பாளர் நாயகமான திரு.ஹரின் மென்டிசினால் வழங்கப்பட்டது.

(vi) இலங்கையில் உயர் கல்வி மறுசீராக்கங்கள இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவரான பீ.ஆர்.ஆர்.என்.மென்டிசினால் வழங்கப்பட்டது.

(vii) உலக மயமாக்கலும் தேசிய அரசும் இலண்டனிலுள்ள பொதுநலவாய செயலகத்தின் துணைச் செயலாளர் நாயகமும் பார்படோஸ் மத்திய வங்கியின் முன்னைநாள் ஆளுநருமான திரு.வின்ஸ்ரன். ஏ.கொக்ஸ் இனால் வழங்கப்பட்டது.

## செயலகம்

வங்கியின் உபசாரப் பணிகளுக்கு மேலதிகமாக நிதி, பொருட்களின் கொள்வனவு, பயணம் மற்றும் ஏனைய பல்வகைப் பணிகளை செயலகத் திணைக்களம் தொடர்ந்து வழங்கியது.

முகாமைத்துவத்தின் குறிக்கோள்களுக்கு இணங்க வங்கி கருமமாற்றுகின்றது என்பதை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் செயல்திறனையும் செலவுப் பயன்பாட்டையும் வலுப்படுத்தும் நோக்கில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வங்கியின் மூலதன மற்றும் நிருவாக வரவு செலவுத்திட்டம் தொடர்பாக திணைக்களம் செலவுகளை கண்காணிக்கும் முறை 2001ஆம் ஆண்டில் மேலும் வலுப்படுத்தப்பட்டது.

## சட்டம்

சட்டத் திணைக்களம் தேவையான நேரங்களில் சட்ட விடயங்களில் வங்கிக்கு மதியுரைகளை வழங்கியதுடன், நீதிமன்றங்களிலும் மற்றைய சட்ட மன்றங்களிலும் வங்கியைப் பிரதிநிதித்துவம் செய்தது. வங்கித் தொழில்/ நிதியியல் துறையில் சட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் இது பங்களித்தது.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, திணைக்களம் வங்கியின் மற்றைய திணைக்களங்களுக்கு தொடர்ந்தும், மதியுரைகளை வழங்கியது. 2001ஆம் ஆண்டுப் பகுதியில் திணைக்களம், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையினையும் நவீனமயப்படுத்துவது உட்பட வங்கியின் நவீனமய செயற்றிட்டத்துடன் தொடர்பான சட்ட வேலைகளில் ஈடுபட்டிருந்தது.

## பணிமனை

2001ஆம் ஆண்டில் பணிமனைத் திணைக்களம் பேணல் வேலைகளிலும், குத்தகைக்குப் பெறப்பட்ட பணிமனைகளையும் மத்திய வங்கியின் சொந்தப் பணிமனைகளையும் சுத்தமாக வைத்திருப்பதிலும் தொடர்ந்தும் ஈடுபட்டுவந்தது. வங்கியின் மற்றைய திணைக்களங்களுக்கு போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் வசதிகள் போன்ற ஆதரவுப் பணிகளைத் திணைக்களம் தொடர்ந்தும் வழங்கி வந்தது.

புதிய கட்டடங்கள் திணைக்களத்தின் வேலைகள் 2001 செத்தெம்பர் 3ஆம் நாளன்று பணிமனைத் திணைக்களத்திற்கு மாற்றல் செய்யப்பட்டதுடன் புதிய கட்டடத் திணைக்களத்தின் தொழிற்பாடும் அத் திகதியிலிருந்து நிறுத்தப்பட்டது. இதன் காரணமாக பணிமனைத் திணைக்களம் வங்கியின் வனப்புடன் தொடர்பான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை போன்ற மேலதிக தொழிற்பாடுகளை கவனிக்கவும், வங்கியின் தலைமை அலுவலகக் கட்டடத் தொகுதியிலுள்ள பல்வேறுபட்ட பொறிகளை பேண வேண்டியிருந்தது.

வங்கிக் கட்டடத்தின் சேதமடைந்த கோபுரங்களின் புத்தாக்க வேலைகள் 2001 மேயில் நிறைவு பெற்றதுடன் இக் கோபுரங்களிலுள்ள அலுவலக இடவசதிகள் இதுவரை குத்தகைக் கட்டடங்களிலும் இராசகிரியாவிலுள்ள வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலைய கட்டடத் தொகுதியிலும் இருந்த திணைக்களங்களுக்கு 2001 யூலையிலிருந்து வழங்கப்பட்டன. திணைக்களம் நவீன அலுவலகத் தளபாடங்களை திணைக்களங்களுக்குத் தொடர்ந்து வழங்கியது.

நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து குத்தகைக்குப் பெறப்பட்ட நிலத்தில் ஊர்திகள் தரிப்பிடத்தினை நிருமானிப்பதற்கான திட்டமிடல் வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. வங்கிக்கு கொண்டுவரப்படும் சரக்குகளை பரிசோதனை செய்வதற்கான வசதிகளுடன்கூடிய பரிசோதனை தளமொன்றினை அமைக்கும் கட்டுமான வேலைகள் 2001 யூலையில் தொடங்கின.

திணைக்களம் சதாம் வீதியிலுள்ள வெளிச்சவீட்டுடன் கூடிய மணிக்கூட்டு கோபுரத்தினைத் தொடர்ந்தும் பேணியது.

## பாதுகாப்புப் பணி

வங்கி ஊழியர்களினதும் சொத்துக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக திணைக்களம் அரசின் பாதுகாப்பு நிறுவனங்களுடனும் புலனாய்வு அமைப்புக்களுடனும் நெருங்கி செயற்பட்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டது. பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துவதற்காக அங்கீகாரமற்ற நபர்கள் வங்கி பணிமனைக்குள் பிரவேசிப்பதனை ஒடுப்பதற்காக அனுமதி அட்டை முறையொன்று அறிமுகப்படுத்தப் பட்டது.

வங்கிக்குள் பிரவேசிக்கும் அனைத்து நபர்களுடைய பொதிகளை பரிசோதிப்பதற்காக நுழைவாயில் பொதிகள்/ கடிதங்களை பரிசோதிக்கும் இரு கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் பொதி பரிசோதிக்கும் கருவியின் திரையில் சந்தேகத்திற்கிடமான ஏதேனும் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றை பரிசோதிப்பதற்காக வெடிமருந்துகளை கண்டு பிடிப்பதற்கான கருவிகளும் ஆயத்தமாக வைக்கப் பட்டுள்ளன. வங்கி பணிமனைக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் அனைத்து வாகனங்களையும் முழுமையாக பரிசோதிப்பதற்காக வாகன பரிசோதனை கூடமொன்று நிர்மாணிக்கப்படுகின்றது. இப் பரிசோதனை கூடத்தில் பாரிய பொதி பரிசோதிக்கும் கருவியொன்று நிறுவப்பட்டு பொதிகளும், காசு ஏற்றிச்செல்லும் வாகனங்களும் வங்கி பணிமனைக்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக பரிசோதிக்கப்படும்.

தீயணைப்பு கருவிகளும், தீயணைப்புக்கு பயன்படுத்தப்படும் நீர் இணைப்புக்களும் திறமையான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ந்து பரிசோதிக்கப்பட்டதுடன் ஊழியர்கள் கிரமமாக தீயிலிருந்து கொழும்பு தீயணைப்புப் பணித்திணைக் களத்துடன் இணைந்து அவர்களது அதியுயர் அவசர தீயணைப்பு கருவிகளைப் பயன்படுத்தி தீயிலிருந்து ஊழியர்களை வெளியேற்றும் ஒத்திகையொன்று நடத்தப்பட்டது.

புதிய செயற்றிறன் வாய்ந்த சுடுபடைக்கலன்கள் அறிமுகப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து பாதுகாப்பு ஆளணியினரின் சுடுதிறன் மேலும் பலப்படுத்தப்பட்டது.

## தகவல்

இத் திணைக்களம் வங்கியின் மத்திய தகவல் பிரிவாகத் தொடர்ந்தும் தொழிற்பட்டதுடன் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் வங்கியின் ஆளணியினர் மற்றும் பொதுமக்களுக்கு ஊடகத்துறையினூடாக தகவல்களைப் பரப்புதல் என்பனவற்றுக்குப் பொறுப்பாக இருந்தது.

1996ஆம் ஆண்டிலிருந்து வங்கிக்குள்ளே முகாமைத்துவம் மற்றும் பொதுவான தகவல்களைப் பரப்பும் பணியினை வழங்கும் "உள்ளகச் செய்தி மடலிற்குப்" பதிலாக இவ்வாண்டில் திணைக்களம் "கவுலுவ" (சாளரம்) என்ற பெயரில் உள்ளகச் செய்தித்திரட்டொன்றினை இவ்வாண்டில் திணைக்களம் வெளியிடத் தொடங்கியது. புதிய வெளியீடானது ஊழியர்களுக்கும், முகாமைத்துவத்துக்குமிடையில் அதன் நவீனமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தலில் இருவழித் தொடர்பூட்டல் வழியொன்றினை வழங்கியது. இவ்வாண்டில் ஒன்பது கவுலுவ வெளியிடப்பட்டன.

வெளியுலகத்திற்கு தகவல்களைப் பரப்புதல் மின்னியல் மற்றும் அச்சு ஊடகங்களுடாக மேற்கொள்ளப்பட்டது. நாளாந்த செலாவணி வீதங்கள், வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதாரக் குறிகாட்டிகள், நுகர்வோர் விலைச்சுட்டெண்கள் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான தகவல்கள் என்பன கிரமமாக வெளியிடப்பட்டன. மேலும், அலுவல்சார் பத்திரிகை வெளியீடுகள் திணைக்களத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டன. திணைக்களம் வங்கியின் பிரபல்யப்படுத்தல் மற்றும் விளம்பர வேலைகளையும் கையாண்டது.

இவ்வாண்டில் திணைக்களம் வங்கியின் சார்பில் அதன் கிரமமான வெளியீடுகளை அச்சிட்டது. இவை ஆண்டறிக்கை இலங்கை சமூக பொருளாதர தரவு, மாதாந்த செய்தித் திரட்டு மற்றும் பொருளாதார சமூக புள்ளி விபரங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. உயர் அலுவலர் ஆய்வின் ஒரு வெளியீடு, சட்டானவின்(சிங்களம்) எட்டு வெளியீடுகள் நியூஸ் சேர்வே, (ஆங்கிலம்) ஆறு வெளியீடுகள் என்பனவும் வெளியிடப்பட்டன. -"றுகுணு பிறிவேனியா" (றுகுணு பாரம்பரியத்தின் சிங்கள மொழி பெயர்ப்பு), பன்னாட்டு வர்த்தக கோட்பாடுகள் (சிங்களம்), அண்மைய பொருளாதார அபிவிருத்திகள், இலங்கையின் நாணயக்குத்திகள் மற்றும் நாணய தாள்களின் வரலாறு (மீள் அச்சு), "இலங்கையின் வங்கித் தொழில் மற்றும் நிதியுடன் தொடர்பான சட்டங்கள்" இரண்டாவது திருத்தப்பதிப்பு என்பன இவ்வாண்டில் வெளியிடப்பட்ட சிறப்பு வெளியீடுகளாகும்.

முன்னைய ஆண்டினைப் போன்றே அச்சகம் வங்கியின் அச்சிடல் தேவைப்பாடுகளைத் தொடர்ந்தும் பூர்த்தி செய்தது. மேலே குறிப்பிடப்பட்ட வெளியீடுகளின் அச்சிடலுடன் அச்சகம் ஆய்விற்குரிய ஆண்டில் 250 அச்சிடல் வேலைகளையும் பொறுப்பேற்றுக் கொண்டது. அவை தவிர, நிதியமைச்சிற்கான எட்டு வெளியீடுகளையும் அச்சகம் பொறுப்பேற்றுக் கொண்டது. திணைக்களம் வங்கிக்கு புகைப்பட மற்றும் ஓவிய வடிவமைப்புப் பணிகளையும் தொடர்ந்தும் வழங்கியது.

### நூலகமும் தகவல் நிலையமும்

1996இல் இடம்பெற்ற வங்கி மீதான தாக்குதலில் அழிந்துபோன நூலகம் மற்றும் தகவல் நிலையத்தினை மீளக் கட்டியெழுப்பும் வேலைகள் 2001ஆம் ஆண்டுப் பகுதியில் பெருமளவு சாதனங்கள் தளபாடங்கள் மற்றும் நூல்கள்/சி.டி. றோம்ஸ் போன்றவற்றினைக் கொள்வனவு செய்தமையின் மூலம் தொடர்ந்தும் மேற்கொள்ளப் பட்டன. இது நூலகம் மற்றும் தகவல் நிலையத்தின் பணிகளைக் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்படுத்தியது.

மாச்சில் வங்கித் தொழில் கற்கை ஆய்வு நிலையத்தின் கீழ் உள்ள துணை - நூலகம் மையப்படுத்தப்பட்ட ஒழுங்கு முறைப்படுத்தல், நூற்பட்டியலிடல் மற்றும் நூல்களை வகைப்படுத்தும் முறைகளை இரு நூலகங்களுக்கும் அறிமுகப்படுத்துவதனை இலகுபடுத்தும் விதத்தில் ஒருங்கிணைக்கப்பட்டது.

ஆய்விற்குரிய ஆண்டில் நூலகம் மற்றும் தகவல் நிலையம் நளச் செய்திகள், அண்மையில் புதிதாகச் சேர்க்கப்பட்டவைகள், நடைமுறை உள்ளடக்க விடயங்கள், பீ.ஐ.எஸ் ஆய்வுகள், அண்மைய கட்டுரையிலிருந்தான பிரிவெடைகள், உலகமெங்கிலுமுள்ள மத்திய வங்கித் தொழில் உலகமெங்கிலுமுள்ள வங்கித் தொழில் மற்றும் நிதி போன்ற மின்னியல் வெளியீடுகளைத் திரட்டியதுடன் இணையத்தினூடாக நடைமுறைத் தகவல்களையும் பரப்பியது. அத்துடன் வெளிநாட்டுச் செய்திகள் கட்டுரைகள் என்பனவற்றை "செய்தி நறுக்குகள்" பணியின் மூலம் நாளாந்தம் சேமித்து வைக்கப் படுகின்றன.

2001ஆம் ஆண்டில் முதன்மை நூலகத்தின் நூல் சேகரிப்பு 10,107 நூல்களுக்கும் 762 சிடி றோம்களுக்கும் அதிகரித்த வேளையில் 4 இணையத்திலான நேரடித் தொடர்பு வசதி உள்ளிட்ட 220 பருவகால வெளியீடுகளுக்காக சந்தா செலுத்தப்பட்டது. அத்துடன் வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் நூலகத்தினது நூல்களின் சேகரிப்பு 4,012இற்கு அதிகரித்தது.

இவ்வாண்டில் ஐ.இராச்சியத்தின் (வரையறுக்கப்பட்ட) மத்திய வங்கித் தொழில் வெளியீடுகள் நிறுவனத்தின் மத்திய வங்கி நூலக வலையமைப்பில் இணைந்து கொண்டமையின் மூலம் உலகமெங்கிலுமுள்ள மத்திய வங்கியின் நூலகங்களுடன் அதன் பிணைப்பினை நூலகமும் தகவல் நிலையமும் வலுப்படுத்திக் கொண்டதுடன் தகவல் பணிகளை அதிகரித்துக் கொள்வதற்கான வசதிகளையும் பயன்படுத்திக் கொண்டது.

வங்கி அலுவலர்களின் தேர்ச்சியை அபிவிருத்தி செய்வதன் ஒரு பகுதியாக, வேறுபட்ட பயன்படுத்துனரைக் கொண்ட குழுக்களுக்காக அலுவலக முகாமைத்துவ விடயங்களைப்பற்றி 3 வீடியோ மூலமான விளக்கங்கள் அதிகரிக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில், உலக வங்கி / ப.நா.நிதியத்தின் தகவல் நிபுணர்களின் ஒத்துழைப்புடன் நூலகம் மற்றும் தகவல் நிலையத்தினால் வீடியோ மாநாடொன்று ஒழுங்கு செய்யப்பட்டதுடன் ப.நா.நிதியத்தில் நூலக மற்றும் தகவல் நிலையத்தின் அலுவலர்கள் மற்றும் உள்ளூர் வங்கிகளின் நூலகங்களின் பங்களிப்புடன் 2001 ஓகத்தில் நடத்தப்பட்ட மத்திய வங்கி நூலகங்களின் செயலமர்வுகளின் முக்கிய விடயங்கள் பற்றியும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

## தகவல் தொழில் நுட்பம்

தகவல் செயற்பாட்டுத் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு பதிலிறுக்கும் வகையில், அனைத்துத் திணைக்களங்களும் தமது தொழிற்பாடுகளை கணனி மயப்படுத்தப்பட்ட சூழலொன்றில் மேற்கொள்வதனை இயலச் செய்வதற்கும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு தூண்டுதலளிப்பதற்கும் தொழிற்பாட்டுச் செலவினைக் குறைப்பதற்குமாக வங்கியின் தகவல் தொழில்நுட்ப வசதிகள் மேலும் விரிவாக்கப்பட்டன. திணைக்களத்தின் கவனம் முழுவதும்

(அ) புதிய தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்தல்,

(ஆ) அனைத்துத் திணைக்களங்களுக்கும் நிலையானதும் நம்பிக்கையானதுமான பணியினை வழங்குவதற்கு ஏற்கனவேயுள்ள கணனி முறைகளைத் தரமுயர்த்தல்.

(இ) மின்அஞ்சல் ஊடாகவும் தொடர்பூட்டல்களையும் மற்றும் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கும் கணனி வலையமைப்பினை விரிவுபடுத்தல்.

(ஈ) தகவல் தொழில்நுட்ப திணைக்கள அலுவலர்களின் தேர்ச்சியை மேம்படுத்தல் என்பனவற்றின் மீதே குவிந்திருந்தது. நீண்டகால நோக்கில் எதிர்கால அறைகூவல்களை ஈடுசெய்யும் விதத்தில் வங்கியின் தகவல் தொழில்நுட்ப சூழலை தயார்படுத்தும் நோக்குடனேயே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எந்தவிதமான இடையூறுகளுமின்றி ஏஎஸ்/ 400 பணியினை வழங்குவதற்காக, தடங்கலற்ற வலு வழங்கல் போன்ற ஆதரவு வசதிகளை வலுப்படுத்தியதன் மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பணிகள் பழுதடைந்துபோகும் நிகழ்வுகளைத் தடுத்துக்கொள்வதற்காக நேரகாலத்துடன் எச்சரிக்கும் முறையும் கிரமமாகப் பரீட்சிக்கப்பட்டு வந்தது. ஏஎஸ்/ 400 முறையில் பதியப்பட்ட விடயங்களை வேறொரு இடத்தில் பதியப்படும் முறையொன்று ஏற்படுத்தப்பட்டதுடன், பதியப்பட்ட தரவுகளையும் சேமிப்புக் கருவிகளிலிருந்தான மென்பொருட்களையும் நாளின் முடிவில் பதியப்பட்ட விடயங்களை வேறிடத்தில் பதிகின்ற கணனிகளுக்கு மாற்றும் இதற்கேயான தனிவழி வசதிகளுடன் நடைமுறைக்குட்படுத்தப்பட்டது. இந் நடவடிக்கையானது பாரியளவிலான பழுதுகள் அல்லது பேரழிவுகள் நிகழும் சந்தர்ப்பத்தில் மிக இன்றியமையாததான தொழிற்பாடுகளை மாற்றல் செய்வதற்கான பேரழிவிலிருந்தான மீட்சியாகக் கருதப்படுகிறது.

உள்ளகப்பகுதி வலையமைப்பு விரிவாக்கப்பட்டு மத்திய வங்கி கட்டிடத்தில் அமைந்துள்ள 335 தனியாள் கணனிகள் தொடர்புறுத்தப்பட்டன. உள்ளகப்பகுதி வலையமைப்பின் தொழிற்பாடுகள் மின்அஞ்சல் ஊடாக ஊழியர்களின் உள்ளக மற்றும் வெளியக தொடர்பூட்டல்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு உதவின. மின்அஞ்சல் வசதி 405 அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் உள்ளகக் கடிதக் குறிப்புகளை மின்அஞ்சல் படிப்படியாக பிரதியீடு செய்து தாளுக்கான செலவினைச் சிக்கனப்படுத்தவும் பிரதி பன்னலுக்கான செலவினையும் சுற்றறிக்கைகள் மற்றும் உள்ளகக் கடிதக் குறிப்புக்களை விநியோகிக்கும் உடலுழைப்பு முயற்சிகளையும் குறைத்துவிட்டது. இது கணனிகளைப் பயன்படுத்துபவர்களிடையே கணனி மூலவளங்களை பகிர்ந்துகொள்ளும் தன்மையினையும் உருவாக்கியது.

அனைத்துத் திணைக்களத் தலைவர்களுக்கும் மேலதிக தலைவர்களுக்கும் இணையத்தள வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. தகவல் மையத்தின் பொது இடமொன்றில் பொருத்தப்பட்டுள்ள கணனிகளின் மூலம் மற்றைய அலுவலர்கள் இணையத்தள வசதிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பொதுவசதியொன்றும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் மத்திய வங்கியின் கணனி வலையமைப்பு வெளியுலகத்துடனான தொடர்புகளைப் பெற்றுக் கொண்டது. இந்நிலைமையானது அங்கீகாரமின்றி

கணனியில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தரவுகளை அடைதல் வைரஸ் மற்றும் ஏனைய தீமை பயக்கும் நடவடிக்கைகளினின்றும் பாதுகாக்கும் தேவைப்பாட்டினை தோற்றுவித்தது. எனவே வலையமைப்பினைப் பாதுகாப்பதற்காக வலையமைப்பு முகாமைத்துவ முறையொன்று நிறுவப்பட்டது.

வலையமைப்பு முகாமைத்துவ முறையானது கிடைப்பனவு, உச்சமட்ட செயலாற்றம் மற்றும் மைய முனையிலிருந்தான நம்பகத்தன்மை என்பனவற்றை உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் வலையமைப்புக்கூறினை முகாமைப்படுத்திக் கண்காணிக்கக்கூடிய வசதியினைக் கொண்டுள்ளது. இது முழுஅமைப்பினதும் பௌதீக தோற்றப்படம், பிரச்சனைகள் தொடர்பாக பயன்பாட்டாளரை உசார்நிலைப்படுத்தும் தன்மை அங்கீகாரம் பெறாத அல்லது பயனற்ற வெப்தளங்களை அடைவதினைத் தடுத்தல் என்பனவற்றையும் வழங்குகின்றது. பயர்வோல் என அழைக்கப்படும் அணுகவொட்டா வசதி தீங்கிழைப்போர் வலையமைப்பிற்குள் நுழைவதற்கான வசதியினையும் பயன்படுத்துவோர் அங்கீகரிக்காத துறைகளுக்குள் நுழைவதினையும் தலையீடு செய்வதனையும் கண்டறிதல் மற்றும் தீங்கிழைக்கக்கூடிய வைரசுகளினது அனைத்து வகைகளையும் தரவு மற்றும் மின்அஞ்சல் வசதிகளையும் தடைசெய்யும். வைரசுக்கெதிரான மென்கலமான இனோகுலேஅய்ரி வைரஸ்சினைத் தாக்கக்கூடிய பல உள்ளார்ந்த தன்மைகளை நுணுக்கக் கண்டறிந்து அதற்கு ஆவணசெய்வதன்மூலம் கணனி முறையைப் பாதுகாக்கும்.

வங்கியின் தகவல் தொழில்னுட்பத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தின் உள்ளடக்கத்தினை சிங்களமொழியில் விருத்தி செய்தமையின் மூலமும் ஊழியர்சேமநிதிய வெப்தளத்தின் மூலமும் பரந்தளவிலான குடித் தொகையினருக்கு வெப்தளமூடாக தகவல்களைப் பரப்புவதில் பெரும்பங்கினை ஆற்றிவருகிறது. ஊழியர்சேமநிதிய வெப்தளம் 2002ஆம் ஆண்டின் முதற் காலாண்டுப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும். தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட உள்ளக வெப்தளம் ஊழியர்களின் தனிப்பட்ட தகவல்களை (சம்பளம், ஊழியர்சேமநிதியம், கடன்நிலுவைகள்) பெற்றுக் கொள்வதற்கான வசதிகளைக் கொண்டுள்ளதுடன் இது மற்றைய துறைகளுக்கும் விரிவாக்கப்படவுள்ளது.

தகவல் தொழில்நுட்ப திணைக்களம் ஊழியர் சேமிநிதிய விண்ணப்ப முறையினைத் தொடர்ந்தும் மேற்கொண்டதுடன் ஆய்விற்குரிய ஆண்டில் அதனை மேலும் தன்னியக்கப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஊழியர்சேமநிதியத் திணைக்களம் ரேணுகா கட்டிடத்திலிருந்து மத்திய வங்கியின் தலைமை அலுவலக கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதுடன் ஊழியர்சேமநிதிய கணனி வலையமைப்பு ஏஎஸ்/ 400 முனைக்கோடிகளுக்கும் அதேபோன்று தொழிற்திணைக்களத்திற்கும், ரேணுகா கட்டிடத்திலுள்ள விசாரணப்பீடத்திற்குமான பிரிக்கப்பட்ட வெவ்வேறு இணைப்புக்களுடன் தனியாள் கணனிகளுக்கும் வசதியளிக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டது. மின்அஞ்சலூடாகப் பெறப்பட்ட வங்கிக்கூற்றுக்களை நேரடியாகவே உள்ளடக்கிக்கொள்ளத்தக்க வசதியுடன் கணனிமயப்படுத்தப்பட்ட வங்கி இணங்குவிரிபு முறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. ஊழியர்சேமிநிதியக் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறுகின்ற தொழில்தருனர்களை அடையாளம் கண்டுகொள்வதற்காக பல கண்காணிப்பு முறைகள் நடைமுறைக்கு இடப்பட்டன. வெப்தளமும் நிதியத்தின் உறுப்பினர்களுக்கு பொதவான தகவல்களைப் பரப்பும் விதத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டது. இது உறுப்பினர் நிலுவைகளை வழங்கக்கூடிய விதத்திலும், தொழில்தருநர்களிடமிருந்து சி/ சி1/ சி3 விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்திலும் விரிவாக்கப்படும். தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஊழியர்சேமநிதிய விடயங்கள் தொடர்பாக தொழிற்திணைக்களத்திற்குத் தொடர்ந்தும் தகவல்களை வழங்கி வருகின்றது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இவ் வசதிகள் ஊழியர்சேமநிதிய கணனிகளின் நிறுவுகைகளைப் முழுமையாகப் பேணிவரும் நடவடிக்கைகளுக்கு மேலதிகமானதாகும்.

பயன்படுத்தும் திணைக்களங்களின் தேவைப்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப முறைகளை மேம்படுத்தும் நோக்குடன் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் அலுவலக் கொடுப்பனவு மாதிரி அமைப்பினைப் பரீட்சித்தது. வழங்கலுடன் ஐஎச்ஆர்எம் மென்கலப் பொதியிலுள்ள அலுவலர் கடன்கள் சம்பள இடாப்பு கணனிப்படுத்தலுடனும் தொடர்பான மாதிரி அமைப்பு தொடர்பான பயன்படுத்தும் திணைக்களங்களாவன நலன்புரித் திணைக்களம் மற்றும் நிதியியல் திணைக்களங்களின் தேவைப்பாட்டிற்குப் பொருந்தத்தக்க விதத்தில் மேலும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டன.

அனைத்து வர்த்தக வங்கிகளினதும் தலைமை அலுவலகங்களையும் முதனிலை வணிகர்களையும் மத்திய வங்கியுடன் இணைக்கின்ற பரந்தளவு வலையமைப்பினைப் பயன்படுத்தி பின்வரும் முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- அரச படுகடன் பிணையங்களின் முதலாந்தர ஏலங்களைத் நடாத்துவதற்கு.

- வர்த்தக வங்கி வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளின் ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா செலாவணி வீதங்களின் இருவழி கோரல்களைப் பெறுவதற்கு.
- சியரா கணக்கிலுள்ள நிதிகளின் போக்கு தொடர்பாக இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிப்பதற்காக.
- வங்கித்தொழில் மற்றும் முதனிலை வணிகர்களின் தொழிற்பாடுகள் தொடர்பான மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு தொடர்பான தொடர்பூட்டல்களுக்காக.
- திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளுக்கான முதலாந்தர ஏலங்களில் மின்னியல் விலைக்கோரல்கள்.

வங்கியின் பயன்படுத்தும் திணைக்களங்களுக்காக பல ஏஎஸ் / 400 இனையும் தனியாள் கணனிகளையும் அடிப்படையாகக் கொண்ட பிரயோகங்களைத் தகவல் தொழினுட்ப திணைக்களம் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்தது. நடைமுறைக் கணக்குகளுக்காக உருவாக்கப்பட்ட பற்றுச்சீட்டு பதிவுகளைப் பதிவதற்காக நாணயத் திணைக்களத்திற்கு ஒருவசதி, வங்கித்தொழில் திணைக்களத்திற்காக வணிகர் தகவல் முறை, செயலகத் திணைக்களத்திற்கான ஓய்வூதிய நிதிய கண்காணிப்பு மற்றும் முதலீட்டு முறை முற்பணக் கணக்கு தீர்ப்பனவுமுறை மற்றும் வழங்கல் பொருள்பட்டியல் கட்டுப்பாட்டுமுறை என்பன நடைமுறைப் படுத்தப்பட்டன. பொது பணிகள் பிரிவினைக் கணனி மயப்படுத்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. நலன்புரிக்கடனை வழங்குகின்ற முறையும் பரீட்சார்த்த அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் மத்திய வங்கியின் செயற்றிட்டங்களை முக்கியமாக கொடுப்பனவு முறை சீர்திருத்த செயற்றிட்டத்தினை வலுப்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களித்தது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் உலகவங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களைத் தயாரிப்பதில் ஆலோசனை யாளர்களுடன் மிகநெருக்கமாக தொழிலாற்றியதுடன் அதே நேர மொத்த தீர்ப்பனவுமுறைச் செலாவணிக்குழுவுடன் மிகத் தீவிரமாக செயற்பட்டனர்.

வங்கிகளுக்கிடையிலான பரிமாற்றம் மற்றும் காசோலைகளின் தீர்ப்பனவு என்பவற்றிற்காக இலங்கை தன்னியக்க தீர்வையக முறையொன்றினைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. 2001ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் எண்ணிக்கை 2.14 சதவீதத்தினால் அதிகரித்து 35.31 மில்லியனை அடைந்தது. இவ்வாண்டில் கையாளப்பட்ட வாணிப நாளொன்றிற்கான கொடுப்பனவுகளின் சராசரிப் பெறுமதி ரூ.9.92 பில்லியனாக இருந்ததுடன் ஆண்டிற்கான மொத்தம் ரூ. 2371.91 பில்லியனாகக் காணப்பட்டது. அண்மைய ஆண்டுகளின் போக்கினைத் தொடர்ந்து இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைக் கொடுக்கல் வாங்கல்கள் விரைவாக அதிகரித்து 17.01 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுமுறைக் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி 2000ஆம் ஆண்டின் ரூ.1,245.83 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,667.12 பில்லியனாகக் காணப்பட்டது.

இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைக் கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்ட மென்கலத்தினை தரமுயர்த்தும் நடவடிக்கையானது செயன்முறை நேரத்தினை 50 சதவீதத்தினால் குறைத்துவிட்டது. நேரடிபற்று மாற்றல் முறையில் காணப்பட்ட தொடர்ச்சியான முன்னேற்றத்தின் காரணமாக பல தனியார் கம்பனிகளும் வங்கிகளும் அவற்றின் பட்டியல்கள் மற்றும் கொடுகடன் அட்டைக் கொடுப்பனவுகளைச் சேகரிப்பதற்கு இம்முறையை அதிகரித்த அளவில் பயன்படுத்தி வருகின்றன.

ஆய்விற்குரிய ஆண்டில், தீர்ப்பனவில் பங்குபற்றுவோர் வினைத்திறன் மிக்க முயற்சியொன்றாக இதனை நடத்தும்பொருட்டு இலங்கை தன்னியக்க தீர்வகத்தின் உரிமையை கைமாற்றம் செய்வதற்கான முயற்சிகளிலும் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்கள் அடையப்பட்டன. முழுநிறைவான ஆய்வும் இலங்கை தன்னியக்க தீர்வகத்தின் சொத்துக்களினது பெறுமானக்கணிப்பும் நிறைவடைந்துள்ளமையுடன் இலங்கை தன்னியக்க தீர்வையகத்தின் தொழிற்பாடுகளை பொறுப்பேற்பதற்கான புதிய கம்பனிக்கான சங்க பிணக்கக் குறிப்புக்களும் இவ்வாண்டில் உருவாக்கப்பட்டன. அரச வங்கிகளுக்கும் (மத்திய வங்கி உட்பட) வர்த்தக வங்கிகளுக்குமிடையிலான இக் கம்பனியின் பங்குகளின் ஒதுக்கு முறையே 48 சதவீதமாகவும், 52 சதவீதமாகவும் அமையும் இவ் உரிமை கைமாற்றல் செயற்பாடு 2002 ஏப்பிறலில் முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## முகாமைக் கணக்காய்வு

ஆண்டுக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்துடன் இசைந்து செல்லும் வகையில், 2001ஆம் ஆண்டில் முகாமைக் கணக்காய்வுத் திணைக்களமானது மத்திய வங்கியின் தொழிற்பாடுகளின் செயலாற்றத்தில் செயற்றிறன், சிக்கனம் மற்றும் பயனுறுதி ஆகியவற்றை

அதிகரிக்கும் நோக்கத்துடன் தனது உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைப் பணித் தொழிற் பாடுகளை மேற்கொண்டது.

வங்கியின் முகாமை நடைமுறைகள் மற்றும் நிதியியல் வழிமுறைகளை முன்னேற்றுவதற்காக 2001ஆம் ஆண்டில் நாணயச்சபையின் கணக்காய்வுக் குழுவொன்று நிறுவப்பட்டது. கணக்காய்வுக் குழுவானது, ஏனைய விடயங்களுடன் கணக்காய்வுச் செய்முறை, இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள், அவற்றோடு தொடர்புடைய நிதியில் அறிக்கையிடல் நடைமுறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை மேற்பார்வையிடும்.

வங்கி முழுவதிலும், நடைமுறையிலுள்ள முறைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய ஆய்வினை மேற்கொள்வதற்கு இத் திணைக்களத்துக்கு அதிகாரமளிப்பதற்காக 2001ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பட்டயம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்வாண்டில் திணைக்களம், பலவித நாணய இனங்களைக் கொண்ட ரூ.66 பில்லியன் பெறுமதியான பயன்படுத்தப்படமுடியாத மற்றும் சேதமடைந்த நாணயத்தாள்களை அவை அழிக்கப்படுவதற்கு முன் கணக்காய்வு செய்ததோடு, நாணயம் சரிபார்த்தல், எண்ணுதல் மற்றும் தரம் பிரித்தல் பிரிவின் வேலைகளையும் மேற்பார்வை செய்தது. அத்துடன் இருப்பிலுள்ள நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளின் ஆண்டுக்கான சரிபார்த்தலினையும் திணைக்களம் மேற்கொண்டது. நாணயஇருப்புப் பதிவுப் புத்தகமானது பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் என்பன ஒப்பீடு செய்யப்பட்டமையின் பின்னர் கணக்காய்வு அலுவலர்களினால் சரிபார்க்கப்பட்டு உறுதிப்படுத்தப் பட்டது.

வங்கித்தலைமை அலுவலகக் கட்டிடத்தின் நிருமானம் மற்றும் புனரைப்பு தொடர்பான அனைத்துக் கொடுப்பனவுகளும் முன் கணக்காய்வு செய்யப்பட்டன. இறுதிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கி வங்கி ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட அனைத்து ஊதியங்களினதும் கணக்காய்வோடு, ஓய்வூதிய நிதி, ஊழியர் சேமநிதி, விதவைகள் மற்றும் தாரம் இழந்தவர்களின் ஓய்வூதிய நிதி மற்றும் மத்திய வங்கியின் ஏனைய நலன்புரித் திட்டங்களும் முன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும், ஓய்வு பெறுதல் அல்லது வங்கிப் பணியிலிருந்து நிறுத்தப்படுதல் தொடர்பிலான மீளளிப்புக்கள் மற்றும் சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வுபெற்ற ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட இழப்பீடு ஆகியன இத் திணைக்களத்தினால் முன் கணக்காய்வு செய்யப்பட்டன.

இத் திணைக்களம் ஊழியர் சேமநிதிய நலன் பெறுவோருக்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து மீளளிப்புக்களையும் முன் கணக்காய்வு செய்ததுடன் ஊழியர் சேம நிதியத்தின் ஆண்டுக் கணக்குக் கூற்றுக்களையும் கணக்காய்வு செய்தது. வங்கியின் செயற்றிறன் மற்றும் பயனுறுதியை முன்னேற்றும் நோக்கில் இத் திணைக்களம் பல முகாமைத்துவ ஆய்வுகளையும் மேற்கொண்டது.

## பயிற்சி

விரைவாக மாற்றமடைந்துவரும் உலகில், வங்கி அதன் அலுவலர்களது தரத்தினை உயர்த்தும் பொருட்டு மனிதமூலவள அபிவிருத்திச்சபையை அதன் மிகமுக்கிய குறிக்கோளாகக் கொண்டிருப்பதனால் வங்கி அனைத்து மட்டங்களிலுமுள்ள அதன் அலுவலர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொடர்ந்தும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்திவருகின்றது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே, மத்திய வங்கி அதன் பொருத்தமான அலுவலர்களுக்கு முக்கியமாக பொருளாதாரம், வங்கித் தொழில், நிதி, பணமும் மூலதனச் சந்தைகளும், தகவல் தொழில்நுட்பம் போன்ற முக்கியமான துறைகளில் குறுங்கால மற்றும் நீண்டகால நிகழ்ச்சித் திட்டங்களில் பயிற்சியளிப்பதற்கு அனுசரனை வழங்கியது.இவ்வாண்டில் பரந்தளவிலான தோற்றப்பாட்டுடன் பயிற்சித் திணைக்களம் வங்கியின் பயிற்சி இணைப்பாளராக அதன் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டது. வங்கியின் மீளமைத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி மிக முக்கியமானதொரு துறையாக இனங்காணப்பட்டதுடன் தேவைப்படும் பயிற்சியினை ஆய்வு செய்வதற்கும் வங்கியின் பயிற்சி நடவடிக்கைகளை வலுப்படுத்து வதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்குமாக மூன்று செயலணிக்குழுக்களும் பின்வருவன தொடர்பாக அறிக்கை தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

(1) பட்டப்பின்படிப்பிற்கான தேவைப்பாடுகள் பயிற்சிக்கான துறைகள் மற்றும் பொருத்தமான நிறுவனங்களையும் இனங்காணல்.

(2) பயிற்சித் திட்டத்தினை விருத்தி செய்வதும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்பவர்களைத் தெரிவு செய்வதற்கான பிரமாணங்களை வடிவமைப்பதும், அத்துடன்

(3) மற்றவர்களைப் பயிற்றுவதற்கு பயிற்சி பெறுவோரை ஒதுக்குவதற்கான பிரமாணங் களை அபிவிருத்தி செய்தல் தொடர்பான துறைகளில் பயிற்சி பெறுவோரின் தேர்ச்சியையும் இயலாற்றலையும் மேம்படுத்தும் பொருட்டு அவர்களைக் கண்காணித்தல்

தேர்ச்சியையும் அறிவாற்றலையும் பயன்மிக்க முறையில் பயன்படுத்துவதற்கான உத்திகள்.

செயலணிக் குழுக்களினால் கண்டறியப் பட்டவற்றின் அடிப்படையில் வங்கியின் எதிர்கால பயிற்சி நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காக உருவாக்கப்படவுள்ள ஐந்தாண்டு நடவடிக்கைத் திட்டம் 2002ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தொடங்குகிறது.

பட்டப்பின்படிப்பு ஆய்வுகளைப் பொறுத்தவரையில் வங்கி பொருளாதாரத்தில் மட்டுமன்றி வங்கித் தொழில், சட்டம், முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற வங்கித் தொழில்துறையுடன் தொடர்பான தொடர்புபட்ட துறைகளிலும், பட்டப்பின்படிப்பு ஆய்வுகளை மேற்கொள்ள அலுவலர்களை அனுமதிக்கின்ற தேவையை வங்கி அங்கீகரித்துள்ளது.

2001ஆம் ஆண்டு இறுதியில், 12 அலுவலர்கள் வெளிநாட்டில் பட்டப்பின் படிப்பைத் தொடர்ந்தனர். இவ்வாண்டில் ஒரு அலுவலர் முனைவர் பட்டத்திற்கான ஆய்வினை நிறைவு செய்தவேளையில் 7 அலுவலர்கள் முதுமானிப் பட்டத்தினை நிறைவு செய்துகொண்டு நாடு திரும்பினர்.

வங்கி அலுவலர்கள் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் வங்கித் தொழில், நிதி, முகாமைத்தவம் போன்றவற்றுடன் தொடர்பான பல்வேறு துறைகளில் குறுங்காலப் பயிற்சி நெறிகளைப் பெறுவதற்கு அனுப்பப்பட்டனர். 2001ஆம் ஆண்டில் 497 அலுவலர்கள் முக்கியமாக இலங்கை மத்திய வங்கியின் வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட உள்நாட்டு பயிற்சி நெறிகளில் பங்கு பற்றினர். வெளிநாட்டில் குறுங்காலப் பயிற்சி நெறிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 86ஆக இருந்தது.

வங்கி அலுவலர்கள் கணக்காய்வு, காப்புறுதி மற்றும் வங்கி மேற்பார்வை போன்ற துறைகளில் தமது அறிவினை உயர்த்திக் கொள்வதற்காக சிறப்பு ஆய்வரங்குகள் நடத்தப்பட்டன. மற்றும் நடைமுறைப் பொருளாதார, வங்கித் தொழில் மற்றும் பொதுவான விடயங்களில் அறிவூட்டும் குறிக்கோளுடன் திணைக்களம் வாராந்த ஆய்வரங்கு தொடர்களை நடத்தியது. இவ்வாய்வரங்குகள் தொடர்பான துறைகளில் பிரபல்யம் பெற்ற ஆட்களினதும் அதேபோன்று வங்கி அலுவலர்களினாலும் நடத்தப்பட்டன. இவ்வாண்டில் 54 அத்தகைய ஆய்வரங்குகள் நடத்தப்பட்டன.

## நலன்புரி

நலன்புரித் திணைக்களமானது அலுவலர் களுக்கான கடன் திட்டங்களையும் மற்றைய நலன்புரி வசதிகளையும் நடைமுறைப்படுத்திய வேளையில், வங்கி அலுவலர்களின் வேலைச் சூழலை மேம்படுத்து வதற்காக அத்தகைய வசதிகளை வழங்குவதிலிருந்தான அதன் தோற்றப்பாட்டினை மாற்றியமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டது. இத் திணைக்களம் மன இறுக்கத்தினைத் தவிர்த்தல், மற்றும் பொதுவான நோய்கள் தொடர்பாக பொதுவான நோய்களான நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற பொதுவான நோய்கள் தொடர்பாக ஊழியர்களின் அறிவினை மேம்படுத்துவதற்காக "ஊழியரின் நல்வாழ்வு" என்பதன்மீது புகழ்பெற்ற மருத்துவ அறிஞர்களின் விரிவுரைத் தொடர்களை திணைக்களம் ஒழுங்கு செய்தது. முழுநேர மருத்துவ அலுவலர்களுடன் கூடிய பணிகளை வழங்கும் வங்கியின் மருத்துவ நிலையத்தின் பணிகள் தொடர்ந்து வங்கி அலுவலர்களுக்கு கிடைக்கச் செய்யப்பட்டன.

வங்கியின் அலுவலர்களுக்கான உணவகம் 2001 ஒகத்து 6ஆம் நாளிலிருந்து திருத்தி அமைக்கப்பட்டதன் காரணமாக, மகிழ்ச்சிகரமானதொரு சூழலில் ஊழியர்களுக்கு அனைத்து உணவு வசதிகளையும் வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. வங்கியின் உணவகம் கட்டணமெதுவுமின்றி வங்கி ஊழியர்களுக்கு அவர்களின் மேசையிலேயே தேநீர் வழங்கும் ஏற்பாடுகள் தொடங்கப்பட்டன. எனவே தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களினால் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட தேனீர் நிறுத்தப்பட்டது. பன்னாட்டு ஆய்வரங்குகள் மற்றும் மாநாடுகள் போன்ற பல அலுவல்சார் தொழிற்பாடுகளில் பங்கேற்பவர்களுக்கான உணவு வசதிகளும் உணவகத்தினால் பொறுப்பேற்கப் பட்டதுடன் மூலம் அத்தகைய செலவினைக் குறைப்பது உறுதி செய்யப்பட்டது. இதுவரை உயர்பதவி அலுவலர்களுக்கு மட்டும் பொருந்தத்தக்கதாக இருந்த கணனி கொள்வனவுக்காக வழங்கப்பட்ட கடன் திட்டம் தற்பொழுது வங்கியின் அனைத்து ஊழியர்களுக்கும் பொருந்தத்தக்கதாக விரிவாக்கப்பட்டது. ஊழியர்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மருத்துவ நன்மை திட்டங்களை மேம்படுத்துவதற்காக ஆய்வு ஒன்றினைத் திணைக்களம் மேற்கொண்டது.

1996இல் வங்கி தாக்குதலுக்குள்ளானபோது கடுமையான கண் காயங்களினால் பாதிக்கப்பட்ட ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு, அத்தகைய ஊழியர்களை எழுதவும் வாசிக்கவும் இயலச் செய்யவும் அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தகைமையை மேம்படுத்துவதற்குமாக ஸ்கானர் கண் பரிசோதனைத் தன்மைகளைப் புலப்படுத்திக்காட்டும் கருவிகள் மற்றும் தொழிற்படு முறையைக் கொண்ட மென்கல வசதிகளுடன் கூடிய கணனி வசதிகளுக்கான ஏற்பாடுகளுக்கு நாணயச்சபை ஒப்புதலளித்தது.

வங்கியிலிருந்து வீடமைப்பு கடன்களைப் பெற்ற ஊழியர்களுக்கு கடன்பாதுகாப்பு காப்புறுதியினை வழங்குவதற்காக காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் ஒழுங்குகள் செய்யப்பட்டன. இக் காப்புறுதிப் பத்திரங்களின் நியதிகளின்படி ஊழியர் ஒருவர் 70 வயதினை அடைவதற்கு முன்னர் அவ்வூழியருக்கு மரணம் சம்பவிக்கும் சந்தர்ப்பமொன்றில் காப்புறுதிப் பத்திரங்களை வைத்திருப்பவரில் தங்கியிருப்போர் வீடமைப்புக்கடன் சுமைக்கு உள்ளாகமாட்டார்.

## முகாமை அபிவிருத்தி நிலையம்

தொழில்சார் அடிப்படையிலான தேர்ச்சியை முன்னேற்றவும், நாளது வரையிலான விடயங்களை சிறப்பாக மத்திய வங்கியின் மூத்த அலுவர்கள் அறியச் செய்யவும் உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்த வேண்டிய பொறுப்புக் காரணமாக 2001ஆம் ஆண்டு ஏப்பிரலில் முகாமை அபிவிருத்தி நிலையம் நிறுவப்பட்டது. முகாமை அபிவிருத்தி நிலையத்தின் பணிகள், நிதியமைச்சு, ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் அலுவலர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கும் கிடைக்கக்கூடியதாயிருந்தன.

முகாமை அபிவிருத்தி நிலையமானது வங்கியின் மூத்த அலுவலர்களுக்கு நாணயக் கோட்பாடு, நிதியியல்துறையின் உறுதிப்பாடு, செலாவணி வீதக் கொள்கை போன்ற வங்கியில் அவரவர் வேலைக்குப் பொருத்தமான விடயததில் சீரான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தொடரை நடத்துகின்றது.

தற்போது, உயர்மட்ட பயிற்சித் திட்டமானது மத்திய வங்கிக்கான தொழில்நுட்ப உதவிக் கொடையொன்றின் கீழ் சுவீடிஷ் பன்னாட்டு அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவர் நிலையத்தினால் முற்றாக நிதியிடப்படுகின்றது. பங்கு பற்றுபவர்களுக்கான பயிற்சிக் கோட்பாட்டு ரீதியிலும் நடைமுறை ரீதியிலுமான

அட்டவணை II.26
2001இல் நடத்தப்பட்ட உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்ள்

| எண்ணிக்கை | பாடநெறித்தலைபபு | காலம் | ஆராய்ச்சியாளர்கள் |
|---|---|---|---|
| 1. | நிதியியல் நிகழ்ச்சித்திட்டப்படுத்தல் | 09-18 மே (9 நாட்கள்) | (1) முனைவர். மொகமட் சுபிர் கான் முகாமைப்பணிப்பாளர், பன்னாட்டு நிதி தொழிநுட்பவியல் பாக்கித்தான்<br>(2) முனைவர் அசோக் கே லாகிரி பணிப்பாளர் அரச தரவு நிதி மற்றும் கொள்கை தேசிய நிறுவகம் இந்தியா |
| 2. | பொருளாதார வளர்ச்சி: உண்மைகள், கோள்பாடு, கொள்கைச் சிக்கல்கள் | 14- 22 யூன் (7 நாட்கள்) | பேராசிரியர் ஜிசூன் லீ, பொருளாதார பேராசிரியர் சியோல் தேசிய பல்கலைக்கழகம், தென்கொரியா. |
| 3. | "பொதுப்படுகடன் முகாமைத்தவம் தொடர்பான விடயங்கள்" மீதான ஒருநாள் செயலமர்வு | 27 யூலை | திரு. நிகால் கப்பாகொட, பொருளாதார ஆலோசகர் மற்றும் உள்நாட்டு மூலவள ஆட்கள் |
| 4. | "பயன்மிகு வங்கித் தொழில் மேற்பார்வைக்கான பாசில் மையக் கோள்பாடு" மீதான ஒரு நாள் செயலமர்வு | 17 ஓகத்து | உள்நாட்டு மூலவள ஆட்கள் |
| 5. | பொதுப்படுகடன் முகாமைத்துவம் | 5-16 நவெம்பர் (10 நாட்கள்) | (1) திரு. நிகால் கப்பாகொட, பொருளாதார ஆலோசகர்<br>(2) முனைவர் ரி.ஆர். ஆனந்தகிருஷ்ணன், நிதியியல் ஆலோசகர் |
| 6. | வங்கிகளிலும் நிதியியல் நிறுவனங்களிலும் இடர் நேர் முகாமைத்துவம் மீதான அறிமுகப்பாடநெறி | 6-9 நவெம்பர் (4 நாட்கள்) | உள்நாட்டு மூலவள ஆட்கள் |
| 7. | நவீன மத்திய வங்கித் தொழில் | 21-28 நவெம்பர் | (1) பேராசிரியர் அன்ரஸ் விறடின், தலைவர் ஆராய்ச்சித் திணைக்களம், சுவீடன் மத்திய வங்கி.<br>(2) பேராசிரியர் ஸ்ரவன் வியோடி, ஆளுநருக்கான மூத்த மதியுரையாளர், சுவீடன் மத்திய வங்கி |
| 8. | நிதியியலில் பொருளியல் பிரயோகங்கள் | 10-21 திசெம்பர் (10நாட்கள்) | பேராசிரியர் மெல்வின் டாமியன் அயோகு கேப்டவுண் பல்கலைக் கழகம தென்னாபிரிக்கா. |
| 9. | முகாமைத்தவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 10-21 திசெம்பர் (10நாட்கள்) | (1) பேராசிரியர் டி. எஸ். விதான தலைவர் முகாமைத்துவ தொழிலாளர் ஆய்வுகள், வின்ஸ்டர் பல்கலைக்கழகம்.<br>(2) பேராசிரியர் பிரான்சிஸ் றியர் துணைப் பேராசிரியர் முகாமைத்துவம் வின்ஸ்டர் பல்கலைக்கழகம் |

வெளிப்பாட்டினை சிறந்தமுறையில் வழங்குவதற்காக பன்னாட்டு புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களிலிருந்தும் அத்தகைய ஏனைய நிறுவனங்களிலிருந்தும் பொருத்தமான பாடங்களில் நிபுணத்துவம் பெற்றவர்களிலிருந்தே மூலவள ஆட்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆய்வின் கீழான ஆண்டில் ஒன்பது உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் ஆறு 1- 2 கிழமைப் பயிற்சி நெறிகளாகவும், இரண்டு ஒரு நாள் செயலமர்வுகளாகவும் மற்றும் ஒன்று 10 நாள் முகாமை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகவும் (அட்டவணை 1) அமைந்திருந்தன. ஆசிய பசுபிக் கிராமிய மற்றும் வேளாண்மை கொடுகடன் அமைப்பினால் நடத்தப்பட்ட முகாமை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தைப் போன்றே முகாமை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டப் பயிற்சி நெறியானது, முகாமை மற்றும் தொழிற்கல்வித் திணைக்களம், ஒடெற்றி வணிகக் கல்லூரி யுனிவெசிற்றி ஒவ் வின்சர் கனடா ஆகியவற்றிலிருந்தான மூலவள ஆட்களின் ஆலோசனையுடன் விருத்தி செய்யப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டம், உபாய அடிப்படையிலான சிந்தனை, நிறுவன ரீதியான ஆய்வு மற்றும் மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சின் மூத்த நிறைவேற்று அலுவர்களின் மனித மூலவள அபிவிருத்தித் தேர்ச்சி ஆகியவற்றை வலுப்படுத்து வதற்காகவே வடிவமைக்கப்பட்டதாகும்.

## ஆளணி

"கடமைப் பொறுப்புக்களைத்" தெளிவாக விளங்கிக் கொள்ளுதல், அவற்றைத் திறமையாகவும், பயனுறுதிமிக்கதாகவும் நிறைவேற்றுதல் மற்றும் அவசரத் தேவைகளையும் சவால்களையும் தயக்கமின்றி எதிர்கொள்ளல் ஆகிய ஆற்றலுடன் தனது உண்மையான உள்ளார்ந்த ஆற்றலை அபிவிருத்தி செய்யுமுகமாக திறமையானதும் செயற்றிறன் மிக்கதுமான தொழிற்படையொன்றினை உருவாக்குதல் என்ற அதன் தொலைநோக்கினைப் பேணும் விதத்தில் நிறுவகத் திணைக்களம் ஆட்சேர்ப்பு, நியமனங்கள், பதவி உயர்வுகள், ஓய்வுபெறல் மற்றும் ஆளணியினர் தொடர்பான ஏனைய விடயங்களில் 2001ஆம் ஆண்டிலும் தனது தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் ஆற்றியது.

2001ஆம் ஆண்டில் பிரிகேடியர் காமினி அங்கம்மன ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்பு பணிகளின் பணிப்பாளராக வங்கிப்பணிக்குச் சேர்க்கப்பட்டார். ஆண்டின் இறுதிப்பகுதியில் உயர்பதவி அலுவலர்களைப் வங்கிப் பணிக்குச் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டதுடன் 2002ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் ஆட்சேர்ப்பு இறுதிப்படுத்தப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மனித மூலவள பணிப்பாளர், முகாமைத்துவக் கணக்காய்வுப் பணிப்பாளர், முதன்மைக் கணக்காளர் ஆகிய பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டன.

## புதிய கட்டிடத் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை பணிமனைத் திணைக்களத்துடன் ஒன்றிணைத்தமை

புதிய கட்டிடத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுவந்த தொழிற்பாடுகளும் கடமைகளும் பணிமனைத் திணைக்களத்திற்கு மாற்றல் செய்யப்பட்டன. இதன்படி புதிய கட்டிடத் திணைக்களத்தின் தொழிற்பாடு 2001 செத்தெம்பர் 3ஆம் நாளிலிருந்து முடிவுறுத்தப்பட்டது. நிதியியல் சந்தைத் திணைக்களத்தின் தொழிற்பாடுகளும் 2001 செத்தெம்பர் 4ஆம் நாளிலிருந்து முடிவுறுத்தப்பட்டன.

## சுயவிருப்பு ஓய்வூதியத்திட்டம்

அண்மைய காலங்களில் உலகெங்கிலுமுள்ள மத்திய வங்கிகள் கடுமையான மாற்றங்களுக்குட்பட்டு வருகின்றன. மாற்றமடைந்துவரும் தேவைகளை எதிர்கொள்ளும் பொருட்டு உற்பத்தியாற்றலை அதிகரிப்பதன் மூலமும், மத்திய வங்கியின் அடிப்படைத் தொழிற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புபடாத நடவடிக்கைகளை நீக்கிவிடுவதன் மூலமும் உயர் வினைத்திறனை அடைந்துகொள்ளும் குறிக்கோளுடன் அதன் தொழிற்பாட்டுத் துறைகளை மீள ஒழுங்கமைத்துக்கொள்ளும் தேவையை உணர்ந்தது. இச் செயற்பாட்டினை அடைவதற்கு சிறந்த பணியினை பெற்றுக்கொள்வதற்கும் அத்துடன் வங்கியின் தொழிற்பாட்டுச் செலவினைக் குறைப்பதற்கும் குறிப்பிட்ட சில பணிகளை வெளியிலுள்ள சிறப்பியல்பு வாய்ந்த நிறுவனங்களின் மூலம் பெற்றுக்கொள்வது இன்றியமையாததாக மாறியது.

இம் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு வங்கி மிகுந்த போட்டித்தன்மையும் அதிகாரச்சூழலுக் கேற்ப அனுசரித்துப்போவதும் அவர்களது தற்போதைய பதவிநிலை சுமையானது எனவும் உணரும் ஊழியர்களுக்கும், குடும்பத்திலும் மற்றைய வெளியிலுள்ள பொறுப்புக்களிலும் கூடுதலான கவனத்தைச் செலுத்தவேண்டிய தேவையைக் கொண்டுள்ள வர்களுக்கும், வேறு இடங்களில் சிறந்த வாய்ப்பும் நல்ல சந்தர்ப்பமும் இருக்கிறது என உணரும் ஊழியர்களுக்கும் சுயவிருப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் உரிய காலத்திற்கு முன்னரே பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கான சந்தர்ப்பமொன்றை சிலவகை

ஊழியர்களின் பணிகள் அவசியமானவை என்பதற்குட்பட்ட விதத்தில் வழங்குவதற்கான தேவையை வங்கி உணர்ந்தது. மத்திய வங்கியின் தொழிற்சங்கங்களும் உரிய காலத்திற்கு முன்னரான ஓய்வூதிய திட்டமொன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக முகாமைத்துவத்தைச் சந்தித்தன. எனவே தகைமையுள்ள ஊழியர்கள் உரிய காலத்திற்கு முன்னரேயே ஓய்வுபெற சந்தர்ப்பமொன்றினை வழங்கும் வகையில் வங்கி உலக வங்கியின் உதவியுடன் 2001ஆம் ஆண்டில் சுயவிருப்பு ஓய்வூதிய திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இத்திட்டம் அனைத்து ஊழியர்களிடையேயும் 2001 ஒத்தோபர் 1ஆம் நாளன்று சுற்றறிக்கைப் படுத்தப்பட்டதுடன் தகைமையுள்ள ஊழியர்கள் உரிய காலத்திற்கு முன்னரேயே ஓய்வு பெறுவதற்கான தமது விருப்பினை தெரிவிப்பதற்காக 1 1/2 மாதகாலம் வழங்கப்பட்டது. இதற்கேற்ப 148 உயர்பதவி அலுவலர்கள் 426 உயர்பதவி அல்லா அலுவலர்கள் 139 சிற்றூழியர்கள் என்போரை உள்ளடக்கிய 713 ஊழியர்கள் உரிய காலத்திற்கு முன்பே ஓய்வுபெறும் தமது சம்மதத்தினை வழங்கினர். 713 ஊழியர்களில் 690 பேர் சுயவிருப்பத்தின் பேரிலான ஓய்வூதிய நன்மைகளைப் பெற தகைமை பெற்றிருந்த வேளையில் 23 பேர் தகைமையற்றவர்களாகக் காணப்பட்டனர்.

சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக 141 உயர்பதவி அலுவலர்கள் 416 உயர்பதவி அல்லா அலுவலர்கள் 133 சிற்றூழியர்கள் என்போரை உள்ளடக்கிய 690 ஊழியர்கள் இத் திட்டத்திலிருந்து நன்மையினைப் பெற்றவேளையில் இலங்கை மத்திய வங்கி அதன் அலுவலர்களது எண்ணிக்கையை 1908 இலிருந்து 1329இற்கு குறைக்கக்கூடியதாக இருந்தது.

ஆளுநர் ஏ. எஸ். ஜயவர்தன 2001ஆம் ஆண்டுப் பகுதியில் பின்வரும் கூட்டங்களில் கலந்துகொண்டார்.

1. பெல்ஜியம் நாட்டில் மார்ச்சு 18 -19 ஆம் நாட்களில் நடைபெற்ற யூரோகிளியர் வங்கி கூட்டத்தில் அதிமேதகு சனாதிபதியின் தலைமையிலான இலங்கைத் தூதுக்குழுவுடன் கலந்து கொண்டதுடன் மாச்சு 20 - 22ஆம் நாள் லக்சம்பர்க் நாட்டுக்கு விஜயம் செய்தார்.

2. வாசிங்டன் டீ. சி. யில் ஏப்பிறல் 23ஆம் நாள் முதல் மே 2ஆம் நாள்வரை நடைபெற்ற வங்கி/ நிதிய இளவேனிற்கால கூட்டங்களில் கலந்து கொண்டார்.

3. மே 28ஆம் நாள் முதல் 31ஆம் நாள்வரை மியன்மாரில் நடைபெற்ற ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொதுக்கூட்டம்; யூன் 5ஆம் நாள் முதல் 6ஆம் நாள்வரை இலண்டனில் நடைபெற்ற வங்கித் தொழில் மற்றும் நிதியியல் துறைக்கான கம்பனி நிருவாகம் மீதான பொதுநலவாய மத்திய வங்கிகளின் ஆளுநர்களின் கூட்டம்; யூன் 7ஆம் நாள் முதல் 8ஆம் நாள்வரை இலண்டனில் நடைபெற்ற இங்கிலாந்து வங்கி மத்திய வங்கி ஆளுநர்களின் ஆண்டுக் கருத்தரங்கு; மற்றும் யூன் 9ஆம் நாள்முதல் 11ஆம் நாள்வரை பாஸ்லேயின் நடைபெற்ற சருவதேச தீர்ப்பனவுகளுக்கான வங்கியின் ஆண்டுப் பொதுக்கூட்டம் என்பனவற்றில் கலந்து கொண்டார்;

4. யூலை 3ஆம் நாளிலிருந்து 6ஆம் நாள்வரை சிங்கப்பூர் மற்றும் கொங்கொங் ஆகிய நாடுகளில் நடைபெற்ற செயற்றிட்டக் கடன் கூட்டங்களில் கலந்துகொண்டார்.

5. நவெம்பர் 13ஆம் நாளிலிருந்து 14ஆம் நாள்வரை பாரிஸ் நகரில் நடந்த ஜீ 14 கூட்டங்களில் கலந்து கொண்டதுடன் நவெம்பர் 15ஆம் நாளிலிருந்து 16ஆம் நாள்வரை பெல்ஜியத்துக்கு விஜயம் செய்தார்.

## நியமனங்கள்

1. திருமதி எம் ஏ ஆர். சி கூறே, நிதி திட்டமிடல் அமைச்சிற்கு, இறைக்கொள்கை பொருளாதார அலுவல்களுக்கான பணிப்பாளர் நாயகமாக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் பகுதிநேர அடிப்படையில் வங்கிப் பணிக்கு மீண்டும் அழைக்கப்பட்டு சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு 2001 யூலை 17ஆம் நாளன்று ஆளுநரின் உதவியாளராக பதவியிலமர்த்தப் பட்டார்.

2. இலண்டன் பொது நலவாய செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த முனைவர் (திருமதி) ஆர். ஜெயமகா வங்கிப்பணிக்கு மீள அழைக்கப்பட்டு சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டதுடன் 2001 சனவரி 17ஆம் நாளிலிருந்து ஆளுநரின் உதவியாளராக பதவியிலமர்த்தப்பட்டார்.

3. வங்கியல்லா நிதிநிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திருமதி எல்.கே.குணதிலக 2001 சனவரி 1ஆம் நாளிலிருந்து வங்கியல்லா நிதிநிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

4. பின்வரும் நியமனங்கள் 2001 ஏப்பிறல் 20ஆம் நாளிலிருந்து மேற்கொள்ளப்பட்டன.

    i. பொதுப்படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்பாளரும் பதிவாளருமான

திரு.ஏ.எஸ்.என்.பர்னாந்து முகாமை அபிவிருத்தி நிலையத்திற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

ii. பணிமனைத் திணைக்களப் பணிப்பாளர் திரு.ஜே.எம்.ரீ.பீ.ஜயசுந்தர தகவல் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

iii. பொதுப்படுகடன் மேலதிக கண்காணிப்பாளர் திரு.கே.வி.டீ.பீ.தீரசிங்க பொதுப்படுகடனின் கண்காணிப்பாளராகவும் பதிவாளராகவும் நியமிக்கப்பட்டார்.

iv. புதிய கட்டிடங்கள் திணைக்கள பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு.ஜி.ஏ.வி.பொன்சேகா பணிமனைத் திணைக்கள பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

v. தகவல் திணைக்களப் பணிப்பாளர் திரு.சி.கே.பரணவிதான முகாமைக் கணக்காய்வு திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

5. பிரிகேடியர் காமின அங்கம்மன 2001 ஒகத்து 1ஆம் நாளிலிருந்து பாதுகாப்புப் பணியின் பணிப்பாளராக நிய்மிக்கப்பட்டார்.

6. முனைவர் எச்.என்.தேனுவர 2001, ஒகத்து 15ஆம் நாளிலிருந்து பொதுப்படுகடன் திணைக்களத்தின் பதில் மேலதிக கண்காணிப்பாளராக பகுதிநேர அடிப்படையில் நியமிக்கப்பட்டார்.

7. நிறுவனத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் திரு.கே.ஏ.டி.ரூபசேன 2001 ஒத்தோபர் 3ஆம் நாளிலிருந்து நிறுவனத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

## ஒய்வு பெறல்

1. திரு.எம்.ஐ.எவ். கமீட், பணிப்பாளர் வங்கியல்லா நிதிநிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் 2001 சனவரி 1ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்

2. முனைவர் என்.எல். சிறிசேன பணிப்பாளர் வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம் 2001 சனவரி 1ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

3. திரு.எம்.ஆர். பர்னாந்து, கண்காணிப்பாளர் நாணயத் திணைக்களம் 2001 சனவரி 11ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

4. திரு.எம்.எஸ். சிறிபால, பணிப்பாளர் முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களம், 2001 ஒகத்து 1ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

5. திரு.எம். இராமநாதன் பணிப்பாளர் அபிவிருத்திநிதித் திணைக்களம் 2001 செத்தெம்பர் 1ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

6. திரு.கே.சி.எம். குணசேகர, பணிப்பாளர் பயிற்சித் திணைக்களம் 2001 செத்தெம்பர் 15ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

7. திரு.எம்.பீ. திசாநாயக்க, ஆளுநரின் உதவியாளர் 2001 ஒத்தோபர் 17ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

8. திரு.எஸ். பட்டிவிதான, நிறைவேற்றுப் பணிப்பாளர் 2001 ஒத்தோபர் 29ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

9. திரு.ரி.என். பர்னாந்து, பணிப்பாளர் முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் 2001 நவெம்பர் 12ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

பாதுகாப்புப் பணிகளின் பணிப்பாளர் பிரிகேடியர் எச்.எஸ்.ஏ.பெரேரா, புதிய கட்டிடங்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு.ஏ.ஆர்.எம். மிகிந்துகுலசூரியா ஆகியோருடன் வங்கி செய்து கொள்ளப்பட்ட பணி ஒப்பந்தங்கள் காலாவதியானதன் பேரில் முறையே 2001 ஒகத்து 31ஆம் நாளிலிருந்தும் 2001 செத்தெம்பர் 3ஆம் நாளிலிருந்தும் பதவியிலிருந்து விலகினர்.

## விடுவிப்பிலுள்ள அலுவலர்கள்

1. திருமதி.எம்.ஏ.ஆர்.சி. கூறே, நிதி அமைச்சிற்கு இறைக்கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்களுக்கான பணிப்பாளர் நாயகமாக (பகுதி நேரம்)

2. திரு.ஆர்.ஏ.ஜயதிஸ்ச மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு

3. முனைவர் யூ.விதானபத்திரன, கைத்தொழில் அமைச்சிற்கு செயலாளராக.

4. திரு.எம்.ஜே.எஸ். அபேசிங்க நிதியமைச்சிற்கு

5. திரு.ஆர். அக்குறுகொடகமகே நிதியமைச்சிற்கு